# இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்.

சி. கா. செந்திவேல்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PE
24-2-1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TAMIL PUBLICATIONS & DISTRIBUTION NETWORK
44, 3rd Floor
C. C. S. M. Complex
Colombo-11.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

TAMIL PUBLICATIONS & DISTRIBUTION NETWORK
44, 3rd Floor
C. C. S. M. Complex
Colombo-11.

4705[illegible]4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை
# இடதுசாரி இயக்கத்தின்
# 50 ஆண்டுகள்

சி. கா. செந்திவேல்

புதியபூமி வெளியீட்டகத்துடன்
இணைந்து

சவுத் ஏசியன் புக்ஸ்

470504
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ilankai Edathusari Eakkathin Iymbathu Andukal
S. K. Sethivel
First Edition : July 1995
Printed at : Surya Achagam, Madras-41
Published in Association with
Puthiya Bhoomi Veliyeetagam
by
South Asian Books
6/1, Tnayar Sahib II Lane
Madras - 600 002.

Rs. 45-00

Published and Distributed in Sri Lanka by
Tamil publication and Distribution Network
44, 3rd Floor, C.C.S.M. Complex Colombo-II
Tp. 335844 Fax. 94 - 1 - 333279

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகள்
சி. கா. செந்திவேல்
முதற்பதிப்பு : ஜூலை 1995
அச்சு : சூர்யா அச்சகம், சென்னை-41
வெளியீடு : புதியபூமி வெளியீட்டகத்துடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1, தயார் சாகிப் 2-வது சந்து,
சென்னை - 600 002.

ரு. 45.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

**சமர்ப்பணம்**

இடதுசாரி இயக்கத்தின் இலட்சியங்களுக்காக தமது உயிர், உதிரம், உழைப்பு, வாழ்க்கை அனைத்தையும் மிகுந்த அர்ப்பணிப்புடன் வழங்கிச் சென்ற அனைத்து தியாகிகளுக்கும் இந் நூல் சமர்ப்பணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


1. அறிமுகம் 18
2. அன்றைய தேசிய நிலைமை 21
   கொலனித்துவச் சுரண்டல் 22
   அந்நிய எதிர்ப்பின் ஆரம்பம் 25
   தேசிய இயக்கத்தின் தன்மை 27
   அந்நியராட்சியும் தொழிலாளர் இயக்கமும் 28
3. சர்வதேச நிலையின் வளர்ச்சிப் போக்கு 33
   ஒக்டோபர் சோஷலிசப் புரட்சியும் விடுதலைப் போராட்டங்களும் 34
4. வெளிநாடுகளில் இலங்கை மாணவர்கள் 36
   இலங்கை மாணவர்களிடையே இடது சாரிச் சிந்தனைகள் 37
5. ஆரம்ப ஆண்டுகள் 40
   ஏகாதிபத்திய எதிர்ப்பும் வாலிப முன்னணிகளும் 41
   யாழ்ப்பான வாலிபர் காங்கிரஸ் 43
   சூரியமலர் இயக்கம் 46
   மலேரியா நோயும்-நிவாரணப் பணியும் 49
   சூரியமலர் இயக்கமும் அதன் தாக்கமும் 51
6. முதலாவது இடதுசாரிக் கட்சியின் தோற்றம் 54
   கட்சியின் கொள்கையும் நடைமுறையும் 55
   கட்சியின் ஆரம்பகாலச் சாதனைகள் 58
   சமசமாஜிகள் தலைமையில் தோட்டத் தொழிலாளர்கள் 63
7. முதலாவது கட்சிக்குள் முதலாவது பிளவு 67
   மூன்றாவது அகிலமும் ட்ரொஸ்கிசமும் 69
8. கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம் 76
   ஐக்கிய சோஷலிசக் கட்சி 77
   கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கம் 79


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. இடதுசாரிகளுக்கு எதிரான அடக்குமுறை 84
சமசமாஜிகள் கைதும் தப்பிச்செல்லலும் 85
ஐக்கிய சோஷலிசக் கட்சி தடை 86
இந்தியாவில் சமசமாஜிகள் 87
10. தொழிற் சங்க இயக்கமும்
போராட்டங்களும் 89
வேலைநிறுத்தங்களின் வளர்ச்சி 90
தொழிற்சங்க ஐக்கியமும் பொது
வேலை நிறுத்தமும் 93
அரசின் அடக்குமுறை 94
11. இடதுசாரிகளும் முதலாவது பாராளு
மன்றத் தேர்தலும் 97
கம்யூனிஸ்ட் கட்சியின் தவறுகள் 98
முதலாவது பாராளுமன்றத் தேர்தல் 100
12. மகத்தான ஹர்த்தாலும் 56 இன் ஆட்சி
மாற்றமும் 103
யூ. என். பி ஆட்சியின்
பிற்போக்கு நிலை 103
தேசிய முதலாளித்துவத்தின
வெளிப்பாடு 107
1953ன் மாபெரும் ஹர்த்தால்
போராட்டம் 110
1956ல் பண்டாரநாயக்காவின் ஆட்சி 116
இடதுசாரிகளும் மொழிக்கொள்கையும் 124
13. 1960களில் இடம்பெற்ற மாற்றங்கள் 131
திருமதி பண்டாரநாயக்காவின்
அரசியல் பிரவேசம் 132
21 கோரிக்கையும் தொழிற்சங்க
இயக்கமும் 135
இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதச்
சீரழிவு 138

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாதத்திற்குள் இறங்கிய
இடதுசாரித் தலைவர்கள் 145
மாபெரும் விவாதமும் கம்யூனிஸ்ட்
கட்சிப் பிளவும் 149
பழைய கட்சியும் புதிய கட்சியும் 154
புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் 164
ஜே. வி. பியின் தோற்றம் 184

14. ஐக்கிய முன்னணி ஆட்சியும்
இடதுசாரிகளின் நிலையும் 188
புதிய அரசியல் யாப்பும்
இடதுசாரிகளும் 189
ஜே. வி. பி கிளர்ச்சியும்
அடக்குமுறையும் 199
மார்க்சிச லெனினிசக் கட்சியில் பிளவு 204
கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது)
தோற்றம் 207

15. 77ல் யூ. என். பி மீள்வரவும்
இடதுசாரிகளின் தோல்வியும் 215
பாராளுமன்றத்தில் இடதுசாரிகளின்
தோல்வி 217
ஜே. ஆரின் திட்டமிட்ட
செயற்பாடுகள் 218
ஜே. வி. பியின் எழுச்சியும் வீழ்ச்சியும் 222
இடதுசாரிகளின் இயலாமையும்
பின்னடைவும் 230
தேசிய இனப்பிரச்சினையும்
இடதுசாரிகளும் 240
இடதுசாரி இயக்கத்தின் எதிர்காலம் 251

16. 94ல் யூ. என். பியின் தோல்வியும்
பொதுசன ஐக்கிய முன்னணியின்
வெற்றியும் 259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இடதுசாரி இயக்க தத்துவத்திற்கு வெளிப்படை யாகவே எதிரானவர்களும், அத்தத்துவத்திற்கு ஆதர வானவர்கள் என்று கூறிக்கொண்டு இடதுசாரி தத்துவத் தின் அடிப்படைக்கே மாறாக செயற்படுவர்களையும் விட உண்மையாகவே இடது சாரி இயக்க வரலாற்றில் பங்காளிகளாகவும், பார்வையாளர்களாகவும் இருந்தவர் களும் இலங்கையின் இடதுசாரி வரலாற்றைப் பற்றிய பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை இலங்கையின் இடது சாரி இயக்கம் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் சில சாதனைகள் மிகுந்த கடந்த காலத்தை படம்பிடித்துக்காட்டி நிற்கின்றன. அதேவேளை தெளிவற்ற எதிர்காலத்தை நோக்கி பயணம் செய்ய நிர்ப்பந்திப்பனவாகவும் இருக்கின்றன. சில ஆய்வுகள் கடந்தகால சாதனைகளை புகழ்ந்து எதிர் காலத்தை பற்றி அதீதமாக கற்பனை செய்பனவாகவும் இருக்கின்றன.

மேற்கூறிய இரண்டுவகை ஆய்வுகளுக்கும் மாறாக இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாறறை குருட்டுத் தனமானதாகவோ, அன்றி மலட்டுத்தனமானதாகவோ, காட்டும் ஒரு சில ஆய்வுகளும் இருக்கின்றன.

அதைவிட இடதுசாரி இயக்க வரலாற்றில் ஏற்பட்ட சில தவறுகளை மட்டும் மிகைப்படுத்தி இலங்கையின் அரசியற் வரலாற்றில் ஏற்பட்ட எல்லாத் தவறுகளுக்கும்

இ—1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல இடதுசாரி இயக்கங்களையும் பொதுப்படக் குற்றம் சாட்டும் வகையில் சிலர் அபிப்பிராயங்களையும் தெரிவித்து வருகின்றனர்.

அண்மைக்காலமாக 'இனத்துவ ஆய்வாளர்கள்' என்று அழைக்கப்படுபவர்கள் இடதுசாரி தத்துவம் இனத்துவத்திற்கு எதிரானதென்று அல்லது இனத்துவம் இடதுசாரி தத்துவத்திற்கு மாறானதொன்றும் காட்ட முற்படும் வகையில் இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றினைப்பற்றி எழுதியும் பேசியும் வருகின்றனர்.

இவை எல்லாவற்றிலுமிருந்தும் வேறுபட்டு இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றை தோழர் சி. கா. செந்திவேல் விமர்சனரீதியாக பார்த்து நம்பிக்கையுடன் உயிர்ப்புள்ள எதிர்காலத்தை நோக்குகிறார். இடதுசாரி இயக்க வரலாற்றின் ஒரு பங்காளியாக இருந்துவரும் அவர் அரசியல் ஆய்வாளரும், சிறந்த மேடைப் பேச்சாளரும், பத்திரிகையாளருமாவார். புதிய-ஜனநாயக கட்சியின் பொதுச் செயலாளரான அவரின் இந்த ஆய்வு, இடதுசாரி இயக்க வரலாற்றை முற்றிலும் புதியதொரு கோணத்தில் அணுகி நிற்கின்றது. இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாறு பற்றிய ஆய்வில் மட்டுமின்றி அதன் வரலாற்றிலும் ஒரு கனதிமிக்கதொன்றாக இதனைக் கொள்ளமுடியும். இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றின் உண்மையான பங்காளிகளாகவும் பார்வையாளர்களாகவும் இருந்தவர்களின் ஆய்வுகள் கூட முன்னையவர்களின் பக்கச்சார்பு பின்னையவர்களின் தகவல் அனுபவ வறுமை காரணமாகவும் தத்துவார்த்த அரசியல் நிலைப்பாட்டில் நிலவிய குறைபாடுகள் காரணமாகவும் முழுமையான ஆய்வுகளாக கொள்ளப்பட முடியாதுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆய்வுகளில் நிலவும் முழுமையின்மை தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டிய பயணத்தில் சி. கா. செந்திவேல் அவர்களின் இந்நூல் ஒரு சிறந்த ஆரம்பமாவதுடன் நம்பிக்கையும் தருகின்றது.

இந்நூலை 'சவுத் ஏசியன் புக்ஸ்' நிறுவனத்துடன் இணைந்து நாம் வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கின்றோம். அந்நிறுவனத்தின் இயக்குனரான தோழர் எம். பாலாஜி அவர்களுக்கும் இதனை அழகுற அச்சிட்டுத் தந்த அச்சக உரிமையாளர் ஊழியர்களுக்கும் எமது நன்றிகள்.

புதிய பூமி வெளியீட்டகம்

S. 47 மூன்றாவது மாடி
மத்திய சந்தை கட்டிடத்தொகுதி
கொழும்பு-11
இலங்கை
10-04-1995

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சிக்கு ஐம்பது ஆண்டுகள் பூர்த்தியாகியது. அவ்வேளை இலங்கை இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகள் என்னும் தலைப்பில் 'செம்பதாகை' பத்திரிகையில் மூன்று தொடர் கட்டுரைகளை எழுதியிருந்தேன். அவை மிகச் சுருக்கமான குறிப்பு வடிவிலேயே அமைந்திருந்தன. அதனைப் படித்த தோழர்களும், நண்பர்களும் மேற்படி கட்டுரையை விரிவாக்கி நூலாக்கும்படி கேட்டுக் கொண்டனர். அவ்வாறு செய்வதற்கு ஒப்புக்கொண்ட போதிலும் காலச் சூழலும், வேலைப்பளுவும் விரைவான நூல் உருவிற்கு இடம் தரவில்லை. இருப்பினும் இலங்கை இடதுசாரி இயக்கத்தில் ஓர் அங்கமான கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு நாட்களில் இந் நூலினை வெளியிட வேண்டும் என்ற முடிவில் இதனை எழுதி முடித்தேன். இருப்பினும் உடன் நூல் வடிவாக்க முடியவில்லை. இப்போது தான் அப்பணி நிறைவேறு கிறது.

இந்நூலினை ஓர் அரசியல் இயக்கத் தேவையிலான மதிப்பீட்டு நூலாகவே கொள்ளல் வேண்டும். இலங்கை யின் இடதுசாரி இயக்கம் ஓர் தற்காலிகப் பின்னடைவைச் சந்தித்துள்ள சூழலில் அதனைப் பலமானதாக மாற்றி யமைப்பதற்கு முன்வரும் புதிய தலைமுறையினருக்கு ஓர் அறிமுகத்தை இந்நூல் வழங்க முற்படுகிறது. அந்த வகையில் இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றுச் செய்தியை சுருக்க வடிவிலே தருகிறது. இந்நூலிலே காணப்படும் பதினாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதான தலைப்புகளும் அதன் கீழ்வரும் உபதலைப்பு களிலும் கூறப்பட்டுள்ளவை விரிவான தனித்தனிக் கட்டுரைகளாக எழுதுவதற்கு ஏற்றவையாகும். எதிர் காலத்தில் இப்பணி தொடரப்படமுடியும்.

இடதுசாரி இயக்க வரலாற்றுச் செய்திகளை இந் நூலின் ஊடே கூறிச்செல்லும் போது ஓர் அரசியல் இயக்க சார்பு நிலை ஆங்காங்கே வெளிப்படுவதை உணரமுடியும், இந்நிலை மார்க்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை யின் பாற்பட்டதேயாகும். இத்தகைய அரசியல் இயக்க சார்பு நிலை காரணமாக இடதுசாரி இயக்கத்தில் அங்கம் பெறும் ஏனைய கட்சிகளின் வரலாற்றுப் பாத்திரத்தின் உண்மைகளை மறுக்கவோ அன்றி திரித்துக்கொள்ளவோ நான் முற்படவில்லை என்பதை நூலினைப் படிப்போர் இனம் கண்டு கொள்வர். தத்துவார்த்த கருத்து முரண் பாடுகள் வரலாற்றுச் செய்திகளை மறைப்பதற்குரிய ஒரு திரையாக்கம்படக் கூடாது. அதே வேளை இடம்பெற்ற நிகழ்வுகள் ஒவ்வொன்றின் மீதும் ஓர் தெளிவான விமர்சனப் பார்வையைச் செலுத்துவதை எவரும் நிராகரிக்கவும் முடியாது.

இந்நூலினை எழுதுவதற்கு ஏற்கனவே இடதுசாரி இயக்கம் சம்மந்தமாக வெளிவந்த நூல்கள், பத்திரிகைகள் பிரசுரங்கள் போன்றவற்றை உசாத்துணையாகக் கொண்டுள்ளேன். அதேவேளை இடதுசாரி இயக்க வரலாற்றில் குறிப்பாக கம்யூனிஸ்ட் இயக்கத்தில் கடந்த முப்பது ஆண்டுகளாக ஒரு முழுநேர அரசியல் ஊழிய னாகப் பணிபுரிந்து வந்த அனுபவத்தின் அம்சங்களையும் சுய ஆதாரமாகக் கொண்டே இந்நூலினை எழுதத் துணிந்தேன் என்பதையும் கூறிக்கொள்ளல் வேண்டும். இந்நூல் எழுதப்பட்ட காலத்திற்கும் நூலாக வெளிவரும் காலத்திற்குமிடையில் இரண்டு ஆண்டுகள் இடைவெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டு விட்டது. ஆதலால் 1993ம் ஆண்டில் இருந்து இன்று வரையான காலப்பகுதியின் அரசியல் நிகழ்வுகளையும் அவற்றில் இடதுசாரிகளின் நிலைப்பாடுகளையும் விளக்கி மேலும் ஒரு அத்தியாயத்தினை சேர்த்துள்ளேன்.

ஒருவர் தனக்குரிய எழுத்துப் பயிற்சியைப் பயன் படுத்தி எழுத்தாக்கதநில் ஈடுபடும்போது தான் எழுதுவது என்ன? அதன் குறிப்பான நோக்கம் யாது? யாருக்கு அது பயன்பட வேண்டும்? அதன் சமூகத் தாக்கம் எத்தகையது? என்பனவற்றில் ஒரு தெளிவு நிலை இருப்பது அவசியம். அதிலும் அரசியல் எழுத்தாக்கத்தில் ஈடுபடும் போது பாரிய பொறுப்பும் கடமையும் ஒருவரை எதிர்நோக்கு கின்றது.

இன்றைய முதலாளித்துவ அமைப்புச் சூழலில் கேடு கெட்ட தனத்தினால் அரசியல் என்பது இழிவுக்கும் கொச்சைப் படுத்தலுக்கும் ஆட்படுத்தப்பட்டுள்ளது. 'அரசியல் ஒரு அசிங்கமான விளையாட்டு', 'அது ஒரு சாக்கடை விவகாரம்' என்றெல்லாம் சுட்டிக்காட்டப் பட்டு பாட்டாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் தமக்குரிய அரசியல் பாதையில் செல்லவிடாது திசை திருப்பப்படுகின்றனர். முதலாளித்துவத்தின் கேவலமான கீழ்த்தர வழிமுறைகள் தான் அரசியலை அசிங்கப்படுத்தி சாக்கடையாக்கி உள்ளதே தவிர நேர்மையான பாட்டாளி வர்க்க அரசியல் ஒரு போதும் அவ்வாறு இருப்பதில்லை. பாட்டாளி வர்க்க அரசியல் மனிதகுல விடுதலைக்கான உயர்ந்த இலட்சியப் பண்புகளைக் கொண்டதாகும். உண்மை, நேர்மை, மனிதநேயம் ஆகியவற்றின் அடிப் படையில் சுயநல வேட்கை இன்றி முன்னெடுக்கப்படும் பாட்டாளி வர்க்க அரசியல் குறிக்கோள் சகல தடை களையும் தாண்டி முன்னேறும் போக்குடையதாகும். அதற்குரிய அடிப்படை உத்தரவாதமாக அமைவதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்சிச தத்துவார்த்தத்தின் விஞ்ஞான பூர்வமான நிலைப்பாடாகும். எனவே இந்நோக்கத்தை செயல் பூர்வமாக்கி முன்னெடுக்கும் அரசியல் எழுத்தாக்கம் பொறுப்புடையதாகவும், தெளிவான பாதையினை சுட்டிக்காட்டுவதாகவும் அமைய வேண்டும். இல்லா விடின் அத்தகைய எழுத்தாக்கங்களால் பயன் ஏதும் இருக்க முடியாது. ஒரு பாட்டாளி வர்க்க அரசியல் எழுத்தாக்கம் தெளிவு அற்றதாக, அகவிருப்புக் கொண்ட தாக, சுய திருப்தி, தற்புகழ் போன்றவற்றை முதன்மைப் படுத்துவதாக அமையுமானால் அது முதலாளித்துவ வகைச் சிந்தனைச் சீரழிவுகளுக்குப் பலியாகியதொன் றாகவே இருக்க முடியும். இவை அரசியல் எழுத்தாக் கத்திற்கு மட்டும் உரிய அம்சம் அன்று, ஏனைய கலை இலக்கிய சமூக எழுத்தாக்கங்களுக்கும் பொருந்தக்கூடிய தாகும்.

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாறு மேலும் விரிவு பட்ட ஆய்வுகளுக்கும் விமர்சன மதிப்பீட்டுக்கும் உள்ளாக்கப்படுவது அவசியம். அதன் குறிப்பான நோக்கம் தவறுகளையும், பின்னடைவுகளையும், தேக்க நிலையினையும் அடைந்துள்ள இலங்கையின் இடதுசாரி இயக்கத்தை மீட்டெடுத்து சரியான தடத்தில் இட்டு முன்னோக்கி நகர்த்தும் பணிக்காகவே செய்யப்பட வேண்டும். அந்த வகையில் எனது முயற்சி ஓர் ஆரம்ப முயற்சியே அன்றி முழுநிறைவுடையது எனக் கூற முடியாது. எதிர்காலத்தில் ஏனையவர்களாலும் இவை நிறைவு செய்யப்படக்கூடியதேயாகும்.

இத்தகைய ஓர் இடதுசாரி இயக்க வரலாற்று மதிப் பீட்டு நூல் வெளிவருவதன் அவசியத்தை முற்கூட்டியே வற்புறுத்தி வந்தவர்களில் எமது வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் முதன்மை யானவர். அவரது விருப்பத்தை காலம் தாழ்த்தியாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவு செய்து கொள்வதில் மகிழ்ச்சியும் மனநிறைவும் கொளகின்றேன். அவரது ஆழமான கருத்துக்களும் கண்ணோட்டங்களும் ஆங்காங்கே இந்நூலில் இழை யோடி நிற்கின்றன என்பதையும் கூறிக்கொள்ளல் வேண்டும்.

மேலும் இந்நூலினை எழுதுவதற்கு பழைய புதிய நூல்கள், பிரசுரங்கள், பத்திரிகைகள் தந்து உதவியது மட்டுமின்றி அவ்வப்போது தகுந்த தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்கிய தோழர்கள் நண்பர்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நன்றி. தமது அரசியல் நூல் வெளியீட்டு முயற்சியில் முக்கிய அம்சமாக இந்நூலினைக் கருதி வெளியிடுவதற்கு முன்வந்த புதியபூமி வெளியீட்டகத்தினருக்கு எனது மனமார்ந்த நன்றி. இத் தகைய நூல்களை வெளியிட்டு உதவுவதில் உறுதுணை யாக இருந்து வரும் 'சவுத் ஏசியன் புக்ஸ்' நிறுவனத் திற்கும் அதன் இயக்குனரான அன்புத் தோழர் பாலாஜிக்கும் சூர்யா அச்சக உரிமையாளர், ஊழியர் களுக்கும் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கின்றேன்.

**சி. கா. செ.**

'தாயகம்'
பருத்தித்துறை வீதி
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி
இலங்கை
15-06-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை இடதுசாரி இயக்கத்தின் 50 ஆண்டுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1

# அறிமுகம்

கடந்த அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட இலங்கையின் அரசியல் களத்தினை ஆராய முற்படும் எவரும் இடதுசாரி இயக்கம் வகித்துவந்த வலுவான பாத்திரத்தைப் புறம் ஒதுக்கிவிட்டுச் சென்றுவிட முடியாது. பலத்த சாதனைகளையும், அதேவேளை குறைபாடுகளையும், தவறுகளையும் உள்ளடக்கிவந்த இலங்கை இடதுசாரி இயக்கத்தின் பொதுவான போக்கு மார்க்சிச அரசியலாகவே இருந்து வந்துள்ளது. ஆனால் அதன் குறிப்பான இயக்கத் தன்மைகளில் இரண்டு விதமான தத்துவார்த்த நடைமுறை மார்க்கங்கள் பின்பற்றப்பட்டு வந்தமையைத் தெளிவாக அடையாளம் காண முடியும். ஒன்று மார்க்சிசத்தை அடியொற்றி நிற்பதாகக் கூறிக்கொண்ட ட்ரொஸ்கிச தத்துவார்ந்த நடைமுறையைப் பின்பற்றிவந்த சமசமாஜ இயக்கம். இரண்டாவது, மார்க்சிசம்-லெனினிசத்தையும் அதன் வளர்ச்சிப்போக்கையும் கையேற்றுநிற்பதாகப் பிரகடனம் செய்துவந்த கம்யூனிஸ்ட் இயக்கம். முன்னயதை லங்கா சமசமாஜக் கட்சியும் அதிலிருந்து காலத்திற்குக்காலம் பிரிவுபட்டு வந்த ட்ரொஸ்கிச சக்திகளும் முன்னெடுத்துவந்தன. பின்னையதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் அதிலிருந்து அவ்வப்போது பிளவடைந்துவந்த சக்திகளும் கைக்கொண்டு வந்தன. இவ்விரண்டுவித போக்குகளின் அடிப்படையில் உருவாகிய கட்சிகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்கள், இயக்கங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய தாகவே இலங்கையின் இடதுசாரி இயக்கம் இருந்து வந்துள்ளது.

இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்துடன் ஐம்பத்தியெட்டு ஆண்டு களைப் பூர்த்திசெய்து கொள்கிறது. அதற்கு அடுத்த இடதுசாரிக் கட்சியான இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு 1993ஆம் ஆண்டு யூலை மாதத்துடன் ஐம்பது ஆண்டு கள் நிறைவுபெறுகின்றது. ஏனைய இடதுசாரிக் கட்சிகள், குழுக்கள், இயக்கங்கள் என்பனவற்றுக் பதினைந்து, இருபது, முப்பதுஆண்டுகளுக்கு மேற்பட்ட கால வரலாறு இருந்து வருகின்றன. இவை யாவற்றை யும் உள்ளடக்கி நோக்கும்போது அரை நூற்றாண்டு காலத்தைத் தாண்டிநிற்கும் இடதுசாரி இயக்கத்தின் தோற்றம், குறிக்கோள், வளர்ச்சி, பலம், பலவீனம் வெற்றி, தோல்வி என்பனவற்றை உள்ளடக்கிய ஒரு முழுமையான மதிப்பீடு அவசியமாகின்றது. இத்தகைய மதிப்பீட்டின் தேவையை இன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகள் வற்புறுத்துகின்றன. சர்வதேச கம்யூனிச-சோஷலிச இயக்கங்கள் தற்காலிகப் பின்னடைவுகளைக் கண்டுவரும் ஒரு சூழலில் தேசிய ரீதியிலும் அவற்றின் தாக்கங்களினால் சாதக, பாதக அம்சங்கள் வளர்வதற் கான வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இந்நிலையில் இடதுசாரி இயக்கத்தின் குறிப்பாகக் கம்யூனிச இயக்கத்தின் நேர்மையான சக்திகள் மிக உறுதியுடனும் நம்பிக்கையுடனும் தமது கடந்தகாலம் பற்றிய முழுமை யான மதிப்பீடுகளையும், மறுசீரமைப்புகளையும் செய்வதற்கு எவ்வித தயக்கமும் இன்றித் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள முன்வருதல்வேண்டும். அதுவே எதிர்காலத்திற்குரிய சரியான உத்தரவாதமாகவும், தற்போதைய தற்காலிகப் பின்னடைவுகளை வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளக்கூடிய அடிப்படையாகவும் அமையமுடியும் இலங்கையின் அடிப்படை சமூக மாற்றத்தில் அக்கறை கொண்டு இடதுசாரி நோக்குடன் அவ் அரசியல் பணிகளில் ஈடுபட்டுவரும் ஒவ்வொருவருக்கும் குறிப்பாக இளந்தலைமுறையினருக்கும் இத்தகைய ஓர் மதிப்பீடு அவசியமாகின்றது. அந்த வகையிலேயே இலங்கை இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றின் சாதக அம்சங்களை முன் நிறுத்தியும், பாதகமானவற்றை விமர்சன நோக்கிற்கு உட்படுத்தியும் ஆராய இந்நூல் முற்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

# 2

# அன்றைய தேசிய நிலைமை

உலகின் எந்தவொரு நாட்டிலும் உருவாகி வளர்ந்து வந்த அரசியல் இயக்கங்களை எடுத்து நோக்கின் அவை தோன்றுவதற்கும் வளர்ச்சிபெறுவதற்கும் அந் நாட்டின் வரலாற்று வளர்ச்சியும் தேவையும் அடிப்படைக் காரணமாகின்றது. இவ்வரலாற்று வளர்ச்சி யானது ஒவ்வொரு நாட்டினதும் பொருளாதார, அரசியல், சமூக, கலாசார ஒழுங்கமைப்பின் புறநிலை அம்சங்களுடன் இணைந்தவையாகவே இருந்து வந்துள்ளது. இப்பொது நியதிக்கு உட்பட்டதாகவே இலங்கையிலும் அரசியல் இயக்கங்கள் காலத்திற்குக் காலம் தோன்றி வளர்ந்துவந்துள்ளன. அந்தவகையிலே இந்த நூற்றாண்டின் முப்பதுகளில் தோற்றம் பெற்று வளர்ந்துவந்த இடதுசாரி இயக்கத்தை நோக்குதல் வேண்டும். அக்காலத்திலும் அதற்கு முந்திய தசாப்தங்களிலும் இலங்கையில் நிலவிய தேசிய நிலைமைகள் எவ்வாறு இடதுசாரி இயக்கம் தோன்று வதற்குரிய அடிப்படைகளைக் கொண்டிருந்தன என்ப தைச் சுருக்கமாகக் கண்டு கொள்ளல்வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ☐ கொலனித்துவச் சுரண்டல்

பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்கூற்றிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் பிரித்தானிய காலனியாதிக்கவாதிகள் கிழக்கிலே தமது ஆதிக்கத்தை விரிவுபடுத்திக்கொள்வதில் முழுக் கவனத்தையும் செலுத்திநின்றனர். இந்தியாவிற்குள் ஏற்கனவே கிழக்கிந்திய கொம்பனிமூலம் புகுந்துவிட்ட அவர்கள் முழு இந்தியாவையும் அடிமைப்படுத்தும் திட்டங்களை வகுத்துக்கொண்ட அதே வேளை இந்து சமுத்திரத்தில் முக்கியத்துவமிக்கத் தீவாகத் திகழும் இலங்கையைக் கைப்பற்றிக்கொள்ளும் முயற்சியிலும் ஈடுபட்டனர். 1505இல் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் படிப்படியாகத் தமது ஆதிக்கத்தைப் வலுப்படுத்தி வந்தனர். அதன்பின் அவர்களிடமிருந்து ஒல்லாந்தர் ஆதிக்கத்தை பறித்துக் கொண்டனர். இவ்விருபகுதியினரும் முழு இலங்கையையும் ஒருபோதும் கைப்பற்றிக்கொள்ள முடியவில்லை. நாட்டின் பல பகுதிகளில் இவ் ஐரோப்பிய ஆட்சியாளர்களுக்கு கடும் எதிர்ப்பு இருந்து வந்தது. குறிப்பாக மலையகப் பிரதேசங்களை இவர்களால் கைப்பற்றி ஆட்சிசெய்ய இயலாமல் போயிற்று. ஆனால் பிரித்தானிய காலினியாதிக்கவாதிகள் ஒல்லாந்தரிடமிருந்து அதிகாரத்தைப் பறித்துக்கொண்டது மட்டுமன்றி இறுதியாக 1815இல் கண்டி இராச்சியத்தைக் கடும் எதிர்ப்பின் மத்தியில் கைப்பற்றியதுடன் முழு இலங்கையையும் தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தனர்.

இலங்கையானது அந்நியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் தன்நிறைவுப் பொருளாதாரத்தை உடைய நாடாகவே இருந்து வந்தது. அது ஒரு விவசாய நாடாகவும் அதன் பிரதான உற்பத்தி நெல்லாகவும் விளங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கால கட்டத்தில் இலங்கை அரிசி ஏற்றுமதிசெய்யும் அளவிற்கு உற்பத்தியுடைய நாடாகத் திகழ்ந்தது. அந் தளவிற்குச் சிறப்பான நீர்ப்பாசனத் திட்டங்களை திட்ட மிட்டே உருவாக்கி செயற்படுத்திவந்த வரலாற்றுப் பெருமையுடைய தேசமாகவும் விளங்கிவந்தது. இன்றும் பழமை வாய்ந்த அந்நீர்ப்பாசனத்திட்டங்கள் பல வற்றைக் காணமுடியும். ஆனால் அந்நியர்கள் குறிப் பாகப் பிரித்தானிய காலனியாதிக்கவாதிகள் சுதேசிய விவசாயத்தை அழித்துவிடுவதில் மிகவும் முனைப்புடைய வர்களாகக் காணப்பட்டனர். அவர்கள் இந்த விடயத் தில் இரண்டு வழிகளில் திட்டமிட்டுச் செயலாற்றினர். ஒன்று, இலங்கையின் தன்னிறைவுப் பொருளாதாரமாக விளங்கிய விவசாயத்தை அழித்தொழித்து உணவுக்கும் ஏனைய நுகர்வுப் பொருட்களுக்கும் தங்களையே எதிர் பார்த்து நிற்கச் செய்யும் நீண்டகால நோக்கினை நடை முறைப்படுத்திக் கொள்வது. அந்த வகையில் பணப் பயிர்களை அறிமுகம்செய்து நெல் உற்பத்தியையும் ஏனைய சுயதேவை உறபத்திகளையும் அழிந்துபோகச் செய்வதில் வெற்றி பெற்றனர். இரண்டாவதாக, இலங்கையைக் கைத்தொழில் மயப்படுத்தப்பட்ட ஒரு நாடாக மாற்ற முற்படவில்லை. ஆனால் தமது கொள்ளைத்தனமான சுரண்டலுக்கு ஏற்ற புதியவகைப் பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு கொலனித்துவ நாடாக்குவதில் முழுக் கவனத்தையும் செலுத்தி நின்ற னர். இந்த வகையிலேயே இலங்கையின் மண்வளம் மிக்க மலைப்பிரதேசங்களில் கோப்பியை அடுத்து தேயிலை உற்பத்தியை அறிமுகம்செய்து பெருமளவில் விரிவுபடுத்திக்கொண்டனர். அதேபோன்று ரப்பர் உற்பத்திக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் ஊக்க மளித்தனர். தென்னை உற்பத்தியில் சுதேசிகளை அதிக நாட்டம் கொள்ளச்செய்தனர். எனவே இலங்கையின் ஏற்றுமதிப் பொருளாதாரமாக தேயிலை, ரப்பர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெங்குப் பொருட்கள் முன்னிலைக்கு வந்தன. இவற்றுள் தேயிலை உற்பத்தியும் வர்த்தகமும்—கொள்ளை லாபமும் பிரித்தானிய முதலாளிகளின் கைகளிலேயே தங்கியிருந்தது. இத்தேயிலை உற்பத்தியானது விவசாய உற்பத்தி முறையை அடிப்படையானதாகக் கொண்ட அதே வேளை முதலாளித்துவச் சுரண்டல் முறையைப் பிரதானமானதாகக் கொண்ட ஓர் புதியவகை தொழில் துறையாக—பெருந்தோட்டத் தொழில் துறையாகப்— பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளினால் முன்னெடுக்கப்பட்டது. இந்தத் தொழில்துறைக்கு இந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளர்கள் கூலிகளாகக் கொண்டு வரப்பட்டனர். குறைந்த கூலி, கூடிய வேலை, இலகுவாக அடக்கி வைத்திருத்தல் போன்றவற்றுக்காக ஏமாற்றி அழைத்துவரப்பட்ட இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களே இவ் ஏற்றுமதிப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக வைத்துக் கசக்கிப் பிழியப்பட்டனர்.

பிரித்தானிய கொலனியாதிக்கவாதிகள் உருவாக்கிய முதலாளித்துவச் சுரண்டல் பொருளாதார அமைப்புக்கு ஏற்றவிதமான அரசாங்க நிர்வாக அமைப்பு முறையினையும் கட்டமைத்து வழிநடத்தி வந்தனர். இதனால் இலங்கையின் அனைத்து மக்களும் கொலனியாதிக்கத்தின் கீழ் தமது தனித்துவம் மிக்க பொருளாதார, அரசியல், சமூக கலாசார சுயத்தினை இழந்தவர்களாயினர். இருப்பினும் காலப்போக்கில் அவர்கள் மத்தியில் அந்நிய ஆட்சியினருக்கு எதிரான கசப்புணர்வுகளும், எதிர்ப்புகளும் தோன்றி வெளிப்பாடடையத் தொடங்கின. அவை பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி மூன்று தசாப்தங்களிலான சமய, கலாசார முனைகளினூடே வெளிப்பாடடைந்து வளரவும் செய்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 13 அந்நிய எதிர்ப்பின் ஆரம்பம்

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்துடன் கொலனியாதிக்கத்திற்கு எதிரான எதிர்ப்புகள் மேலும் பல மட்டங்களிலும் பல்வேறு வடிவங்களிலும் வெளிப்பாடடைந்ததைக் காணலாம். அந்நிய மத கலாசாரத்திற்கு எதிரான கருத்துக்கள் வலிமையடைந்தன. இதன் அடிப்படையிலேயே மது எதிர்ப்பு இயக்கமும்— கிளர்ச்சிகளும் உருவாகின. இதனோடு இணைந்ததொன்றாகவே முஸ்லீம்களுக்கு எதிரான போக்கும் வளர்க்கப்பட்டது. சிறு முதலாளித்துவப் பிரிவினரான சிங்களவர்கள் இந்த இயக்கத்தின் இயக்குநர்களாக இருந்தனர். அநகாரிக தர்மபாலா, வலிசிங்க ஹரிச்சந்திரா போன்றவர்கள் இன, மத, கலாசார அம்சங்களின் முக்கியத்துவத்தை வற்புறுத்தி தீவிரப் பிரசாரம் செய்தனர். அவர்களது பிரசாரத்தில் தேசிய உணர்வுகள் நிரம்பி இருந்தன என்பதும் அது அந்நியருக்கு விரோதமான உணர்வலைகளை ஊக்குவித்தன என்பதும் மறுப்பதற்குரிய தொன்றல்ல. ஆனால் அத்தகைய தேசிய உணர்வுகளின் ஊடாகவே இன்றைய பேரினவாதப் போக்கிற்கான வித்துக்களும் விதைக்கப்பட்டன என்ற உண்மையையும் நிராகரித்து விட முடியாது. இதன் அடிப்படையிலேயே அன்றைய 1915ஆம் ஆண்டு முஸ்லீம்-சிங்கள கலவரம் இடம் பெற்றது. ஏறத்தாழ இதே காலகட்டத்தில்தான் இலங்கைக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடைய 'இளம் இலங்கையர் கழகம்' தோற்றுவிக்கப்பட்டது. எனவே இலங்கையில் உருவாகிவந்த தேசிய உணர்வுகளின் முனைகளை அவை எவ்வடிவத்தில் இருந்த போதிலும் ஆரம்பத்திலேயே அவற்றை முறியடித்துவிடும் தமது உள்நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளப் பிரித்தானிய ஆட்சியாளர்களுக்கு முஸ்லீம்-சிங்களக் கலவரம் சிறந்ததோர் வாய்ப்பை வழங்கியது. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய அடக்குமுறையை இராணுவச் சட்டத்தைப் பயன்படுத்தி கட்டவிழ்த்துவிட்ட அந்நியராட்சி, சிங்களவர்களையும் அவர்களது தலைவர்களையும் பயமுறுத்தி அடிபணியச் செய்வதற்குரிய சந்தர்ப்பமாக்கிக் கொண்டது.

மேற்படி நிகழ்வைத் தொடர்ந்துவந்த ஆண்டுகளில் அரசியல் சீர்திருத்தத்தைக் கோரும் போக்கு வலிமையடையத் தொடங்கியது. அதன் விளைவாகவே 1919இல் இலங்கை தேசிய காங்கிரஸ் என்னும் ஸ்தாபனம் உருவாக்கம்பெற்றது. பல்வேறு நிலைகளில் இருந்து அரசியல் சீர்திருத்தத்தைத் தீவிரமான நிலையிலும், பணிவான மிதவாதப்போக்கிலும் கோரி நின்ற இரு பகுதியினரை உள்ளடக்கியதாகவே இத் தேசிய காங்கிரஸ் விளங்கியது. இதன் முதலாவது தலைவராக முற்போக்கு சீர்திருத்த எண்ணம் கொண்டவரான சேர் பொன் அருணாசலம் தெரிவுசெய்யப்பட்டார். இருப்பினும் அவர் தனது காலத்தின் மிதவாதத் தலைவர்கள் பலரின் கருத்துக்களோடு முரண்பாடு கொண்டவராக காணப்பட்டார். குறிப்பாக மேற்கு மாகாணத்தில் தமிழர் பிரதிநிதித்துவம் சம்பந்தமாகச் சிங்களத் தலைவர்களுடன் கொண்ட கருத்து வேறுபாட்டினால் 1920ல் தனது தலைவர் பதவியை இராஜினாமாச் செய்தும் கொண்டார். மேற்படி நிகழ்வானது இலங்கையில் சிங்களவர், தமிழர்களுக்கிடையிலான நீண்ட இன முரண்பாட்டின் ஆரம்பப் புள்ளி மட்டுமன்றி முதலாவது ஒப்பந்த முறிவு எனக் குறித்துக்கொள்வதாகவும் அமைந்தது. சேர், பொன், அருணாசலம் உயர் பிரபுத்துவக் குடும்பத்தில் இருந்து வந்தவர். சிறந்த கல்வியாளனாக விளங்கியவர். இருந்த போதிலும் பல்வேறு தேசிய சர்வதேசியப் பிரச்சினைகளில் முற்போக்கான கண்ணோட்டத்தை உடையவராக இருந்தார். குறிப்பாக தொழிலாளர்களின் நலன்களில் அதிக அக்கறை காட்டி தொழிற்சங்க இயக்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கியத்துவத்தை வலியுறுத்தி நின்றவர். அரசியல், சமூக சீர்திருத்தக் கருத்துக்களில் தனது சகோதரரான சேர், பொன் இராமநாதனையும் ஏனைய பிற்போக்குத் தலைவர்களையும்விட முற்போக்கானதும் தூர நோக்குடைய கொள்கைகளையும் உடைய ஒருவராக அருணாசலம் விளங்கினார் என்பது நோக்குதற்குரிய தொன்றாகும்.

## □ தேசிய இயக்கத்தின் தன்மை

இலங்கை தேசிய காங்கிரசில் பலதரப்பட்டவர்கள் இணைந்திருந்த போதிலும் உயர் வர்க்க மிதவாதிகளே ஆதிக்கம் பெற்றவர்களாக விளங்கினர். அவர்கள் தமது வர்க்க இயல்புகளுக்கு ஏற்ற கொள்கைகளையே கொண்டிருந்தனர். பிரபுத்துவ வழிவந்தவர்களாகவும் பிரித்தானியரின் வருகைக்குப்பின் அதிக சொத்து சுகம் தேடிக்கொண்ட வர்க்கத்தினராகவுமே இருந்தனர். அவர்கள் இந்திய தேசிய முதலாளித்துவ சக்தி போன்ற வர்கள் அல்லர். இந்திய தேசிய முதலாளித்துவ சக்தி களுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்வும் தேசிய நலன்களில் அதிக அக்கறையும் இருந்தது. அதனால் இயல்பாகவே இந்திய தேசிய இயக்கத்தில் குறிப்பிட்டளவுக்கு அவர்களால் தீவிரத்தன்மையைக் கொண்டிருக்க முடிந்தது. ஆனால் இலங்கையில் வளர்ந்துவந்த சுதேசிய முதலாளித்துவமும், உயர் பிரபுத்துவ வர்க்கமும் பிரித்தானியர்களை விரோதித்துக் கொள்ளாமலேயே வளர்ந்துவந்தவர்கள். அந்நியரோடு போட்டி போட்டுக் கொள்ளாத துறைகளிலேயே இவர்களது வர்க்க வளர்ச்சி இருந்துவந்தது. இதனால் இவர்கள் பிரித்தானிய ஆட்சியினருடன் இணங்கிப்போகும் போக்கினையே எப்பொழுதும் முனைப்புடையதாகக் கைக்கொண்டனர். இதனை தேசிய காங்கிரசின் கொள்கைகளில் கண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளமுடியும். இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஒரு போதும் அரசியல் சீர்திருத்தங்களுக்கான தீவிரக் கொள்கைகளையோ அன்றி இயக்கங்களையோ முன்னெடுக்கவில்லை. முற்றிலும் மன்றாட்டகரமான, பணிவுமிக்க வேண்டுதல்களையும் மிகக் குறைந்த அரசியல் சீர்திருத்தங்களையுமே வேண்டிநின்றது.

இருந்தபோதிலும் இருபதுகளின் ஆரம்பத்துடன் இலங்கையின் அரசியல் களத்திலே குறிப்பான நிகழ்வுகள் இடம்பெற ஆரம்பித்தன. அரசியல் சீர்திருத்தங்களைத் தீவிரமாக முன்வைத்த சக்திகளைக் கண்டு பிரித்தானிய ஆட்சியினர் பீதிகொண்டனர். இருபதுகளின் முற்கூறிலே இத்தகைய சீர்திருத்தக் கோரிக்கைகள் வலிமைபெறக் கூடிய சூழலைக் கண்ணுற்ற பிரித்தானியர் பிரித்தாளும் தமது தந்திரோபாயத்தைப் பயன்படுத்த முற்பட்டு அதில் வெற்றியும் பெற்றனர். கண்டியச் சிங்களவர், கரையோரச் சிங்களவர், தமிழர் ஆகிய முத்தரப்பாரிடையேயும் பிளவுகளைத் தூண்டி அதனையே தமக்குச் சாதகமாக்கியும் கொண்டனர். அத்துடன் அதிக சீர்திருத்தங்களைக் கொண்டிராததும், இலங்கை மக்களுக்கு சுயாட்சியை வழங்காததுமான டொனமூர் ஆணைக்குழுவின் முடிவுகள் திணிக்கப்பட்டன.

## □ அந்நியராட்சியும் தொழிலாளர் இயக்கமும்

இக்காலப்பகுதியில் தலைநகர் சார்ந்த தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகள் வேகம் பெற்றன. 1890களில் ஆரம்பித்த தொழிலாளர் இயக்கமானது இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் வர்க்க அடிப்படையில் வளர்ச்சி கண்டது. 1919 இல் இலங்கைத் தொழிலாளர் நலச் சங்கம் உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக சேர் பொன் அருணாசலம் இருந்தார். இதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்று வேறும் சமூகசேவை நோக்கங்கள் கொண்ட சில அமைப்புக்கள் உருவாகின. இவ்விடத்திலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய மாணவர் அமைப்பு ஒன்று யாழ்ப்பாணத்திலே தோற்றம் பெற்றது. முழுமையான தேச சுதந்திரத்தையும் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான முற்போக்கு கொள்கைகளையும் இம்மாணவர் அமைப்பு முன்வைத்தது. அதுவே யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசாகும். 1920 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இலங்கை புகையிரதத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இதனைத் தொடர்ந்து துறைமுகத் தொழிலாளர்கள் சக்திமிக்க வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தினர். இத்தகைய சூழலிலேயே தேசியவாதியும் தீவிர அரசியல் சீர்திருத்தக் கோரிக்கைகளைக் கொண்டிருந்தவருமான ஏ.ஈ. குணசிங்காவின் தலைமையில் இலங்கைத் தொழிற் சங்கம் உருவாகியது. இச்சங்கம் ஆரம்பிக்கப்பட்டதன்மூலம் தொழிலாளி வர்க்கத்தின் ஐக்கியம் ஸ்தாபன ஒழுங்கிற்கும் மத்தியத்துவப்பட்ட தலைமைக்கும் உள்ளாகியது. 1922 இல் உருவாகிய இச்சங்கத்தின் தலைமையில் 1923 இல் மிகவும் வெற்றிகரமான பொது வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இவ்வேலை நிறுத்தம் தொழிலாளி வர்க்க ஐக்கியத்தையும் செயல்பூர்வமான நடவடிக்கையின் பலத்தையும் எடுத்துக் காட்டியது. அன்றைய தொழிற் சங்கத் தலைமையில் இனவேறுபாடு சிறு அளவிலும் இருக்கவில்லை. தொழிலாளர்களின் நலன்களையும் ஜனநாயக அரசியல் சீர்திருத்தங்களையும் வற்புறுத்திய ஏ.ஈ. குணசிங்காவுடன் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், மலையாளிகள் என்ற வேறுபாடு இன்றி அனைவரும் இணைந்து நின்றனர். அன்றைய தொழிற்சங்க தலைமைத்துவத்தில் ஏ.ஈ. குணசிங்கா, சி.எச். சற். பெர்னாண்டோ, ஜோர்ச் ஈ.டி. சில்வா, விக்டர் கொரியா, ஏ.பி. தம்பிஐயா, கோ. நடேசஐயர், ஜேம்ஸ் இரத்தினம், எம்.எல்.எம். றியால், எம்.என்.என். கனியா, காசிம் இஸ்மாயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவர்கள் ஒன்றிணைந்து நின்றமை சுட்டிக்காட்டத் தக்கதாகும்.

இவ்வாறு தொழிலாளி வர்க்க ஐக்கியம் மிக உச்சத்தில் இருந்த 1927 ஆம் ஆண்டில் மிகப் பெரிய துறைமுக வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இவ்வேலை நிறுத்தத்தின் வெற்றியைத் தொடர்ந்தே 1928 இல் அகில இலங்கை தொழிற்சங்க காங்கிரஸ் விரிவானதோர் தொழிலாளர் ஸ்தாபனமாக உருவாக்கப்பட்டது. 1928 இல் குணசிங்காவின் தலைமையில் இலங்கை தொழிற்கட்சி நிறுவப்பட்டது, இக்கட்சியின் செயற் குழுவில் சிங்கள தமிழர் பேதமின்றி சகலரும் இடம் பெற்றனர். இக்கால கட்டத்தில் இலங்கை தேசிய காங்கிரஸ் சர்வசன வாக்குரிமையையும், இந்தியத் தொழிலாளர்களுக்கு வாக்குரிமை வழங்குவதையும் எதிர்த்தது. ஆனால் ஏ.ஈ. குணசிங்கா அவ்விரண்டையும் ஆதரித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இருபதுகளில் உருவாகியிருந்த தொழிற்சங்கப் பலத்தினதும், வர்க்க ஐக்கியத்தின் புரட்சிகரத்தன்மையினதும் வெளிப்பாடாக 1929ஆம் ஆண்டில் தலைநகரில் ட்ராம் வண்டித் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் இடம் பெற்றது. இவ்வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக ஏனைய துறைகளிலும் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். புரட்சிகர உணர்வுடன் செயற்பட்ட தொழிலாளர்கள் மருதானை பொலீஸ் நிலையத்தின் முன்பாக தாக்கப்பட்டதன் எதிரொலியாகப் பலத்த எதிர்மோதலில் ஈடுபட்டனர். கட்டிடங்கள் தீவைக்கப்பட்டன. பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 5 பேர் கொல்லப் பட்டனர். ஆயிரம் பேர்வரை காயமடைந்தனர். இவ் வேலை நிறுத்தம் அன்று வரையான தொழிலாளி வர்க்க இயக்கத்தின் வளர்ச்சிப் பாதையில் ஏற்பட்ட மிக உச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான புரட்சிகர நடவடிக்கையாக அமைந்தது. இது இலங்கையின் தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிகரத் தன்மையையும் அதன் எதிர்கால வளர்ச்சியையும் சுட்டி நின்றது.

இருபதுகளின் முழுமையை எடுத்து நோக்கும்போது ஒரு விசித்திரமான அம்சத்தை அடையாளம் காணலாம். இவை இரண்டு துறைகளில் இடம்பெற்றன. ஒன்று, அரசியல் சீர்திருத்தக் கோரிக்கை இடம் பெற்றது. அதிக அரசியல் சீர்திருத்தக் கோரிக்கை ஆரம்ப ஆண்டுகளில் முன்வைக்கப்பட்டு வலியுறுத்தப்பட்டது. ஆனால் அவற்றை முறியடிக்கும் விதத்தில் டொனமூர் ஆணைக் குழுவின் முடிவுகள் முப்பதுகளின் ஆரம்பத்துடன் திணிக்கப்பட்டு சுயாட்சிக் கோரிக்கையின் வளர்ச்சி வழிமறிக்கப் பட்டது. இத்தகைய அரைகுறை சீர்திருத்தங்களைக் இலங்கையின் உயர்வர்க்கத்தினர் பக்தி விசுவாசத்துடன் ஏற்றுக்கொண்டு இலங்கை மக்களின் அபிலாசைகளுக்குத் துரோகம் இழைத்துக்கொண்ட நிகழ்வு நடந்தேறியது. இரண்டாவது, தொழிலாளி வர்க்கத்தின் தொழிற்சங்க இயக்கத்தில் இடம்பெற்றது. ஆரம்ப ஆண்டுகளில் என்றுமில்லாதவாறு உருவாகிவந்த ஐக்கியப்பட்டதும் வர்க்க உணர்வு மிக்கதுமான தொழிலாளிவர்க்க இயக்கம் முப்பதுகளின் ஆரம்பத்துடன் இனவாத விஷத்தினால் பலவீனப்படுத்தப்பட்டது. இதில் கவனத்துக்குரியது யாதெனில், அந்த இயக்கத்தை இனபேதத்திற்கு அப்பால் கட்டி வளர்த்தவரான ஏ. ஈ. குணசிங்கா எதிர்நிலைத் தீவிர இனவாதியாக மாறி சிங்கள — மலையாள இனத் துவேசத்தின் கூர்முனையாகி நின்று செயற்பட்டமை யாகும். அன்று இலங்கைத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பேரினவாதக் கலங்களைக் கொண்ட கருவாக உருவாக்கப்பட்ட அவ் இனவாதமே பிற்காலத்தில் முழு உருவம் பெற்று தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கியத்தை சீர்குலைத்து சின்னாபின்னப்படுத்தும் வகையில் வளர்ச்சி பெற்றது என்பதனை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் அவசியமாகும்.

மேற்கூறிய இரு அம்சங்களும் இருபதுகளின் மிக முக்கிய நிகழ்வுப் போக்குகளாக அமைந்தன. இவை வளர்ந்து வந்த தேசிய நிலைமைகளில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தி நின்றதுடன் சர்வதேசிய நிகழ்வுகளோடும் சம்பந்தமுடையவையாகக் காணப்பட்டன, இத்தகைய நிகழ்வுகள் இடதுசாரிச் சிந்தனைகள் தோன்றுவதற்கும் வளர்நிலையை நோக்கிச் செல்வதற்கும் உரிய அடிப்படைகளைத் தோற்றுவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

# சர்வதேச நிலையின் வளர்ச்சிப் போக்கு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி மிக வேகமுடையதாகக் காணப்பட்டது. அதனால் புதிய சந்தைகளைத் தேடி நாடுகளைக் கைப்பற்றும் தவிர்க்கமுடியாத நிலைக்கு இம் முதலாளித்துவ நாடுகள் செல்வதாயிற்று. அம் முதலாளித்துவ நாடுகளிடையே ஏகாதிபத்திய அம்சங்கள் முனைப்புடன் வளர்ந்துசென்றன. இதன் விளைவாக இருபதாம் நூற்றாண்டின் ஆரப்பத்தில் ஆங்காங்கே ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளுக்கு இடையில் யுத்தங்கள் இடம்பெற்றன. இவற்றின் தொடர்ச்சியாக 1914-18ம் ஆண்டுகளில் முதலாவது உலக யுத்தம் இடம்பெற்றது. இவ் யுத்தம் ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான யுத்த மாகவே வெடித்தெழுந்தது. முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கினையும், அதன் விளைவான யுத்தங்களையும் குறிப்பாக முதலாவது உலக யுத்தத்தில் பங்குகொண்ட ஏகாதிபத்திய நாடுகளின் உள் இயல்புகளையும் கவனத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் கொண்டே தோழர் லெனின் 1916இல் புகழ் பெற்ற கட்டுரையான ''முதலாளித்துவத்தின் உச்சக்கட்டமே ஏகாதிபத்தியம்'' என்பதனை வெளியிட்டார். இக் கட்டுரை ஏகாதிபத்திய சகாப்தத்தின் அடிப்படைகளை துல்லியமாக எடுத்து விளக்கி நின்றது.

## ☐ ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சியும் விடுதலைப் போராட்டங்களும்

எந்தவொரு தீய அம்சத்தையும் நல்ல அம்சமாக மாற்றுவதற்கு மாக்சிசவாதிகள் இடையறாது முயல வேண்டும் என்ற மாக்சிசக் கூற்றுக்கிணங்கவே இம் முதலாவது உலக யுத்தத்தில் கலந்துகொண்ட ஜாரிச ரஷியாவிலே லெனின் தலைமையில் மகத்தான ஒக்ரோபர் சோஷலிசப் புரட்சி 1917இல் இடம்பெற்றது. இப்புரட்சி உலகின் தொழிலாளிவர்க்க இயக்கங்களுக்கும் அடக்கி ஒடுக்கப்பட்ட நாடுகளுக்கும்- மக்களுக்கும் ஒளிமிகுந்த வழிகாட்டியாக அமைந்தது. உலகம் பூராவும் சிறிய பெரிய அளவுகளில் கொலனி- ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் முனைவிடவும் வளரவும் செய்தன.

இருபதுகளின் ஆரம்பத்துடன் அவை வேகம் பெற லாயின, குறிப்பாக கிழக்குலகிலே விடுதலைப் போராட்டங்கள் வீறார்ந்த வேகத்துடன் முன்னெழுந்து செல்லதாயிற்று, சீனம், இந்தோசீனம், இந்தியா மற்றும் ஆசிய நாடுகளில் தேசிய எழுச்சிகளும் விடுதலைப் போராட்டங்களும் வளர்ந்துசெல்ல ஆரம்பித்தன. சீனாவில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலும் இந்தியாவில் இந்தியத் தேசிய காங்கிரசின் வழிகாட்டலிலும் ஏகாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் பல்வேறு வடிவங்களில் முன் செல்லத் தொடங்கின.

ஐரோப்பாவிலே முதலாளித்துவம், ஏகாதிபத்தியம், பாசிசம் ஒருபுறமாகவும் சோஷலிசமும் முற்போக்கு ஜனநாயக தேசபக்த இயக்கங்கள் மறுபுறமாகவும் அணி திரளும் நிலை மேன்மேலும் வளர்ச்சிகண்டது. இவற்றில் ஒருவர் எந்த நிலைப்பாட்டை மேற்கொள்வது என்பதனை தெளிவாக வரையறை செய்யவேண்டிய தேவையும் உருவாகியது. இருபதுகளின் நடுக்கூறுக்குப் பின் மேற்கூறிய நிலையிலே வீறும் முனைப்பும் காணப்பட்டமை குறிப்பிடக்கூடியதாகும். இத்தகைய சர்வதேசச் சூழலின் மத்தியிலேயே இருபதுகளில் இலங்கையில் இருந்து ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் உயர்கல்வி பெறுவதற்காக மாணவர்கள் பலர் சென்றார்கள். அவர்களை அன்றைய சர்வதேச சூழலின் முற்போக்கான கருத்துக்கள் தாக்கத்திற்கு ஆளாக்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

# வெளிநாடுகளில் இலங்கை மாணவர்கள்

இலங்கையில் அன்றுவரை உயர் பிரபுத்துவ குடும்பங்களில் இருந்தே வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பெறும் நிலை இருந்துவந்தது. இவ்வாறு சென்றவர்கள் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஏனைய குறிப்பிட்ட இடங்களிலும் ஆங்கிலக் கல்லூரிகளில் கல்விகற்ற உயர் குடும்ப மாணவர்களாகவே இருந்தனர். ஆனால் இருபதுகளின் ஆரம்பக் கூறிலே தெங்கு ரப்பர் பொருட்களின் உற்பத்தி, சாராயக் குத்தகை, சிறு வியாபாரம் போன்றவற்றின் பொருள் வருவாயின் காரணமாகப் புதிதாகத் தோற்றம்பெற்ற உயர் மத்தியதர வர்க்கக் குடும்பங்களில் இருந்துவந்த மாணவர்கள் கணிசமான தொகையினர் வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றனர். இவர்கள் முன்னைய மாணவர்களைப் போன்று ஆங்கிலக் கல்லூரிகளுக்குப் பதிலாக பௌத்த சிங்களப் பாடசாலைகளில் கல்வி பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். தாய்நாடு, தாய்மொழி, தமது கலாசாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன போன்ற ஆரம்ப உணர்வுகள் இவர்கள் மத்தியில் துளிர்விடக்கூடிய சூழல் நிலவியதுடன் இவற்றை மனதில் இருத்தும்படியான 1915ஆம் ஆண்டின் சிங்கள—முஸ்லீம் கலவரம் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. அக்கல வரத்தில் அந்நியராட்சி கட்டவிழ்த்துவிட்ட அடக்கு முறைச் செயல்கள் அநேகமான சிங்கள மக்களை சினம் கொள்ளச் செய்திருந்தது.

## □ இலங்கை மாணவர்களிடையே இடதுசாரிச் சிந்தனைகள்

இத்தகைய உயர்மத்தியதர வர்க்க குடும்பங்களில் இருந்துவந்த மாணவர்கள் ஐரோப்பிய அமெரிக்க பல் கலைக் கழகங்களில் உயர்கல்வி கற்க ஆரம்பித்த சூழலில் அவர்கள் மத்தியில் அரசியல் விழிப்புணர்வு உருவாகியது. அன்றைய சர்வதேசக் சூழலையும் அதில் ஏற்பட்டுவந்த தீவிர அரசியல் மாற்றங்களையும் இவர்கள் உற்று நோக்கத் தலைப்பட்டனர், உலகில் ஏகாதிபத்திய எதிர்ப்பு அலை தேசிய விடுதலைப் போராட்டங்களாக வேகம் பெற்றுவந்தன. குறிப்பாக இந்திய தேசிய விடு தலை எழுச்சி பெரும் புயலாக வீசியது. லண்டனிலும் ஏனைய மேற்கு நாடுகளிலும் கல்வி பயின்றுவந்த இந்திய மாணவர்கள் மிகவும் தீவிர செயற்பாட்டினைக் கொண் டிருந்தனர். இவை யாவும் இலங்கை மாணவர்களை உந்துதலுக்கு உள்ளாக்கியது. இதனால் இவர்களது உலகக் கண்ணோட்டத்தில் புதியவகைச் சிந்தனைகளும் செயற்பகடுகளும் தோன்ற ஆரம்பித்தன. லண்டனில் இந்திய மாணவர் சங்கம் மிகத் தீவிரமாக இயங்கி வந்தது. அதேபோன்று இலங்கை மாணவர் சங்கமும் தனது செயல்பாட்டை முன்னெடுத்தது. பிரித்தானியாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த சோஷலிஸ்டுக்கள், தொழிற்கட்சியின் இடம்சாரிப் பிரிவினர் மற்றும் முற்போக்காளர்கள் கொலனித்துவ நாடுகளின் மீதான தமது அனுதாபத்தையும் அக்கறையையும் கொண்டிருந்தனர். குறிப்பாகப் பிரித்தானியா கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையும் நடைமுறையும் இந்திய இலங்கை மாணவர்களை அதிக ஈர்ப்புக்கு உள்ளாக்கியது. இதனால் இம்மாணவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மார்க்சிசக் கருத்துக்களால் மிக விரைவாகக் கவரப்பட்டனர். டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா, பிலிப் குணவர்த்தனா, கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தனா, என். எம் பெரேரா போன்றவர்கள் தீவிர மார்க்சிசக் கருத்துக்களுடனும் விஞ்ஞான சோஷலிசத்தின் மீதான பற்றார்வத்துடனும் தாய்நாடு திரும்பினர். இவர்களைத் தொடர்ந்து கல்வி கற்கச் சென்றவர்களில் பீற்றர் கெனமன், பொன், கந்தையா, அ. வைத்திலிங்கம் போன்றவர்களும் அவ்வாறு தீவிர மார்க்சிசக் கருத்துக்களுடன் நாடு திரும்பினர். இவர்களில் முதல் தொகுதியினர் இருபதுகளின் முடிவிலும் முப்பதுகளின் ஆரம்பத்திலும் நாடு திரும்பினர். அடுத்து தொகுதியினர் முப்பதுகளின் பிற்கூறிலே நாடு திரும்பினார்கள்.

மேற்கூறிய மாணவர் குழாம் மேற்குலகில் கல்வி கற்று தீவிர மார்க்சிசக் கருத்துக்களோடும் சோஷலிச எண்ணங்களுடனும் வந்திறங்கிய அதேவேளை அவர்களுக்குரிய வர்க்கப் பின்னணியும் அது சார்ந்த வர்க்க முத்திரையும் இருக்கவே காணப்பட்டது, ஆரம்ப காலங்களில் அம்முத்திரை மறைந்திருந்ததுபோன்று காட்சிகொடுத்தபோதிலும் காலத்திற்குக்காலம் அதன் சாயல் தென்படச்செய்த்துடன் அவர்களது இறுதிக் காலங்களில் மிகவும் துலக்கமாக அதனைக் காணக்கூடிய நிலைமைகள் உருவாகின. ஒருவர் மார்க்சீச உலகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணோட்டத்தைத் தத்துவரீதியில் அரைகுறையாகப் பெற்றுவிட்டால் மட்டும் போதுமானதல்ல. அதனை நடைமுறைப்படுத்துவதில் இறுதிவரை சளைக்காது சரியான பாட்டாளி வர்க்கப் பாதையில் நின்று போராடுவதைப்பொறுத்தே அவரது உலகக் கண்ணோட்ட அடிப்படையை மதிப்பீடு செய்துகொள்ள முடியும். இதனைப் பின்வரும் அத்தியாயங்களில் விளக்கமாகப் பார்க்க முடியும்.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

# ஆரம்ப ஆண்டுகள்

முப்பதுகளின் ஆரம்பத்துடன் இலங்கையின் அரசியல் பொருளாதார, சமூகத் துறைகள் அனைத்திலும் குறிப்பான சம்பவங்கள் இருபதுகளின் தொடர்ச்சியாக இடம்பெற ஆரம்பித்தன. உலக ரீதியாக உருவாகிய (1929-31) பொருளாதார நெருக்கடி இலங்கையை அதி களவு பாதித்தது. பொருட்களின் விலை உயர்வு அதிகரித்ததுடன் தொழில் துறைகளில் ஆட்குறைப்பு இடம் பெற்றன. அத்துடன் வேலையின்மை பல மடங்காகியது, இக்காலத்திலேயே முதலிரு தசாப்தங்களில் பிரபல தீவிர தொழிற்சங்கவாதியாகவும், தேசியவாதியாகவும், இன' மொழி வேறுபாடுகளை முதன்மைப்படுத்ாதவராகவும் செயற்பட்டு, தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் செல்வாக்குடையவராக இருந்துவந்த ஏ. ஈ. குணசிங்கா எதிர் நிலைப்பாட்டாளாராக மாறினார். அவர் பொருளாதார நெருக்கடிகளுக்கு குறிப்பாக வேலையின்மை பெருகியமைக்கு பிரித்தானிய ஆட்சியாளர்களை எதிர்த்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிப்பதற்குப் பதிலாக தலைநகரின் பல துறைகளிலும் தொழில் புரிந்துவந்த இந்திய-மலையாளத் தொழிலாளர்களே காரணம் என்ற இனவாதப் பிரசாரத்தில் இறங்கினார். மலையாளிகள் வேலையிலிருந்து அகற்றப்பட்டு துரத்தப்படுவதன்மூலம் அவ் இடங்களுக்கு சிங்களத் தொழிலாளர்களை நியமிப்பதனால் வேலையின்மை அற்றுப் போய்விடும் எனப் புள்ளிவிபரங்கள் காட்டி தீவிர இனவாதியாகிக் கொண்டார். அத்துடன் முன்பு தீவிரத் தன்மையுடன் நடத்திய வேலைநிறுத்தப் போராட்டங்களுக்குப் பதிலாக முதலாளிகளுடனும் அந்நிய ஆட்சியினருடனும் மிகவும் இணக்கத்துடன் நடக்க ஆரம்பித்து இறுதியில் வேலைநிறுத்தங்களை முறியடிக்கும் கீழ்த்தர கையாளாகச் செயற்படவும் தயங்காத நிலையை எடுத்தார்.

## □ ஏகாதிபத்திய எதிர்ப்பும் வாலிப முன்னணிகளும்

நாட்டை வெகுவாகப் பாதித்துநின்ற பொருளாதார நெருக்கடி பற்றி இலங்கை தேசிய காங்கிரசினுள் இருந்த உயர்வர்க்க மிதவாதத் தலைவர்கள் அக்கறையற்றவர்களாக இருந்தனர். அவர்களது சுகபோக வாழ்வுக்கு எவ்வித சேதமும் ஏற்படாத காரணத்தினால் உழைக்கும் மக்களைக் கடுமையாகப் பாதித்த பிரச்சினைகளைப் பற்றி அவர்கள் எவ்வித கருசனையும் காட்டவில்லை. அதேவேளை இருபதுகளின் பிற்கூறிலே அரசியல் சீர்திருத்தம் செய்யவந்த டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளைப் பணிவன்புடன் ஏற்றுக்கொள்ளவும் செய்தனர். ஆனால் டொனமூர் ஆணைக்குழுவின் கபடநோக்கம் மிக்கப் பரிந்துரைகள் இலங்கையின் முழுமையான தேசிய சுதந்திரக் கோரிக்கைக்கு எவ்வித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனையும் ஏற்படுத்தப்போவதில்லை எனக் கூறி தீவிர தேசியவாத சக்திகள் எதிர்க்குரல் கொடுக்கலாயினர். இவ் எதிர்க்குரல் இலங்கை முழுவதிலும் ஒரே சீரான வகையில் ஒலிக்கக்கூடியதாக இருக்கவில்லை. காரணம் அதற்குரிய நிறுவன அமைப்பு எதுவும் இருக்கவில்லை. எனவேதான் இருபதுகளின் நடுக்கூறிலே நாட்டின் பல பகுதிகளிலும் உருவாகிய பல்வேறு வாலிபர் அமைப்புக்கள் முக்கியத்துவம் பெறலாயின. ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் 1924ஆம் ஆண்டில் உருவாகியிருந்தது. அதனை வடபகுதியில் இருந்த தேசியவாத எண்ணமும் சமூக அக்கறையும் கொண்ட மாணவர்கள் உருவாக்கி இருந்தனர். இவ் அமைப்பே முப்பதுகளில் ஆரம்பத்துடன் புகழ்பெற்ற யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் பெற்றது. அதேபோன்று தெற்கிலும் வாலிபர் முன்னணிகள் கொலனித்துவ எதிர்ப்பு நோக்குடன் உருவாகின. முப்பதுகளில் ஆரம்பத்தில் அவை அனைத்தையும் இணைத்து அகில இலங்கை வாலிபர் காங்கிரஸ் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இவ் அமைப்புக்கள் இந்திய தேசிய காங்கிரசின் தீவிரத் தலைவர்களாகிய கமலாதேவி சட்டோபாத்தியாய, ஜவர்கலால் நேரு போன்றவர்களை வரவழைத்து பிரபல்யம் மிக்க கூட்டங்களை நடாத்தி தமது தீவிர தேசியவாத எண்ணங்களையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைகளையும் தெளிவுடன் வெளிக்காட்டி நின்றன.

இத்தகைய வாலிபர் முன்னணிகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பும், தேசிய சுதந்திரத்திற்கான அவாவும் கொண்ட கல்விகற்ற சிங்கள, தமிழ், முஸ்லீம் இளைஞர்கள் முனைப்புடன் செயலாற்றி நின்றனர். இவர்கள் இலங்கை தேசிய காங்கிரசின் மிதவாதக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்கைகளையும், அந்நியர் ஆட்சியுடன் இணங்கிப் போகும் சமரசப் போக்கையும் எதிர்த்து வந்தனர். இவ்வாறு கொழும்பையும் அதன் சுற்றுப்புறங்களிலும் உருவாகிய வாலிபர் அமைப்புகளில் மார்க்சிசக் கருத்துக்களுடனும், ஏகாதிபத்திய எதிர்ப்பு எண்ணங்களுடனும், தேசிய சுதந்திரம் பற்றிய சிந்தனையுடனும் வெளிநாட்டுக் கல்வியை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய இளைஞர்கள் இணைந்துகொண்டனர். அத்தகைய இளைஞர்களுக்கு ஏற்கனவே உருவாகி இருந்த இவ்வாலிப முன்னணிகள் செயலுக்குரிய தகுந்த களமாகக் காணப்பட்டன.

## □ யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்

இவ் இடத்திலே யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் பற்றி எடுத்துக் கூறுவது அவசியம். 1924இல் யாழ்ப்பாணத்தில் கல்விகற்ற மாணவர்களால் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டது. தேசியவாத சிந்தனைகளும் சமூக அக்கறையும் கொண்ட மாணவர்கள் ஒன்றுசேர்ந்தே இதனை ஆரம்பித்தனர். இவர்களில் ஹெண்டி பேரின்பநாயகம், ஜே.வி. செல்லையா, சி. சுப்பிரமணியம் (ஒறேற்றர்), கு. நேசையா, பி. நாகலிங்கம் போன்ற பலர் முக்கிய மானவர்களாக இருந்தனர். இம்மாணவர் காங்கிரஸ்தான் முப்பதுகளின் ஆரம்பத்தில் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசாகப் பெயர் மாற்றம் பெற்றது. இந்திய தேசிய இயக்கத்தின் எழுச்சியும், அந்நியராட்சிக்கு எதிரான அதன் செயற்பாடுகளும் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் பின்புலமாக அமைந்தது. இலங்கைக்குப் பூரண சுயாட்சி, சுயமொழிகளில் கல்வி, தேசிய ஒற்றுமை, சாதி—தீண்டாமையை எதிர்த்தல், தேசிய இலக்கியம்—கலாசாரம் பேணல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற அம்சங்களை வாலிபர் காங்கிரஸ் தமது கொள்கையாக வரையறைசெய்து பிரசாரத்திற்கும் நடைமுறைச் செயற்பாட்டிற்குமுரிய அம்சங்களாக முன்னெடுத்தது. வருடாவருடம் மாநாடுகளையும், கூட்டங்களையும் நடாத்தி வந்தது. வருடாந்த மாநாடுகளில் இந்திய தேசிய இயக்கத்தின் தலைவர்களையும், தென் இலங்கையின் அரசியல் பிரமுகர்களையும் அழைத்து உரையாற்ற வைத்தது. 1926இல் மகாத்மா காந்தியை வடபகுதிக்கு வரவழைத்து வரவேற்புக் கூட்டங்களை நடத்தியது. கமலாதேவி சட்டோபாத்தியாய, ஜவாகலால் நேரு, கல்யாணசுந்தரனார் போன்றவர்களை அழைத்து முக்கியத்துவம்மிக்க மாநாடுகளை இக்காங்கிரஸ் நடாத்தியது

யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் 1931ஆம் ஆண்டில் டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நடைபெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலைப் பகிஷ்கரித்து தனது பெயரை இலங்கை அரசியல் வரலாற்றில் பொன் எழுத்துககளால் பதித்துக் கொண்டது. சர்வசனவாக்குரிமை அடிப்படையில் நடைபெற்ற இத்தேர்தலை வாலிபர் காங்கிரஸ் முற்றாகப் பகிஷ்கரிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. இப்பகிஸ்கரிப்புக்கான பிரதான காரணம் டொனமூர் ஆணைக் குழுவின் பரிந்துரைகள் இலங்கைக்குப் பூரண சுயாட்சி எதனையும் வழங்கவில்லை என்பதைச் சுட்டிக்காட்டி அதற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையிலேயே தேர்தல் பகிஷ்கரிப்பு நடாத்தப்பட்டது. வடபகுதியில் வாலிபர் காங்கிரசின் முடிவு பெரும்பான்மையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலையில் எவரும் தேர்தலில் போட்டியிட முன்வரவில்லை. இதனால் முதலாவது சட்டசபையில் வடபகுதிக்கான நான்கு தொகுதிகள் நான்கு வருடங்களாக எவ்விதப் பிரதிநிதிகளும் இன்றியே இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. இப்பகிஷ்கரிப்புக்கான தீர்மானத்தில் கொழும்பில் உள்ள வாலிப முன்னணிகளும் இணைந்து செயற்பட ஆரம்பத்தில் தீர்மானித்தபோதிலும் இறுதியில் அவ்வாறு அவை பகிஷ்கரிப்பை வெற்றிகரமாக நடாத்த இயலாமல் போய்விட்டது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் அன்று எடுத்த பகிஷ்கரிப்பு முடிவு பலவித விவாதங்களைப் பின்னாளில் கிளப்பியபோதிலும் அந்நியராட்சி அரைகுறையான சீர்த்திருத்தங்களைப் பெயரளவில் முன்வைத்து நடத்திய ஒரு தேர்தலை வட பிரதேசத்தில் முற்றாகப் பகிஷ்கரித்து நிராகரித்த செயல் அன்று மிகவும் புரட்சிகரமானதொன்றேயாகும். இப் பகிஷ்கரிப்பு ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு ஒரு புகட்டதக்க பாடமாகவும், இளந்தலைமுறையினருக்கு கற்றுக்கொள்ளத்தக்க முன்னுதாரணமாகவும் திகழ்ந்தது. பின்நாட்களில் சட்டசபையில் புகுந்து தமது வர்க்க நலன்களைப் பாதுகாத்துநின்ற தமிழர் தலைவர்கள் சிலர் மேற்படி பகிஷ்கரிப்பை 'முட்டாள்தனமானது', 'சிறு பிள்ளைத்தனமானது' எனச் சுட்டிக்காட்டினர். அதே போன்று சில சிங்களத் தலைவர்கள் அதனை ஓர் இன சார்பு நடவடிக்கை எனக் காட்டவும் முயன்றனர். ஆனால் உண்மை யாதெனில் கொலனித்துவ ஆட்சிக்கு எதிரான தேசிய உணர்வு கொண்ட செயல்பூர்வமான நடவடிக்கையாகவே அதனைக் கண்டுகொள்ள முடியும். இவ்வாலிபர் காங்கிரஸ் சுமார் பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணச் சமூகச் சூழலில் ஓர் முற்போக்கானதும் காத்திரமானதுமான பாத்திரத்தை சமூக, அரசியல் முனைகளில் வகித்து வந்தது நோக்கத்தக்க தாகும். இதன் தீவிர உறுப்பினர்கள் சிலர் பிற்காலத்தில் ஊக்கமுள்ள வடபகுதி இடதுசாரித் தலைவர்களாகவும் தமிழ்ப் பாராளுமன்ற வாதிகளாகவும் திகழ்ந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## □ சூரியமலர் இயக்கம்

முப்பதுகளின் ஆரம்பத்துடன் கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இயங்கிவந்த வாலிபர் முன்னணிகள் தமது தீவிர தேசிய உணர்வுமிக்க செயல்களை விரைவான நேரடி ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளாக முன்தள்ளும் நிலைக்கு வளர்ந்தன. அதன் செயலுக்குரிய இயக்கமாக முன்னெடுக்கப்பட்டதே 'சூரியமலர்' இயக்கமாகும். இவ் இயக்கமே இலங்கையில் இடதுசாரி இயக்கம் உருவாகுவதற்கான முன்னணித் தலைவர்களையும் உறுப்பினர்களையும் ஒன்றுசேர்த்து வைத்த செயல்பூர்வமான இயக்கமாகும்.

இருபதுகளின் முற்கூறிலே பிரித்தானிய ஆட்சியாளர்களும் அரசாங்க உத்தியோகத்தர்களும் சேர்ந்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் 11ம் திகதியை (முதலாவது உலக யுத்தம் முடிவடைந்த நாளைக் குறிக்கும்) பொப்பீ மலர்களை விற்பனை செய்யும் நாளாக நடாத்தி வந்தார்கள். பகிரங்க இடங்களில் இப்பொப்பி மலர்களை விற்பனைசெய்து அதன்மூலம் சேகரிக்கப்பட்ட நிதி முன்னாள் பிரித்தானிய படைவீரர்களுக்கென இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டுவந்தது. இதனை தேசியவாதிகளான இலங்கையர் பலர் ஆரம்பம் முதலே எதிர்த்துவந்தனர். பொப்பி மலர் விற்பனையின் மூலம் சேர்க்கப்படும் நிதியில் அற்ப தொகையே இலங்கையைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்களுக்கு சேர்கிறது என்றும் பெருந்தொகையான பணம் பிரித்தானிய படைவீரர்களுக்கு சென்றடைவதையும் சுட்டிக்காட்டி இதனை நிறுத்தும்படி கோரினர். 1926இல் இதற்கு எதிரான கூட்டம் ஒன்று கொழும்பு நகரில் நடத்தப்பட்டது. என். டபிள்யூ. டி சில்வா, ஜேம்ஸ் ரட்ணம், வலன்டைன்பெரேரா, ஹரி அபேகுணவர்த்தனா, சி. பொன்னம்பலம் போன்ற தீவிர தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாத இளைஞர்கள் இவ் எதிர்ப்புக் கூட்டத்தை நடத்தினர். இருப்பினும் பொப்பி மலர் விற்பனையும் நிதி சேகரிப்பும் தொடர்ந்தது. ஆனால் 1931ஆம் ஆண்டின் போது இப்பொப்பி மலர் விற்பனைக்கு எதிராக இலங்கையின் மலர் ஒன்றான சூரியமலர் விற்பனை செய்யும் ஓர் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இதனை முன்னாள் படைவீரரும், முன்னாள் படைவீரர் சங்கத் தலைவருமான ஏலியன் பெரேரா தொடக்கி வைத்தார். இச் சூரிய மலர் விற்பனையால் வரும் நிதி இலங்கையின் முன்னால் படைவீரர்களுக்கும் ஏனைய பொது விடயங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. ஏகாதிபத்திய ஆதரவுச் செயலான பொப்பிமலர் விற்பனைக்கு எதிரான சூரியமலர் விற்பனை இயக்கம் தொடங்கப்பட்டதும் வாலிப முன்னணிகளைச் சேர்ந்த இளைஞர்கள் அதில் மிக உற்சாகமாகக் கலந்து கொண்டதுடன் அதனைப் படிப்படியாக நேரடி ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கையாக வளர்க்கவும் முற்பட்டனர். இவ் இயக்கத்தின் வளர்ச்சியையும் அது அரசியல் நோக்க அடிப்படையில் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடைமுறையாக மாறுவதையும் கண்டே 'து சூரியமலர் விற்பனையைத் தொடங்கிய முன்னாள் படைவீரர் சங்கத்தினர் பயத்தின் காரணமாக 1932இல் அதனைக் கைவிடத் தீர்மானித்தனர். இச்சந்தர்ப்பத்திலேயே சூரியமலர் இயக்கத்தை கையேற்றுத் தொடர்ந்து நடத்துவதென கொழும்பு வாலிப முன்னணி தீர்மானித்து செயற்பட முன்வந்தது. 'சுதந்திரம்', 'சமாதானம்' புதிய சூரியமலர் இயக்கத்தின் பதாகையாக உயர்த்தப்பட்டது. இவ் இயக்கம் தெளிவான ஏகாதிபத்திய எதிர்ப்பு இயல்பைப் பெற்றுக் கொண்டது. டொறீன் விக்கிரமசிங்கா (எஸ்.ஏ. விக்கிரமசிங்காவின் மனைவி) அதன் முதலாவது தலைவராகவும் ரெரன்ஸ் டி சில்வா, ரொபின் ரட்ணம் இணைச் செயலாளர்களாகவும், றோய் டி மெல் பொருளாளராகவும் கொண்ட தலைமைக்குழு தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சூரியமலர் இயக்கம் அமைப்பு வடிவத்தைப் பெற்றதுடன் மேலும் அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகள் விரிவாகின. 1933ஆம் ஆண்டின் சூரியமலர் விற்பனை என்றுமில்லாதவாறு மக்கள் மட்டத்தின் பல பிரிவுகளுக்கும் சென்றது. தொழிற்சாலைகள், குடியிருப்புகள், பாடசாலைகள், சந்தைகள், பொது இடங்கள் யாவற்றிலும் சூரியமலர் விற்பனை இடம்பெற்றதுடன் அந்த இயக்கத்தின் நோக்கங்கள் பற்றிய பிரசாரங்களும் பரவலாக இடம் பெற்றன. அந்நிய ஆட்சியாளர்கள் இவ் இயக்கத்தைக் கண்டு அச்சமும் எரிச்சலும் அடையுமளவிற்கு அது தாக்கம் மிக்கதாக இருந்தது. முதலாவது உலக யுத்தத்தின் ஏகாதிபத்திய தன்மையையும், யாருக்காக அவ் யுத்தம் நடாத்தப்பட்டது என்ற உண்மையையும் இவ் இயக்கம் புட்டுக்காட்டியது. பொப்பி மலர் விற்பனையும் சூரியமலர் விற்பனையும் ஒரே நாளில் போட்டி போட்டு நடாத்தப்பட்டது. உயர்வர்க்கத்தைச் சேர்ந்த அந்நிய ராட்சி ஆதரவாளர்களும், அரசாங்க உத்தியோகத்தர்களுமே பொப்பி மலர்களை வாங்கிக்கொண்டனர். ஆனால் சூரியமலர்களைப் பெரும்பான்மையான மக்கள் வாங்கினர். சூரியமலர் விற்பனையால் சேர்க்கப்பட்ட நிதியில் இருந்து சிங்கள மக்கள் மத்தியில் சாதியில் குறைந்தவர்களாகக் கருதப்படும் 'ரொடியா' சாதியைச் சேர்ந்த பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு நிதி உதவப்பட்டது. அத்துடன் மக்களை விழிப்புறச்செய்யும் பிரசுரங்கள், வெளியீடுகள் வெளியிடப்பட்டன. இவ் இயக்கத்தின் பரந்த நடைமுறை அம்சங்களினால் வாலிப முன்னணிகளின் செயற்பாடு புதிய கட்டத்தினுள் பிரவேசித்தது மட்டுமன்றி சூரியமலர் இயக்கமானது ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற புதிய பரிமாணத்தையும் பெற்றுக்கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலேரியா நோயும் நிவாரணப் பணியும்

இளமைப்போக்கும் தீவிரநோக்கும் கொண்ட சூரிய மலர் இயக்கத்தினருக்கு அந்த இயக்கத்தை விரிவு படுத்தவும் மக்கள் மத்திக்கு எடுத்துச் செல்வதற்குமுரிய மற்றொரு சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதுவே 1934 - 35 ஆண்டுகாலப்பகுதியில் இலங்கையில் பரவிய மலேரியா நோயாகும். அக்காலத்தில் இந்நோயினால் ஒரு இலட்சம் மக்கள இறந்தனர். பதினைந்து லட்சம் பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டனர். மலேரியா இவ் வளவிற்கு கொடுமை மிகுந்ததாகப் பரவுவதற்கும், மக்களை லட்சக்கணக்கில் காவுகொள்வதற்கும் அந்நிய ராட்சியும் அதற்குப் பாதம் தாங்கிகளாக செயற்பட்ட உள்ளூர் உயர்வர்க்கத் தலைவர்களின் பாராமுகக் கொள்கைகளுமே காரணமாகும். கொடிய வரட்சியும் பயிரழிவும் மட்டுமன்றி பின் தங்கிய கிராமப்புற விவசாயிகள் ஏற்கனவே ஆட்சியினரால் கைவிடப்பட்ட வர்களாக நடத்தப்பட்டதன் விளைவாகவுமே இந் நோய் அவர்களை எளிதில் சென்றடைய வாய்ப்பு ஏற்பட்டது. அரசாங்கம் நிவாரணமாகப் பணத்தை சிறிதளவு ஒதுக்கியதுடன் மலேரியா நிவாரண நிதியும் சேர்க்கப்பட்டது. பல தொண்டர் ஸ்தாபனங்கள் உணவு, உடை மற்றும் பொருட்கள் சேகரிப்பதில் ஈடுபட்டனர்.

இச்சந்தர்ப்பத்திலேயே சூரியமலர் இயக்கத் தொண் டர்கள் மலேரியா நோயால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் தீவிர நிவாரணப் பணிகளில் ஈடுபட்டனர். பல மாதங்களாக குறிப்பிட்ட மாவட்டங்களில் அவர்கள் தங்கியிருந்து மக்கள் மத்தியில் நிவாரணப் பணிகளிலும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளிலும் தொண்டாற்றினர். டாக்டர் எஸ்.ஏ.விக்கிரமசிங்கா, கொல்வின் ஆர். டி சில்வா, என்.எம்.பெரேரா, றொபின் ரட்ணம், பிலிப் குணவர்த்தனா, றொபேட் குணவர்த்தனா, டாக்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேரி இரட்ணம், ஹறி அபேகுணவர்த்தனா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு சூரியமலர் இயக்கத்தினர் மலேரியா நிவாரணப்பணிகளில் ஈடுபட்டதன் மூலம் மக்கள் மட்டத்தில் மிக இறுக்கமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. அவர்களது தொண்டினை மக்கள் மதித்துப் போற்றியதோடு அவ்வப்போது சூரியமலர் இயக்கத்தினரின் ஏகாதிபத்திய எதிர்ப்புக் கருத்துக்களையும் செவிமடுத்து ஆதரவு தெரிவிக்கும் நிலைக்கும் வந்தனர்.

சூரியமலர் இயக்கத்தை வாலிப முன்னணியினர் கையேற்பதற்கு முன்பாக 1931ஆம் ஆண்டில் இடம்பெற்ற முதலாவது சட்டசபைத் தேர்தலில் வெளிநாட்டுக் கல்வியை முடித்துக்கொண்டு நாடு திரும்பியவரான இளம் வைத்திய கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்கா போட்டியிட்டார். தீவிர மார்க்சீசவாதியான விக்கிரமசிங்கா தென் இலங்கையின் பிரபுத்துவக் குடும்பத்தைச் சேர்ந்தவராவர். ஒரு புறம் அவருக்கு குடும்பச் செல்வாக்கு இருந்த அதேவேளை மறுபுறம் அவர் கொண்டிருந்த சோஷலிசக் கருத்துக்களும் மக்களுடனான நெருக்கமிக்க தொடர்புகளுக்கு முயன்ற நடைமுறைகளும் அவருக்கு அதிகரித்த செல்வாக்கைத் தேடித்தந்தன. இதன் காரணமாக மொரவாக்க தொகுதியில் இருந்து விக்கிரமசிங்கா முதலாவது சட்டசபைக்கு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறு சட்டசபைக்கு தெரிவான சந்தர்ப்பத்தை விக்கிரமசிங்கா மிகவும் பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக்கொள்ள முடிந்தது. சட்டசபையில் தனி ஒருவராக நின்று அந்நிய ஏகாதிபத்திய ஆட்சியை - அதன் ஒவ்வொரு மக்கள் விரோத செயல்களையும் எதிர்த்து நின்றார். அவரது சட்டசபைப் பேச்சுக்களும், விவாதங்களும் வாலிப முன்னணியினரின் - சூரியமலர் இயக்கத்தினரின் வேலைமுறைகளுக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிதும் உதவின. விக்கிரமசிங்கா சட்டசபைப் பேச்சுடன் நின்றுவிடவில்லை. மருத்துவத் தொழிலை மக்கள் தொண்டுடன் இணைத்து முன்னெடுத்ததுடன் தீவிர அரசியல் பிரச்சாரங்களிலும் பங்குகொண்டு உழைத்தார்.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

## சூரியமலர் இயக்கமும் அதன் தாக்கமும்

இவ்வாறு 1930-35 ஆண்டுகாலப்பகுதியில் வாலிப முன்னணியினரின் தேசிய உணர்வும் – முழுமையான தேசிய சுதந்திரம் கோரிநின்ற போக்கும் வளர்ச்சி கண்டதுடன் சூரியமலர் இயக்கத்துடன் அவ்வளர்ச்சி மேலும் விரிவடைந்து நேரடி ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமாகப் பரிணமித்துக் கொண்டது. இச்சூரியமலர் இயக்கம் மலேரியா நிவாரணப் பணியில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டதன் மூலம் வெகுஜனத் தொடர்பைப் பெற்றுக்கொண்ட சூழலையும் உருவாக்கியது. அதே வேளை, உள்நாட்டில் இந்திய தேசிய இயக்கத்தின் எழுச்சி உருவாக்கிய தாக்கத்தால் இளம் படிப்பாளிகளிடையே தீவிர தேசீயவாத உணர்வுகள் உருப்பெற்றிருந்தன. அத்தகையவர்கள் வாலிப முன்னணிகளின் செயல்வீரர்களாகவும் திகழ்ந்தனர். இவர்களுடன் முற்கூறப்பட்ட வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பிய இளம் மார்க்சீசவாதிகளாக இளைஞர்களும் இணைந்தபோது அந்நிய ராட்சிக்கு எதிரானதும், மக்கள் சார்பானதும், தேசீயத் தன்மைகளை முதன்மைப்படுத்தும் இயக்கப் போக்கு முனைப்புடன் முன்னெழுந்து நின்றது.

அதே காலத்தில் தொழிலாள வர்க்கத்தினர் மத்தியிலும் அவ் இளம் மார்க்சிஸ்டுகள் செல்வாக்குப் பெறும் நிலை நிலவியது. அதற்கு முதற்களமாக அமைந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர் மத்தியில் உருவாகிய போராட்டமாகும். தொழிலாளர்களை ஆட் குறைப்பு, வேலைநேரக் குறைப்பு, சம்பள உயர்வு மறுப்பு போன்றவற்றை முன்வைத்து வேலைநிறுத்தம் இடம் பெற்றது. முன்னையத் தொழிற் சங்கத் தலைவரான ஏ. ஈ. குணசிங்கா இனவாத அடிப்படையிலும், முதலாளி வர்க்க சார்பாகவும் நடந்து கொண்டதன்மூலம் தொழி லாளர்களுக்கு துரோகமாகச் செயற்பட்டார். அதே வேளை இளம் சட்டத்தரணியும் மார்க்சிசவாதியுமான கொல்வின் ஆர். டி சில்வா தொழிலாளர்கள் சார்பாக தொழிற்சங்க நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டதுடன் புதிய தொழிற்சங்கம் உருவாக்கமும் பெற்றது. இத் தொழிலாள போராட்டத்தை இளம் மார்க்சிசவாதிகள் தகுந்தவாறு ஒழுங்குபடுத்தி தொழிலாளர்கள் மத்தியில் வர்க்க உணர்வை வளம்படுத்தவும், போராட்டத்தில் உறுதியாக நின்றுகொள்ளவும் உரிய தலைமை வழங்கினர்

1930-35 காலகட்டத்தில் இலங்கை தேசிய காங்கிரஸ் மேன்மேலும் மிதவாதப் போக்கிலும் அந்நியர் ஆட்சிக்கு கால்பிடித்துச் செல்லும் பாதையிலும் சென்றது. இளம் தேசியவாதியான எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டார நாயக்கா 1926இல் முற்போக்குத் தேசியக் கட்சியை உருவாக்கினாராயினும் அதன் நோக்கத்திற்கமைய அதனை ஒரு கட்சியாக வளர்த்தெடுக்க முடியவில்லை. இறுதியில் அம்முயற்சி கைவிடப்பட்டது. அதன்பின் 1928இல் தீவிர தேசியவாதியான ஏ. ஈ. குணசிங்கா இலங்கை தொழிற்கட்சியை தோற்றுவித்தார். அக்கட்சி தொழிலாளர்களுக்காக அனுதாபக் குரல் கொடுக்கும் ஒன்றாக மட்டும் இருந்ததே தவிர தொழிலாள வர்க்கக் கட்சியாக விளங்க முடியவில்லை. இங்கிலாந்தின் தொழிற் கட்சிப் பாதையில் செயற்பட முனைந்தது மட்டுமன்றி அதன் இனவாத, முதலாளித்துவ வர்க்க சார்பான செயற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடுகளால் விரைவிலேயே அக்கட்சி சீரழிந்து செயலற்ற தாகிக் கொண்டது.

இத்தகைய சூழலிலேயே வாலிப முன்னணியினர், சூரியமலர் இயக்கத்தினர் உள்ளிட்ட அனைவரும் இணைந்து ஓர் அரசியல் கட்சியை உருவாக்கிக் கொண்டனர். அதுவே இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

# முதலாவது இடதுசாரிக் கட்சியின் தோற்றம்

1935ம் ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18ம் திகதி இலங்கையின் முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. அதன் முதலாவது தலைவராக கொல்வின் ஆர். டி. சில்வாவும், வேர்ணன் குணசேகரா செயலாளராகவும் தெரிவுசெய்யப் பட்டனர். இருபத்தைந்து சதத்தை அங்கத்துவப் பண மாகச் செலுத்தி கட்சியில் இணைய விரும்பிய அனைவரும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்பையும், நாட்டின் விடுதலையையும், சாதாரண மக்கள் மீதான அனுதாபத்தையும் கொண்ட அனைவரும் இக்கட்சியில் இணைந்தனர். இலங்கையில் தேசிய சுதந்திரத்திற்கான தீவிரத்தன்மைவாய்ந்த உறுதி மிக்க தேசிய இயக்கம் ஒன்று இல்லாத சூழலில் இப்புதிய கட்சியானது அத்தேவையை நிறைவுசெய்யக் கூடியதாக இருக்கும் என்ற பலமான எதிர்பார்ப்பில், பல தரப்பட்ட சக்திகளும் இக்கட்சியில் இணைய முன்வந்தன. இதனால் தேசியவாதிகள், சீர்திருத்தவாதிகள், சோஷலிஸ்ட்டுக்கள் கம்யூனிஸ்டுக்கள் மற்றும் முற்போக்கு சிந்தனை கொண்ட அனைவருமே இதன் உறுப்பினர்களாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் மார்க்சிசத்தை மிக ஆர்வத்துடன் கற்றவர்களும் அதனைச் செயலாற்றி நிற்கவேண்டும் என உள்ளார்ந்த ரீதியில் விரும்பியவர்களும் அக்கட்சியின் தலைமைக் குழுவில் அதிகளவு இடம்பெற்றிருந்தனர். கொல்வின் ஆர். டி சில்வா, எஸ் ஏ. விக்கிரமசிங்கா, என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா, லெஸ்லி குணவர்த்தனா. றொபேட் குணவர்த்தனா போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கினர். இருப்பினும் இவர்கள் தாங்கள் உருவாக்கிய கட்சியை ஒரு மார்க்சிசக் கட்சி என்று வெளிப்படையாகக் கூறிக்கொள்ள முன்வரவில்லை. அதனால் சமசமாஜக் கட்சியின் பெயர் புதுவகையான அரசியல் அர்த்தத்தை வழங்குவதாக அமைந்தது. குறிப்பாக சிங்கள மொழிச் சூழலில் சோஷலிசம், கம்யூனிசம், வர்க்கம் போன்றவற்றுக்கான நேரடியான மொழிப்பதம் எடுத்துக்கொள்வதைத் தவிர்த்துக்கொண்டனர். எனவே இவை யாவற்றையும் உள்ளடக்கிய புதிய அர்த்தத்தைக் கொடுக்கும் சொற்றொடராகவே சமசமாஜய என்னும் பெயர் சூட்டப்பட்டது. இச் சொற்தொடர் நாளடைவில் சோஷலிசத்தைச் சுட்டி நிற்கும் ஒன்றாகத் திகழ்ந்தது. சாராம்சத்தில் சமசமாஜ இயக்கம் மார்க்சிச அடிப்படையில் வளர்ந்து செல்லும் ஒன்றாகத்தன்னை வெளிப்படுத்தியது.

## கட்சியின் கொள்கையும் நடைமுறையும்

இவ் லங்கா சமசமாஜக் கட்சி தனது இருபத்திரண்டு அம்சங்கள் கொண்ட வேலைத்திட்டம் ஒன்றினை முன்வைத்தது. இதனை அக்கட்சி முன்வைப்பதற்கு இருபதுகளில் இடம்பெற்றுவந்த அரசியல் போக்குகளை முன்னனுபவமாகப் பெற்றதுடன் 1929-31 கால கட்டத்தில் இடம்பெற்ற உலகப் பொருளாதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிகளின் தாக்கத்தினால் இலங்கை அனுபவித்துக் கொண்ட மோசமான பொருளாதார நிகழ்வுப் போக்குகளையும் இனங்கண்டு கொள்ளக்கூடியதாக இருந்தது. இவற்றினை 1931ல் இடம்பெற்ற முதலாவது சட்டசபைக்குத் தெரிவான ஒரே ஒரு இடதுசாரியான கலாநிதி எஸ்.ஏ. விக்கிரமசிங்கா சட்டசபையில் மிக ஆணித்தரமான விவாதங்களைக் கிளப்பி அந்நியராட்சியின் கொடூரத் தன்மைகளை அம்பலப்படுத்தி எதிர்த்தும் வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இவை யாவற்றையும் கவனத்திற்கொண்டே சமசமாஜக்கட்சியின் முதலாவது வேலைத்திட்டம் பரந்த அம்சங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது. தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்தல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றல், வர்க்கம், சாதி, இனம், பால், மதம் போன்றவற்றின் அடிப்படையிலான ஒடுக்குமுறைகளை ஒழித்தல், உற்பத்திச் சாதனங்களை தேச உடைமையாக்குதல், பங்கீடு—பரிவர்த்தனையில் சமத்துவத்தை ஏற்படுத்துதல் போன்றவற்றுடன் ஏனைய பல அம்சங்களில் மக்கள் மீது சுமத்தப்பட்டிருந்த சுமைகளை அகற்றுவதற்கும் அல்லது குறைப்பதற்குமான சட்டவாக்கங்களையும் நடைமுறைகளையும் கொண்டு வருவதற்கான விடயங்கள் மேற்படி வேலைத் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன. அன்றைய அந்நியராட்சியின் ஆதிக்கம் வலுத்திருந்த சமூகச் சூழலில் மேற்குறித்த வேலைத்திட்ட அம்சங்கள் ஓரளவு மக்கள் பகுதியினரிடையே குறிப்பாக உழைக்கும் மக்கள், நடுத்தரவர்க்கப் பிரிவினரிடையே ஆர்வத்துடன் அதிக அவதானிப்புக்கு உட்பட்டது. அதன் பிரதிபலிப்பினை 1936ஆம் ஆண்டில் இடம்பெற்ற இரண்டாவது சட்டசபைத் தேர்தலில் கண்டுகொள்ளக்கூடியதாகவும் இருந்தது. அத்தேர்தலில் சமசமாஜக் கட்சியின் சார்பில் நான்கு வேட்பாளர்கள் போட்டியிட்டனர். அவர்களில் பிலிப் குணவர்த்தனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவிசாவளைத் தொகுதியில் இருந்தும் என்.எம். பெரேரா ருவான்வலைத் தொகுதியில் இருந்தும் உறுப்பினர் களாகத் தெரிவாகினர். எஸ். ஏ. விக்கிரமசிங்கா, லெஸ்லி குணவர்த்தனா ஆகிய இருவரும் தோல்வி கண்டனர். இதில் முன்னைய சட்டசபை உறுப்பினரான எஸ். ஏ. விக்கிரமசிங்காவைத் தோற்கடிப்பதற்கு அன்றைய பிற் போக்குவாதத் தலைவர்களான டி. பி. ஜெயதிலகா, டி.எஸ் சேனநாயக்கா ஆகியோர் மிகக் கூடிய பிரயத் தனங்களில் ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அந்தளவுக்கு விக்கிரமசிங்கா முதலாவது சட்டசபையில் தனிமனிதராக நின்று கடும் எதிர்ப்பினைக் காட்டிவந்த ஒருவராகத் திகழ்ந்தார்.

இச்சந்தர்ப்பத்திலே ஒரு விடயத்தை நினைவூட்டி சிந்தனைக்கு எடுத்துக்கொள்வது தேவைமிக்கதொன்றா கும் முதலாவது சட்டசபைக்கு எஸ்.ஏ. விக்கிரம்சிங்காவும் இரண்டாவது சட்டசபைக்கு பிலிப், என். எம். ஆகிய இருவரும் தெரிவுசெய்யப்பட்ட அரசியல் நிகழ்வானது ஒருபுறத்தில் முற்போக்கானதாக அமைந்தது. மறு புறத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் வர்க்க முரண்பாடுகளை மூடிமறைத்து ஜனநாயகப்போர்வை யின்கீழ் சமாதானமான வர்க்க சமரசத்தை புகுத்திவந்த முதலாளித்துவப் பொறிவலையில் மார்க்சிசவாதிகளை வீழ்த்தும் ஆரம்ப நிகழ்வாகவும் அச்சட்டசபைப் பிர வேசம் அமைந்தது. இதுவே அவ் ஆரம்பகால இடது சாரிகளைப் படிப்படியாக பாராளுமன்ற பாதையில் முழு மையாக வீறுநடைபோடத் தூண்டியது என்றும் கூற முடியும். ஆரம்பகாலத்தில் இச்சட்டசபைப் பிரதிநிதித் துவம் பிரச்சாரத்திற்கும் அந்நியராட்சியை அம்பலப் படுத்தவும் உதவிய வகையில் முற்போக்கானதாகக் காணப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் முழு ஆட்சி அதிகாரத்தையும் இம் முதலாளித்துவ அமைப்பின்

இ—4

ஊடாகப் பெற்றுவிடலாம் என்ற பிற்போக்குவாத நிலையினை இவ் இடதுசாரிகள் கையேற்றுக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

## □ கட்சியின் ஆரம்பகால சாதனைகள்

இது இவ்வாறு இருந்த அதேவேளை இளம் சமசமாஜக் கட்சியானது சட்டசபைக்கு உள்ளேயும் வெளியேயும் தீவிரமான இயக்கங்களை முன்னெடுத்து மக்கள் மத்தியில் அதிக பிரச்சாரங்களை மேற்கொண்டது. 1936இல் பி.ஜே. பெர்னான்டோவை ஆசிரியராகக் கொண்டு 'சமசமாஜய' என்ற பெயரில் சிங்களப் பத்திரிகையும், கே. இராமநாதனை ஆசிரியராகக்கொண்டு தமிழில் 'சமதர்மம்' பத்திரிகையும் வெளிவந்தன. இனம், சாதி, பால், மதம் போன்ற குறுகிய போக்குகளுக்கு அப்பால் மக்கள் மத்தியில் தீவிரப் பிரசாரங்கள் முன் தள்ளப்பட்டதுடன் முழுமையான தேச சுதந்திரம் என்பதே உயர்த்திப்பிடிக்கப்பட்டது. 1936-37 ஆம் ஆண்டுகாலப்பகுதியில் இவ் இளம் சமசமாஜக் கட்சிக்கு இந்தியாவின் சோஷலிஸ்ட் தலைவர்கள் எனக் கூறப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்புகளும் உறவுகளும் உருவாகின. அவர்களை இலங்கைக்கு வரவழைத்து கட்சியின் கூட்டங்களில் பேசவைத்தனர். இவை யாவும் மக்கள் மத்தியில் ஓர் உற்சாக நிலையை உருவாக்கிவந்தன.

அதேவேளை சட்டசபைக்குள் சமசமாஜக் கட்சியின் குரல் அதன் இரட்டை அங்கத்தினர்களால் கச்சிதமாக முழங்கப்பெற்றதுடன் அவை தீவிர சீர்த்திருத்தங்களை கோரிநின்றன. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவச உணவு கொடுக்க வேண்டும் என்றும், அதிகாரம் கொண்ட கிராம, நகர தலைமைக்காரர் முறைகளான முதலியார், கோறளைகள், விதானைமார் ஆராய்ச்சியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற முறைகள் ஒழிக்கப்படவேண்டும் எனவும் வாதிட்டனர். 1938இல் விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டு வந்த நீர்வரியை நீக்கும் தீர்மானம் சட்டசபையில் நிறைவேற்றப்பட்டதுடன் அடுத்துவந்த வருடங்களில் அது அமுலுக்கும்வர வழியேற்பட்டது. இக்காலப்பகுதியில் சட்டசபையில் ஒரு விசித்திரமான விவாதம் இடம் பெற்றது. அதாவது தலைநகரில் வேலைசெய்து வந்த இந்தியர்களை வெளியேற்றவேண்டும் என்ற கொள்கையை இறுக்கமாகப் கைப்பிடித்திருந்த அந்நியராட்சி ஆதரவுபெற்ற இலங்கையின் உயர்வர்க்கத்தினர் பெருந்தோட்டத்துறைக்கு மேலும் இந்தியத் தொழிலாளர்களை வரவழைக்க வேண்டும் என வாதிட்டனர். இவ்விவாதத்தில் தலைநகரின் இந்தியத் தொழிலாளர்களை வெளியேற்றுவதற்கு ஆதரவாக சமசமாஜ இரட்டையர்கள் ஆதரவளித்த அதேவேளை தோட்டத்தொழில்துறைக்கு இந்திய தொழிலாளர்கள் அழைத்துவரப்படுவதை எதிர்த்தனர். இந்தியத் தொழிலாளர்களை இங்கு வரவழைக்க முயற்சிப்பது அவர்களை வெள்ளை முதலாளிகளின் சுரண்டலுக்கு இரையாக்கி அவர்களது ஜனநாயக-மனித உரிமைகளை நசுக்குவதற்கே எனப் பகிரங்கமாக வாதிட்டு தமது எதிர்ப்பைக் காட்டினர், இதனால் ஆத்திரமடைந்த ஆளும் தரப்பு சிங்களத் தலைவர்கள் சமசமாஜிகளை 'இந்தியத்தாசர்கள்' என்றும் 'இலங்கையின் விரோதிகள்' என்றும் வசைபாடி நின்றனர். இவ்வாறு 1935-39 ஆண்டுகாலப்பகுதியில் இளம் சமசமாஜக் கட்சியானது பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சிக்கு எதிராகவும் அவர்களது பாதம் தாங்கிகளான சிங்கள-தமிழ் உயர்வக்கத்தினருக்கு எதிரான நிலைப்பாட்டிலும் விட்டுக்கொடுக்காது பல முனைகளிலும் போராடி வந்ததை நோக்குதற்குரியதாகும்.

இக்காலப்பகுதியில் சமசமாஜ இயக்கம் சாதித்த மற்றொரு சாதனை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பதுகளின் ஆரம்பத்துடன் ஏ. ஈ. குணசிங்கா தீவிர இனவாதியாகி நின்றார் என்பதுமுன்னே சுட்டிக்காட்டப் பட்டதாகும். அவரது இனவாதத்தின் பிரதான இலக்கு இந்திய மலையாளிகளையே குறிவைத்ததாக இருந்தது. முற்றிலும் சிங்கள பௌத்த நலன்பேணும் பிரசாரத்தை பேச்சிலும் எழுத்திலும்பிரசாரப்படுத்திவந்த நிலையினை மறுத்து இன மத சாதி பேதங்களுக்கு அப்பால் வர்க்க ஐக்கியத்தை உயர்த்திப் பிடிப்பதில் சமசமாஜ இயக்கம் எவ்வித தயக்கமும் இன்றி முன்னின்றது. இதனால் வெள்ளவத்தை நெசவாலையில் குணசிங்காவின் ஆதிக்கத்தை முறியடித்து ஓர் முன்மாதிரியையும் உருவாக்கியது. சமசமாஜக் கட்சியின் இவ் இயக்கம் காலப் போக்கில் ஏ. ஈ. குணசிங்காவை தேடுவாரற்ற பரிதாபகர நிலைக்கும் தள்ளியது.

இத்தகைய வளர்திசை உற்சாகநிலையில் சமசமாஜக் கட்சி தனது பார்வையைப் பெருந்தோட்டத்துறையின் பக்கம் திருப்பலாயிற்று. ஏற்கனவே தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஆரம்ப விழிப்புணர்வை உருவாக்கி அதன் வழியில் தீவிரமாக உழைத்துவந்த கோ. நடேசய்யரின் நடவடிக்கைகளுடன் சமசமாஜக் கட்சியும் நட்புறவுடன் ஈடுபட்டு வந்தது. அதேவேளை சமசமாஜக்கட்சி தோட்டத் தொழிலாளர்களை அணி திரட்டக்கூடிய தொழிற்சங்க நடவடிக்கைகளையும் வேக மாக முன்னெடுத்துவந்தது. அன்றைய உயர்வர்க்கத் தமிழ்த் தலைவர்களாக விளங்கிய சேர் பொன். இராம நாதன், ஸி. சுந்தரலிங்கம், அ. மகாதேவா, ஜி. ஜி. பொன்னம்பலம் போன்றவர்கள் இந்திய வம்சாவழித் தமிழ் மக்களை தமது வர்க்க நோக்கின் ஊடே சிங்கள சகாக்களுடன் இணைந்து நின்ற வெறும் 'கூலிகளாகவே' கண்டுகொண்டனர். இத்தகையவர்கள் தோட்டத் தொழிலாளர்களை மட்டுமன்றி வடக்கு, கிழக்கில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்துவந்த தமிழர்களிடையேயான 'தாழ்த்தப்பட்ட மக்களையும்' தரக்குறைவாகக் கண்டு அவர்களுக்கான உரிமைகளை மறுப்பதிலும் முன்னணியில் நின்று செயற்பட்டார்கள் என்பதும் கவனத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டியதாகும்.

சமசமாஜக் கட்சியின் ஆரம்பகால நடவடிக்கைகள் முற்றுமுழுதாக இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்கள் சார்பானதாக இருந்து வந்தமை தோட்டத் தொழிலாளர்களை ஈர்க்கக்கூடியதொன்றாக அமைந்தது. இக்காலகட்டத்தில் குறிப்பானதோர் சம்பவத்தை நினைவூட்டுதல் வேண்டும். அதுவே பிரஸ்கேர்டில் என்ற இளம் வெள்ளையரோடு சம்பந்தப்பட்ட விவகாரமாகும். மார்க் அந்தனி லிஸ்டர்பிரேஸ்கேர்டில் என்ற வெள்ளைக்கார இளைஞன் தனது இருபத்திநான்காவது வயதில் மாத்தளைப்பகுதியில் உள்ள ரேலுகாஸ் தோட்டத்தில் சின்னத்துரையாக வேலை பயிலுவதற்கு வந்திருந்தார். ஆனால் அத்தோட்டத்தில் சில மாதங்கள் மட்டுமே அந்த இளம் வெள்ளையரால் வேலை பயில முடிந்தது. தோட்டத் தொழிலாளர்கள் அடக்கப்பட்டு மிருகத்தனமாக வேலை வாங்கப்படுவதைக் கண்டு அவரால் சகிக்க முடியவில்லை. பதிலுக்கு தனது வேலைமீது அதிருப்தியும் ஆங்கிலேய முதலாளிகளது கோரத்தனமான சுரண்டல்மீது கடும் கோபமும் கொண்டவராகினார். அதற்கு அடிப்படைக் காரணம் அந்த இளைஞன் ஏற்கனவே கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தின்மீது நம்பிக்கையும் தீவிரமும் கொண்டிருந்தமையாகும். இதனால் தனது வேலையை உதறி எறிந்துவிட்டு ஆரம்பகாலச் சமசமாஜக் கட்சியில் இணைந்து கூட்டங்களிலும் உரையாற்றி வந்தார். அவர் தனது பேச்சுக்களில் பிரித்தானிய முதலாளிகளின் தோட்டத் தொழிலாளர்கள் மீதான கொடூரச் சுரண்டலையும் அடக்கு முறைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோலுரித்துக்காட்டி அம்பலமாக்கி வந்தார். இதனைப் பொறுக்கமாட்டாத அந்நியராட்சி பிரேஸ்கேர்டிலை நாட்டைவிட்டு வெளியேற்றும் உத்தரவைப் பிறப்பித்து அவரைக் கைதுசெய்து அப்புறப்படுத்த முயன்றது. இதற்கு எதிராக சமசமாஜக் கட்சியும் கோ. நடேசய்யர் போன்றவர்களும் தீவிர எதிர்ப்பு இயக்கம் நடத்தினர். பிரஸ்கேர்டில் சில வாரங்களாக தலைமறைவாக இருந்து கொண்டு வெள்ளையராட்சிக்கு எதிரான சமசமாஜ இயக்கத்தில் பங்கு கொண்டு உழைத்தார். அவ்வேளை இலங்கையின் தேசாதிபதியாக இருந்தவர் சேர் ரெஜினோல்ட் ஸ்ரப்ஸ். அவரே வெளியேற்ற உத்தரவைப் பிறப்பித்தவராவார். 1937ம் ஆண்டில் சமசமாஜக் கட்சி கொழும்பில் நடத்திய மேதின ஊர்வலத்தில் 'நமக்கு பிரேஸ்கேர்டில் வேண்டும். ஸ்ரப்பை நாடு கடத்து' என்ற சுலோகத்தை ஊர்வலத்தினர் கோஷித்துச்செல்லும் அளவுக்கு அப்பிரச்சினை பிரபல்யம் பெற்றிருந்தது. இறுதியாக நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் பிரேஸ்கேர்டிலின் நாடு கடத்தல் தீர்மானம் தள்ளுபடி செய்யப்பட்டது.

தலைநகரையும் அதனை அண்மித்த பகுதிகளிலும் தொழிலாளி வர்க்கத்தின் தானெழுந்தவாரியான வேலை நிறுத்தப் போராட்டங்கள் ஆங்காங்கே வெடித்தெழுந்தன. இவ்வேலை நிறுத்தங்களுக்கு அரசியல் தலைமை கொடுப்பதில் சமசமாஜக்கட்சி செயலாற்றியது. இவ்வேலை நிறுத்தப் போராட்டங்களில் சில மிகவும் சக்திமிக்கவையாகவும் போராட்டக் குணாம்சங்கள் கொண்டவையாகவும் திகழ்ந்தன. இவற்றின் பின்னணியில் சமசமாஜிகள் இருந்து வந்தமையைக் கண்ட பிற்போக்கு சக்திகள் தமது கடும் எதிர்ப்பைக் காட்டி வந்தன. இவர்களில் அந்நியராட்சி ஆதரவுபெற்ற சக்திகள் ஒரு புறமாகவும், ஏ. ஈ. குணசிங்காவின் இனவாத இயக்கக் குண்டர்கள் மறுபுறமாகவும் தாக்கிவந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமசமாஜக் கட்சியின் கூட்டங்கள் பல குழப்பப்பட்டன. சில கூட்டங்களில் இரத்தம் சிந்தி படுகாயங்கள் ஏற்படு மளவுக்கு வன்முறை பயன்படுத்தப்பட்டது. அந்தளவுக் குப் பிற்போக்கு சக்திகளால் சமசமாஜ இயக்கத்தின் வளர்ச்சியை ஏற்றுக்கொள்ளமுடியாது இருந்தது. இதனால் 1938-39ஆம் ஆண்டுகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க பின்னடைவுகளும் இடம்பெற்றன.

## □ சமசமாஜிகள் தலைமையில் தோட்டத் தொழிலாளர்கள்

1939ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியிலும் 40களின் முற்கூறிலும் மலையகப் பகுதிகளில் பல்வேறு இடங்களி லும் தன்நிகழ்வுப் போக்கிலான வேலை நிறுத்தங்கள் இடம்பெற்று வந்தன. இக்காலப் பகுதியில்தான் இலங்கை இந்தியன் காங்கிரஸ் என்னும் ஸ்தாபனம் உருவாக்கப் பெற்றது. ஜவகர்லால் நேருவினது ஆலோசனை வழி காட்டலின் அடிப்படையிலேயே இத் தாபனம் தோற்று விக்கப்பட்டது. இது தனியே தொழிலாளர் வர்க்க நலனுக்கானதொன்றாக மட்டும் உருவாக்கப்படவில்லை. சகல இலங்கைவாழ் இந்தியர்களையும் ஒன்றிணைத்துக் கொள்ளும் நிறுவனமாகவே தோற்றுவிக்கப்பட்டது. இருப்பினும் இவ் இலங்கை-இந்தியன் காங்கிரசின் உருவாக்கத்துடன் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் ஏற்கனவே உருவாகிவந்த விழிப்புணர்வின் வெளிப்பாடு கள் பெருமளவில் விருத்தி பெறுவதாயிற்று. ஏறத்தாழ இதே காலப்பிரிவில்தான் சமசமாஜக் கட்சி அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் தொழிற்சங்க ஸ்தாபனத்தை உருவாக்கிக்கொண்டது. இதன் செயலாளராக வேலுச்சாமி என்பவர் தெரிவு செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமசமாஜக்கட்சி இவ்வாறு பெரும் தோட்டத் தொழில்துறையில் தனது தொழிற்சங்கத்தை நிறுவிக் கொள்வதற்கான சூழலில்தான் 1940ஆம் ஆண்டு தை மாதத்தில் மத்திய மாகாணத்தில் முல்லோயா தோட்டத்தில் சமசமாஜிகளின் தலைமையில் ஓர் வேலை நிறுத்தம் நடைபெற்றது. தைமாதம் 19ம் திகதி அன்று அவ்வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் நோக்குடன் தொழிலாளர் மீது பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியது காட்டுமிராண்டித்தனமான அத்துப்பாக்கிச் சூட்டில் கோவிந்தன் என்ற தொழிலாளி தனது உயிரைத் தியாகம் செய்து கொண்டார். பிரித்தானிய சுரண்டல் பேய்களான வெள்ளைத்துரைமாரின் கொடூரத்திற்குப் பலியாகி வந்த தொழிலாளர் பட்டியல் மிக நீண்டதாகும். ஆனால் வெள்ளையராட்சியின் காவல்நாய்களாகச் செயற்பட்டு வந்த பொலீசின் நேரடித் துப்பாக்கிக்குப் பலியாகிய முதலாவது தொழிலாளத் தியாகியாக முல்லோயாக் கோவிந்தனின் பெயர் பொறிக்கப்பட்டது. அந்தப் பெயர் வரிசை வெள்ளையர் ஆட்சி சென்று இலங்கையர் ஆட்சி என்று கூறப்பட்ட அண்மைக் காலம்வரை பொலீஸ் துப்பாக்கிக்குப் பலியாகும் தொழிலாளத் தியாகிகளால் நீண்டுகொண்டே செல்கிறது. அன்றைய முல்லோயா தோட்டத்தின் எதிரொலி தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் வீராவேசம் மிக்க போராட்டங்களுக்கான திசைவழியைக் காட்டியதுடன் சமசமாஜக் கட்சியின் தொழிற்சங்க நடவடிக்கைகளை வீறும் வேகமும் கொள்ளச் செய்தது. மற்றுமொரு குறிப்பிடத்தக்க போராட்டம் ஊவா மாகாணத்தில் வீவேசா தோட்டத்தில் இடம்பெற்றதாகும் இப்போராட்டத்தில் வீவேசாப் தோட்டத் தொழிலாளர் பொலீசாரின் பலாத்காரத்திற்கு எதிரான புரட்சிகரப் பலாத்காரத்தில் இறங்கி தமது புரட்சிகர உணர்வையும் செயலையும் வெளிப்படுத்தியமையாகும். இப்போராட்டங்களில் சமசமாஜக் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY



யின் தலைமை மிகத் துணிவுடன் செயற்பட்டு தொழிலாளர்களை வழிநடத்தியமை நாற்பதுகளின் உச்சக்கட்ட நடவடிக்கைகளாக அமைந்திருந்தன. இவற்றை அன்றைய சமசமாஜக் கட்சித் தலைவர்களின் ஒருமுனைவாத அதிதீவிர நடவடிக்கை என்று வர்ணிப்போரும் இருக்கவே செய்கின்றனர். ஆனால் குறைபாடுகள் எதுவாகினும் அன்றைய சூழலில் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகர உணர்வுக்கும் செயலுக்கும் தலைமை கொடுத்த செயலை எக்காரணம் கொண்டும் குறைத்து மதிப்பிட்டு விடமுடியாது. இதே போன்று தலைநகரிலும் சமசமாஜக்கட்சி 1935-40 காலகட்டத்தில் ஆற்றிநின்ற அரசியல் நிலைபாடுகளும் போராட்டங்களும் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவமுடைய நிகழ்வுகள் என்பது மறுப்பதற்குரியவையல்ல.

இலங்கையின் முதல் இடதுசாரிக் கட்சியாக ஆரம்பித்த லங்கா சமசமாஜக் கட்சியானது அன்றைய சூழலில் இலங்கையில் இருந்த தேசிய இயக்கம் உள்ளிட்ட அரசியல் சமூக இயக்கங்கள் அனைத்தையும் விட மிக முற்போக்கானதாகவும், தீவிரத்தன்மை கொண்ட கட்சியாகவும் விளங்கியது என்பதில் எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது. அது அந்நியராட்சியினருக்கும் உள்நாட்டு பிற்போக்குவாதிகளுக்கும் அதிக வெறுப்பை ஊட்டிய கட்சியாக விளங்கிய அதேவேளை தொழிலாளி வர்க்கத்தினதும் ஏனைய சாதாரண மக்கள் பிரிவினரது ஆதரவிற்கும் அனுதாபத்திற்குமுரிய தொன்றாகவும் விளங்கியமை உண்மையே. ஆனால் அக்கட்சி இலங்கையின் சமூக அமைப்பில் அடிப்படையான புரட்சிகர மாற்றத்தைக் கோரிநிற்கும் மார்க்சிச லெனினிசக் கொள்கை எதனையும் தத்துவத்தாலும் நடைமுறையாலும் கொண்டிருக்கவில்லை என்பதை ஏற்றுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டேயாக வேண்டும். மார்க்சிசவாதிகள் என்று கூறிக்கொண்டவர்கள் அதன் தலைமைக் குழுவில் கொள்கை வகுப்பவர்களாக இருந்த போதிலும் அடிப்படை மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய தூரநோக்குடைய எத்தகைய புரட்சிகர வழிமுறையை நோக்கியும் அக்கட்சியானது நடைபயிலமுடியாத ஒன்றாகவே இருந்துவந்தது. தோழர் லெனின் முன் வைத்தது போன்று 'ஒரு புரட்சிகர தத்துவம் இல்லாவிடில் புரட்சிகர இயக்கம் ஒன்று இருக்கமுடியாது' என்பதை இம்முதலாவது இடதுசாரிக் கட்சியின் கொள்கையிலும் நடைமுறையிலும் காணமுடிந்தது. 1935-39 கால கட்டத்தின் செயல்முறைகளின் மூலம் கணிக்கக்கூடியதாக இருந்த இந்தப் போக்கே சமசமாஜக் கட்சியின் பிற் காலத்திய அதன் கொள்கை செயல்முறைகளிலும் தொடர்ந்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7

# முதலாவது கட்சிக்குள் முதலாவது பிளவு

உலக நாடுகள் பலவற்றிலே ஆளும்வர்க்க முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளிடையேயான கட்சிகள் மத்தியில் பிளவுகள் ஏற்படுவதைவிட இடதுசாரி முற்போக்குக் கட்சிகளிடையே இடம்பெற்றுவரும் பிளவுகள் அதிகரித்த தன்மை கொண்டவை என்று கூறப்படுவதுண்டு. அதில் உண்மையும் இருக்கச் செய்கின்றன. முதலாளித்துவ வர்க்கக் கட்சிகள் எப்பொழுதும் தமது வர்க்க நலன்களையும் அதன் அடிப்படையிலான அமைப்புமுறைகளின் மீது தமது கவனத்தின் முழுமையையும் செலுத்துவதில் அக்கறை உடையனவாக இருந்துவருகின்றன. ஆனால் இடதுசாரி முற்போக்கு கட்சிகள் ஒடுக்கப்படும் வர்க்க சக்திகளின் நலன்களுக்கும் அப்பால் சித்தாந்த ரீதியான கொள்கைகளுக்கு முதலிடம் கொடுப்பதையே முதன்மைப் படுத்திவருகின்ற போக்கே எப்பொழுதும் முனைப்புடையதாக இருந்து வருவது சுட்டிக்காட்டப்படுகிறது. இதன் சாதக பாதக அம்சங்கள் இவ்விடத்திலேயே விரிவான ஆய்வுக்கு உட்படுத்தக்கூடியதொன்றல்ல.

மேல்குறிப்பிட்ட அடிப்படையிலேயே இலங்கையில் ஏகாதிபத்திய எதிர்ப்பையும், சமூக முன்னேற்றத்தையும் முன்வைத்து முற்போக்கான பாதையில் தீவிரமாகச் செயற்பட்டுவந்த முதலாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி 1939ஆம் ஆண்டில் பிளவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகியது. இந்தப் பிளவின் சாராம்சம் சர்வதேசப் பிரச்சினை சம்பந்தமாகவே அமைந்திருந்தது. அதாவது எவ்விதமான முன் அறிவித்தலும் இன்றி சுயவிருப்பு முடிவின்படி கட்சியின் நிர்வாகக் குழுவில் கொல்வின் ஆர். டி. சில்வா, என். எம். பெரேரா ஆகியோர் 'மூன்றாவது (கம்யூனிஸ்ட்) அகிலத்தில் நம்பிக்கை இல்லை' என்னும் தீர்மானத்தை முன்வைத்தனர். இதனை கட்சியின் நிர்வாகக் குழுவில் இருந்த கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் தீவிரமாக எதிர்த்தனர். இரண்டாவது உலக யுத்தம் வெடித்தெழுந்த சூழலில், சர்வதேச கம்யூனிச இயக்கமும் சோவியத் யூனியனும் அதற்கு எதிரான தந்திரோபாயங்களையும் கொள்கைகளையும் உருவாக்கிவந்த நேரத்தில் சமசமாஜக் கட்சிக்குள் முன்வைத்த மேற்படி தீர்மானம் பலரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது ஆதலால் அதனை விவாதிப்பதற்கு ஒரு விசேஷ மாநாட்டைக் கூட்டுமாறு எழுபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் எதுவும் செவிமடுக்கப்படவில்லை. அதற்குப் பதிலாக நிர்வாகக் குழுவில் இருந்த எஸ் ஏ. விக்கிரமசிங்கா, கே. இராமநாதன், எம். ஜி. மெண்டிஸ், டபிள்யூ ஆரியரட்னா, ஏ. குணசேகரா ஆகியோரும், அவர்களைத் தொடர்ந்து பல உறுப்பினர்களும் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர். இவர்கள் அனைவரும் கம்யூனிஸ்டுகள் என்பது கவனத்துக்குரியதாகும். எனவே சமசமாஜக் கட்சி ஆரம்பித்த நான்காவது வருடத்திலேயே அதன் முதலாவது பெரும் பிளவினை உருவாக்கிக் கொண்டது. இந்தப் பிளவின் பின்னணி ஓரளவிற்கு விரித்து நோக்குதற்குரியதொன்றாகும்.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒற்றுமையையும், வளர்ச்சியையும் உருவாக்கி முதலாளித்துவத்திற்கு எதிரான வலிமைவாய்ந்த தொழிலாளிவர்க்க சர்வதேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## □ மூன்றாவது அகிலமும் ட்ரொஸ்கிசமும்

நிறுவனமாக உருவாக்கப்பட்டதே 'கம்யூனிஸ்ட் அகிலமாகும்'. இவ்வாறு சர்வதேச பாட்டாளிவர்க்கத்தின் தத்துவம், கொள்கை, தந்திரோபாயம் என்பனவற்றை முதலாவது, இரண்டாவது அகிலங்களின் மூலம் வழி நடத்துவதில் மார்க்சிச மூலவர்களான மார்க்சும் எங்கல்சும் தலைமைதாங்கி வந்தார்கள். இவர்களது மறைவுக்குப் பின் இரண்டாவது அகிலத்தின் தலைவர்களாகத் திகழ்ந்த கோட்ஸ்கி, பேனஸ்ரீன் போன்றவர்கள் தத்துவப் புரட்டல்களில் ஈடுபட்டு மார்க்சிசத்தின் அடிப்படைகளைத் திரிபுபடுத்தும் துரோகச் செயல்களில் இறங்கினர். இத்தகைய இரண்டாம் அகிலத்தின் தவறான தலைவர்களையும் அவர்களது தத்துவப் புரட்டல்களையும் எதிர்த்து தோழர் லெனின் கடுமையான போராட்டத்தை முன்னெடுத்தார். அப்போராட்டத்தின் விளைவாக 1919ல் லெனின் தலைமையில் உருவாக்கப்பட்டதே மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலமாகும். இம்மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலமானது ஏகாதிபத்திய காலகட்டத்தினுள் பிரவேசித்துள்ள உலக சகாப்தத்தின் தன்மைகளையும் முரண்பாடுகளையும் அவற்றுக்கான கொள்கைகளையும் தந்திரோபாயங்களையும் வகுக்கும் சர்வதேச மத்திய ஸ்தாபனமாக விளங்கியது. இம்மூன்றாவது அகிலம் தோழர் லெனின் மறைவுக்குப் பின்பும் நீடிக்கச் செய்ததுடன் முக்கியத்துவம் மிக்க சர்வ தேசியப் பாத்திரத்தையும் வகித்து வந்தது. லெனின் மறைவுக்குப் பின் தோழர் ஜே.வி. ஸ்டாலின் இம்மூன்றாவது அகிலத்தின் செயற்பாடுகளில் தலைமைப் பாத்திரத்தை ஆற்றி வந்தார். இத்தகைய மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலத்திற்கு எதிரான தீர்மானத்தையே சமசமாஜக் கட்சித் தலைமை முன்வைத்தது. அதற்குரிய காரணத்தையும் கண்டறிந்து கொள்வது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றஷியாவில் மார்க்சிசம் அறிமுகமாகிப் பரவத் தொடங்கிவந்த சூழலில் பல்வேறு புத்திஜீவிகள் அதன்பால் ஈர்க்கப்பட்டனர். லெனின் மிகுந்த புத்திக் கூர்மையுடன் நீண்டகால நோக்கில் மார்க்சிச அடிப்படையிலான சமூகப் புரட்சி ஒன்றினை றஷியாவில் உருவாக்கும் தேவையின் பாதையில் உழைத்துவந்தார். அதற்கான கட்சியையும் அதன் தலைமையிலான பாட்டாளிவர்க்க படையணிகளை உருவாக்கி ஜார் அதிகாரத்தை வீழ்த்தி பாட்டாளிவர்க்கத்தின் தலைமையிலான ஆட்சியை உருவாக்குவதில் அவர் அதிமேதைத் தன்மையுடன் செயற்பட்டும் வந்தார். அதேவேளை ட்ரொஸ்கி மார்க்சிசத்தை ஒரு வரட்டுவாத நிலையிலேயே ஏற்றுக்கொண்ட ஒருவராகவே இருந்துவந்தார். மார்க்ஸ் கூறிய யாவற்றையும் ஒரு புத்தகவாதநிலையில், அவற்றுக்குரிய வரலாற்று வளர்ச்சியின்-மாற்றத்தின் அவசியத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த ஒருவராக ட்ரொஸ்கி காணப்பட்டார். இதனால் அவரிடம் மார்க்சிசம் பற்றிய குழப்பகரமான தத்துவார்த்தக் கருத்தோட்டங்கள் நிறைந்திருந்தன. அவற்றின் சாராம்சத்தைப் பின்வருமாறு குறித்துக்கொள்ளமுடியும். முதலாளித்துவம் பூரண வளர்ச்சிபெற்ற ஐரோப்பிய நாடுகளில் மட்டுமே புரட்சி வெற்றிபெறமுடியும். றஷியாவில் அது வெற்றிபெற மாட்டாது. தனி ஒரு நாட்டில் புரட்சி வெற்றிபெறமுடியாதது மட்டுமன்றி சோஷலிசத்தைக் கட்டி எழுப்பவும் முடியாது. ஏககாலத்தில் உலகப் புரட்சியானது இடம்பெற வேண்டும். அதற்கான தயாரிப்பே உடனடிக் கடமை. விவசாயிகள் புரட்சியில் முக்கியமான பாத்திரத்தை வகிக்க முடியாதவர்கள். அதனைக் குறிப்பாக ட்ரொஸ்கி மார்க்சின் வார்த்தைகளில் மார்க்ஸ் ஒப்பீட்டு வகையில் கூறியதை எடுத்துக்கொண்டு 'விவசாயிகள் பிற்போக்கானவர்கள்' என்பதனைச் சுட்டிக்காட்டினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் தேசியவாதிகள், ஜனநாயக சக்திகள் இதர முற்போக்குவாதிகள் எவரும் புரட்சியில் இணைக்கப் படத்தக்கவர்கள் அல்லர். தனியே தொழிலாளிவர்க்கம் மட்டுமே புரட்சிக்கான வர்க்கமாகும். அதாவது புரட்சிக்கான பாதையில் ஐக்கிய முன்னணி என்ற பேச்சுக்கே இடமிருக்கமுடியாது என்பதே ட்ரொஸ்கியின் அடிப்படை நிலைப்பாடாகும். வர்க்க சக்திகளை பகுப்பாராய்ந்து, ஏகாதிபத்திய முதலாளித்துவ சக்தி களின் இயல்புகளுக்கு ஏற்றவாறு மதிப்பீடு செய்து அவர்கள் மத்தியிலான முரண்பாடுகளைப் பயன்படுத்தி பாட்டாளி வர்க்கத்தின் வெற்றியை உறுதிப்படுத்துவது போன்ற விடயங்கள் யாவும் ட்ரொஸ்கியின் பார்வையில் பிற்போக்கானவையாகும். மேலும் புரட்சியில் ஜனநாயக காலகட்டம், சோஷலிசக் காலகட்டம் என்ற பகுப்பினை ஏற்றுக்கொள்ள மறுத்துநின்ற ட்ரொஸ்கி சோஷலிசப் புரட்சியைத் தவிர வேறு எதற்கும் இடமிருக்கமுடியா தென்றார். இதனையே இன்றும் ட்ரொஸ்கியவாதிகள் ஒரு சுலோகமாகப் பயன்படுத்திவருகின்றனர். இத்தகைய குழப்பம் மிகுந்த கருத்துக்களினால் ருஷியப் புரட்சிக்கான தயாரிப்புக்களில் ஆரம்பம் முதல் ட்ரொஸ்கி லெனினுடன் இணைந்து செயற்படமுடியாத ஒருவராக இருந்து வந்ததுடன் ஒரு குழுவாகவும் செயற்பட்டு வந்தார். ஆனால் புரட்சி வெற்றி பெறுவதற்கான இறுதிக் கால கட்டத்திலேயே ட்ரொஸ்கி போல்ஷ்விக் கட்சியிலும் சேர்ந்து கொண்டாராயினும் குழப்ப முடையவராகவும் குழுவாதப் போக்கிலும் செயற்படும் ஒருவராகவுமே இருந்துவந்தார். இவரை நன்கு அடையாளம் கண்ட லெனின் ஒருமுறை மார்க்ஸியம் கோர்க்கிக்கு எழுதிய கடிதத்தில் 'ட்ரொஸ்கி எங்களுடன் இருக்கிறார். ஆனால் எங்களில் ஒருவராக இல்லை' என்று குறிப்பிட்டிருந்தார். தத்துவத்திலும் கொள்கை, தந்திரோபாயங்களை வகுத்துக்கொள்வதிலும் அதிதீவிர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுனைவாதப் போக்கும் முன்னுக்குப்பின் முரனான நிலையினைக் கொண்டிருப்பதிலும் விடாப்பிடியாக இருந்துவந்த ட்ரொஸ்கி சிறந்த பேச்சாற்றலும், கவர்ச்சிகரமான எழுத்துத்திறனும் கொண்டவராக விளங்கினார். இதனால் நடுத்தர வர்க்கப் புத்திஜீவிகள், சிறுமுதலாளித்துவ வர்க்கப் பிரிவினரிடையே ட்ரொஸ்கியின் கருத்துக்களுக்கு வரவேற்பு காணப்படுவது இயல்பானதேயாகும். ஆனால் ட்ரொஸ்கி உருவாக்கிய தத்துவார்த்த-கொள்கை நடைமுறைகளின் விளைவுகள் எப்பொழுதும் எதிர்விளைவானவையாகவும், எதிரிவர்க்கத்தினருக்கு உதவுவதாகவுமே அமையக்கூடியன என்பதை இலகுவில் இனம்கண்டு கொள்ள முடியும்.

இத்தகைய தத்துவார்த்த கொள்கை நிலைபாட்டைக் கொண்டிருந்த ட்ரொஸ்கி லெனின் மறைவுக்குப் பின் சோவியத் கட்சியினதும் நாட்டினதும் தலைமைப் பாத்திரத்திற்கு வரமுயன்றபோது தோல்விகாண நேரிட்டது. தோழர் ஜே. வி ஸ்டாலின் ஏகப்பெரும்பான்மை ஆதரவுடன் தலைமைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதனால் ட்ரொஸ்கியின் குழுவாதப் போக்கு மேலும் பலம்பெற்றதுடன் உள்நாட்டு வெளிநாட்டு எதிர்ப்புரட்சிகர சக்திகளுக்கு உதவக்கூடிய ஒருவராகவும் காணப்பட்டார். சோவியத் யூனியனில் கட்டி எழுப்பப்பட்டுவந்த ஸ்டாலின் தலைமையிலான சோஷலிச நிர்மாணத்திற்கு எதிராகக் கர்ணகடூரமான எதிரியாகவும் விளங்கி அதனைச் சீர்குலைக்கும முயற்சிகளுக்கும் துணை போனார். இறுதியில் சோவியத் நாட்டைவிட்டு வெளியேறி மேற்கு ஐரோப்பாவிலும் இறுதியில் மெக்சிக்கோவிலும் இருந்துகொண்டே தனது தத்துவார்த்தத்திற்கு முழுவடிவம் கொடுக்கும் பணியிலும் ஈடுபட்டார். அதன் விளைவானதே ட்ரொஸ்கியவாதிகளினால் உருவாக்கப்பட்ட 'நான்காவது அகிலமாகும்'. இதனைக் குறிப்பதாகவே ட்ரொஸ்கிய கட்சிகளின் சின்னத்தில் அரிவாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மட்டியின் நடுவே நான்கு(4) என்ற எழுத்து பொறிக்கப் பட்டிருப்பதனைக் காணமுடியும். ட்ரொஸ்கி ஸ்டாலின் தலைமையிலான சோவியத் யூனியனுக்கு எதிராகப் பல எதிர்ப் பிரசாரங்களைப் பரப்பிவந்தார். அதனை சர்வ தேச ஏகாதிபத்திய சக்திகள் நன்கு பயன்படுத்தி வந்த துடன் பல நாடுகளில் கம்யூனிஸ்டுகளுக்கு எதிராக ட்ரொஸ்கியவாதிகள் பிற்போக்கு சக்திகளுடன் இணைந்து செயற்பட்டும் வந்தனர். 1930களின் பிற் கூறிலே 'புரட்சிக்கு துரோகம்' என்னும் ட்ரொஸ்கியின் விரிவான சோவியத்-ஸ்டாலின் எதிர்ப்பு நூல் வெளி வந்தது. இந்நூலினை ட்ரொஸ்கியவாதிகள் தமது வழி காட்டும் நூலாகக் கொண்டனர்.

சர்வதேசிய ரீதியாக மூன்றாவது கம்யூனிஸ்ட் அகிலம் முப்பதுகளின் பிற்கூறிலே மிக முக்கியமான அவதானிப்பு களையும், பிரகடனங்களையும் முன்னறிவிப்பாக விடுத்து வந்தது. ஒன்று ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான முரண்பாடுகளின் விளைவான யுத்த அபாயம் பற்றியது, இரண்டாவது ஐரோப்பாவில் வளர்ச்சிகண்டுவந்த பாசிசம் பற்றிய கணிப்பாகும் யுத்தத்திற்கு எதிரான சமாதானக் கோஷத்தையும் பாசிசத்திற்கு எதிரான வலிமைமிக்க மக்கள் முன்னணிகளை உருவாக்கி முன்னெ டுக்கும் அறைகூவலையும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் ஏழாவது மாநாடு 1939இல் இரண்டாவது யுத்தம் கட்ட விழ்த்து விடப்படுவதற்கு முன்பாகவே வெளியிட்டது. இத்தகைய சர்வதேசியச் சூழலிலேயே இலங்கையின் முத லாவது இடதுசாரிக் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சிக்குள் 1939இல் 'மூன்றாவது அகிலத்திற்கு எதிரான தீர்மானம்' திணிக்கப்பட்டது. அதன் விளைவாக பிளவு ஏற்பட வழிபிறந்தது. இத்தீர்மானத்தின் பின்னால் சமசமாஜக் கட்சிக்குள் இருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்ரொஸ்கியக் குழு செயற்பட்டுவந்தது. பிலிப் குணவர்த்தனா ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் கல்விகற்று நாடு திரும்பிய காலத்தில் பல ஐரோப்பிய ட்ரொஸ்கியக் குழுக்களுடன் நெருக்கமான தொடர்பு கொண்டவராக இருந்தார். அதே போன்று என்.எம்.பெரேரா, லெஸ்லி குணவர்த்தனா, கொல்வின் ஆர்.டி. சில்வா போன்றவர்களும் தமது வர்க்க நிலைபாட்டிற்கு உடன்பாடுடையதாக விளங்கிய ட்ரொஸ்கியத்தின்மீது மோகம் கொண்டவர்களாக இருந்து வந்தனர். இருந்தபோதிலும் தமது நிலைப்பாட்டினை சமசமாஜக் கட்சியின் ஆரம்பத்தின் போது வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. 1939–40 கால கட்டத்திலேயே அதனை வெளிப்படுத்தினர். இதனால் கட்சிக்குள் இருந்த கம்யூனிஸ்டுக்கள் வெளியேற்றப்பட நேர்ந்ததுடன் ஒரு தத்துவார்த்த விவாதமும் தொடக்கி வைக்கப்பட்டது. அதுவே ட்ரொஸ்கிசத்திற்கும், மார்க்சிச-லெனினிசத்திற்குமான விவாதமாக இன்றுவரை இருந்துவருகின்றமையாகும். இவ் ட்ரொஸ்கிசம் என்பது இலங்கையில் சிறிதளவு செல்வாக்குடையதாக விளங்கி வந்தபோதிலும் உலகின் ஏனைய நாடுகளிலே மிகவும் சிறிய குழுக்களாகவே இருந்துவருவதனைக் காணமுடியும். மார்க்சிச லெனினிசத்திற்கு பின்னடைவுகள் ஏற்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இவ் ட்ரொஸ்கியக் குழுக்கள் மிகவும் முனைப்புடன் முன்வந்து தமது குழப்பகரமான தத்துவத்திற்கு நியாயம் கற்பித்துக்கொள்ள முயன்றும் வந்துள்ளன. ட்ரொஸ்கிச தத்துவார்த்தவாதிகள் தங்களை ஸ்டாலின் எதிர்ப்பாளர்கள் என்றே கூறி வருவது வழமையாகும். ஆனால் ட்ரொஸ்கிசத்திற்கும் லெனினிசத்திற்குமிடையிலான தர்க்கரீதியிலான விவாதத்தில் லெனிசத்தைப் பாதுகாத்து முன்னெடுப்பதில் ஸ்டாலின் பெரும் பங்கு வகித்தார். எனவே சாராம்சத்தில் ட்ரொஸ்கியவாதிகள் என்போர் லெனினிசத்தின் விரோதிகளாகவே தொடர்ந்தும் செயற்பட்டு வருகிறார்கள். இலங்கையில் அவர்களது வரலாறு மிகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான உண்மைகளையும் நடைமுறை அனுபவங்களையும் வழங்கி வந்துள்ளது. அதுவே சமசமாஜ இயக்கத்தின் வரலாறாகவும் காணமுடியும்.

எனவே 1939–40 காலகட்டத்தில் இடம்பெற்ற பிளவு மார்க்சிச-லெனினிசத்திற்கும், ட்ரொஸ்கியத்திற்குமிடையிலான தத்துவார்த்த நடைமுறை பற்றியதாகவே அமைந்தது. அன்றிலிருந்து இலங்கையின் இடதுசாரி இயக்கம் இரண்டு மார்க்கங்களில் வழிநடக்கும் போக்கினைக் கொண்டதாக விளங்கத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

# கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம்

சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட கம்யூனிஸ்டுகள் தமது எதிர்கால செயற்பாடுகளில் அதிக அக்கறை செலுத்தி நின்றனர். தேசிய, சர்வதேசிய விவகாரங்களில் தங்களது கொள்கை நிலைப்பாடு எவ்வாறு அமையவேண்டும் என்பதில் கூடிய கவனம் செலுத்தி தம்முள் விவாதித்து வந்ததுடன், தாங்கள் முன்பு அங்கம் வகித்துவந்த சமசமாஜக் கட்சிக்குள் இருந்துவந்த பலவீனமான அம்சங்களையும் தவறான போக்குகளையும் கவனத்தில் கொண்டு அவற்றைக் களைந்து செயற்படவும் முனைந்தனர். மார்க்சிச-லெனினிசக் கல்வியை தலைமை மட்டத்துடன் மட்டுப்படுத்தாது தொழிலாளர் மத்தியில் அரசியல் வகுப்புகள், சொற்பொழிவுகள் போன்றவற்றுக்கு ஊடாக முன்னெடுக்கவும் செய்தனர். சிங்களம், தமிழ், ஆங்கிலம், மலையாளம் ஆகிய மொழிகளில் பிரசுரங்களை வெளிவரச்செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கைக்குப் பூரண சுதந்திரம் வென்றெடுக்கப்படுவதன் அவசியத்தையும் அதற்கான பல்வேறு சக்திகளின் இணைந்த செயல்பாடுகள் பற்றியும் விளக்கங்கள் அளிக்கப்பட்டன. அதேவேளை பாசிசத்தின் சர்வதேச அபாயம் குறித்தும், சோவியத் யூனியனுக்கு ஆதரவு தெரிவித்தும் பிரசாரங்கள் முன்தள்ளப்பட்டன. இத்தகைய சூழலிலேயே அவர்கள் 1940ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் மாதத்தில் ஐக்கிய சோஷலிசக் கட்சியை உருவாக்கிக் கொண்டனர். இதுவே இலங்கை கம்யூனிஸ்ட் கட்கிக்கான முன்னோடியாகவும் அமைந்தது.

## □ ஐக்கிய சோஷலிசக் கட்சி

ஐக்கிய சோஷலிசக் கட்சி உருவாக்கம் பெற்றதைத் தொடர்ந்து கம்யூனிஸ்டுகள் அதே ஆண்டு டிசம்பர் மாதத்தில் இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தை உருவாக்கிக்கொண்டனர். இத்தொழிற்சங்க மையமானது கொழும்பு நகரத் தொழிலாள வர்க்கத்தினரிடையே ஸ்தாபன ரீதியில் தொழிற்சங்க அரசியல் வேலைகளுக்கான முனைகளைத் திறப்பதற்கு ஏற்ற வாய்ப்பினை உருவாக்கியது. இக்கட்சியினிதும், தொழிற் சங்கத்தினதும் உருவாக்கத்திலும் அவற்றினை செயலூாக்கத்துடன் முன்னெடுப்பதிலும் எஸ்.ஏ. விக்கிரமசிங்கா, பீற்றர் கெனமன், அ. வைத்திலிங்கம், எம்.ஜி. மென்டிஸ், நா. சண்முகதாசன், ஏ. குணசேகரா, பொன். கந்தையா, டபிள்யூ ஆரியரட்னா போன்றவர்கள் முன்னணிப் பாத்திரம் வகித்துநின்றனர்.

''சகல விதமான சுரண்டலிலும், அடக்குமுறைகளிலும் இருந்து விடுவிக்கப்பட்ட சுதந்திர இலங்கையை உருவாக்கிக்கொள்ளவே நாம் நிற்கின்றோம்.''

''லெனினினால் தலைமைதாங்கப்பட்டதும் ஸ்டாலினால் தலைமை தாங்கப்படுவதுமான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, அரசு, மக்கள் ஆகியோருக்கு எமது முழுமையான ஆதரவைத் தெரிவிக்கின்றோம்.''

''கிட்லரின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி அதற்கெதிரான ஐக்கிய முன்னணிகளில் இணைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய, அமெரிக்க, சோவியத் மக்களின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமான போராட்டங்களை நாம் உறுதியாக ஆதரிக்கின்றோம்.''

''தமது சுதந்திரத்திற்காகப் போராடிவரும் கொலனிய நாடுகளின் மக்களது போராட்டங்களை முழுமனதோடு ஆதரிக்கின்றோம்.''

''கம்யூனிஸ்ட் அகிலத்திற்கு நமது பூரண ஆதரவினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.''

''கொலனித்துவ நாடுகளின் மக்களினதும், தொழிலாளி வர்க்கத்தினதும், சோவியத் மக்களினதும் ஐக்கியம் நீடுழி வாழ்க.

மேற்குறித்த ஐக்கிய சோஷலிசக் கட்சியின் நிலைப்பாடானது இரண்டாவது உலக யுத்த உச்சக்கட்டச் சூழலில் மிகவும் முக்கியமானவையாகத் திகழ்ந்தன. பாசிசத்திற்கும் கிட்லரின் உலக ஆதிக்கத்திற்கும் எதிரான நிலையில் சோவியத் யூனியனை ஆதரித்து கிட்லர் முறியடிக்கப்படுவதற்கு இலங்கை மக்கள் உட்பட உலக மக்களின் ஐக்கியப்பட்ட போராட்டத்தை கட்சி வலியுறுத்திநின்றமை வரவேற்கக் கூடியதொன்றாகும். 1941 ஆகஸ்ட் 5ம் திகதி 'யுத்தமும் சோவியத் யூனியனும்' என்னும் முக்கியத்துவம் மிக்க அறிக்கையினை வெளியிட்டு மேற்கூறிய தனது நிலைப்பாட்டினை தெளிவாக்கி நின்றது.

அதேவேளை சமசமாஜக் கட்சி தனது ட்ரொஸ்கிச நிலைக்கேற்ப ''சோவியத் யூனியன் எங்கே செல்கிறது?'' என்ற அறிக்கையினை வெளியிட்டு தமது எதிர் நிலைப்பாட்டை முன்வைத்தது. இரண்டாவது உலக யுத்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்பை வெறுமனே ஏகாதிபத்தியங்களுக்கிடையிலான யுத்தம் எனக் கூறிக் கொண்டது மட்டுமன்றி பாசிசத்தின் வளர்ச்சியினையோ அன்றி கிட்லரின் உலகளாவிய ஆதிக்க நோக்கம் பற்றியோ சமசமாஜிகள் அக்கறை கொள்ள வில்லை. இதில் கவனத்திற்குரியது என்னவெனில் கிட்லர் சோவியத் யூனியன்மீது நேரடி யுத்தத்தைத் தொடுத்த போது அதை எதிர்ப்பதை விடுத்து ஸ்டாலின் தலைமையி லான சோவியத் அரசை சோவியத் மக்கள் வீழ்த்தி 'உண்மையான தொழிலாளர் ஆட்சியை' ஏற்படுத்த வேண்டும் என வேண்டுகோள் விடும் அளவுக்கு ட்ரொஸ்கிசத்தின் நச்சுத்தனங்களால் தம்மை சீரழித்து நின்றனர். பாசிசத்திற்கு எதிரான 'மக்கள் முன்னணி களையும்', கிட்லரையும் பாசிசத்தையும் தோற்கடிப்பதற் கான 'பரந்த ஐக்கிய முன்னணிகளையும்' சமசமாஜிகள் எள்ளி நகையாடியதுடன் தங்களைத் தூய்மையான ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்களாகவும் காட்டிக் கொண்ட னர். ஆனால் இரண்டாவது உலக யுத்தத்தின் முடிவு சோவியத் யூனியனின் தலைமையிலான — ஸ்டாலின் வழி காட்டலில் பாசிசத்தினதும் கிட்லரினதும் தோல்வியாக அமைந்தது. சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கம் பாதுகாக்கப் பட்டதுடன் அன்று கிழக்கு ஐரோப்பாவில் சோஷலிச அரசுகள் உருவாகுவதற்குமான சூழல் தோற்றுவிக்கப் பட்டது. அன்றைய போராட்டம், தந்திரோபாயம், கொள்கை என்பனவற்றை இன்றைய சோஷலிசப் பின்னடைவு அல்லது தோல்வி என்று கூறப்படுவதுடன் சேர்த்து ட்ரொஸ்கிசவாதிகள் குழப்பி தமது தவறான அன்றைய நிலைப்பாட்டிற்கு நியாயம் தேடமுற்படுவது அவர்களது தத்துவ வரட்சிக்குரியதேயாகும்.

## □ கம்யூனிஸ்ட் கட்சியின் உருவாக்கம்

ஐக்கிய சோஷலிசக் கட்சியின் நடவடிக்கைகள் அந்நியராட்சிக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்க செயற்பாடுகளினால் கொழும்பு நகரத் தொழிலாளி வர்க்கம் மிக வேகமாக அணிதிரட்டப்பட்டு வந்ததுடன் பொருளாதாரக் கோரிக்கைகளுடன் அரசியல் கோரிக்கைகளையும் இணைத்து முன்செல்லும் நிலை வளர்ச்சி கண்டது. இந்நிலையிலேயே அக்கட்சி 1942ஆம் ஆண்டு முற்பகுதியில் அரசாங்கத்தினால் தடைசெய்யப் பட்டது. இதனால் சட்டமறுப்பாகவும் சில முனைகளில் சட்டபூர்வமாகவும் அதன் உறுப்பினர்கள் தமது வேலை களைத் தொடர்ந்தனர். சர்வதேச கம்யூனிஸ்ட் இயக் கத்தின் போக்கை மிக நெருக்கமாக அவதானித்துவந்தமை யாலும், மாக்சிச லெனினிசத்தின் அடிப்படையிலான கட்சி ஒன்றினை உருவாக்கும் அவசியத்தை உணர்ந்தமை யினாலும், தடைசெய்யப்பட்ட ஐக்கிய சோஷலிசக் கட்சியின் உறுப்பினர்கள் ஒன்றுகூடி 1943ஆம் ஆண்டு யூலை 2ம், 3ம் திகதிகளில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியைத் தோற்றுவித்தனர். இக்கட்சியின் தோற்றம் சட்டவிரோதச் சூழலில் இரகசியமானதொன்றாகவே உருவாக்கப்பட்டது. இக்கட்சியின் தலைவராக கலாநிதி எஸ். ஏ. விக்கிரமசிங்காவும், பொதுச்செயலாளராகப் பீற்றர் கெனமனும் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் நாளாந்த வேலைகளை முன்னெடுப்பதற்காக ஐந்து உறுப் பினர் கொண்ட செயற்குழுவும் தெரிவாக்கப்பட்டது. இதன்பின் 1944ஆம் ஆண்டு யூலை மாதத்தில் இக் கட்சியின் முதலாவது தேசிய மாநாடு இடம்பெற்றது. இம் மாநாடு மார்க்சிசம் லெனினிசத்தின் அடிப்படை யிலான ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சிக்கான அமைப்பு விதிகளையும் ஜனநாயக மத்தியத்துவம் கொண்ட கட்சி அமைப்பு முறையினையும் பிரகடனப்படுத்திக்கொண்டது அதேவேளை தனது நீண்டகால இலட்சியம் சோஷலிசமும் இறுதியில் கம்யூனிசமுமாகும் எனச் சுட்டிக்காட்டியது. தனது உடனடிப் பணி இலங்கையில் இருந்து பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை வெளியேற்றி தேசிய சுதந்திரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றெடுப்பது என்றும், இவ் இலக்கினை அடைவதற்கு சகல ஏகாதிபத்திய விரோத சக்திகளையும் ஐக்கியப் படுத்துவதையும் தனது நோக்காக வெளிப்படுத்தியது. சர்வதேச ரீதியாக பாசிசத்தின் தோல்விக்காகவும் அதனை முற்றாக அழித்தொழிக்கும் சோவியத் யூனியனினதும் உலக மக்களினதும் உன்னதமான போராட்டத்துடன் கைகோர்த்துச் செல்வதையும் கம்யூனிஸ்ட் கட்சி அன்று உறுதிப்படுத்தி நின்றது.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றமும் அதன் கொள்கையும் அணுகுமுறையும் அதன் தலைவர்கள் ஊழியர்கள் என்போரின் வேலைமுறைகளும் சமசமாஜக் கட்சியினதைவிட முற்றிலும் வேறுபட்டதாக அமைந்திருந்தமை குறிப்பிடக்கூடியதோர் அம்சமாகும். அந்நியராட்சியின் அடக்குமுறைச் சூழலில் அன்றைய கம்யூனிஸ்டுகள் துணிவுடனும் அர்ப்பணிப்புத்தன்மையுடனும் வேலைசெய்தனர். வசதியான வாழ்வையும், உயர்ந்த உத்தியோகங்களையும் பெறக்கூடிய வாய்ப்புக்களை எல்லாம் உதறித்தள்ளிவிட்டு மாதாந்தம் அறுபது ரூபா அலவுன்ஸ் மட்டும் பெற்றுக்கொண்டு மிகமிகச் சாதாரண வாழ்வு முறையைப் பின்பற்றி கம்யூனிஸ்ட் ஊழியர்களும் தலைவர்களும் மக்கள் மத்தியிலான தமது கட்சிப் பணிகளை முன்னெடுத்தமை கம்யூனிஸ்டுக்களைப் பற்றிய நல் அபிப்பிராயங்களை சாதகமான நிலையில் பார்க்கத்தூண்டியது ஓர் சிறப்பு அம்சமாகும். இத்தகைய வேலைமுறையானது கம்யூனிஸ்டுகளுக்கு கொழும்பு நகரத் தொழிலாளர்கள் மத்தியில், தோட்டங்கள் என்று அழைக்கப்படும் கொழும்பின் சேரிப்புற மக்கள் மத்தியிலும் நெருக்கமாக வாழ்ந்துவந்த கொழும்பு குடியிருப்பு மக்கள் மத்தியிலும் அதிக செல்வாக்கைத் தேடித்தந்தது. கம்யூனிஸ்ட் கட்சி சிங்கள தமிழ்த் தொழிலாளர்கள் மத்தியில் குறிப்பாக கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகரில் வேலைசெய்துவந்த மலையாளத் தொழிலாளர்கள் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெற்றிருந்தது. மலையாள மொழிப் பத்திரிகை ஒன்றினை கட்சி வெளியிடும் அளவுக்கு அத்தொழிலாளர்களினால் கட்சி கவரப்பட்டது. இத்தொழிலாளர்கள் மத்தியில் உறுதியும் தீரமும் மிக்க கட்சி உறுப்பினர்களும் ஊழியர்களும் முன்னணியில் நின்று கட்சி தொழிற்சங்கப் பணிகளை முன்னெடுத்தனர்.

இருந்தபோதிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தனது ஆரம்பம் முதல் ஓர் புரட்சிகரக கட்சியாகத் தன்னைத் தகவமைத்துக்கொள்வதற்குத் தவறிய கட்சியாக்கிக் கொண்டமையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அதற்குரிய அடிப்படைக் காரணங்கள் பலவற்றை முன்வைக்க முடிந்தபோதிலும் மூன்று விடயங்களைச் சுட்டிக்காட்டுதல் தகும். ஒன்று இலங்கைப் புரட்சியின் தேவை, அவசியம் பற்றியோ அதன் அடிப்படையில் சோஷலிசத்தை சென்றடைவது சம்பந்தமாகவோ தெளிவான கொள்கையை வரையறை செய்ய முடியாது இருந்தமை. இரண்டாவது, இக்கட்சியின் கொள்கை வகுக்கும் தலைமைத்துவ உறுப்பினர்களில் பெரும்பாலானோர் மத்தியதர அல்லது உயர் மத்தியதர வர்க்கத்தைச் சேர்ந்தோராகக் காணப்பட்டமை. மூன்றாவது, இக்கட்சியானது பிரித்தானிய, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிகளின் அதிக செல்வாக்குக்கு உட்பட்டதாகவும் அவற்றின் தலைவர்களோடு மிக நெருக்கமான உறவுகளைக் கொண்டவர்களாக இதன் தலைவர்கள் விளங்கியமையுமாகும். இவ்வாறு பிரித்தானிய, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் கருத்துக்கள், வேலைமுறைகள், கொள்கைகள் மட்டுமன்றி ஸ்தாபன அமைப்பு முறைகளிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியானது ஏறத்தாழப் பிரதிபண்ணிச் செல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றாகவே இருந்துவந்தது எனக் குறிப்பிடுவது மிகை யானது எனக் கொள்ள முடியாது. கம்யூனிஸ்டுகளும் — கம்யூனிஸ்ட் கட்சிகளும் பாட்டாளிவர்க்க சர்வ தேசியத்தை உயர்த்திப் பிடித்து, சகோதரக் கட்சிகளுக் கிடையிலான உறவை வலுப்படுத்தி ஒன்றன் அனுபவத்தை மற்றையது பகிர்ந்து கொள்வதைத் தவறு எனக் கொள்ளமுடியாது. ஆனால் தனது நாட்டின் விசேச சூழலுக்கும் தேசியத் தன்மைகளுக்கும் பொருந்தா தனவற்றைக் கண்மூடித்தனமாக மற்றொரு கட்சியிட மிருந்து பிரதிசெய்வதை அல்லது பின்பற்றப்படுவதை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. விரும்பியோ அன்றி விரும்பாமலோ அவ்வாறு செய்யமுற்பட்ட கம்யூனிஸ்ட் கட்சிகள் பல தத்தமது நாடுகளில் தவறுகளை இழைத்த கட்சிகளாகவே வரலாறு அவற்றை அடையாளம் காட்டி நிற்கின்றது. இதனை இலங்கையின் கம்யூனிஸ்ட் இயக்க வரலாற்றிலும் காணமுடியும். இதிலிருந்து ஓரிரு கம்யூனிஸ்ட் தலைவர்கள் தம்மைத் தவிர்த்து ஏனையவர் கள் மீது தவறுகளைச் சுமத்த முற்படும் போக்கு ஏற்றுக் கொள்ளக்கூடியதொன்றல்ல. இத்தகைய ஓரிரு தலைவர் கள் இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தின் சாதனை களில் தமது பங்களிப்பை அழுத்திக் கூறிக்கொள்ளும் அதே வேளை தவறுகளை மட்டும் மற்றையோரின் தலைகளில் சுமத்தி தம்மைச் சுத்தமான புரட்சிவாதிகளாகக் காட்டிக் கொள்ள முற்பட்டிருக்கிறார்கள். இது நேர்மையான மார்க்சிச-லெனினிசவாதிகட்கு உரிய குணாம்சம் அல்ல என்பது கவனத்திற்குரியதாகும்.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

# இடதுசாரிகளுக்கு எதிரான அடக்குமுறை

இலங்கையில் முப்பதுகளின் ஆரம்பத்துடன் வேக முற்று வந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கமானது அவ் வாண்டின் நடுக்கூறிலே சமசமாஜக் கட்சியின் தோற்றத் துடன் முழுமைபெற்று முன்செல்வதாயிற்று. இதனை நன்கு அவதானித்துவந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சி யின் அடக்குமுறை யந்திரம் அதற்கெதிரான வழிகளில் செயற்படத் தொடங்கியது. நாற்பதுகளின் ஆரம்பத் துடன் இலங்கையில் பிரித்தானிய பொருளாதார நலன் களின் மையப்பகுதியாக விளங்கிய மலையகப் பகுதிகளில் பல்வேறு வேலை நிறுத்தங்கள் இடம்பெற்றன. இவ் வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்களின் வன்மைமிக்க எதிர்ப்புணர்வுகள் பொங்கி வழிந்தன. மத்திய மாகாணத் திலும், ஊவா மாகாணத்திலும் சமசமாஜிகளால் தலைமை தாங்கப்பட்ட வேலைநிறுத்தங்களில் தொழி லாளர்களின் ஒற்றுமையையும் போராட்ட உணர்வையும் மழுங்கடிக்க பொலீஸ் அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## □ சமசமாஜிகளின் கைதும் தப்பிச்செல்லம்

இப்போராட்டங்களின் காரணமாக நாற்பதுகளின் நடுப்பகுதியில் சமசமாஜக் கட்சியின் தலைவர்களான கொல்வின் ஆர். டி. சில்வா, என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா. எட்மன் சமரக்கொடி, லெஸ்லி குணவர்த்தனா ஆகியோருக்குத் தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. மேற்கூறிய தலைவர்களில் லெஸ்லி குணவர்த்தனா கைது செய்வதில் இருந்து விடுபட்டு தலைமறைவாகிய அதேவேளை ஏனையோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். கட்சி உத்தியோகபூர்வமாகத் தடைசெய்யப் படாதபோதும் கட்சியின் நடவடிக்கைகள் மீது தொடர்ந்த அடக்கு முறைகள் மேற்கொள்ளப்பட்டன. கட்சியின் அச்சகம் பொலீஸ் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் மூடப் பட்டு சீல்வைக்கப்பட்டது. கட்சிப் பத்திரிகைகளின் வரவு செயலிழக்கம் பெற்றது. சமசமாஜத் தலைவர்கள் சிறையில் தடுத்து வைக்கப்பட்டமைக்கு. எதிராக 1940 யூன் 23ம் திகதி ஒழுங்குசெய்யப்பட்ட எதிர்ப்புக் கூட்டம் தடைசெய்யப்பட்டதுடன் பத்துக்கு மேற்பட்ட பிரதான கட்சி ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு சமசமாஜத் தலைவர்கள் சிறையில் இருந்த அதேவேளை வெளியில் இருந்தவர்கள் சட்டவிரோத மாகவும் சட்டபூர்வமாகவும் கட்சி வேலைகளை முன்னெடுத்துவந்தனர். றோபேட் குணவர்த்தனா, எஸ். சி. சி. அந்தோனிப்பிள்ளை, வி. காரளசிங்கம் போன்றோரும் தலைமறைவாக இருந்துவநத லெஸ்லி குணவர்த்தனாவும் இணைந்து செயற்பட்டுவந்தனர். இக்கால கட்டத்தில் இரண்டாவது உலக யுத்தம் மிக உச்சக்கட்டத்தை அடைந்திருந்தமை குறிப்பிடத்தக்க தாகும். இத்தகைய சூழலில் 1942ம் ஆண்டு ஏப்பிரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7ம் திகதி இரவு சிறையில் இருந்த நான்கு சமசமாஜத் தலைவர்களான என். எம். பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா, பிலிப் குணவர்த்தனா, எட்மன் சமரக்கொடி ஆகியோர் சிறையில் இருந்து இரகசியமாக வெளியேறினர். அவர்களுடன் சிறைப் பாதுகாவலரான சொலமன் என்பவரும் கூடவே வெளியேறித் தலைமறைவாகிக் கொண்டனர். இவர்களில் எட்மன் சமரக்கொடி தவிர்ந்த ஏனையோர் இந்தியாவிற்குத் தப்பிச்சென்றனர். இதனால் ஆத்திரமடைந்த அந்நியராட்சியின் அடக்குமுறை யந்திரம் வெளியில் இருந்துவந்த சமசமாஜத் தலைவர்கள், ஊழியர்களைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது.

## □ ஐக்கிய சோஷலிசக் கட்சி தடை

1942ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் சமசமாஜக் கட்சியையும், அதிலிருந்துபிளவடைந்து நாற்பதில் உருவாக்கப்பட்ட ஐக்கிய சோஷலிசக் கட்சியையும் அந்நியராட்சியினர் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சட்டவிரோதமாக்கினர். ஐக்கிய சோஷலிசக் கட்சியின் தலைவர்களாக எஸ். ஏ. விக்கிரமசிங்கா, எம். ஜி. மெண்டிஸ், உ. சரணங்கரதேரோ, டி. பி. யசோதிஸ் போன்றவர்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகளுக்காக கைதுசெய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். கட்சியின் பத்திரிகைகள், பிரசுரங்கள் பறிமுதல் செய்யப்பட்டதுடன் கட்சி ஊழியர்களின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட்டன. அதேவேளை தொழிற்சங்க இயக்க வேலைகள் தொடர்ந்தன. இக்காலத்தில் கட்சி உறுப்பினர்கள் சட்டவிரோத - சட்டபூர்வ வேலைகளை இணைத்து முன்னெடுக்கும் அனுபவத்திற்கு உள்ளாகினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் சமசமாஜிகள்

சிறையில் இருந்து தப்பிச்சென்று இந்தியாவில் தலைமறைவாக இருந்துவந்த சமசமாஜக் கட்சித் தலைவர்கள் அங்குள்ள ட்ரொஸ்கியக் குழுக்களுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தினர். இதன் விளைவாக புதிய ட்ரொஸ்கியக் கட்சியாக 'இந்தியா இலங்கை பர்மாவுக்கான போல்ஷ்விக் லெனினிஸ்ட் கட்சி'யை உருவாக்கிக் கொண்டனர். இக்கட்சி ஏற்கனவே ட்ரொட்ஸ்கிசவாதிகளினால் உருவாக்கப்பட்ட நான்காவது அகிலத்தில் ஒருபகுதியாகவும் இணைக்கப்பட்டது. இக்கட்சியின் உருவாக்கத்திற்குப் பின்னால் வலுமிக்க ட்ரொஸ்கியக் கொள்கை ஒன்று இருந்தது. அதாவது இந்தியப் புரட்சி வெற்றி பெறாமல் இலங்கைப் புரட்சி சாத்தியமற்றது என்பதே அதுவாகும். எனவே இந்தியா, இலங்கை, பர்மா ஆகிய நாடுகளில் ஏககாலத்தில் புரட்சியை நடத்துதல்வேண்டும் என்பதே அதன் சாராம்சமாக அமைந்திருந்தது. இக்கட்சியின் இலங்கைக்கான பகுதியாக சமசமாஜக் கட்சி இருப்பது எனக் கொள்ளப்பட்டது. இக்கட்சியானது 1947-48ம் ஆண்டுவரை பெயரளவில் இருந்துவந்ததுடன் அதன்பின் சமசமாஜக் கட்சி நேரடியாகவே நான்காவது அகிலத்தின் ஒரு பகுதியாகத் தன்னை இணைத்தும் கொண்டது.

இந்தியாவில் தலைமறைவாகிப் பல மாநிலங்களிலும் இருந்துவந்த சமசமாஜத் தலைவர்கள் 1943இல் இந்தியப் பொலிசினால் கைதுசெய்யப்பட்டு இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டனர். ஒரு சிலர் இந்தியச் சிறைகளிலும் அடைக்கப்பட்டனர். இவ்வாறு தலைமறைவாகி இருந்தவர்களில் இறுதிவரை கைதுசெய்யப்படாது இருந்தவர்கள் கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தனா, திருமதி விவியன் குணவர்த்தனா, திருமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலினா பெரேரா ஆசியோராவர். கொல்வின் ஆர். டி சில்வா இந்தியாவில் தலைமறைவாக இருந்த காலத்தில் தனக்கு வைத்துக் கொண்ட பெயர் கோவிந்தன் என்ப தாகும். அதாவது மூல்லோயாத் தோட்டத்தில் பொலீஸ் துப்பாக்கிக்குப் பலியாகிய தொழிலாளத் தியாகியாகிய கோவிந்தன் நினைவாகவே அப்பெயரை கொல்லின் வைத்துக் கொண்டார். ஆனால் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டிய முக்கிய செய்தி யாதெனில், அத்தகைய கொல்லின் ஆர். டி சில்வா 19770-77 ஐக்கிய முன்னணி அரசில் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சராக இருந்தபோது அதே தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் வழங்கப்படுதையோ, ஆண்-பெண் சம சம்பளம் கொடுக்கப்படுவதையோ வன்மையாக எதிர்த்து வந்த ஒருவராகத தன்னை மாற்றிக்கொண்டவர் என்பது தான்.

இவ்வாறு இலங்கையின் இடதுசாரிகளுக்கு எதிரான அந்நியராட்சியின் தீவிர அடக்குமுறை நடவடிக்கைள் 1940-45 ஆண்டுகாலப்பகுதியில் உச்சநிலை கொண்டதாக விளங்கியது. இவ் அடக்குமுறைகளுக்கு எதிரான எதிர் நடவடிக்கைகள் குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்டவையாக மட்டும் இருந்து வந்தனவே தவிர புரட்சிகர நடவடிக்கை களின் வளர்ச்சியாகவோ அன்றி வெகுஜன எதிர்ப்பு செயல்முறையாகவோ வளர்க்கப்படவில்லை என்பது கவனத்திற்குரியதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10

# தொழிற் சங்க இயக்கமும் - போராட்டங்களும்

இரண்டாவது உலக யுத்தம் 1945ஆம் ஆண்டின் நடுக் கூறிலே பாசிசத்தின் தோல்வியுடன் முடிவுக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து தொழிற்சங்க இயக்கத்தின் உத் வேகம் அதிகரிக்கத் தொடங்கி அவை உறுதிமிக்க வேலை நிறுத்தப் போராட்டங்களாகப் பரிமானம் பெறத் தொடங்கின. இதற்கு மூன்று முக்கிய அம்சங்கள் அடிப் படைக் காரணங்களாகின. ஒன்று, நாற்பதுகளின் ஆரம்பத்துடன் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் தமது உரிமைகள் சலுகைகளுக்காக காணப்பட்ட தொழிற் சங்கப் போராட்டங்களுக்கான சூழல்கள், 1942ல் அரசி னால் யுத்தகாலப் பாதுகாப்பு விதிகளின் கீழ் வேலை நிறுத்தங்கள் அத்தியாவசிய சட்ட அமுலில் மூலம் தடை செய்யபட்டமையால் தொழிற்சங்க இயக்கமானது போராட்ட வடிவங்களைப் பெறமுடியாது காணப்பட் டது. இரண்டாவது, யுத்தத்தின் முடிவுடன் பிரித்தானிய ஆட்சியினர் தமது யுத்த இழப்புகளை மீட்டெடுத்துக் கொள்ளும் முயற்சியில் தொழிலாளி வர்க்கத்தின் மீதும் ஏனைய உழைக்கும் மக்கள் மீதும் மோசமான சுமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்தினர். இதனால் அதிருப்தியும் எதிர்ப்பும் வேகமாக வளரக்கூடியதாக இருந்தது. மூன்றாவது, இடதுசாரிகள் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலான தொழிற் சங்க அமைப்பு 1940 - 45 காலப்பகுதியில் கொழும்பு நகரத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் நன்கு ஸ்தாபனப்படுத்தப்பட்டிருந்தது. அதேவேளை யுத்த முடிவுடன் சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்ட சமசமாஜத் தலைவர்கள் முன்பு தாங்கள் சீர்திருத்த வேலைமுறை என நிராகரித்திருந்த தொழிற்சங்க வேலைகளில் தீவிரமாக ஈடுபட ஆரம்பித்தமையுமாகும்.

1945ம் ஆண்டின் பிற்கூறிலே தொழிற்சங்கக் கோரிக்கைகளை முன்வைத்த வேலைநிறுத்தப் போராட்டங்கள் இடம்பெற ஆரம்பித்தன. செப்டெம்பர் 19ம் திகதி கொழும்பு நகரத் தொழிலாளர்களில் பத்தாயிரம் பேர் கலந்துகொண்ட வேலைநிறுத்தம் இடம்பெற்றது. இவ்வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிற் சங்கங்கள் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையிலான இலங்கை தொழிற்சங்க சம்மேளத்துடன் (CTUF) இணைந்தவையாகக் காணப்பட்டன.

## □ வேலை நிறுத்தங்களின் வளர்ச்சி

இதனைத் தொடர்ந்து நவம்பர் 22ம் திகதி நாடு தழுவிய ரீதியில் பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம் இடம்பெற்றது. இவ்வேலை நிறுத்தத்திற்கு சமசமாஜிகள் தலைமையிலான மோட்டார் தொழிலாளர் சங்கம் தலைமை தாங்கியது. அன்று பஸ் போக்குவரத்து தனி முதலாளிகளின் கைகளிலேயே இருந்தது. இக்கால கட்டத்திலேயே வடபகுதியில் பஸ் தொழிலாளர்கள் தொழிற்சங்க ரீதியில் அணிதிரட்டப்பட்டனர். அத் தொழிற்சங்கப் பணியினை அன்றைய வடபகுதி சமசமாஜத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸி. தர்மகுலசிங்கம் முன்னின்று முன்னெடுத்ததுடன் நாடு தழுவிய அவ்வேலை நிறுத்தத்தில் வடபகுதி பஸ் தொழிலாளர்களையும் இணைக்கும் முயற்சி வெற்றி பெற்றது.

மேலும் அரசாங்கத் தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் பெரும் வேலை நிறுத்தத்திற்கான தயாரிப்பு களை செய்யத் தொடங்கியது. புகையிரத் தொழி லாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களில் வேலைசெய்வோர் வேலைநிறுத்தப் போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கினர். இப்போராட்டங்களுக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான இலங்கை தொழிற்சங்க சம்மேளனமும் (CTUF) சமசமாஜக் கட்சியின் தலைமையிலான இலங்கை தொழிலாளர் சம்மேளனமும் (CFL) தனித்தனித் தலைமை அளித்து வந்தன. இவற்றைவிட தன்னியல்பான வேலைநிறுத்தப் போராட்டங்களும் அவ்வப்போது இடம்பெறச்செய்தன.

இலங்கைக்கு 'அரசியல் சீர்திருத்த சலுகைகளை' வழங்க நிர்ப்பந்திக்கப்பட்ட பிரித்தானிய அரசு அதற் கான ஆணைக்குழு ஒன்றினை சோல்பரியின் தலைமை யில் அனுப்பிவைத்தது. இதனை கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தொழிற் சங்க சம்மேளனமும் தீவிரமாக எதிர்த்து இயக்கம் நடாத்தியது. எங்களுக்கு வேண்டியது முழுமை யான சுதந்திரமே அன்றி 'சீர்திருத்த சலுகைகள்' அல்ல எனக் கூறி சோல்பரி ஆணைக்குழுவினைப் பகிஷ்கரிக்கு மாறு வேண்டுகோள் விடுத்தது. இரண்டாவது சட்ட சபையில் டி. எஸ். சேனநாயக்கா போன்ற அடிநிலைப் பிற்போக்குவாதிகள் தவிர்ந்த ஏனையோர் சோல்பரி ஆணைக்குழுவினைப் பகிஷ்கரிக்க முடிவு செய்யும் அளவுக்கு கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்ப்பு இயக்கம் வலுமை பெற்றிருந்தது. 1945ம் ஆண்டு செப்டம்பர் 4ம் திகதி கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தலைமையிலான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்க சம்மேளனமும் இணைந்து இருபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட பிரமாண்டமான ஊர்வலத்தை சட்டசபையை நோக்கி நடாத்தி தமது எதிர்ப்பினைத் தெரிவித்துக்கொண்டது. இவ் ஊர்வலத்தை பொலீஸ் தடியடிமூலம் தடுத்துநிறுத்த முயன்றபோதிலும் தாக்கம் மிக்க அரசியல் கோரிக்கையினை வலியுறுத்தியது. இவ் ஊர்வலத்தின்மீது பலாத்காரம் பாவிக்கப்பட்டமையை எதிர்த்து மறுநாள் அரைநேர எதிர்ப்பு வேலைநிறுத்தம் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு நகரம் செயல் இழந்து காணப்படும் அளவுக்கு அவ் அரைநாள் வேலை நிறுத்தம் வெற்றி அளித்தது.

கொழும்பு நகர தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் தமது புரட்சிகர உணர்வை வெளிப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பகுதியினராக இருந்துவந்தவர்கள் துறைமுகத் தொழிலாளர்களாகும். ஸ்தாபனப்படுவதிலும் ஐக்கியப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் துறைமுகத் தொழிலாளர்கள் ஒரு முன்மாதிரியாகவே திகழ்ந்தனர். இது துறைமுகத்தில் அதிகளவு மலையாளத் தொழிலாளர்கள் வேலைசெய்துவந்த காலத்தில் இருந்தே தொடரப்பட்டதாகும். இத்தகைய துறைமுகத் தொழிலாளர் மத்தியில் 1946இல் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான வேலை நிறுத்தம் இடம்பெற்றது. இருபத்தாறு நாட்கள் தொடர்ச்சியாக நடைபெற்ற மேற்படி வேலை நிறுத்தம் சார்பாக நடாத்தப்பட்ட ஊர்வலத்தைப் போலீஸ் மிருகத்தனமாகத் தாக்கியது. அறுபத்திரண்டு பேர்வரை படுகாயங்கள் பெற்றனர். கட்சியினதும் தொழிற் சங்கத்தினதும் தலைமை உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டு சிறைக்கும் அனுப்பப்பட்டனர்.

இவ்வாறு கொழும்பு நகரத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் நாற்பதுகளின் நடுப்பகுதியில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சங்க இயக்கமும் வேலை நிறுத்தப் போராட்டங்களும் தொடர்வளர்ச்சி பெற்று வந்தன. சில போராட்டங்கள் பேச்சுவார்த்தை, பேரப்பேச்சு என்பனவற்றின் மூலம் ஒப்பந்தங்கள் செய்யப்பட்டு சம்பள உயர்வு உட்பட ஏனைய உரிமைகள், சலுகைகள் போன்றவற்றைத் தொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள முடிந்தன. சில போராட்டங்கள் முறியடிக்கப்பட்டது மட்டுமன்றி முன்னணித் தொழிலாளர்கள் கடுமையான பழிவாங்கலுக்கும் ஆளாக்கப்பட்டனர். சிலவகை வேலைநிறுத்தப் போராட்டங்கள் அரசியல் கோரிக்கைகளுடன் இணைக்கப்பட்டன. அதேவேளை தனியே பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக மட்டும் சில போராட்டங்கள் இடம்பெற்றன.

## ❑ தொழிற்சங்க ஐக்கியமும் பொது வேலைநிறுத்தமும்

மேற்படி வளர்ந்துவந்த தொழிற்சங்க இயக்கத்தில் சமசமாஜிகளும் கம்யூனிஸ்டுகளும் போட்டிபோட்டு நின்றனர். இவர்களது போட்டிமிக்க நடவடிக்கைகளால் சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கு பின்னடைவுகள்கூட ஏற்பட்டன. இதனால் வேலைநிறுத்தப் போராட்டங்கள் சில வெற்றிபெறவும் தவறின. தொழிறசங்க இயக்கத்தில் காணப்பட்ட இப்பலவீனத்தை கம்யூனிஸ்ட்டுக்கள் முற்றாக உணர்ந்தனர். சமசமாஜிகள் அரைகுறையாகவும் நிர்ப்பந்த சூழலாலும் உணர வேண்டியேற்பட்டது. ஏனெனில் சமசமாஜிகள் மத்தியில் ஒருமுனைவாத அதிதீவிர ட்ரொஸ்கிய நடைமுறை என்பது தொடர்ச்சியாக அரசியல் தொழிற்சங்க இயக்கத்தில் இருந்துவந்தமையாகும்.

எனவே **1947** ஆம் ஆண்டின் முற்பகுதியில் பலதுறைகளிலும் ஏற்பட்டுவந்த தொழிலாளர்களின் அதிருப்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானது வேலைநிறுத்தங்களாக மேலும் முன்செல்லும் போக்கினை அதிகரிக்கச்செய்தது. அதேவேளை தொழிற்சங்க ஐக்கியமும் கூட்டுத்தலைமையும் தேவைப் பட்டது. எனவே சமசமாஜிகளும் கம்யூனிஸ்ட்டுகளும் தொழிற்சங்க மட்டத்தில் 'வேலைநிறுத்த நடவடிக்கைக் கான கூட்டு செயல் குழு' ஒன்றினை ஏற்படுத்தி வளர்ந்துவந்த வேலைநிறுத்தங்களுக்கு தலைமைதாங்க முதல் தடவையாக ஒப்புக்கொண்டனர். இதனால் தொழிற்சங்க இயக்கத்தில் மேலும் ஓர் உத்வேகம் காணப்பட்டதுடன் தொழிலாளி வர்க்கத்துடன் அரசாங்க தனியார் துறைகளைச் சேர்ந்த எழுதுவினை ஞர்கள் இணையக்கூடிய சூழலும் வளர்ந்தது. அதேபோன்று அரசாங்கத் துறைகளில் உள்ள ஊழியர் தரத்தில் உள்ள பலரும் ஸ்தாபன ரீதியில் தொழிலாளி வர்க்கத்துடன் கைகோர்த்துச்செல்லத் தயாராகினர். மேமாதத்தில் சில துறைகளில் ஆரப்பித்த வேலை நிறுத்தங்கள் பொது வேலைநிறுத்தமாக விரிவடைந்து சென்றது. யூன் 3ம் திகதியில் இருந்து வேகம் பெற்ற பொது வேலைநிறுத்தம் அந்நியராட்சியின் கீழ் நடைபெறும் முதலாவது மிகப் பெரும் வேலைநிறுத்த மாக மாறியது. சகல துறைகளையும் சேர்ந்த தொழி லாளர்கள், ஊழியர்கள் பல்லாயிரக்கணக்கில் இப்பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

## □ அரசின் அடக்குமுறை

1947 யூன் மாதத்தில் இடம்பெற்ற இப்பொது வேலைநிறுத்தத்தில் ஒரு பகுதியாக கொலனாவையில் நடைபெற்ற பிரமாண்டமான ஊர்வலத்தின்மீது பொலீஸ் துப்பாக்கிப்பிரயோகம் செய்தது. வி. கந்தசாமி என்ற அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தைச் சேர்ந்த இளம் எழுதுவினைஞர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தார். அந்நியராட்சியினரினதும் உள்ளூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிவருடிகளினதும் அரசு யந்திரத்தின் திமிர்பிடித்த இக்கொடூரச்செயல் சகல தரப்பு தொழிலாளர்கள், ஊழியர்கள், மக்களைக் கொதித்தெழ வைத்தது. மறுநாள் தியாகி கந்தசாமியின் பூதவுடல் காலிமுக மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கிருந்து கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு ஆர்ப்பாட்ட ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. கோட்டைப் புகையிரத நிலையத்தில் வைத்து அத்தியாகியின் உடலைத் தாங்கிய பெட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது சொந்த இடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அன்றைய இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட மக்கள் தொகை ஒரு லட்சத்திற்கு அதிகமாக இருந்தது என்பது வியப்பிற்குரியதொன்றல்ல. ஏனெனில் அன்றைய சூழலில் இன உணர்வைவிட வர்க்க உணர்வே வளர்ந்த தொன்றாகக் காணப்பட்டது. இதற்கு உதாரணக் குறிப்புக் கூறுவதாக இருந்தால் ஒன்றைக் கூறமுடியும். அன்றைய பொது வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்ட சிங்கள தமிழ் முஸ்லீம் தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழிலாளி வர்க்கத்தின் சார்பில் ஒரு தமிழ் ஊழியர் ஊர்வலத்தில் முன்னணியில் சென்று ஆளும்வர்க்கப் பொலிஸ் துப்பாக்கி வேட்டுக்கு தனது உயிரைக் கொடுத்து தொழிலாளி வர்க்கம் சார்பான தியாகியானார். அதேவேளை மறுபுறத்தில் அப்பொலீஸ் படைக்குப் பொறுப்பான உள்நாட்டு அலுவல்கள் அமைச்சராக ஆளும்வர்க்கத் தமிழரான அ. மகாதேவா இருந்தார் என்பதுதான் அக்குறிப்பாகும்.

இப்பொது வேலை நிறுத்திததிற்கு எதிராக அந்திய ராட்சி பல அடக்குமுறைகளை விஸ்தரித்துக்கொண்டது. பொலிஸ் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டு மேலதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இராணுவ அணிகள் தயார்ப்படுத்தப்பட்டதுடன் கடற்படையினர் வீதிகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப்பட்டனர். இத்தகைய அடக்குமுறையின்கீழ் 1947 ஆம் ஆண்டு மே-யூன் பொது வேலை நிறுத்தம் யூன் 19ம் திகதி வாபஸ் பெறப்பட்டது. வேலைநிறுத்தம் தோல்வியில் முடிந்தபோதிலும் தொழிலாளி வர்க்கத்தின் எதிர்காலப் போராட்டங்களுக்கு ஆரம்பப் பாடத்தைக் கற்றுக்கொடுத்தது. அதேவேளை அந்நியராட்சிக்கும் அவர்களது கால்களை இறுக்ப் பிடித்திருந்த எ. எஸ் சேனநாயகக்கா போன்ற பிற்போக்கு வாதிகளுக்கும் பெரும் முன்னெச்சரிக்கையாகவும் அமைந்தது. இவ்வேலை நிறுத்தம் ஒரு தொழிற்சங்க இயக்கமாக இருந்தபோதிலும் ஏகாதிபத்திய உதிர்ப்புணர்வையும், சுதந்திரத்திற்கான மக்களின் அபிலாசைகளை பிரதிபலிப்பதாகவும் அமைந்திருந்தமை அவதானிக்கவேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11

# இடதுசாரிகளும் முதலாவது பாராளுமன்றத் தேர்தலும்

இலங்கையில் யுத்தத்திற்குந் பின்வந்த ஆண்டுகளில் அரசியல் சூழ்நிலைகள் மாற்றமடைந்து வந்தன. இம் மாற்றங்களின் அடிப்படைக் குணாம்சங்களைத் தக்கபடி மதிப்பீட்டுக்கு உள்ளாக்கி பொது அரசியல் வேலைத் திட்டம் ஒன்றினை உருவாக்கிக்கொள்ள முடியாத கையறுநிலையிலேயே இடதுசாரிக் கட்சிகள் இரண்டும் இருந்தன. அதனால் வலதுசாரி, இடது அதிதீவிரவாதத் தவறுகளை இழைத்து வநதனர்.

சமசமாஜக் கட்சி தனது ட்ரொஸ்கிய நிலைக்கேற்ப ஒருமுனை வாதப்போக்கில் சென்றுகொண்டிருந்தது. அக்கட்சிக்குள் ஏற்கனவே ஏற்பட்ட பிளவு நீடித்தது. என். எம். பெரேரா, பிலிப் குணவர்த்தனா ஒருபுறமாக வும், கொல்வின் ஆர். டி. சில்வா, லெஸ்லி குணவர்த்தனா மறுபுறமாகவும் செயற்பட்டுவந்தனர். முன்னையவர்கள் சமசமாஜக் கட்சி எனவும் பின்னையவர்கள் போல்ஷ்விக் லெனினிஸ்ட் கட்சி எனவும் தனித்தனியாக இயங்கி வந்தனர். இருபிரிவினரும் தங்களுக்குள் முரண்பட்ட போதிலும் அடிப்படையான ட்ரொஸ்கீய நிலைப்பாட்டில் இருந்து விடுபடவில்லை. அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சியை எதிர்த்து நிற்பதில் இவர்கள் தீவிரமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றனர். சோவியத் யூனியனின் ஊதுகுழலே கம்யூ னிஸ்ட் கட்சி என்றும், ஸ்ராலினிஸ்டுக்களின் எதிர்ப் புரட்சிகர வேலை என்றும் கூறிவந்தனர். இதனால் தொழிற்சங்க இயக்கத்தில் எய்தப்பட்ட ஓரளவான ஐக்கி யம் அரசியல் ரீதியில் ஏற்படமுடியாத ஒன்றாகக் காணப் பட்டது.

## ☐ கம்யூனிஸ்டு கட்சியின் தவறுகள்

அதே வேளை கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்துவந்த தேசிய அரசியல் நிலைமைகளைக் கணிப்பீடுசெய்வதில் வலதுசாரித் தவறினை இழைத்துக்கொண்டது. டி. எஸ். சேனநாயக்கா போன்ற வலதுசாரிகளின் கையோங்கி நின்ற இலங்கை தேசிய காங்கிரசிற்குள் கம்யூனிஸ்டுக்கள் தனித்தனியாக இணைந்து ஏகாதிபத்திய எதிர்ப்பையும், சுதந்திரத்திற்கான போராட்டத்தையும் முன்னெடுப்பது என்ற தீர்மானத்தின் அடிப்படையில் செயற்படத் தொடங்கினர். கம்யூனிஸ்டுகளின் இந்நிலைப்பாட்டிற்கு தேசிய காங்கிரசினுள் இருந்த ஒரு பகுதியினர் ஆதரவு தெரிவித்து கம்யூனிஸ்டுக்களை இணைத்துக் கொண்ட னர். இதனை எதிர்த்து டி. எஸ். சேனநாயக்கா தேசிய காங்கிரசை விட்டு வெளியேறவும் செய்தார். டி. எஸ். சேனநாயக்கா சோல்பரி ஆணைக்குழுவின் திட்டத்தை ஏற்றுக்கொண்டு அந்நியராட்சிக்குத் தொண்டு செய் வதற்கு தன்னைத் தயார்ப்படுத்தியும் கொண்டார். அது மட்டுமன்றி சட்டசபையில் காட்டப்பட்ட எதிர்ப்பையும் மீறிச் செயற்பட்டார். இதனைச் செயல்படுத்த டி. எஸ். சேனநாயக்கா தலைமையில் பிற்போக்கு சிங்களத் தலை வர்களும் அவர்களோடு இணைந்த தமிழ், முஸ்லீம் தலை வர்களும் ஒன்றுசேர்ந்து 1947 ஆம் ஆண்டில் ஐக்கிய தேசியக் கட்சியை (U. N.P.) உருவாக்கிக் கொண்டனர். இக்கட்சியின் தோற்றம் அடிப்படையில் ஏகாதிபத்தியத் திற்கு முற்றிலும் அடிபணிந்து நின்று அதற்கு சேவகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யக்கூடிய தரகு முதலாளித்துவ வர்க்கத்தைப் பிரதி பலிக்கும் ஒன்றாகவே காணப்பட்டது.

ஆனால் கம்யூனிஸ்ட் கட்சி இதன் வர்க்கத் தன்மையைத் தவறாகக் கணிப்பீடு செய்துகொண்டது. அதாவது ஐக்கிய தேசியக் கட்சியானது ஒரு தேசிய முதலாளித்துவக் கட்சி என்றும் அதற்குள் முற்போக்கானதும்— ஏகாதிபத்திய எதிர்ப்புத்தன்மை கொண்ட ஒருபகுதி இருப்பதாகவும் அதேவேளை பிற்போக்கான ஏகாதிபத்திய ஆதரவுப்பகுதி ஒன்றும் இருந்து வருகிறது எனக்கூறி அம் முற்போக்குப் பகுதியினருடன் இணைந்து கம்யூனிஸ்டுகள் செயலாற்றவேண்டும் எனத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டது. இத்தீர்மானத்தின் அடிப்படையில் 1947ல் நடைபெறவிருந்த முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் யூ.என். பியை கம்யூனிஸ்ட்கட்சி ஆதரித்து வேலை செய்ய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. வலதுசாரித் தன்மை கொண்ட இத்தீர்மானம் கட்சிக்குள் பலத்த விவாதத்தைக் கிளப்பியது மட்டுமன்றி ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளிடையே பல்வேறுவித உணர்வுகளையும் ஏற்படுத்தியது. இவற்றை மிக விரைவாகவே கட்சி அடையாளம் கண்டுகொண்டதன்மூலம் இத்தீர் மானம் நடைமுறைப்படுத்தப்படாது பொதுத் தேர்தலுக்கு முன்பாகவே தனது தவறினைத் திருத்தியும் கொண்டது. மேற்படி தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயல்முறைகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றிநின்றமை முக்கிய காரணமாகும். இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சுதந்திரப்போராட்டம் என்பவற்றுக் கிடையிலான உறவும் நடைமுறைகளும் இலங்கை நிலைமைகளை விட முற்றிலும் வித்தியாசமானவையாகும். இதனைக் கவனத்தில் கொள்ளாது கட்சிக் கொள்கை வகுப்போர் இந்தியக் கட்சியைப் பிரதிசெய்துகொள்வது போன்ற தீர்மானத்திற்கு வந்தமையே அத்தவறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1948ல் கட்சியின் மூன்றாவது தேசிய காங்கிரஸ் முன்னைய வலதுசாரித் தீர்மானத்திற்கு நேர் எதிரான அதிதீவிரத் தீர்மானம் ஒன்றிற்கு வந்தது. எந்தவிதத் தயாரிப்புமின்றி ஆயுத நடவடிக்கையில் இறங்க எத்தனித்து தென்னிலங்கையில் ஒரு பகுதியில் சிறு சம்பவத்திலும் சம்பந்தப்பட்டது. இத்தீர்மானத்தின் முக்கிய நபராக அன்றைய பொதுச் செயலாளர் ஹரி அபேயகுணவர்த்தனா இருந்தார். இத்தீர்மானம்கூட இந்திய கட்சியின் தாக்கத்தால் ஏற்பட்டதொன்று என்றே கூறவேண்டும். ஏனெனில் 1946-51 காலப்பகுதியில் இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் விரமிக்க தெலுங்கானா ஆயுத எழுச்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தலைமை தாங்கி வந்தது. அக்காலத்தில் தெலுங்கானாப் போராட்டம் விடுதலை விரும்பிய அனைவருக்கும் உணர்வையும் உற்சாகத்தையும் அளித்துவந்த போராட்டமாகும். எனவே அப்போராட்டத்தின் பாதிப்பு இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிரதிபலித்தது. ஆனால் தெலுங்கானாப் போராட்டத்தின் சூழல் இந்திய நிலைமைகளின் விசேஷத் தன்மைகளுடன் இணைந்தவையாகும். அதனை அப்படியே இலங்கையின் ஒரு பகுதியில் பொருத்திக்கொள்ள முயன்ற தீர்மானமே அதிதீவிர ஒருமுனைவாதமாக வெளிப்பாடடைந்தது. இத்தவறான தீர்மானம் 1950ம் ஆண்டில் இடம் பெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் நான்காவது தேசிய மாநாட்டில் கைவிடப்பட்டு திருத்திக்கொள்ளப்பட்டது. அம்மாநாட்டில் கட்சி சில நிதானமானதும் நீண்ட நோக்கிலுமான கொள்கைகளை வகுத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கதாகும்.

## □ முதலாவது பாராளுமன்றத் தேர்தல்

1947ல் இரண்டாவது சட்டசபை கலைக்கப்பட்டு சோல்பரி அரசியல் திட்டத்திற்கு அமைவாக பிரித்தானிய முறை சார்ந்த முதலாளித்துவப் பாராளுமன்றத்திற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும், வடக்கு கிழக்கில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரசும், மலையகத்தில் இலங்கை இந்தியன் காங்கிரசும், இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, போல்ஷ்விக் லெனினிஸ்ட் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன போட்டியிட்டன.

இத்தேர்தலில் இடதுசாரிகள் தகுந்த முறையில் முற்கூட்டியே ஏகாதிபத்தியத்தையும் அதன் எடுபிடியான யூ. என். பியையும் பொது எதிரியாகக் கொண்டு ஐக்கியத்தின் அடிப்படையில் நின்றிருந்தால் பெற்ற பாராளுமன்ற வெற்றியையும்விடக் கூடுதலான ஆசனங்களைப் பெற்றிருக்க முடியும். இடதுசாரிக் கட்சிகள் சமசமாஜக் கட்சி, போல்ஷ்விக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி எனத் தனித் தனியே போட்டியிட்டனர். முதலிரு ட்ரொஸ்கீசக் கட்சிகளிடையே இறுதி நேரத்தில் போட்டித் தவிர்ப்பு இடம் பெற்றது. ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியுடன் அவர்களுக்கு உடன்பாடு ஏற்படவில்லை. இதனால் இத்தேர்தலில் இடதுசாரிகளின் எதிர்ப்பை யூ. என். பியினால் தாக்குப் பிடிக்க முடிந்தது. சமசமாஜக் கட்சி பத்து இடங்களையும், போல்ஷ்விக் கட்சி ஐந்து இடங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி ஐந்து இடங்களையும் கைப் பற்றின. தமிழ்க் காங்கிரஸ் ஏழு ஆசனங்களையும் இலங்கை இந்தியன் காங்கிரஸ் ஏழு தொகுதிகளையும் பெற்றது. சுயேட்சையினர் இருபது பேர் வெற்றி வெற்றனர். யூ. என். பி. 42 ஆசனங்களைப்பெற்றது. யூ. என். பி. அறுதிப் பெரும்பான்மை பெறாத சூழலில் சகல யூ. என். பி. விரோத முற்போக்கு சக்திகளையும் ஒருங்கிணைத்து மாற்று அரசாங்கம் ஒன்றினை உருவாக்கும் நோக்கத்துடன் ஒரு மாநாடு கூட்டப்பட்டு ஐக்கியத்திற்கு முயற்சிகள் செய்யப்பட்டன. அம்மாநாடு 'யமுனா மாநாடு' என்று அழைக்கப்படுவதாகும். ஆனால் அம்மாநாட்டினால் எவ்வித ஐக்கியமும் ஏற்படவில்லை. சமசமாஜிகளின் ஒருமுனைவாதம் ஓரம்சமாக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை டி. எஸ். சேனநாயக்கா சுயேட்சை உறுப்பினர்களையும் பின்னர் தமிழ் காங்கிரஸ் கட்சியையும் தனது கைக்குள் அமர்த்திக் கொண்டதன் மூலம் ஆட்சியை அமைத்தார். சமசமாஜக் கட்சி பிரதான எதிர்க்கட்சி என்ற இடத்தில் பெருமையுடன் அமர்ந்து கொண்டது. கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்க்கட்சியாகிநின்றது. நாற்பதின் ஆரம்பம் தொட்டு இடதுசாரிகள் முன்னெடுத்து வந்த அரசியல் தொழிற்சங்கப் போராட்டங்கள் அனைத்தினதும் பெறுபேறாக பாராளுமன்றத்திற்கான இம்முதலாவது பொதுத் தேர்தலில் இடதுசாரிகளினால் இருபது ஆசனங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது. இத்தேர்தல் முடிவுகளின் மூலம் இடதுசாரிகளான சமசமாஜிகளோ அன்றி கம்யூனிஸ்டுகளோ உரிய படிப்பினையைப் பெறவில்லை. தனியே பிரித்தானிய வகைப்பட்ட முதலாளித்துவப் பாராளுமன்ற அமைப்பு முறையினால் இடதுசாரிகள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்துவிட முடியாது என்ற உண்மையின் ஒருபகுதியைத்தானும் அவர்கள் உணர்ந்துகொள்ளவில்லை. அதனை ஓர் கருவியாக அல்லது தமது பிரசாரங்களுக்கான களமாக மட்டும் பாவித்துக் கொள்ளும் அதேவேளை பாராளுமன்றத்திற்கு அப்பால் வெகுஜனங்கள் மத்தியில் முன்னெடுக்கப்பட வேண்டிய புரட்சிகர வேலைத்திட்டம் என்பதனையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை. அதேவேளை இத்தேர்தலின் வெற்றியானது இரண்டு இடதுசாரிக் கட்சிகளையும் பாராளுமன்றப் பாதையில் மேலும் நம்பிக்கையுடன் வேகமாக நடைபோடச்செய்தது. அதனை அக்கட்சிகளின் நடவடிக்கைகள் உறுதிப்படுத்திநின்றன. அடுத்த பொதுத் தேர்தலில் சமசமாஜக் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்று ஆட்சிக்கு வரமுடியும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியும் தனது பாராளுமன்ற ஆசனங்களை அதிகரித்துக் கொள்ளலாம் என்ற நப்பாசையும் பெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

12

# மகத்தான ஹர்த்தாலும் 1956ன் ஆட்சி மாற்றமும்

இலங்கையில் நாற்பதுகளின் நடுகூற்றுக்குப்பின் பெயரளவில் இருந்துவந்த தேசிய இயக்கம் என அழைக்கப்பட்ட இலங்கை தேசிய காங்கிரஸ் செயலிழந்த நிலைக்குச் சென்றது. அதேவேளை டி.எஸ் சேன நாயக்கா தலைமையில் யூ.என்.பியும், ஜி.ஜி. பொன்னம் பலம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசும், முஸ்லீம்கள் மத்தியில் முஸ்லீம் லீக்கும், மலையக மக்களிடையே இலங்கை இந்தியன் காங்கிரசும் செயற் பட்டு அரசியல் செல்வாக்குத் தேடும் நிலைக்கு வளர்ந்தன. மறுபுறத்தில் சமசமாஜிகளும், கம்யூனிஸ்டுகளும் தத்தமது நிலைகளை வலுப்படுத்த முனைந்தனர். இத்தகைய சூழலிலேயே முதலாவது பாராளுமன்றப் பொதுத் தேர்தல் இடம்பெற்று முன்பு எடுத்துரைக்கப்பட்டவாறு டி.எஸ். சேனநாயக்கா தலைமையில் யூ.என்.பி. ஆட்சி பீடத்தில் அமர்ந்து கொண்டது.

## □ யூ.என்.பி. ஆட்சியின் பிற்போக்கு நிலை

டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான யூ. என். பி. அரசாங்கம் 1947ல் பதவிக்கு வந்ததன் மூலம் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்திய சார்பும், மக்கள் விரோதமும் கொண்ட பிற்போக்கு நிலையினை தெளிவாக வெளிக்காட்டத் தொடங்கியது. டி. எஸ் சேனநாயக்கா சிங்கள பிரபுத்துவ உயர் குடும்பத்தில் இருந்துவந்த ஓர் கடைந்தெடுத்த பிற்போக்குவாதி. அவர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் விசுவாசம் மிக்க அடிவருடியாகத் திகழ்ந்தார். அது மட்டுமன்றி மோசமான இனவாதியாகவும் இருந்தார். ஆனால் வெளிப்படையாக இனவாதம் பேசுவதற்குப் பதிலாக நீண்டகால நோக்கில் உள்ளார்ந்த இனவாதத் திட்டங்களைக் கொண்டிருந்தார். அதனை 1936ல் இரண்டாவது சட்டசபையில் தனிச்சிங்கள மந்திரி சபையை அமைப்பதில் காட்டிநின்ற கருசனை மிக்க நடவடிக்கை எடுத்துக் காட்டியது. அதே போன்று 1935ம் ஆண்டு காணி அணைக்குழுவின் அறிக்கைக்குப்பின் வடமத்திய மாகாணத்திலும் படிப்படியாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குவதில் மிகுந்த உள்நோக்குடன் செயற்பட்ட முதல் சிங்களத் தலைவர் டி. எஸ். சேனநாயக்காவே. இக்குடியேற்றத் திட்டத்தின் தொடர்ச்சியே பிற்காலத்தைய தேசிய இனப் பிரச்சினையின் மையப்புள்ளிகளில் ஒன்றாக விளங்கி வருகின்றது.

டி. எஸ். சேனநாயக்கா பதவிக்கு வந்ததும் தொழிலாளி வர்க்கத்தையும் அரசாங்க ஊழியர்களையும் 1947ன் பொது வேலை நிறுத்தத்திற்காகப் பழிவாங்குவதில் ஈடுபட்டார். அரசாங்க ஊழியர் அரசியலில் பங்கு கொள்ளக்கூடாது என்றும், வேலைநிறுத்தங்கள் சட்ட விரோதமானவை எனவும் சட்டவிதிகளும். திருத்தங்களும் கொண்டு வரப்பட்டதுடன் முதலாளிகள்— நிறுவனங்களுக்கு முழுப் பாதுகாப்பும் ஆதரவும் வழங்கப்பட்டன. அதற்கான வழிகளில் பொலீஸ் படைக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் விதிகள் நிறைவேற்றப்பட்டன, இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி அரசு தொடர்பு சாதனங்களில் இடதுசாரிகளுக்கு எதிரான அபாண்டப் பிரசாரங்கள் நடத்தப்பட்டன. 1947ல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சோல்பரி அரசியலமைப்பின் விதிகளுக்கு அமைய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான எஸ். ஏ. விக்கிரமசிங்காவும், சமசமாஜியத் தலைவர்களில் பிலிப் குணவர்த்தனாவும் வேட்பாளர்களாக நிற்கமுடியாதவாறு ஆக்கப்பட்டனர். இத்துடன் இலங்கையில் 'சிகப்பு அபாயம்' பற்றி இப்பிற்போக்கு யூ. என். பி. அரசு அபாயக்குரல் வைத்தும் வந்தது. இடதுசாரிகளுக்கு எதிரான இத்தகைய வஃமம் நிறைந்த செயற்பாடுகள் பிரித்தானிய ஆட்சியாளர்களை நன்கு மனம் குளிரச்செய்து திருப்திப்படுத்தியது. அது மட்டுமன்றி இந்தியாவில் இடம்பெற்றுவந்த சுதந்திரப் போராட்டத்தின் வீச்சும், சீனாவில் கம்யூனிஸ்டுகள் தலைமையில் வெற்றிபெறத் தயாராகிநின்ற விடுதலைப் போராட்டமும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் போக்கில் மாற்றுத் தந்திரோபாயங்களை வகுக்குமாறு நிர்ப்பந்தித்தது. பிரித்தாளும் சூழ்ச்சிமிக்க தந்திரம் மட்டும் போதாது என்பதை உணர்ந்த அவர்கள் சுதந்திரம் என்ற பெயரில் ஆட்சி அதிகாரத்தை தமக்கு நம்பத்தகுந்த வர்க்கத்தினரிடம் ஒப்படைப்பதற்கும் தயாராகினர். அதன் அடிப்படையிலேயே இந்திய பிரபுத்துவ முதலாளித்துவ வர்க்கச் சக்திகளிடம் அதிகாரத்தைக் கைமாற்றிக் கொடுத்தனர், அதனைத் தொடர்ந்து 1948ல் இலங்கையிலும் அவ்வாறு நிகழ்ந்தது. இவ் அதிகார மாற்றத்தை டி. எஸ். சேனநாயக்கா தலைமையிலான யூ. என். பி. அரசு கையேற்றுக் கொண்டது. இதனையே 'இலங்கையில் ஒரு சொட்டு இரத்தமும் சிந்தப்படாமல் சுதந்திரத்தை டி. எஸ். சேனநாயக்கா பெற்றுக் கொண்டார்' என்று கூறப்படுவதாகும், இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படைப் பொருளாதாரக் கட்டமைப்பு அசைக்கப் படாத விதத்திலும், அதனைப் பாதுகாத்து நிற்கும் அரசமைப்பு எவ்வித சேதத்திற்கும் உட்படாதவாறும் சுதந்திரம் என்ற பெயரில் 1948ஆம் ஆண்டு பெப்பரவரி 4ம் திகதி இலங்கையின் கொடியாக சிங்கக்கொடி பறக்க விடப்பட்டது. இவ் ஏமாற்றினை இலங்கையின் பிரபுத் துவ முதலாளித்துவ ஆளும்வர்க்கத் தரப்பினர் அனை வரும் இன மத மொழி பேதமின்றி ஏற்றுக்கொண்டு குதூகலித்தனர். அதேவேளை தொழிலாளி வர்க்கத்தின ரின் ஒரு பகுதியினர் அதனை உணர்ந்துகொண்டபோதி லும் ஏனைய மக்கள் அனைவரும் சுதந்திரம் கிடைத்த தாக நம்ப வைக்கப்பட்டனர்.

இச்சுதந்திரத்திற்குப் பின்புதான் இனவர்க்க அடிப் படையில் டி. எஸ். சேனநாயக்கா இலங்கை வாழ் இந்திய வம்சாவழி மக்களின் அடிப்படைக் குடியியல் உரிமையான பிரசாவுரிமையை பறிக்கும் சட்டத்தைக் கொண்டுவந்து வாக்குரிமையையும் இல்லாமல் செய்துகொண்டார். அபகீர்த்திமிக்கதும் அநியாயம்நிறைந்ததுமான இச்சட்டம் வர்க்க ரீதியில் அணிதிரளக்கூடிய மலையகத் தோட்டத் தொழிலாளிவர்க்கத்தைக் குறிவைத்தே ஆக்கப்பட்டி ருந்தது. அதனாலேயே இன உணர்வுகளுக்கும் அப்பால் ஜீ.ஜி. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் இச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிக்க முடிந்தது, 1947ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மலையக மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கென இலங்கை இந்தியன் காங்கிரஸ் மூலமாக ஏழு உறுப்பினர்கள் தெரி வாகினர். அது மட்டுமன்றி பதினான்கு தொகுதிகளில் இடதுசாரிகளுக்கு தோட்டத் தொழிலாளர்கள் ஆகக் கூடிய ஆதரவினை வழங்கினர். இதனை வர்க்க நோக்கில் அவதானித்த டி. எஸ். சேனநாயக்கா இனரீதியாக எதிர் காலத்தில் சிங்களத் தமிழ்த் துவேசத்தை வளர்த்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதற்கும் அச்சட்டத்தைப் பயன்படுத்த முடியும் என்று நம்பினார். அவரது நம்பிக்கை இலங்கையின் இனவாத அரசியலில் வீண் போகவில்லை.

இவ்வாறு வர்க்க ரீதியிலும் இன அடிப்படையிலும் மிகப் பிற்போக்கான வழிகளில் திட்டமிட்டு செயலாற்றுவதில் டி.எஸ். சேனநாயக்காவும் அவர் தலைமையிலான யூ.என்.பியும் முனைப்புடன் செயற்பட்டு வந்தது. இப்பிற்போக்கு நிலையினை இடதுசாரிகளான சமசமாஜிகளும் கம்யூனிஸ்டுகளும் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் எதிர்த்து வந்தனர். அவை யாவும் குறிப்பிட்டளவு எல்லைகளுக்குள்ளேயே நின்றன. அதேவேளை தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்கள் மத்தியிலும் யூ.என்.பி. எதிர்ப்பு படிப்படியாக வளர்வதாயிற்று.

## C தேசிய முதலாளித்துவத்தின் வெளிப்பாடு

நாட்டின் பொருளாதார, அரசியல், சமூக, கலாசாரத் துறைகளில் தேசிய அபிலாசைகளைப் பிரதிபலிக்கச் செய்தல்வேண்டும் என்ற அவா சுதந்திரத்திற்குப் பிற்பட்ட நாட்களில் வளர்ந்து வந்தன. அதேவேளை சிறிய முதலீடுகளின் மூலம் உள்ளூர் தேவைகளின் அடிப்படையிலான உற்பத்திகளைச் செய்யும் முதலாளித்துவ வளர்ச்சி ஒன்று வளர்ந்தும்வந்தது. இவ் வளர்ச்சிப் போக்கினை ஏகாதிபத்திய சக்திகள் விரும்பவில்லை. அத்துடன் அவர்களுக்கு விசுவாசம் காட்டிநின்ற தரகு முதலாளித்துவமாக வளர்ந்துவந்த யூ.என்.பியும் தேசியத் தன்மை கொண்ட முதலாளித்துவ வளர்ச்சிக்கு எதிராகவே நின்றது. அதேவேளை இடதுசாரிகளின் கொள்கை, கோரிக்கைகளினால் மக்கள் கவரப்படக்கூடிய சூழல்களும் காணப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை அனைத்தையும் கூர்மையுடன் அவதானித்த எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கா யூ.என்.பி அரசில் தான் வகித்த அமைச்சர் பதவியையும் துறந்து அக்கட்சியைவிட்டு 1951ம் ஆண்டில் வெளியேறினார். திரு. பண்டாரநாயக்கா சிறந்த கல்வியாளர்; பேச்சாற்றல் மிக்கவர் மட்டுமன்றி இலங்கை அரசியலில் நன்கு அனுபவமுடையவர். அவரும் வசதிமிக்க உயர்குடும்பத்தில் இருந்து வந்தவராயினும் தேசிய அபிலாசைகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செல்பவராகக் காணப்பட்டார். அவர் ஏற்கனவே இரண்டு தடவைகள் தனிக் கட்சி ஆரம்பித்தும் அவற்றை கைவிடநேர்ந்தது. அன்றைய நாட்டின் சூழலும், அரசியல் வளர்ச்சியும் அவரது முயற்சிக்குச் சாதகமாக அமையவில்லை. அது மட்டுமன்றி அவரிடம் எவ்வழி செல்வது என்பதிலும் தெளிவு இருக்கவில்லை.

ஆனால் 1951ல் அவர் எடுத்த தனி அரசியல் கட்சி முயற்சி வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. அதற்குரிய சூழலும் ஏற்பட்டிருந்தது. எனவே சிறீலங்கா சுதந்திரக் கட்சியை பண்டாரநாயக்கா உருவாக்கிக்கொண்டார். யூ.என்.பி. வலதுசாரிப் பாதையில் சென்றுகொண்டிருந்தது. இடதுசாரிகள் பொது வேலைத்திட்டமோ சரியான இலக்கோ இன்றி சில சுலோகங்களை முன்னெடுத்து வேகமின்றி நகர்ந்து கொண்டிருந்தனர். ஆனால் பண்டாரநாயக்கா இவ்விரண்டு போக்கினையும் தவிர்த்து தனது பாதை எனப் புகழ்பாடி நின்ற நடுவழிப் பாதையில் செல்லத் தயாராகினார் இந்நடுவழிப்பாதை என்ற அரசியல் மார்க்கத்திற்கு ஊள்ளூர் முதலாளித்துவ வளர்ச்சியை நோக்கிநின்ற பகுதியின் ஆதரவினைப் பெற்றுக்கொள்வதையும் அதேவேளை கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்ட பின்தங்கிய கிராமப்புற மக்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்வதையும் பண்டாரநாயக்கா கொள்கையாகக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புற மக்களைக் குறிப்பாக விவசாயிகளை இலங்கையின் பின்தங்கிய சூழலில் அவர்களின் முக்கியத்து வத்தை அடையாளம் கண்டதில் இடதுசாரிகளைவிட பண்டாரநாயக்கா தூரப் பார்வையுடன் நோக்கினார். இன்றுவரை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பலமும் அதுவாகவே இருந்துவருவதனை அவதானிக்கலாம்.

இவை யாவற்றையும் ஒன்றுகூட்டிப் பார்க்கும்போது இலங்கையில் தேசிய முதலாளித்துவத்தின் தோற்றமானது பண்டாரநாயக்காவின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மூலமான வெளிப்பாடாக அமைந்தது. பண்டார நாயக்கா அந்நிய உடையினைக் கைவிட்டு தேசிய உடையினைத் தழுவிக்கொண்டதும் அவரது பேச்சு எழுத்து என்பனவற்றில் தேசிய அபிலாசைகளுக்கு முன்னுரிமை அளித்ததும் மக்கள் மத்தியில் இவரைப்பற்றி ஒரு வித்தியாசமான தோற்றம் தோன்றுவதற்கு இடமளித்தது.

இத்தகைய சூழலிலேயே டி.எஸ். சேனநாயக்கா 1952ல் மரணமடைந்தார். அவரது மறைவைத் தொடர்ந்து மகனான டட்லி சேனநாயக்கா பிரதம மந்திரியாகினார். இதற்கு மக்களிடம் ஆணை கேட்பதற் காக 1952ம் ஆண்டுப் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இப்பொதுத் தேர்தலில் யூ. என். பி. கட்சி சேனநாயக்கா மறைவின் அனுதாப அலையுடன் தனிப்பெரும்பான்மை பெற்று மீண்டும் ஆட்சிக்கு வந்தது. சிறி லங்கா சுதந்திரக் கட்சியானது கம்யூனிஸ்ட் கட்சி பிலிப் தலைமையிலான சமசமாஜக் கட்சிக் கூட்டு முன்னணியுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் ஒன்பது ஆசனங்களையும் சமசமாஜக் கட்சி ஒன்பது இடங்களையும், கம்யூனிஸ்ட்-பிலிப் தலைமையிலான சமசமாஜக் கட்சி கூட்டு நான்கு ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. பண்டாரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்கா எதிர்கட்சித் தலைவராகினார். 1951ம் ஆண்டில் சுதந்திரக் கட்சியை அமைத்துக் கொண்ட பண்டாரா நாயக்கா 1952ல் இடம்பெற்ற தேர்தலின்போது தனது கொள்கைகளை நாட்டு மக்கள் மத்தியில் குறிப்பாகச் சிங்கள மக்களிடையே விரைவான அறிமுகத்திற்கு உள்ளாக்கினார்.

## □ 1953ன் மாபெரும் ஹர்த்தால் போராட்டம்

1952ல் யூ. என். பி. மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியில் அமர்ந்தபோது தந்தையின் இடத்தில் மைந்தனான டட்லி சேனநாயக்கா பிரதமராகிக் கொண்டார். அவரும் தந்தையின் பாதையில் செல்பவராகவே இருந்தார். நாட்டின் பொருளாதாரம் மோசமடைந்து காணப்பட்டது. அதற்கு மாற்று நடவடிக்கையாக ஏகாதிபத்தியவாதிகளையும் அவர்களது உலக வங்கியிடமும் சரணடைவதைத் தவிர வேறு வழி எதனையும் டட்லி சேனநாயக்காவினால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனெனில் அவர்களது கொள்கைகள் அனைத்தும் ஏகாதிபத்தியவாதிகளைச் சார்ந்ததாகவே இருந்து வந்தது. இதனால் உலக வங்கியின் நிபந்தனைகளை ஏற்று மக்கள் மீதான சுமைகளை சுமத்த யூ. என். பி. ஆட்சி தயங்கவில்லை. அவ்வேளை ஜே. ஆர். ஜெயவர்த்தனா நிதி அமைச்சராக இருந்தார். அவர் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தைவிட அமெரிக்க ஏகாதிபததியத்திடம் அளவு கடந்த அன்பும் பயபக்தியும் கொண்டவராக விளங்கினார். எனவே உலக வங்கியின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வதில் அவருக்கு எவ்வித சிரமமும் இருக்கவில்லை.

1953ம் ஆண்டின் நடுக்கூறுக்குப்பின் மக்கள் மீதான கடும் சுமைகளை சுமத்துவதில் இவ் யூ. என். பி. அரசு மும்முரம் காட்டியது. மக்களுக்கு மானியமாக வழங்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுவந்த கூப்பன் அரிசியின் அளவு வெட்டிக் குறைக்கப் பட்டதுடன் இருபத்தைந்து சதமாக விற்கப்பட்ட ஒரு கொத்து அரிசியின் விலை எழுபது சதமாக உயர்த்தப் பட்டது. புகையிரதக் கட்டணம் உயர்த்தப்பட்டதுடன் தபால் கட்டணங்களும் கூட்டப்பட்டன. பாடசாலைப் பிள்ளைகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுவந்த மதிய வேளை பணிஸ் பறிக்கப்பட்டது. இத்தகைய செயல்கள் நேரடியாக உழைக்கும் அனைத்துப் பிரிவு மக்களையும் கடுமையாகப் பாதித்தது.

இதனை எதிர்த்து இடதுசாரிக் கட்சிகள் செயலில் இறங்கத் தீர்மானித்தன. சமசமாஜக் கட்சியும் அதன் தொழிற்சங்கங்களும் இவற்றுக்கு எதிராக செயற்பட முடிவுசெய்த அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் சக்திமிக்க தொழிற்சங்க இயக்கமான இலங்கை தொழிற் சங்க சம்மேளனமும் கூட்டு நடவடிக்கைகளுக்காக சகல யூ. என். பி. விரோத சக்திகளுக்கும் அழைப்புவிடுத்தது. இதனால் சமசமாஜ-கம்யூனிஸ்ட் இடதுசாரித் தலைமை யிலான கூட்டு நடவடிக்கைக் குழு உருவாக்கப்பட்டது. இதனை விரிவாக்கும் நோக்குடன் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழரசுக் கட்சி என்பனவற்றுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை கள் இடம்பெற்றன. இ. தொ. கா. வேலைநிறுத்தம் செய்வதில்லை என்றும், தீர்மானிக்கப்படும் நாளில் தனியே கூட்டம் நடத்தமுடியும் எனத் தெரிவித்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவித்த அதேவேளை தான் நேரடியாகக் கலந்துகொள் வதைத் தவிர்த்துக்கொண்டது. தமிழரசுக் கட்சி முழு மையாகக் கலந்துகொள்வது எனத் தீர்மானித்தது. தமிழரசுக் கட்சியின் வாழ்நாளில் எடுத்த குறிப்பிடத் தக்க ஒரேயொரு முற்போக்கு நடவடிக்கை ஹர்த்தாலில் முழுமையாகப் பங்கேற்று இடதுசாரிகளுடன் ஒத்துழைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமையேயாகும். அதற்கு ஒரு தேவையும் தமிழரசுக் கட்சிக்கு இருந்தது. அதாவது 1948ல் அகில இலங்கை தமிழ் காங்கிரசில் இருந்து தமிழரசுக் கட்சி எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் தோற்றம் பெற்றிருந்தது. அவ் இளம்கட்சிக்கு வளரும் தேவை இருந்த காரணத்தினாலும் தமது முன்னாள் சகாவான ஜி. ஜி. பொன்னம்பலம் யூ. என். பி அரசில் அமைச்சராக இருந்தார் என்பதனைக் கவனத்தில் கொண்டும் யூ என். பி எதிர்ப்பானதும் மக்கள் சார்பானதுமான நடவடிக்கைக்கு இடது சாரிகளுடன் இணைந்து நிற்க தமிழரசுக் கட்சி முன்நின்றது. இதுவே தமிழரசுக் கட்சியின் முதலும் இறுதியுமான யூ. என். பி எதிர்ப்பு நடவடிக்கையாகும்.

இடதுசாரிக் கட்சிகள் மூன்றும் இணைந்து ஓகஸ்ட் மாதம் 12ம் திகதி அன்று ஒருநாள் வேலை நிறுத்தமும் ஹர்த்தாலும் நடத்த அறைகூவல் விடுத்தன. இவ் அறைகூவலை தொழிலாளி வர்க்கமும் அனைத்து உழைக்கும் மக்களும் இனமதமொழி வேறுபாடுகளுக்கு அப்பால் ஏற்றுக்கொண்டனர். அரசாங்கம் முன்கூட்டியே எச்சரிக்கை விடுத்துப் பயமுறுத்தியது. வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டால் வேலை பறிபோகும் என்று கூறியதுடன் ஹர்த்தாலில் பங்குபற்றுவோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவர் எனவும் கூறியது. ஆனால் அரசின் மிரட்டல்களை மக்கள் செவிமடுக்கவில்லை. குறித்த ஓகஸ்ட் 12ம் திகதி அன்று நாடு முழுவதிலும் மக்கள் ஹர்த்தால் போராட்டத்தில் கலந்துகொண்டனர். தலைநகரில் சக்திமிக்க வேலை நிறுத்தம் நடைபெற்றது. எந்தத் தொழிற்சாலையும் இயங்கவில்லை. துறைமுகம் உட்பட சகல போக்குவரத்தும் முடங்கிக்கிடந்தன. மக்கள் வீதிகளுக்கு வந்து அரச எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினர். புகையிரதப் பாதைகள் அகற்றப்பட்டு சேதப்படுத்தப்பட்டன. வீதித் தடைகளாக மரங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வெட்டி வீழ்த்தினர். பொலீஸ் இராணுவ வாகனங்கள் வீதிகளால் செல்லமுடியாத அளவுக்கு மரங்கள் தடைகளாகப் போடப்பட்டன. தந்திக் கம்பங்கள் புரட்டப்பட்டு வீதிக்கு குறுக்கே இடப்பட்டன. மேற்கு, தெற்கு மாகாணங்களில் ஹர்த்தால் வெகுஜன நடவடிக்கைகளின் உச்சமாகக் காணப்பட்டது. தெற்கு நோக்கிச் சென்ற ஒரு புகையிரதத்தை மக்கள் தடுத்து நிறுத்தி அதனைக் கைப்பற்றிக்கொள்ளும் அளவுக்கு நிலைமை சென்றது. தலைநகரில் தொழிலாளி வர்க்கம் தனது புரட்சிகரமான பாத்திரத்தை வகித்தது. இடது சாரிக் கட்சிகளைச் சேர்ந்த இளைஞர்கள் தொழிலாளர்கள், மக்கள் மத்தியில் துடிப்புடன் செயல்பட்டனர். பொலீஸ் வீதிகளில் திரண்டிருந்த மக்களைக் கலைந்து செல்லுமாறும் அல்லது சுடப்போவதாகவும் கூறியது. மக்கள் பொலீஸ் எச்சரிக்கையைத் துச்சமென மதித்து கலைந்துசெல்ல மறுத்தனர். இதனால் பொலீஸ் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. ஒரு செஞ்சட்டை அணிந்த இளைஞன் முடியுமானால் சுடும்படியும், அப்படிச் சுட்டால் அந்த ரவைகளைத் தனது நெஞ்சு ஏற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் பொலிசுக்கு எதிர்ச் சவால் விடுத்து தனது செஞ்சட்டையின் நெஞ்சுப் பகுதியை திறந்து காட்டி நின்றான். அடுத்தகணம் அவ் இளைஞனின் நெஞ்சை ஆளும். அதிகார வெறிபிடித்த யூ. என். பி அரசின் அடக்குமுறை யந்திரமான பொலிசின் துப்பாக்கி ரவைகள் துளைத்துச் சென்றன. எட்வின் என்ற அந்த இளைஞன் வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபின் உயிர்நீத்தான். இவ்வாறு வெவ்வேறு சம்பவங்களில் பன்னிரண்டு பேர் அன்றைய போராட்டத்தில் கொல்லப்பட்டனர்.

மலையகத்தில் இ. தொ. கா. வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளாதபோதிலும் அரைவாசிவரையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டத் தொழிலாளர்கள் பங்குபற்றி ஹர்த்தாலின் வெற்றிக்குப் பங்களிப்பு வழங்கினர். அதேபோல் வட பகுதியில் ஹர்த்தால் இடதுசாரிகள்-தமிழரசுக் கட்சி கூட்டு நடவடிக்கையாக முன்னெடுக்கப்பட்டு பொலிஸ் தடைகளையும் மீறி வெற்றிகரமாக நடாத்தப்பட்டது, ஏனைய மாகாணங்களில் எல்லாம் கிராம நகர வித்தியாசம் இன்றி ஹர்த்தால் போராட்டத்திற்கு மக்கள் ஆதரவளித்து உற்சாகமாகக் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கம் ஹர்த்தால் வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கவில்லை. அரசு தொடர்புச் சாதனங்களின் பிரசாரத்தால் அப்போராட்டம் பிசுபிசுத்துவிடும் என்றே நம்பியது. ஆனால் எதிர்மாறான புரட்சிகர வெகுஜன எழுச்சி வீறிட்டு எழுந்தபோது அரசு செய்வதறியாது திகைத்தது. அன்று பிற்பகலில் ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பித்து கடும் அடக்குமுறையைக் கட்டவிழ்த்தும் விட்டது. இருந்தபோதிலும் தீர்மானிக்கப்பட்ட ஒரு நாள் வேலைநிறுத்தமும் ஹர்த்தாலும் அன்றுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இதில் குறிப்பிடக்கூடிய மற்றொரு அம்சம் யாதெனில் இப்புரட்சிகர வெகுஜன எழுச்சியை மேலும் சில நாட்கள் முன்னெடுத்துச் செல்வதற்கு வெகுஜனங்கள் தயாராக இருந்தபோதிலும் அதற்கு தொடர்ந்து தலைமை கொடுக்க இடதுசாரித் தலைமை தயாராக இருக்கவில்லை என்பதுதான். அவர்களது ஸ்தாபனப் பலவீனம் மட்டுமன்றி அவர்கள் வகுத்து நின்ற கொள்கையின் குறைபாடுகளும் மிக முக்கிய காரணமாகும். அவர்கள் தலைநகரிலும் ஏனைய பிரதான நகரங்களிலும் கவனத்தைச் செலுத்தி நின்றார்களே தவிர பின்தங்கிய கிராமப்புற விவசாயிகளையும் ஏனைய உழைக்கும் மக்களையும் அவர்களது புரட்சிகரத் தன்மைகளையும் கவனித்தில் கொள்ளத் தவறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தொழிலாளர்-விவசாயிகள்-மற்றும் உழைக்கும் மக்களிடையேயான பரந்த ஐக்கியத்தை ஸ்தாபன ரீதியிலும் செயல்வடிவிலும் இணைக்க முடியாதவர்களாகி நின்றனர். மறுபுறத்தில் ஏகாதிபத்திய ஆதரவு பெற்ற யூ. என். பி இம்மாபெரும் போராட்டத்தால் பயப்பீதி கொண்டு ஆட்டம்காண நேரிட்டது. அன்றைய இரவு யூ. என். பி அமைச்சரவை கடலில் தரித்துநின்ற கப்பல் ஒன்றிலேயே தமதுகூட்டத்தை நடாத்தும் அளவுக்கு அரசு அச்சம் அடைந்திருந்தது. இப்போராட்டத்தின்பின் அரசு பல பழிவாங்கல் நடவடிக்கைகளில் இறங்கி இடதுசாரிக் கட்சிகளைச் சேர்ந்த பல முன்னணி ஊழியர்களைக் கைதுசெய்து தடுத்துவைத்தது. தலைவர்கள் கைதுசெய்யப்படுவதில் இருந்து தவறியிருந்தனர். பல நூறு பேர் படுகாயங்கள் பெற்று சிகிச்சை பெற்று வந்தனர். இடதுசாரிக் கட்சிகளின் காரியாலயங்கள், அச்சுச்கூடங்கள் சோதனைக்குள்ளாக்கப்பட்டு மூடப்பட்டன. இருப்பினும் மக்களின் இவ் வெகுஜனப் புரட்சிகர எழுச்சியானது அன்றைய பிரதமரான டட்லி சேனநாயக்காவை பதவி இறங்கச்செய்து தற்காலிகமாக அரசியலில் இருந்து ஒதுங்குமாறு நிர்ப்பந்தித்தது. அந்த இடத்திற்கு அடுத்த பிற்போக்குவாதியும் டி. எஸ். சேனநாயக்காவின் மருமகனுமான சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமராக நியமனம் பெற்றார். அரிசியின் விலை 55 சதமாகக் குறைக்கப்பட்டது. இறுதியில் 25 சதமாக விற்க அரசு முடிவுசெய்தது.

1953ம் ஆண்டு ஹர்த்தால் ஒரு புரட்சியாக மாறியிருக்க முடியும் எனக் கூறுவது அர்த்தமற்ற கூற்றாகும். ஆனால் ஒரு சக்திமிக்க வெகுஜனப் புரட்சி மார்க்கத்தை நோக்கிய பாதையில் தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் ஏனைய உழைக்கும் மக்களுக்கும் குறிப்பான போதனைகளையும் அனுபவங்களையும் பெற்றுக்கொள்வதற்கு அப்போராட்டம் மேலும் சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் திட்டமிட்ட வழிகளில் விரிவடைந்து சென்றிருக்கவேண்டும். அவ்வாறில்லாது அவ் வெகுஜனப் புரட்சிகர எழுச்சி ஒரு நாளுடன் மட்டுப்படுத்தப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதானது பாரிய குறைபாட்டிற்குரிய அம்சமாகும். இதுவே இடதுசாரி இயக்கத்தின் அன்றைய பலவீனமாக அடையாளம் காணக்கூடியதாகும்.

## □ 1956ல் பண்டாரநாயக்காவின் ஆட்சி

1953ம் ஆண்டின் ஹர்த்தால் போராட்டம் நாட்டின் பல்வேறு வர்க்க சக்திகளிடையே பல்வேறு விதத் தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதில் ஐயமில்லை. இடதுசாரி இயக்கத்தின் மத்தியில் இப்போராட்டம் உத்வேகத்தை ஏற்படுத்தியபோதிலும், ஹர்த்தாலின் மூலம் கிடைத்த படிப்பினைகளைக் கொண்டு சரியான மதிப்பீட்டையும் விமர்சனம்—சுயவிமர்சனம் மூலமாகத் தமது பலவீனங்களையும் கண்டுகொள்ளாது விட்டனர். அதேவேளை இப்போராட்டத்தை தத்தமது பாராளுமன்றக் கண்ணோட்டத்திற்குரிய தற்புகழ்ச்சியாக ஒவ்வொரு இடதுசாரிக் கட்சியும் எடுத்துக்கொண்டது.

ஆனால் தேசிய முதலாளித்துவத்திற்கு தலைமை தாங்கி நிற்பதில் தன்னைத் தயார்ப்படுத்தி வந்த பண்டாரநாயக்கா ஹர்த்தால் போராட்டத்தின் பலம் பலவீனம் மட்டுமன்றி மக்களின் அபிலாசைகள் எந்தத் திசை நோக்கி நிற்கின்றன என்பதையும் மிகுந்த புத்திக்கூர்மையுடன் கண்டுகொண்டார். அவர் இடதுசாரிகள் பலமாக இருந்த தலைநகர்ப் பகுதிகளில் அவர்களுடன் மோதலுக்காக நிற்காது கிராமப் புறங்களையும் விவசாயிகளையும் நோக்கி தன் பார்வையைச் செலுத்தினார். அதற்குரிய கொள்கைகளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரநாயக்கா உருவாக்கிக்கொண்டார். இதனால் கிராமப்புறங்களையும் பின்தங்கிய விவசாயப் பிரதேசங்களையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி விரைவாகச் சென்றடையக்கூடிய வாய்ப்புக் கிட்டியது. 1953ம் ஆண்டுக்கும் 1956ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் பண்டாரநாயக்கா தன்னை அரசியல் ரீதியாக நிலைநிறுத்திக் கொள்வதில் முனைந்துநின்றார். அவரது வேலைமுறை சிங்கள மக்களிடையே காணப்பட்ட ஐந்து பிரிவினர்களை இனம்கண்டு அவர்களைக் கொண்ட (பஞ்ச மகா பலவேகய) இணைப்புச் செயல்மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் செயல்பட வைத்தார். தொழிலாளர்கள், விவசாயிகள், ஆசிரியர்—மாணவர், ஆயுள்வேத வைத்தியர்கள், இளம் புத்தபிக்குகள் ஆகிய பிரிவினர்களை ஒன்றிணைத்து அவர்களின் மூலம் பிரசாரங்களை மேற்கொண்டார். அந்நிய ஏகாதிபத்திய சார்பும் விதேசிய மோகமும் கொண்ட உயர்வர்க்கக் கட்சியான யூ. என்.பியின் ஆட்சி அதிகார நிலைப்பாட்டினால் விரக்தியடைந்து காணப்பட்ட மக்களிடையே பண்டாரநாயக்காவின் கருத்துகளும் நடைமுறைகளும் வரவேற்பைப் பெற்றது. மேலும் சிங்கள மொழியினை அரசகருமமொழியாக்குதல், பௌத்தமதத்தை முதன்மைப் படுத்துதல், மற்றும் சிங்கள மக்களின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றுதல், தேசிய கலாசாரத்திற்கு புத்துயிர் ஊட்டுதல் என்பன போன்ற கொள்கைகள் சிங்கள மக்கள் மத்தியில் புத்துணர்வை ஏற்படுத்தின. அந்நியரின் வருகையால் பாதிக்கப்பட்டிருந்த தமது பழமைவாய்ந்த சிங்கள பௌத்த நாகரிகத்தின் மீட்சிக்கு பண்டார நாயக்காதான் தகுந்த ஒரு தலைவர் என்ற ஒரு எண்ணப்பதிவு சிங்கள மக்களிடையே பதிவுபெற்றது. 1956ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் தனியே பண்டாரநாயக்கா முன்வைத்த தனிச்சிங்கள மொழிக் கொள்கை மட்டும்தான் அவருக்கு அமோக வெற்றியைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக்கொடுத்தது என்று கூறுவதில் நியாயம் இருந்த போதிலும் அதுவே முழுமையான காரணமாகாது. ஏனைய விடயங்களும் பிரதான அம்சங்களாக இருந்தன என்பதும் கவனத்திற் கொள்ளப்படவேண்டியதாகும்.

1956ம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், பிலிப் குணவர்த்தனா தலைமையிலான சமசமாஜக் கட்சியும் இணைந்து மக்கள் ஐக்கிய முன்னணி என்ற பெயரில் ஒரு முன்னணியை நிறுவி தேர்தலிலும் யூ.என்.பிக்கு எதிராக நின்றனர். அதேவேளை சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் மேற்கூறிய மக்கள் ஐக்கிய முன்னணியுடன் போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தமும் செய்துகொண்டன. வேறும் சில உதிரிக் கட்சிகளும் மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து நின்றன. இத்தேர்தல் முதல் தடவையாக யூ. என்.பிக்கு பெரும் சவாலாக அமைந்தது. 1947ன் பொது வேலை நிறுத்தம், அதன் பின்னான வேலைநிறுத்தங்கள், 1953ன் ஹர்த்தால் போராட்டம் அதன் பின்னான 1955ன் பஸ் தொழிலாளர் போராட்டம் போன்றவற்றில் யூ.என்.பி. அரசு கடைப்பிடித்த அடக்குமுறைகளுக்கும் மக்கள் விரோதச் செயல்களுக்கும் தகுந்த பதிலடியை இத்தேர் தலில் மக்கள் வழங்கினார்கள். அறுபது தொகுதிகளில் போட்டியிட்ட பண்டாரநாயக்கா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி ஐம்பத்தியொரு தொகுதிகளில் வெற்றிபெற்றது. சமசமாஜக் கட்சி பதினான்கு இடங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி மூன்று இடங்களையும் பெற்றுக்கொண்டது. யூ. என். பி எட்டு ஆசனங்களை மட்டும் பெற்று மிகப்பெரும் தோல்வியடைந்தது. தமிழரசுக் கட்சி பத்து இடங்களில் வெற்றிபெற்றது. யூ.என்.பியின் சகாவாகச் செயல்பட்டுவந்த தமிழ் காங்கிரஸ் படுதோல்வி கண்டது. முதல் தடவையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தேர்தலில் வடபிரதேசத்தில் பருத்தித்துறைத் தொகுதியில் இருந்து கம்யூனிஸ்ட் உறுப்பினராக பொன். கந்தையா தெரிவுசெய்யப்பட்டார். அதற்குப்பின் எந்த ஒரு இடதுசாரி வேட்பாளரும் வடக்கில் இருந்து வெற்றிபெறவில்லை. இத்தேர்தலில் யூ. என். பிக்கு கிடைத்த தோல்வியை இடதுசாரித் தலைவர்கள் சிலர் மிகைப்படுத்தி நோக்கினர். யூ. என். பியின் பிரேதப் பெட்டிக்கு அறையப்பட்ட கடைசி ஆணியே இத்தேர்தல் வெற்றி என்று கொல்வின் ஆர். டி. சில்வா தனது பேச்சின்போது கூறினார். ஆனால் இது ஒரு பாராளுமன்ற வழியிலான வெற்றியே அன்றி வர்க்க அடிப்படையில் கிடைக்கப்பெற்ற வெற்றி அல்ல என்பதை இப்பாராளுமன்றப் பார்வை கொண்ட இடதுசாரிகளினால் கண்டுகொள்ள முடியவில்லை. அதனாலேயே யூ. என். பி மீண்டும் உயிர்பெற்று பலம்மிக்கதாக வந்தபோது இவ் இடதுசாரிகளினால் அதனை எதிர்கொள்ள முடியாது போயிற்று.

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி பண்டாரநாயக்கா 1956ல் பிரதமராகி ஆட்சிப் பீடத்திற்கு வந்தார். இவ் ஆட்சி மாற்றம ஒரு சமாதானமான புரட்சி என்றுகூட சிலரால் வர்ணிக்கப்பட்டது. புரட்சிகர மாற்றம் எதுவும் இடம்பெற வாய்ப்பு இல்லை என்பதை முன்கூட்டியே தெரிந்துகொண்டவர்களுக்கு எவ்வித மயக்கத்தையும் இம்மாற்றம் ஏற்படுத்தவில்லை. ஆனால் இலங்கையின் அரசியல் வரலாற்றில் பண்டாரநாயக்கா சகாப்தம் என்று குறிப்பிடக்கூடிய அளவுக்கு பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலம் அமைந்தது என்பதுடன் அவரது மறைவுக்குப்பின் மனைவி திருமதி பண்டாரநாயக்காவும் அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்றார் என்பதும் மறுக்கப்படமுடியாதவைகள் என்பதை குறிப்பிட்டே ஆகவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. பண்டாரநாயக்கா தான் கொண்டிருந்த கொள்கைகளை நடைமுறைப்படுத்த மூன்று வருடங்கள் மட்டுமே ஆட்சியில் உயிரோடு இருக்க அவரது அரசியல் விரோதிகள் அனுமதித்தனர். அம்மூன்று வருட காலத்திலும் அவரால் பலவற்றைச் சாதிக்கமுடிந்தது. அச்சாதனைகளில் மிகப் பாதகமானதாகக் காணப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் மட்டுமே அவருக்கு அபகீர்த்தியை தேடிக்கொடுத்தது. இதுபற்றி அடுத்த பக்கங்களில் விரிவாக நோக்கமுடியும். தேசிய முதலாளித்துவ வர்க்கத்தையும் தேசிய அபிலாஷைகளையும் பிரதிநிதித்துவம் செய்த பண்டாரநாயக்கா மக்களின் விருப்பு வெறுப்புக்கு செவிசாய்க்கும் ஒரு தலைவராகக் காணப்பட்டார். அதனால் துணிந்த பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். 1947ன் பொது வேலை நிறுத்தத்தின்போதும் 1953ம் ஆண்டு ஹர்த்தால் போராட்டத்தின்போதும் பழிவாங்கப்பட்டு வேலைநீக்கம் செய்யப்பட்ட அனைவருக்கும் திரும்ப வேலை வழங்கப்பட்டது. தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் செய்யும் உரிமைக்கு உத்தரவாதம் வழங்கப்பட்டது. தனியார்துறை தொழிலாளர்கள் அனைவரும் சேமலாபநிதி பெறும் வாய்ப்பைப் பெற்றனர். மேதினம் பொது விடுமுறையாக்கப்பட்டது. முதலாளிமார் சம்மேளனம் தொழிற்சங்கங்களை அங்கீகரிக்க மறுத்துவந்த போக்கு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. நாடு முழுவதிலும் தனியார் முதலாளிகளின் பிடிக்குள் இருந்துவந்த பஸ் போக்குவரத்து தேசிய மயமாக்கம் பெற்றது. கொழும்புத் துறைமுகம் தேசியமயப்படுத்தப்பட்டதுடன் நாடு முழுவதிலும் பலநோக்கு கூட்டுறவு சங்கமுறை கொண்டுவரப்பட்டது. நெற்காணி மசோதா கொண்டுவரப்பட்டு விவசாயிகளுக்கு நன்மைகள் வழங்கப்பட்டன. மேலும் திருகோணமலையில் கடற்படைத் தளத்தையும், கட்டு நாயக்காவில் விமானப் படைத்தளத்தையும் கொண்டிருந்த பிரித்தானிய ஏகாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தியத்தின் படைத்தளங்கள் அகற்றப்பட்டன யூ. என். பியால் விடாப்பிடியாக மறுக்கப்பட்டுவந்த சோஷலிச நாடுகளுடனான ராஜீயத் தொடர்புகள் ஏற் படுத்தப்பட்டன. பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்திலேயே சாதி தீண்டாமைக்கு எதிரான சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பாரம்பரிய ஆயுள்வேத வைத்தியத் துறைக்குப் புத்தூக்கம் வழங்கப்பட்டது. மேற்கூறப்பட்டவற்றை குறுகிய காலத்தில் பண்டாரநாயக்கா முற்போக்கான வழிகளில் செயலாற்றிநின்றமை அவரது சாதகமான அம்சங்களுக்கு வலுவைச் சேர்த்து நின்றன இம்முற்போக்கான சகல விடயங்களையும் இடதுசாரிக் கட்சிகள் ஆதரித்து நின்றன யூ. என். பியும் தமிழரசுக் கட்சியும் மேற்கூறப் பட்டவற்றை கடுமையாக எதிர்த்துநின்றன. அதற்கு அவர்களது வர்க்கநலன் சார்ந்த நிலைப்பாடே காரண மாகும். பண்டாரநாயக்கா மக்கள்முன் வைத்த பல வாக்குறுதிகளை நிறைவேற்ற முன்னின்று உழைத்தார். அதில் ஒன்றாக விளங்கிய தோட்டங்களை தேசியமய மாக்கும் தனது திட்டத்தை பத்து வருடங்களுக்கு ஒத்தி வைப்பதாக அறிவித்துக்கொண்டார். இவ் அறிவிப்பு உடனடியாக ஏகாதிபத்திய நலன்களில் கைவைப்பதைத் தவிர்த்துக் கொள்வதாகவே அமைந்திருந்தது. இருந்த போதிலும் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் உள்நாட்டு பிற்போக்குவாதிகளும் பண்டாரநாயக்காவை தொடர்ந்து உயிருடன் வைத்திருக்க விரும்பவில்லை. 1959ல் அவரது இல்லத்தில் வைத்து ஒரு பௌத்த பிக்கு தனது மஞ்சள் அங்கிக்குள் மறைத்துவைத்திருந்த கைத்துப்பாக்கிமூலம் பண்டாரநாயக்காவைச் சுட்டுக் கொன்றார்.

பண்டாரநாயக்கா ஒரு தேசிய ஜனநாயகவாதியாகத் திகழ்ந்தார். அதேவேளை அவரது தேசியத்தில் இன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதம் கலக்கப்பட்டிருந்தது. இதனால் தேசிய நீரோட்டத்தில் இருந்து தமிழர்களை இன வர்க்க அடிப்படையில் அந்நியப்படுத்திய பிற்கால நடவடிக்கைகள் அனைத்துக்கும் உரிய ஒரு குற்றவாளியாகக் காணப்பட்டார். அதில் பாதி உண்மையும் உண்டு.

பண்டாரநாயக்காவையும் அவரது சகாப்தத்தையும் பற்றிய இடதுசாரிகளின் நோக்கு இருவகையாகக் காணப்பட்டன. சமசமாஜிகள் தமது ட்ரொஸ்கிய நிலைக்கு ஏற்ப ஒருமுனைவாதப் போக்கிலும் சந்தர்ப்பவாதநிலையிலும் பண்டாரநாயக்காவை நோக்கினர்.... அதாவது தேசிய முதலாளித்துவத்தையும் தரகுமுதலாளித்துவத்தையும் வகைப்படுத்திக் கொள்ள மறுத்து இரு பிரிவினரையும் முதலாளித்துவ சக்திகள் என்று ஒரே தட்டில் வைத்தனர். இவர்களில் ஆரம்பகால ட்ரொஸ்கியவாதியான பிலிப் குணவர்த்தனா தனது முந்திய சகாக்களைக் கைவிட்டு பண்டாரநாயக்காவுடன் இணைந்துகொண்டார். அவரும் இறுதியில் பண்டாரநாயக்காவை கைவிட்டுவிட்டு வெளியேறினார். இதே ட்ரொஸ்கியவாதி தனது இறுதிக் காலத்தில் **(1965-70)** யூ. என். பியில் அமைச்சராகி தன் வாழ்நாளை முடித்துக்கொண்டார். அதேபோன்று திரு. பண்டாரநாயக்காவை எதிர்த்து நின்ற கொல்வின், என். எம் போன்ற தலைவர்கள் தமது இறுதிக்காலத்தில் திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் பங்கேற்று அமைச்சர்களானார்கள். இவ்வாறு ட்ரொஸ்சியவாதிகளான சமசமாஜிகளின் நோக்கும் போக்கும் முன்னுக்குப்பின் முரனாக அமைந்திருந்தது வியப்புக்கு உரியதொன்றல்ல.

அதேவேளை கம்யூனிஸ்டுகள் தேசிய முதலாளித்துவத்தை இனம் கண்டு பண்டாரநாயக்காவின் அரசியல் பாத்திரத்தை சரியானபடி மதிப்பிட்டுக்கொண்டனர். ஆனால் பாராளுமன்றப் பாதையில் ஏற்பட்ட தாங்கமுடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத மோகத்தினால் அத்தேசிய முதலாளித்துவத்திற்குப் பின்னால் இழுபட்டுச்சென்று தொழிலாளிவர்க்கக் கட்சி என்ற சுயத்தினை இழக்கும் நிலைக்குச் சீரழிந்தனர். அவர்கள் திரு. பண்டாரநாயக்காவிற்கு எதிர்க்கட்சியாக நின்று ஆதரவு கொடுத்த நிலையில் இருந்து மேலும் முன்னே சென்று திருமதி பண்டாரநாயக்காவின் ஆட்சியில் பங்கேற்று அமைச்சராகிக் கொண்டனர். இதனால் இடதுசாரிகள் எனப்பட்ட இவ் இரு கட்சிகளும் சீரழிந்து செயல் இழக்கும் நிலையைத் தேடிக்கொண்டனர். இது பற்றி மேல்வரும் அத்தியாயங்களில் சற்று விரிவாகக் காணமுடியும்.

திரு. பண்டாரநாயக்கா தேசிய அபிலாசைகள் கொண்ட முற்போக்கு நடவடிக்கைகளை முன்னெடுத்த அதேவேளை அவரது தேசிய முதலாளித்துவ வர்க்க இயல்புகளுக்கு ஏற்ப ஊசலாட்டம் கொண்ட தவறான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். அவரது ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற வேலைநிறுத்தங்களில் (இவற்றில் சில வேலைநிறுத்தங்கள் பண்டாரநாயக்காவிற்கு நெருக்கடியினை ஏற்படுத்துவதற்கென ட்ரொஸ்கியவாதிகளினால் நடத்தப்பட்டன) பொலிஸ் தலையீட்டுக்கும் இடமளிக்கப்பட்டது. பொதுசன பாதுகாப்புச் சட்டத்திற்கு சில திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு பொலிஸ், ஆயுதப் படைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கும் சட்ட விதிகள் நிறைவேற்றப்பட்டன. இதனை சகல தொழிற்சங்கங்களும் இடதுசாரிக் கட்சிகளும் எதிர்த்தன. மேலும் பண்டாரநாயக்கா பெருந்தோட்டத் தொழில்துறையை தேசியமாக்குவதைப் பிற்போட்ட அதேவேளை மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைப் பிரச்சினைகளில் அலட்சிய மனப்பான்மையுடன் நடந்துகொண்டார். இத்தகைய நிலையில் பண்டாரநாயக்காவை முற்று முழுதான முற்போக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியவாதியாகக் காணமுடியாது என்பதை எண்ணத்தில் இருத்திக்கொள்ளல் வேண்டும். ஒருவருடைய சாதனைகளை மறைக்காத அதேவேளை மிகைப்படுத்தாதும் கண்டுகொள்ளவேண்டும். அதேநேரம் அவரது பாதக அம்சங்களையும் விமர்சன கண்டன நோக்கில் கண்டுகொள்ளல்வேண்டும். இதனை மிக நிதானமாகக் கொள்ளாததினாலேயே பண்டாரநாயக்கா பற்றிய மதிப்பீட்டில் சிலர் தவறுகளை இழைத்தனர்.

## □ இடதுசாரிகளும் மொழிக்கொள்கையும்

இலங்கை அரசியலில் ஐம்பதுகளின் நடுக்கூறிலே முன்வைக்கப்பட்ட மொழிக் கொள்கையானது இலங்கைவாழ் இரு இனங்கள் மத்தியில் தீராப் பகைமையை மூட்டி விட்டது. இம்மொழிப்பிரச்சினையை தனியே அரசியல் அதிகாரப் போட்டிக்கு உரியதொன்றாக மட்டும் கண்டு விடமுடியாது. இலங்கையின் பொருளாதார அரசியல் சமூக கலாசாரத் துறைகளில் அந்நியராட்சிகளின் தொடர்ச்சியான பாதக அம்சங்களின் வளர்ச்சிகளோடும் இணைத்தே இதனைக் கண்டுகொள்ளல்வேண்டும். பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் தமது சுரண்டல் பொருளாதாரத் துறையான தோட்டத் தொழில் துறைக்கும் அரசாங்க நிர்வாகத் துறைக்கும் ஆங்கிலக் கல்வி பெற்ற தமிழர்களையே அதிகளவிற்கு நாடிநின்றனர். அவர்களது நாட்டத்திற்கு ஏற்றவாறு இலங்கையில் எப்பாகத்தை விடவும் வடபகுதியிலேயே அதிகளவு ஆங்கிலப் பாடசாலைகளை உருவாக்கி நன்கு நிர்வகித்துவருவதில் அமெரிக்க கிறிஸ்தவ மிசனரிகள் அக்கறை காட்டிவந்தன. இதற்கு உள்நோக்கங்கள் பல இருந்தன. சிறுபான்மை மக்களை திருப்திப்படுத்துவது இலகுவானதாக இருந்தது. அதிக காலத்திற்கு அவர்கள் விசுவாசமுடையவர்களாக விளங்குவார்கள் என்பதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996

யும் அந்நியர் விளங்கிக்கொண்டனர். அதன் மூலமாக நீண்டகால அடிப்படையில் சிறுபான்மை பெரும்பான்மை பிரச்சினையில் சிக்குண்டு எக்காலத்திலும் தங்களை நாடி நிற்கக் கூடியவர்களாக சிறுபான்மையினர் விளங்குவார்கள். இவ்வாறான உள்நோக்கிலேயே அந்நிய ஏகாதிபத்தியவாதிகள் நடந்துகொண்டனர். இவ் அடிப்படையில் அரசாங்க, தனியார் துறைகள் யாவற்றிலும் பெருமளவிற்கு தமிழர்களே உத்தியோக வாய்ப்புப் பெற்றிருந்தனர். சுதந்திரம் என்று கூறப்பட்ட நிகழ்வுக்குப்பின் பொருளாதார அரசயல் சமூக துறைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அதனால் வேலையின்மை பாரிய அளவில் அதிகரித்து வந்தது. ஏற்கனவே இலவசக் கல்வி வழங்கப்பட்ட சூழலில் அரசாங்க உத்தியோகங்களுக்கு ஆவலுற்ற சிங்கள மக்களின் எண்ணிக்கை பெருகிவந்தது. வேலை இன்மை என்பது அடிப்படையில் பொருளாதாரக் கட்டமைப்புடன் சம்பந்தமுடையது என்பதனைக் கண்டுகொள்ளாது மொழியுடன் சம்பந்தமுடையதொன்றாகக் காட்டப்பட்டது. இதிலிருந்தே ஆங்கிலத்தின் இடத்திற்குப் பதிலாக சிங்களம் இருப்பதன் தேவை வலியுறுத்தப்பட்டது. நாற்பதுகளின் ஆரம்பத்தில் ஆங்கிலத்திற்குப் பதிலாக சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக இருப்பதன் அவசியத்தை வற்புறுத்திய சிங்களத் தலைவர்கள் ஐம்பதுகளின் நடுக்கூறிலே தனிச்சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாக வேண்டும் என வற்புறுத்தினர். இதனை முதலில் யூ. என். பி கட்சி தனது களனி மாநாட்டில் ஒரு பிரேரணையாக முன்வைத்தது. இதனை பண்டாரநாயக்கா மிகலாவகமாகத் தனது அரசியல் அதிகாரப் போட்டிக்காக நன்கு பயன்படுத்தினார். தான் பதவிக்கு வந்தால் இருபத்திநான்கு மணித்தியாலங்களில் சிங்களத்தை அரசாங்க மொழியாக்குவேன் என வேகமான வாக்குறுதியினை வழங்கினார். இம்மயக்க மருந்து ஓரளவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள மக்களிடையே தனது வேலையைச் செய்யத்தான் செய்தது.

திரு. பண்டாரநாயக்காவும், யூ. என். பியும் இம் மொழிக் கொள்கை பற்றி வாக்குறுதிகளைக் கொடுத்துக் கொண்டிருந்த நேரத்தில் சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களமும் தமிழும் சமஅந்தஸ்துடன் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டும் என வற்புறுத்தி நின்றன. அதற்கான பிரசாரங்களிலும் ஈடுபட்டன. இதனால் அக்கட்சிகள் குறிப்பிடத்தக்க இழப்புக்களையும் அரசியல் ரீதியில் சந்திக்க நேர்ந்தது. மொழிக்கொள்கை பற்றி சமசமாஜக் கட்சி 1955 ஒக்டோபரில் கொழும்பு நகர மண்டபத்தில் ஒரு கூட்டத்தை நடத்தியது. அக் கூட்டத்தில் சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக இருப்பதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இக்கூட்டத்தை காடையர் தாக்கினார்கள். இதனை யூ. என். பி ஆட்சியின் பொலீஸ் அனுமதித்தது. இக்கூட்டத்தில் வீசப்பட்ட கைக்குண்டினால் ரெஜிமெண்டிஸ் என்பவர் தனது இடது கையை இழக்கநேரிட்டதுடன் பலர் காயமடைந்தனர். 1957ல் தனிச்சிங்களம் மட்டும் மசோதாவைப் பாராளுமன்றத்தில் எதிர்ப்பதில் இடதுசாரிக் கட்சிகள் எவ்வித விட்டுக் கொடுப்பையும் செய்யவில்லை. அவர்கள் வர்க்க கண்ணோட்டத்தின் அடிப்படையில் தேசிய நன்மை கருதி பெறுமதிமிக்க உரைகளை நிகழ்த்தினார்கள். அதன் எதிர்காலத் தாக்கம்பற்றி முன்னெச்சரிக்கை செய்தனர். கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பீட்டர் கெனமன், எஸ். ஏ. விக்கிரமசிங்கா, பொன். கந்தையா ஆகியோர் தர்க்க நியாயங்களுடன் அம்மசோதாவை எதிர்த்துநின்றனர். என். எம். பெரேரா, கொல்வின் ஆர்.டி சில்லா ஆகிய சமசமாஜத் தலைவர்கள் இம்மசோதாவை எதிர்த்து ஆக்கிரோசத்துடன் உரைகள் ஆற்றினர். கொல்வின் ஆர்.டி சில்வா தனது உரையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்டத்தில் ''ஒரு மொழி இருநாடுகள், அல்லது இரண்டு மொழிகள் ஒரு நாடு'' இதில் எதனை தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள் எனக்கேட்டு எதிர்காலத்தில் விளையப்போகும் பாரிய அபாயத்தைச் சுட்டிக்காட்டினார். ஆனால் வேடிக்கை யாதெனில் இவ்வாறு மொழிக் கொள்கையில் சமஅந்தஸ்து கோரிநின்ற அதே தலைவர்கள் அறுபதுகளின் நடுக்கூறிலே சந்தர்ப்பவாதிகளாகி முன்னைய கொள்ளைகளைக் கைகழுவிவிட்டு இனவாதம் பேசும் நிலைக்கு சீரழிந்துகொண்டனர்.

பண்டார நாயக்கா தனிச்சிங்கள மொழி மசோதாவைக் கொண்டு வந்து தனது இனவாத நிலையினை வெளிப்படுத்தியபோதிலும் அதன் மூலம் எழுந்த இனப் பிரச்சினையை ஓரளவுக்கு நியாயமான முறையில் தீர்த்துக் கொள்ள மனப்பூர்வமாக முற்பட்ட ஒரு சிங்களத் தலைவராகவும் விளங்கினார் என்ற உண்மையை மறுக்க முடியாது. அவர் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் ஓர் ஒப்பந்தத்திற்கும் வந்திருந்தார். அதுவே வரலாற்று முக்கியத்துவம்மிக்க 'பண்டா—செல்வா ஒப்பந்தம்' என அழைக்கப்படுவதாகும். ஆனால் இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வராமலே கிழித்தெறியப்படநேர்ந்தது. சிங்களவர் மத்தியில் யூ. என். பி. இவ் ஒப்பந்தத்தை எதிர்த்தது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் யூ. என். பியினர் அவப்பெயர்பெற்ற கண்டி யாத்திரையை மேற்கொண்டனர். நாட்டின் ஒருபகுதியை பண்டாரநாயக்கா பிரித்து தமிழர்களுக்கு கொடுத்து விட்டார் என்ற பதாகைகள், படங்களுடன் இவ் ஊர்வலம் கொழும்பு—கண்டி வீதியில் நடத்தப்பட்டது. இதனைக் கேள்வியுற்ற அன்றைய கம்பஹாவின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவரும் முற்போக்குவாதியுமான திரு. எஸ்.டி. பண்டாரநாயக்கா அவரது ஆதரவாளர்களும் இம்புல்கொட என்ற இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து ஜே. ஆர். தலைமையில் வந்த ஊர்வலத்தைத் தடுத்தி நிறுத்தி கலைந்துபோகச் செய்தனர். எஸ். டி. பண்டாரநாயக்கா வீதியில் குறுக்கே வீழ்ந்து கிடந்ததும் அவரது ஆதரவாளர்களும் அவ்வாறுசெய்தது மட்டுமன்றி இதனைக் கேள்வியுற்ற சிங்கள மக்கள் அவ்விடத்திற்கு திரண்டுவந்து ஊர்வலத்தின்மீது கற்களை வீசி கலைந்து திரும்பிச்செல்லுமாறு நிர்ப்பந்தித்தனர். இதனாலேயே எஸ்.டியை 'இம்புல்கொட வீரன்' என பண்டாரநாயக்கா பாராட்டினார். அதேவேளை தமிழ் மக்கள் மத்தியில் ஜி. ஜி. பொன்னம்பலம் பண்டா—செல்வா ஒப்பந்தத்தை நையாண்டிசெய்து எதிர்ப் பிரசாரம் செய்தார். பண்டாரநாயக்கா இப்பிரச்சினையில் தனிமையாக விடப் பட்ட சூழலில் அவரது கரங்களைப் பலப்படுத்தவேண்டிய தமிழரசுக் கட்சி வடக்கே அமிர்தலிங்கத்தின் தலைமையில் சிறி எதிர்ப்புப் போராட்டத்தைத் தொடக்கிவைத்தது. இதனைப் பிற்காலத்தில் தனது தவறு என அமிர்தலிங்கம் ஒப்புக் கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். வடக்கில் சிறி எதிர்ப்பு ஆரம்பிக்க தெற்கிலே தீவிர இன வாதியான கே. எம். பி. இராஜரட்னா தமிழ் எழுத்துக் களுக்கு தார்பூசும் தார்ச்சட்டி இயக்கத்தை நடத்தினார். இவற்றின் விளைவே 1958ம் ஆண்டு சிங்கள – தமிழ் இன வன்செயலாகும். இதுவே தமிழ் சிங்கள மக்களுக்கிடை யிலான முதலாவது பெரும் இனக்கலவரமாகும். இக் கலவரத்தால் தமிழர்கள் பல பக்கப் பாதிப்புக்களை அடைந்ததுடன் தேசிய அரசியல் நீரோட்டத்தில் அதிருப்திகொள்ளும் போக்கிற்கு உள்ளாக வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகினர். இக்கலவரத்தில் இடது சாரிக் கட்சிகள் தமிழர்களை பாதுகாப்பதிலும் தமது செல்வாக்குக்கு உட்பட்ட இடங்களில் கலவரம் பரவாமல் தடுப்பதிலும் தமது பங்களிப்பினை வழங்கி நின்றனர்.

இலங்கையில் பெரும் பிரச்சனையாக அன்று இரண்டு ஆளும் வர்க்க கட்சிகளினாலும் தூக்கி நிறுத்தப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிப் பிரசசனை என்பது அடிப்படையில் சிங்கள மக்களின் ஜீவாதாரப் பிரச்சனையாக முன்வைக்கப்படவில்லை. அதேபோன்று தமிழ் மக்கள் அனைவரினதும் அடிப்படைப் பிரச்சனை என்ற நிலையில் தமிழரசுக் கட்சி மொழிப் பிரச்சனையை எதிர்த்து நிற்கவும் இல்லை' ஏனெனில் தமிழ்மொழிமீது இருந்த பற்றுப்பாசத்தை விட ஆங்கிலத்தின்மீது அவர்கள் காட்டிய அக்கறை அதிகமானதாகும். தத்தமது ஆளும் அரசியல் தேவை கருதியும் பாராளுமன்ற ஆசனங்களில் உள்ள கருசனையாலுமே மொழிப் பிரச்சனை பூதாகரமாக்கப்பட்டது. இவ்வாறு கூறுவதற்குப் போதிய நியாயம் இருக்கின்றது. ஏறத்தாழ முப்பத்தைந்து வருடங்களுக்குப்பின் இதே பாராளுமன்றத்தில் தனி சிங்களமொழிப் பிரச்சனையை முதலில் கிளப்பிய யூ.என்.பி கட்சி தமிழுக்கும் அரசாங்க மொழி அந்தஸ்து கொடுத்து சமஅந்தஸ்தை சட்டரீதியாக நிறைவேற்றியபோது சிறிலங்கா சுதந்திரக்கட்சி எவ்வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை. அதேபோன்று தனிச்சிங்களமொழிச் சட்டத்தை அமுல்படுத்திநின்ற 1965 - 70 காலகட்ட யூ.என்.பி ஆட்சியில் பூரணமாகப் பங்குகொண்டுநின்ற தமிழரசுக் கட்சி அச்சட்டத்தை ஏற்றுக்கொண்டே செயல்பட்டது. அப்படியானால் மொழிப்பிரச்சனையை பூதாகரமாக்கிய இவ் இரு பகுதியினரின் நிலைப்பாட்டினை எவ்வாறு அர்த்தம் கொள்வது? இங்கேதான் இன மொழி உணர்வுகளையும் உறவுகளையும் விட வர்க்க உணர்வும் உறவும் பிரதான இடத்தை வகிக்கின்றது என்ற அடிப்படை உண்மை துலக்கம் பெறுவதைக் காணமுடியும்.

இவ்விடத்திலே ஓர் உண்மையைக் கண்டுகொள்வது அவசியமாகும். அதாவது எட்டு லட்சம் இந்திய வம்சாவழித் தமிழ்த் தொழிலாளர்களின் பிரசாரவுரிமையும் வாக்குரிமையும் யூ.என். பியால் பறிக்கப்பட்டதானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண சிங்கள மக்களின் அடிப்படை நன்மை கருதி அல்ல என்பதும், பின்பு பண்டாரநாயக்கா தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்ததன்மூலம் சிங்கள மக்கள் மத்தியில் நிலவிய வேலையின்மையைப் போக்கவில்லை என்பதும் அதேபோல் சிங்கள சிறி பொறிக்கப்பட வேண்டும் எனமுடிவு செய்யப்பட்டதானது எவ்வகையிலும் ஏகப் பெரும்பான்மையான சாதாரண சிங்களவர்களின் அடிப்படை நலன்கள் சார்ந்தவை அல்ல என்பதும் வரலாற்றால் நிரூபிக்கப்பட்டது. பிரசாரவுரிமை வாக்குரிமை பறிக்கப்பட்டு நாற்பது வருடங்களுக்குப் பின்பு மீண்டும் அவை வழங்கப்படுவதற்கு சட்டம் இயற்றப்பட்டது தனிச்சிங்களச் சட்டமும் சிறிபொறிப்பு சட்டமும் கொண்டுவரப்பட்டு முப்பத்தி இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு தமிழ்மொழி அரசாங்க மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு சிறி என்பதும் அகற்றப்பட்டுள்ளது. இத்தகைய முடிவுகளைச் சிங்கள மக்கள் எவ்வித எதிர்ப்போ கண்டனமோ இன்றி ஏற்றுக்கொண்டனர் என்றால் அவை கடந்தகாலத்தில் அவர்களது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு பரிகாரமாக அமையவில்லை என்பதையே பிரதிபலித்துக் காட்டுவதாகும். எனவே 'சிங்கள மக்கள் சார்பாக' அல்லது 'தமிழ் மக்களின் நலன்கருதி' என்ற கோஷங்களின்கீழ் உயர்வர்க்க சக்திகள் தமது அடிப்படைத் தேவைகளையும் நலன்களையும் பாதுகாத்துக்கொள்ளும் ஆட்சி அதிகாரத் தேவையையே நிறைவேற்றிவந்தனர் என்பதே மறைக்கப்பட்ட உண்மைகளாகும். இவ்வுண்மைகள் சகல மக்களாலும் உணரப்படும் வேளையிலே சகல பிரச்சனைகளுக்குமான இறுதித் தீர்வினைக் காணும் பாதையில் வழிநடக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

# 1960களில் இடம்பெற்ற மாற்றங்கள்

1959ம் ஆண்டின் பிற்கூறிலே திரு. பண்டாரநாயக்கா கொல்லப்பட்டபின் கல்வி அமைச்சராகவிருந்த டபிள்யூ. தகநாயக்கா பிரதமர் பதவிக்கு நியமனம் பெற்றார். ஆனால் அவருக்கு ஆட்சியை நடாத்திச்செல்லும் ஆற்றல் இருக்கவில்லை. எனவே 1960ம் ஆண்டு மார்ச்மாதத்தில் பொதுத் தேர்தல் இடம்பெற்றது. இத்தேர்தலில் இடதுசாரிக் கட்சிகளும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தனித்தனியாகத் தேர்தலில் போட்டியிட்டனர். இத்தேர்தலில் சமசமாஜக் கட்சி அதீதநம்பிக்கையுடன் நூறு தொகுதிகளில் போட்டியிட்டு அடுத்த பிரதமர் என்.எம். பெரேரா என்று கூறி சமசமாஜ அரசாங்கத்தின் நிழல் அமைச்சரவையும் பட்டியலிட்டுக் காட்டியது. 'முதலாளித்துவ எதிர்ப்பு' வேலைத்திட்டம் ஒன்றையும் வெளியிட்டது. கம்யூனிஸ்ட் கட்சி அவ்வாறு இல்லாது சகல இடதுசாரிகளும் இணைந்து யூ.என்.பி. எதிர்ப்பும் ஏகாதிபத்திய விரோதமும் கொண்ட ஓர் ஜனநாயக வேலைத்திட்டத்திற்கான கோரிக்கையை வைத்தது. அதனைட்ரொஸ்கியவாதிகளான சமசமாஜக் கட்சியும், பிலிப் குணவர்த்தனா தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணியும் (பண்டாரநாயக்காவின் மறைவோடு மக்கள் ஐக்கிய முன்னணி என்னும் பெயரை பிலிப் குணவர்த்தனா தனது தனிக்கட்சிக்குப் பெயராக்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டார்.) ஏற்றுக்கொள்ளவில்லை. சுதந்திரக் கட்சிக்குள் வலதுசாரி அலை மேவிநின்றதால் அக்கட்சியும் தனியாகவே போட்டியிட்டது. இதன் விளைவாக யூ. என். பி. ஐம்பது இடங்களில் வெற்றிபெற சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாற்பத்தியாறு தொகுதிகளில் வெற்றி பெற்றது. சமசமாஜக் கட்சியின் கனவு நொறுங்கி பத்து இடங்களில்மட்டும் வெற்றிபெற்றது. அதேபோன்று மக்கள் ஐக்கிய முன்னணியும் பத்து இடங்களில் வெற்றிபெற கம்யூனிஸ்ட் கட்சி மூன்று ஆசனங்களை வென்றது. யூ. என். பி கட்சி ஆட்சியை அமைக்க தேசாதிபதியால் அழைக்கப்பட்டு டட்லி சேனநாயக்கா தலைமையில் அரசாங்கம் உருவாகியது. ஆனால் சில நாட்களின்பின் இடம்பெற்ற சிம்மாசனப் பிரசங்கத்திற்கான வாக்கெடுப்பில் அவ் அரசாங்கம் தோல்வி அடைந்தது. எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் வழங்கப் படாமலேயே பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலுக்கு தேசாதிபதி உத்தரவு பிறப்பித்தார். அன்றைய தேசாதிபதியாக இருந்தவர் ஏகாதிபத்திய விசுவாசியும், டி. எஸ். சேனநாயக்காவின் சக பிற்போக்கு வாதியுமாக விளங்கிய சேர் ஒலிவர் குணத்திலக்கா ஆவார்

## □ திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் அரசியல் பிரவேசம்

1960ம்ஆண்டு யூலையில் அடுத்த பொதுத் தேர்தலுக்கு திகதி இடப்பட்டது. இக்கட்டத்தில் அதுவரை அரசியலில் பங்கேற்காது இருந்துவந்த திருமதி சிறிமா பண்டாரநாயக்கா சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குத் தலைமை தாங்கி தனது காலம்சென்ற கணவர் பண்டார நாயக்காவின் பாதையில் வழிநடக்க முன்வந்தார். மூன்று மாதங்களுக்கு முன்பு இடம்பெற்ற தேர்தலின் அனு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவத்தை ஒரு பாடமாகக் கொண்டதனால் யூ. என். பி. விரோதக் கட்சிகள் ஒன்றிணைந்து தமக்கிடையே போட்டித் தவிர்ப்பு ஒப்பந்தத்தைச் செய்துகொண்டன. இத்தகைய ஒப்பந்தத்திற்கு கம்யூனிஸ்ட் கட்சியே அதிக வற்புறுத்தலை முன்வைத்தது. இத்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி எழுபத்தைந்து ஆசனங்களை வென்று தனிப்பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டது. யூ.என்.பி முப்பது தொகுதிகளில் மட்டும் வெற்றியீட்டியது. சமசமாஜக் கட்சி பன்னிரண்டு ஆசனங்களையும் மக்கள் ஐக்கிய முன்னணி ஐந்து இடங்களையும், கம்யூனிஸ்ட் கட்சி மூன்று தொகுதிகளையும் பெற்றுக் கொண்டன. திருமதி பண்டாரநாயக்கா அத்தேர்தலில் போட்டியிடவில்லையாதலால் செனட் உறுப்புரிமை பெற்று அதன் வழியாகப் பாராளுமன்றம் சென்று உலகின் முதலாவது பெண் பிரதமராகிக் கொண்டார் தாங்கள் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதன் மூலம் சுதந்திரக் கட்சியுடன் பேரம் பேச முடியும் என உள்ளூர நம்பிக்கை கொண்டிருந்த சமசமாஜிகளுக்கு மீண்டும் அதிர்ச்சியே கிடைத்தது. இருப்பினும் இடதுசாரிகள் திருமதி பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தை எதிர்ப்பதைத் தவிர்த்து முற்போக்கான நடவடிக்கைகளை ஆதரித்து நிற்கும் நிலையை மேற்கொண்டனர், அவர்கள் மத்தியில் பல்வேறு அபிப்பிராயங்கள் நிலவியபோதிலும் மீண்டும் யூ என், பியை பதவிக்கு வர அனுமதிக்கும் சந்தர்ப்பத்தை கொடுப்பதில்லை என்ற நிலையில் நின்றனர்.

அரசியல் அனுபவமுதிர்ச்சி இன்றிப் பிரதமராகி நின்ற திருமதி பண்டாரநாயக்கா பல்வேறு முனைகளில் இருந்துவந்த பிரச்சனைகளையும் சவால்களையும் சந்திக்க வேண்டியிருந்தது. 1961ம் ஆண்டில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சி மொழிப் பிரச்சனையை மையமாக வைத்து பல வாரங்கள் நீடித்த சத்தியாக்கிரகத்தை நடாத்திவந்தது. இச்சத்தியாக்கிரகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசுக் கட்சி எதிர்பார்த்ததைவிட மக்கள் ஆதரவு பெற்ற அகிம்சை இயக்கமாக வளர்ச்சிபெற்று வந்தது. இதனை ஆரம்பத்தில் இருந்தே மென்மையான போக்குடன் அணுகிவந்த அரசு பேச்சுவார்த்தைகளை நடத்தி சமாதான தீர்வுகாண முற்பட்ட சூழலில் தமிழரசுக் கட்சி தனித்தபால் முத்திரை வெளியிடும் நிகழ்வினை நடாத்தியது. அரசாங்கம் எதிர் நடவடிக்கையாக அவசர காலச் சட்டத்தைப் பிறப்பித்து சத்தியாக்கிரகத்தை முறியடிக்கும் முடிவுக்கு வந்தது. இராணுவம், கடற்படை ஆகியன செயலில் இறங்கி சத்தியாகக்கிரகிகள் மீது பலாத்காரத்தைப் பிரயோகித்தது. தடியடிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டு துப்பாக்கிகளால் மக்கள் அடித்து விரட்டப்பட்டனர். பலர் படுகாயங்கள்பட நேர்ந்தது. தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டு கொழும்பில் தடுத்து வைப்பதற்காக அழைத்துச்செல்லப் பட்டனர். இச்சத்தியாக்கிரகம் பற்றி இடதுசாரிகள் மிக அனுதாபத்துடன் அறிக்கைகளையும் பாராளுமன்றப் பேச்சுக்களையும் நிகழ்த்தினர். அதேநேரத்தில் தமிழரசுக் கட்சியின்பிற்போக்கு நிலைப் பாட்டினையும் இணக்கப் பாட்டிற்கு வரமுடியாத அதன் உள்நோக்கங்கள் கொண்ட உயர்வர்க்கப் போக்கினையும் இடதுசாரிகள் கண்டிக்கவும் தவறவில்லை.

இச்சத்தியாக்கிரக காலத்திலேயே அரசாங்கத்திற்கும் தமிழரசுக் கட்சிக்குமிடையில் பேச்சுவார்த்தை இடம் பெற்றது. அன்றைய நீதி அமைச்சராக இருந்த சாம் பி. சி. பெர்னான்டோ தலைமையில் அரசாங்க தரப்பிலும் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சியினரும் இப்பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர். இறுதியில் சாம். பி. சி. பெர்னாண்டோ— செல்வநாயகம் ஒப்பந்தம் உருவாகியது, ஆனால் அவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வரவில்லை. அதன் தோல்விக்கு அரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடும் ஒரு காரணமாகியது. அடிப்படையில் தமிழரசுக் கட்சி யூ.என்.பி.யுடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்த அளவுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணங்கிப்போகத் தயாராக இருக்கவில்லை. அது மட்டுமன்றி அதன் வலதுசாரி பிற்போக்கு நிலைப்பாடு எப்பொழுதும் இடது சாரிகளை விரோதிகளாகவே கருதிப் பிரசாரம் செய்து வந்ததாகும். தமிழரசுக் கட்சியின் அன்றைய நோக்கும் போக்கும் தமிழர்களது பிரச்சினைகளை வென்றெடுப் பதிலும் பார்க்க அன்றைய திருமதி பண்டாரநாயக் காவின் ஆட்சியை வீழ்த்தும் யூ.என்.பி. யினரின்—அந்நிய ஏகாதிபத்திய சக்திகளின் எண்ணங்களுடன் மிக இணக்கமுடையதாகவே காணப்பட்டது.

இதனைத் தொடர்ந்து திருமதி பண்டாரநாயக்கா அரசாங்கம் 1962ல் ஓர் இராணுவச் சதியை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இச்சதி நிறைவேற்றப்படுவதற்கு முன்பாகவே முறியடிக்கப்பட்டது. இச்சதியின் பின்னணி யில் யூ. என். பி. பிற்போக்குவாதிகளும் அந்திய ஏகாதி பத்திய சக்திகளும் சம்பந்தப்பட்டிருந்தன என்பது பிற் காலத்தில் திரைமறைவு உண்மைகளாக வெளிப்பட்டது. மேலும் பொருளாதார நெருக்கடிகள் வலுவடைந்து வந்தன. நிதி அமைச்சரான பீலிக்ஸ் டயஸ் பண்டார நாயக்கா மக்கள் மீதான பொருளாதாரச் சுமைகளை சுமத்தும் நிலைகளை எடுத்தார். உலக வங்கியிடம் கடன் பெறச் சென்று அவர்களது நிபந்தனைகளுக்கு மறுப்பு தெரிவிக்கமுடியாது திண்டாடவேண்டியும் ஏற்பட்டது.

## □ 21 கோரிக்கையும் தொழிற்சங்க இயக்கமும்

திரு. பண்டாரநாயக்காவும் அதன்பின் திருமதி பண்டாரநாயக்காவும் தமது ஆட்சியின்போது எல்லைக் குட்பட்ட முற்போக்கு நடவடிக்கைகளையும், தொழி லாளர், விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகை வழங்கக்கூடிய நடைமுறைகளையும் செயல் படுத்தியபோதிலும் பொருளாதார, அரசியல், சமூக, கலாசாரக் கட்டமைப்பில் அடிப்படை மாற்றம் எதனையும் கொண்டுவர முடியவில்லை. இது அவர்களது தேசிய முதலாளித்துவ வர்க்க இயல்பை நன்கு வெளிப் படுத்தியது. இதனால் பொருளாதாரப் பிரச்சினைகளும் நெருக்கடிகளும் வளர்வதாயிற்று விலைவாசி உயர்வும் ஏனைய நெருக்கடிகளும் மக்களை தாக்கிநின்றன. இதனால் தொழிலாளி வர்க்கமும் தொழிற் சங்கங்களும் தமது கோரிக்கைகளை முன்வைக்க நிர்ப்பந்திக்கப்பட்ட னர். 1961ல் இலங்கை போக்குவரத்து (இ. போ ச) தொழிலாளர்கள் நாடு தழுவிய ஒரு வேலை நிறுத்தத்தின் மூலம் தமக்கு எதிரான ஒரு சுற்றறிக்கையை வாபஸ் பெறச் செய்து வெற்றிபெற்றனர். அதேபோன்று துறை முகத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் வெற்றி ஈட்டினர். இவற்றினால் தொழிலாளி வர்க்கத்தின் மத்தி யில் தமது பலம், ஒற்றுமை, போராட்டம் என்பனவற்றில் நம்பிக்கையும் உற்சாகமும் காணப்பட்டன.

1963ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் கம்யூனிஸ்ட் கட்சி யின் இ. தொ. ச சம்மேளனம் சகல தொழிற் சங்கங்களை யும் அழைத்து பொதுக் கோரிக்கை முன்வைப்பது பற்றி ஆலோசனை நடத்தியது. இதன்பின் சகல தொழிற் சங்கங்களின் மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த பிரின்ஸ் ராஜசூரியாவும், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நா. சண்முகதாசனும் இணைச் செயலாளர்களாகக் கொண்ட தொழிற்சங்கக் கூட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டது இக்குழுவில் இடது சாரித் தொழிற் சங்கங்களுடன் தொண்டமான் தலைமை யிலான இ. தொ. கா. அசீஸ் தலைமையிலான ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன கலந்து கொண்டன. மற்றும் அரசாங்க, தனியார்துறை ஊழியர்கள், எழுது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானிகள், ஆசிரியர்கள், தொழில்நுட்பவியலாளர், தனியார்துறை உத்தியோகத்தர்கள் போன்ற பலதரப்பினரும் இணைந்திருந்தனர். இவர்கள் அனைவரினதும் சார்பாக உருவாக்கப்பட்டதே புகழ்பெற்ற 21 கோரிக்கைகளாகும். இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் இவ் இருபத்தியொரு கோரிக்கைக்கான தொழிற்சங்க ஐக்கியம் என்பது தடித்த எழுத்துக்களால் குறிப்பிடக்கூடிய வரலாற்று நிகழ்ச்சியாகும். சம்பள உயர்வு, விடுமுறை நாட்கள், ஆண் பெண் சமவேலைக்குச் சமசம்பளம், வேலையற்றோருக்கு வேலை அல்லது காப்புறுதி, தனியார் துறையினருக்கு சலுகைகள், பொதுச் சேவை ஊழியர்களுக்கு அரசியல் உரிமை போன்ற கோரிக்கைகளை இருபத்தியொரு கோரிக்கைகள் உள்ளடக்கி இருந்தன. இவை அனைத்தும் பொருளாதாரக் கோரிக்கைகளாகவே காணப்பட்டன, இவ் இருபத்தியொரு கோரிக்கையின் உருவாக்கம், தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் கரைகடந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது. 1963ம் ஆண்டில் இடம்பெற்ற கூட்டு மேதினம் காலிமுகத் திடலை சனசமுத்திரமாக்கி நின்றது. அதுபோன்ற ஐக்கியப்பட்டதும் தொழிலாளி வர்க்க உணர்வு நிரம்பியதும் பல லட்சம் மக்கள் கலந்துகொண்டதுமான இடதுசாரி மேதினம் இன்றுவரை நாடு காணமுடியாத ஒன்றாகத் திகழ்ந்தது.

அன்றைய மேதின ஊர்வலம் கூட்டம் வழங்கிய நம்பிக்கையின் அடிப்படையில் 1963 ஒகஸ்ட் 12ம் திகதி மாபெரும் ஹர்த்தால் தினத்தின் பத்தாவது ஆண்டு நினைவுநாளில் சுதந்திர சதுக்கத்தில் மூன்று இடதுசாரிக் கட்சிகளும் இணைந்து இடதுசாரி ஐக்கிய முன்னணியைத் தோற்றுவிக்கும் நிகழ்வினை நடாத்தி அதனைப் பிரகடனப்படுத்திக்கொண்டனர். லங்கா சமசமாஜக் கட்சி, பிலிப் குணவர்த்தனா தலைமையிலான மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய முன்னணி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியனவே இவ் ஐக்கிய முன்னணியில் இணைந்த கட்சிகளாகும். ஒரு பொது வேலைத்திட்டமும் அதனை முன்னெடுக்க கடைப் பிடிக்கவேண்டிய தெளிவான மார்க்கம் பற்றியும் திட்ட வட்டமான கொள்கை ஒன்று வகுக்கப்படாமலே இவ் இடதுசாரி ஐக்கிய முன்னணி மேல்போக்கானதொன்றாக உருவாக்கப்பட்டது. அதனால் அம்முன்னணி பாராளு மன்ற சந்தர்ப்பவாதம் என்ற அலையால் மிக இலகுவாக வும் விரைவாகவும் அடித்துச்செல்லும் அபாயத்திற்கு உள்ளாகியது.

## □ இடதுசாரிகளின் சந்தர்ப்பவாத சீரழிவு

இடதுசாரி ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்ட பின்பும் இருபத்தியொரு கோரிக்கைகளுக்கான தொழிற் சங்க ஐக்கியம் முன்னெடுக்கப்படவேண்டுமென வற்புறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் 1964ம் ஆண்டு மார்ச் மாதத்தில் மிகப் பெரும் கூட்டம் இருபத்தியொரு கோரிக்கைக்கு ஆதரவாக இடம் பெற்றது. என். எம். பெரேரா தலைமை யில் நடைபெற்ற இக்கூட்டம் மீண்டுமொருமுறை தொழிலாளி வர்க்கத்தின் பலத்தையும் ஐக்கியத்தையும் நிலைநாட்டியது. அதேவேளை இதனைக் கண்டு திருமதி பண்டாரநாயக்கா அச்சம்கொள்ள வேண்டியும் ஏற்பட்டது. தமிழர் பிரச்சனையில் தமிழரசுக் கட்சி கொடுத்து வந்த நெருக்கடி, இராணுவச் சதி உருவாகி முறியடிக்கப்பட்ட சூழல், பாடசாலை தேசியமயத்தால் வெதும்பிநின்ற பிற்போக்கு சக்திகள், இராட்சத அந்நிய எண்ணெய்க் கம்பனிகளின் தேசியமயத்தால் சீற்றமடைந்த ஏகாதிபத்தியவாதிகள், இவை யாவற்றை யும் நன்கு பயன்படுத்தி நின்ற யூ. என்.பி. கட்சியின் எதிர்நடவடிக்கைகள் போன்றவற்றால் திருமதி பண்டார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்காவின் அரசு பல்வேறுவித நெருக்கடிகளுக்கு உள்ளாகிநின்றது. அதேவேளை தொழிலாளி வர்க்கம் சார்பாக முன்னெடுக்கப்பட்ட வேலைநிறுத்தங்களும் இறுதியில் முன்வைக்கப்பட்ட இருபத்தியொரு கோரிக்கைகளும் அதற்கான இயக்கமும் திருமதி பண்டாரநாயக்காவின் அச்சத்தை அதிகரிக்கச்செய்தன. அத்துடன் அரசாங்கத்தினுள் வளர்ந்துவந்த உள்ளக நெருக்கடிகளும் திருமதி பண்டாரநாயக்காவை புதியவகைச் செயலில் இறங்க வைத்தது. அதாவது இடதுசாரிக் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தி ஓர் கூட்டரசாங்கத்தை உருவாக்க முன்வந்தார். அத்தகைய ஓர் பேச்சுவார்த்தையை அவர் நேர்மையுடன் நடாத்த முன்வரவில்லை. உண்மையில் அப்பேச்சுவார்த்தையை ஏற்கனவே உருவாக்கப்பட்ட இடதுசாரி ஐக்கிய முன்னணியுடன் நடாத்துவதற்குப் பதிலாக சமசமாஜிக் கட்சித் தலைவர் என். எம். பெரேராவையும் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் பிலிப் குணவர்த்தனாவையும் தனித்தனியாக அழைத்துக் கலந்துரையாடினார். கம்யூனிஸ்ட் கட்சி அத்தகையதொரு கலந்துரையாடலுக்கு அழைக்கப்படவே இல்லை. இத்தகைய செயலினால் திருமதி பண்டாரநாயக்கா ஒரே கல்லில் இரண்டு மாங்காய்களை வீழ்த்துவதில் வெற்றிபெற்றார். அவரது இத் தந்திரோபாயத்திற்கு இடதுசாரிக் கட்சிகள் பலியாகின. சமசமாஜக் கட்சி இடதுசாரி ஐக்கிய முன்னணி ஒன்று இருப்பதைப் பற்றிய பேச்சின்றியே கூட்டரசாங்கத்தில் இணைந்துகொள்ளச் சம்மதம் தெரிவித்தது. அதற்கும் பிரதியுபகாரமாகக் கிடைத்த மூன்று மந்திரிப் பதவிகளைப் பெற்றுக் கொண்டனர். பிலிப் குணவர்த்தனா தனிப்பட்ட கோரிக்கை ஒன்றின்மீது முரண்பட்டு கூட்டரசாங்கத்தில் சேர மறுத்துவிட்டார். அவரது கோரிக்கை மிக வேடிக்கை நிறைந்ததாகும். அதாவது சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள சி. பி. டி சில்வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகற்றப்படவேண்டும் என்பதாகும். அதே சி. பி. டி சில்வாவுடன் மந்திரி சபையில் திரு. பண்டாரநாயக்காவின் தலைமையில் முன்பு இதே பிலிப் அங்கம் பெற்றது மட்டுமன்றி 1965ல் உருவாகிய யூ. என். பி தலைமையிலான தேசிய அரசாங்கத்தில் அதே சி. பி. டி சில்வாவுடன் பிலிப் குணவர்த்தனாவும் இணைந்திருந்தார் என்பதுதான் அவ்வேடிக்கை நிகழ்ச்சியாகும். இலங்கையின் முதல்தரமான ஒரு அசல் ட்ரொஸ்கியவாதி பிலிப் குணவர்த்தனா என்பது நினைவுகொள்ளவேண்டியதாகும்.

இவ்வாறு இடதுசாரி ஐக்கிய முன்னணி என்பது உருவாக்கிய ஒரு வருடத்திற்குள் அதனை உருவாக்குவதில் முன்னின்ற சமசமாஜிகள் கூட்டரசாங்கத்தில் சந்தர்ப்பவாதிகளாக இணைந்து கொண்டனர். 'தங்கமூளை' என அழைக்கப்பட்ட என். எம். பெரேரா அவ் அரசாங்கத்தின் நிதி அமைச்சராகிக் கொண்டார். ஏனைய இருவர் வெவ்வேறு அமைச்சர்களாகினர். கம்யூனிஸ்ட் கட்சியினர் தங்களையும் இணைத்துக்கொள்ளாத மனவேதனையுடன் காணப்பட்ட போதிலும் அதனைத் தவறு எனக் கண்டிக்கமுடியாத பரிதாபநிலையில் இருந்தனர். அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்து பிளவடைந்த சண்முகதாசன் தலைமையிலான மார்க்சிச லெனினிச சக்திகள் இவ் இடதுசாரிகளின் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தை மிக ஆக்கிரோச நிலையில் எதிர்த்துவந்தனர். இப்பாராளுமன்ற இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதத்தால் ஏற்கனவே இருபத்தியொரு கோரிக்கையின் அடிப்படையில் உருவாகிய தொழிலாளி வர்க்கத்தின் பலமும், தொழிற்சங்க ஐக்கியமும் சிதறியடிக்கப்பட்டது. போராட்ட ரீதியில் அன்றி நட்பு அடிப்படையில் இருபத்தியொரு கோரிக்கையை அரசிற்கு சமர்ப்பிப்பதில் பீற்றர் கெனமன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும் அவர்களது தொழிற்சங்கங்களும் முனைந்தன. ஓரிரு கோரிக்கைகளுக்கு சாதகமான பதில்கள் கிடைத்தபோதிலும் முக்கிய கோரிக்கைகள் மறுக்கப்பட்டன. இம்மறுப்பின் பிரதான அம்சம் யாதெனில் இருபத்தியொரு கோரிக்கையை உருவாக்குவதிலும் அதனை வென்றெடுக்க இயக்கம் நடத்துவதிலும் தலைமை தாங்கியவர்களில் ஒருவரான என். எம். பெரேரா நிதி அமைச்சராகி நின்று அக்கோரிக்கைகளுக்கு எதிராகத் தனது புதுமுதுகினைக் காட்டிநின்றமையேயாகும். இதனை வெளியில் நின்ற கம்யூனிஸ்ட் கட்சி தனது எதிர்காலப் பாராளுமன்ற நோக்கம் கருதி எதிர்க்கவில்லை. இச்செயல்கள் சமசமாஜக் கட்சியினதும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சந்தர்ப்பவாத சீரழிவுகளைத் துலாம்பரமாகக் காட்டி நின்றன.

இடதுசாரிகளைச் சீரழித்து தொழிலாளி வர்க்கத்தின் பலத்தைச் சிதறடிப்பதில் திருமதி பண்டாரநாயக்கா வெற்றி பெற்றார் என்பதில் ஐயமில்லை. இதனையிட்டு இடதுசாரிகள் அதிகம் கவலைப்படவும் இல்லை. அவர்களது நோக்கும் போக்கும் பாராளுமன்றப் பதவிகளை முதன்மைப்படுத்தியது. அவ்வாறு உருவாக்கப்பட்ட கூட்டரசாங்கம் அதிக நாட்கள் நீடிக்கவில்லை. இலங்கையின் பிற்போக்கு சக்திகளினதும் அந்நிய ஏகாதிபத்தியத்தினதும் பிரசாரத் தளமாக விளங்கி வந்தது ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனமாகும். இந்நிறுவனத்தை தேசியமயமாக்கும் மிகவும் முற்போக்கான நடவடிக்கையை கூட்டரசாங்கம் மேற்கொண்டது. இம்முயற்சிக்கு எதிராக சகல பிற்போக்கு சக்திகளும் ஒன்றுதிரண்டன. 'பத்திரிகைச் சுதந்திரம் பறிபோகிறது' என்ற பெரும் கூச்சலுடன் இலங்கையின் பிற்போக்குவாதக் கட்சிகள் யாவும் யூ. என். பியின் தலைமையில் அணிதிரண்டன. இடது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரிக் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் எதிர்முனையில் நின்று 'ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தை உடனே தேசியமயமாக்கு' எனக் குரல் கொடுத்தனர். அதே வேளை ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தின்மீது கை வையாதே! பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்காதே! என்ற கோஷங்களுடன் கொழும்பில் யூ.என்.பியின் தலைமையில் ஓர் ஆர்பாட்ட ஊர்வலம் நடத்தப்பட்டது. அவ் ஊர்வலத்தில் மக்கள் பெருமளவிற்கு திரண்டிருக்க வில்லை. ஆயினும் அதன் முன்வரிசையில் சிங்கள தமிழ் முஸ்லீம் பிற்போக்குவாத கட்சிகளின் தலைவர்கள் தமது வர்க்க நலன் கருதி ஐக்கியப்பட்டுநின்றனர். இவ் ஊர் வலத்தில் கண்ட மற்றொரு காட்சி சிலருக்கு அதிர்ச்சி யைக் கொடுத்தது. பலருக்கு வர்க்க ஐக்கியத்தின் தன் மையை எடுத்துக்காட்டியது. 1958ம் ஆண்டின் இனக் கலவரத்தை மூட்டுவதில் இரு தலைவர்கள் தத்தமது பங்களிப்பை வழங்கி நின்றனர். ஒருவர் 'சிறி' எதிர்ப்பு இயக்கத்தை வடக்கில் ஆரம்பித்து வைத்த அ. அமிர்த லிங்கம். மற்றையவர் சிங்கள இனவாதத்தின் உருவக மாகத் திகழ்ந்து தெற்கில் தமிழ் எழுத்துக்களுக்கு தார் பூச்சு இயக்கத்தை நடாத்திநின்ற கே.எம்.பி.ராஜரட்னா. இந்த இரு மனிதர்களும் தமது வாய்களைக் கறுப்புத் துணியால் கட்டியவாறு மேற்கூறிய கொழும்பு ஊர்வலத் தில் அருகருகாகச் சென்ற காட்சியை அன்றைய பத்திரி கைகள் படம்பிடித்து வெளியிட்டன. ஒரு சிங்களப் பிற்போக்கு ஏகபோகப் பத்திரிகை நிறுவனத்தைப் பாது காக்க இன மத மொழி பேதங்களிலேயே அரசியல் நடத்தி யவர்கள் அதற்கு அப்பால் ஐக்கியப்பட்டு நின்ற நிலை அவர்களது வர்க்க ஐக்கியத்தையே எடுத்துக்காட்டியது.

இவ்வாறு ஏரிக்கரைப் பத்திரிகை நிறுவனத்தை தேசியமயமாக்கும் பிரச்சினை உச்சநிலைக்கு வந்த சூழலில் திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964ம் ஆண்டு டிசம்பர் 4ம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு முன்பாகவே இடம்பெற்ற மற்றொரு வாக்கெடுப்பில் அரசாங்கம் தோற்கடிக்கப்பட்டது. இத் தோல்விக்கு அரசாங்கத்தினுள் இருந்த ஒரு பிரிவினர் சி. பி. டி சில்வா தலைமையில் எதிர்க்கட்சிகள் பக்கம் சேர்ந்து கொண்டனர். இவர்கள் பெரும் தொகைப் பணத்தினால் வாங்கப்பட்டனர் என்றும் கூறப்பட்டது. அது மட்டுமன்றி சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேறி சமசமாஜக்கட்சி (புரட்சிகர) என்ற பெயருடன் இயங்கிவந்த கட்சியின் சார்பாக எட்மன் சமரக்கொடி, மெரில் பெர்னாண்டோ ஆகிய இருவரும் பாராளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். இவ்விரு ட்ரொஸ்கிய வாதிகளும் தமது வழமையான நிலைக்கு ஏற்ப கூட்டரசாங்கத்தை எதிர்த்து யூ. என்.பி தமிழரசுக்கட்சி என்பன வற்றுடன் சேர்ந்து வாக்களித்தனர், ஒரே ஒரு அதிகப்படி வாக்கினால் அவ் அரசாங்கம் தோல்விகாண நேர்ந்தது. ட்ரொஸ்கியவாதத்தில் மூழ்கிநின்ற சமசமாஜிகளின் ஒருமுனைவாதம். சந்தர்ப்பவாதம் என்பனவற்றுக்கு மேற்குறித்த சம்பவம் சிறந்ததோர் உதாரணமாகும். 1965 மார்ச் மாதத்தில் பொதுத் தேர்தலுக்கு திகதி குறிக்கப்பட்டது.

திருமதி பண்டாரநாயக்கா தலைமையிலான தேசிய முதலாளித்துவ அரசாங்கம் தனது ஆட்சிக்காலத்தில் குறிப்பிடக்கூடிய அளவு முற்போக்கான செயற்பாடுகளைக் கொண்டிருந்தது. உள்ளூர் பிரபுத்துவ சக்திகளினதும், அந்நிய மத நிறுவனங்களினதும், மற்றும் பிற்போக்காளர்களினதும் பிடிக்குள் இருந்துவந்த பாடசாலைகளை நாடு முழுவதிலும் தேசியமயமாக்கி அரசாங்கக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்த நடவடிக்கையை அவ் அரசு மேற்கொண்டது, இதன் மூலம் இலவசக் கல்வியின் பயனை சகல மக்களும் அனுபவிக்கக் கூடிய நிலை உருவாகியது. அமெரிக்க ஏகபோக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராட்சத எண்ணெய்க் கம்பனிகளை தேசஉடமை யாக்கிக் கொண்டது. ஆரம்பத்தில் இவற்றுக்கு நஷ்ட ஈடு கொடுக்க மறுத்தபோதிலும் அமெரிக்காவின் உதவி நிறுத்த நிர்ப்பந்தத்திற்கு இணங்க நஷ்டஈட்டுத் தொகை யாக ஒருபகுதி பின்பு வழங்கப்பட்டது. இருந்தபோதி லும் அந்நிய எண்ணெய் கம்பனிகளின் ஆதிக்கத்தை முறியடிப்பதில் அரசு நடந்துகொண்ட விதம் வரவேற்கக் கூடியதாக இருந்தது. அடுத்து இலங்கை வங்கி, காப் புறுதிக் கம்பனி ஆகியனவும் தேசியமயத்திற்கு உள்ளாக்கப் பட்டதுடன் சாதாரண மக்களுக்கு பயன்கள் பலவற்றை உதவக்கூடியவகையில் மக்கள் வங்கி தோற்றுவிக்கப் பட்டது.

மேற்கூறிய முற்போக்கு நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்ட சூழலில் யூ. என். பி தமிழரசுக் கட்சி அவற்றைப் பலமாக எதிர்த்து பிரசாரங்களையும் இயக்கங்களையும் நடாத்தியது. ஆனால் இடதுசாரிக் கட்சிகள் இவற்றுக்கு ஆதரவாக மக்கள் சார்பான இயக்கங்களை முன்னெடுத்து அந்நடவடிக்கைகள் செயல் உருவம் பெற உதவி நின்றனர்.

1964ம் ஆண்டில் இந்திய பயணத்தை மேற்கொண்ட திருமதி பண்டாரநாயக்கா இலங்கைவாழ் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர் பிரச்சினை பற்றி இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத் னார். அதன் அடிப்படையில் சிறிமா—சாஸ்திரி ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. இது நேரு. கொத்தலாவலை ஒப்பந்தத்தைவிட வித்தியாசமானதொன்றாக அமைந்தது. உரிய மக்களின் சம்மதம் இன்றி இருநாட்டுத் தலைவர் களின் ஒப்பந்தமாகவே அது அமைந்தது. இவ் ஒப்பந்தம் அதிகளவு தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவிற்கு திருப்பி அனுப்ப ஏற்பாடு செய்தது. நடைமுறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஒப்பந்தம் மனிதாபிமானமின்மைக்கும் அடிப்படை மனித உரிமை மீறலுக்கும் இடமளிக்கக்கூடிய ஒன்றாகவே அமைந்தது.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

## □ இனவாதத்திற்குள் இறங்கிய இடதுசாரித் தலைவர்கள்

1965 மார்ச் மாதம் இடம்பெற்ற தேர்தலில் எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. அதனால் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிக ஆசனங்களைப் பெற்ற தமிழரசுக் கட்சியுடன் அரசாங்கம் அமைக்கும் பேரப்பேச்சுக்களில் யூ. என். பியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஈடுபட்டன. தமிழரசுக் கட்சியின் உயர்வர்க்க நிலைப்பாடு காரணமாகவும் ஏற்கனவே அக்கட்சி யூ. என். பி ஆதரவாக செயல்பட்டுவந்ததனாலும் டட்லி சேனநாயக்கா தலைமையில் அரசாங்கம் உருவாக்கப்படுவதற்கு தமிழரசுக்கட்சி ஒப்புக்கொண்டது. இதன் அடிப்படையில் டட்லி—செல்வா ஒப்பந்தம் திரைமறைவில் உருவாக்கப்பட்டது. இவ் ஒப்பந்தம் அரங்கிற்கு வராத காரணத்தினால் அதனை எதிர்க் கட்சிகள் ‘இரகசிய ஒப்பந்தம்’ என வர்ணித்து எதிர் நிலைப் பிரசாரம் செய்ய ஆரம்பித்தன. இவ் எதிர்ப்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்துகொண்டன. தமிழரசுக் கட்சியைத் தாக்குவதாகக் கூறிக்கொண்டு இனவாதத்தை இக்கட்சிகள் கக்க ஆரம்பித்தன.

மறுபுறத்தில் யூ.என்.பியின் தலைமையில் தமிழரசுக் கட்சி பிலிப் குணவர்த்தனாவின் மக்கள் ஐக்கிய முன்னணி, தொண்டமான் தலைமையில் இ. தொ. கா.,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. பி. டி. சில்வா தலைமையிலான குழுவினர், தஹநாயக்கா, மற்றும் உதிரிகளான உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து தேசிய அரசாங்கம் என்னும் பெயரில் ஆட்சியை அமைத்துக்கொண்டனர். தமிழரசுக் கட்சியின் சார்பில் மு. திருச்செல்வமும், மற்றும் பிலிப் குணவர்த்தனா, சி. பி. டி சில்வா, டபிள்யூ. தஹநாயக்கா போன்றோர் எவ்வித சிரமமுமின்றி மந்திரிசபையில் அங்கம் பெற்றனர். பிரதம மந்திரியான டட்லி சேனநாயக்கா பிரித்தானிய ஏகாதிபத்திய விசுவாசியாக விளங்கிநிற்க, நிதி அமைச்சரான ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமெரிக்க ஏகாதிபத்திய அடிவருடியாக செயற்பட்டுவந்தார். மொத்தத்தில் இத் 'தேசிய' அரசாங்கம் ஏகாதிபத்திய நலன்களுக்கு தேசிய நலன்களை அடகுவைக்கும் பாதையில் செல்வதையிட்டு அவர்களிடையே எவ்வித முரண்பாடும் தோன்றவில்லை. அவ் அரசாங்கத்தின்கீழ் தொழிலாளிவர்க்க விரோத நடவடிக்கைகள் தொடர்ந்தன. மலையகத்தில் இடம் பெற்ற தோட்டத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. பாடசாலைகளில் 'சியவச, சீட்டிழுப்பு அறிமுகப்படுத்தப் பட்டது. கரையோரங்களைக் கண்காணிக்கும் பொருட்கள் கட்டுப்பாட்டுச்சட்டம் கொண்டுவரப்பட்டது. வடக்கில் சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டங்களைப் பொலீஸ் வன்முறைகொண்டு நசுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. தமக்கு விரோதமான உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப் பட்டன. மேதின ஊர்வலங்களுக்கு 65ம் 69ம் ஆண்டுகளில் முட்டுக்கட்டைகளும் தடைகளும் விதிக்கப்பட்டன. இவ்வாறு பல்வேறு பொருளாதார நெருக்கடிகளும், அரசியல் அடக்குமுறைகளும் உழைக்கும் மக்கள்மீது சுமத்தபட்டன.

இத்தகைய ஏகாதிபத்திய சார்பு கொண்டதும் தேசிய அரசாங்கம் என அழைக்கப்பட்டதுமான யூ. என். பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தை எதிர்த்து நிற்பதற்கு சுதந்திரக் கட்சிக்கும் இடதுசாரிக் கட்சிகளுக்கும் பல பத்துப் பாதைகள் இருந்தபோதிலும் அவற்றைத் தேர்ந்தெடுக்காது இன வாதப் பாதையை மட்டும் தேர்ந்தெடுக்கும் கீழ் நிலைக்குச் சென்றனர். 1966ம் ஆண்டின் முற்கூறிலே நியாயமான தமிழ்மொழிப் பிரயோகத்திற்கான மசோதாவைக் கொண்டுவரும் முயற்சியில் டட்லி சேனநாயக்கா ஈடுபட்டார். இதனை மூர்க்கத்தனமாக எதிர்த்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் பிரசாரத்திலும் செயலிலும் இறங்கினர். 1966ம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி வேலை நிறுத்தமும் ஆர்ப்பாட்ட ஊர்வலமும் நடாத்தத் தீர்மானித்தனர். இவ்வேலை நிறுத்தத்தில் சண்முகதாசன் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் தொழிற் சங்கமான இ. தொ. ச. சம்மேளனமும் வேறும் சில தொழிற்சங்கங்களும் கலந்துகொள்ளவில்லை. இவ்வேலை நிறுத்தமும் ஊர்வலம் கூட்டமும் இனவாத அடிப்படை கொண்டதென்பதை அவை சுட்டிக்காட்டின. ஆனால் இதனை ஒழுங்குசெய்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரிச் கட்சிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் இவ் ஜனவரி எட்டாம் திகதி வேலை நிறுத்தத்தையும் நடாத்தி ஊர்வலத்தை விகாரமாகாதேவி பூங்காவில் இருந்து பாராளுமன்றத்தை நோக்கி வழி நடத்தினர். இவ் ஊர்வலத்தில் தாரளமாக இனவாத சுலோகங்கள் எழுப்பப்பட்டன. 'மசாலவடே அப்பட்ட எப்பா' அதாவது தமிழர்களை இனவாத நோக்கில் கீழ்த்தரமாக நோக்கும் பாங்கிலேதான் 'மசாலவடை எமக்கு வேண்டாம்' என்று சுலோகம் அன்று எழுப்பப் பட்டது. இத்தகைய 'மசாலவடை' கோஷத்தை எழுப்பிச்செல்லும் கேடுகெட்ட நிலைக்கு பாரம்பரிய இடதுசாரிக் கட்சிகள் சென்றன. ஏறத்தாழ கால் நூற்றாண்டு காலத்திற்கு மேலாக வர்க்க நிலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டை உயர்த்திப்பிடித்தும் இனவாதத்தை மிக உறுதியாக எதிர்த்தும்வந்த இவ் இடதுசாரிகள் இனவாதச் சேற்றுக்கள் தம்மை வீழ்த்திக்கொண்டனர். இது தற்செயலானதாகக் கொள்ளமுடியாது. அறுபதுகளின் ஆரம்பத்தில் இருந்து முற்றுமுழுதாகத் தமது மார்க்சும் முதலாளித்துவப் பாராளுமன்றப் பாதை என்ற சகதிக்குள் இறங்கியதன் விளைவானதேயாகும். அறுபதாம் ஆண்டில் நடைபெற்ற தேர்தல்களில் தமக்குப் போதிய பாராளுமன்ற ஆசனங்கள் கிடைக்காமல் போனமைக்கு தாங்கள் பின்பற்றிய சிறுபான்மை இனங்களுக்குச் சார்பான நிலைப்பாடே காரணம் எனப் பகிரங்கமாகக் கூறி அதற்காக மனம் நொந்துநிற்கும் நிலை காணப்பட்ட அன்றே இவர்களின் இனவாதப் பக்கத்திற்கான சரிவு ஏற்பட ஆரம்பித்துவிட்டது. அதனை 1966ம் ஆண்டின் ஜனவரி 8ம் திகதிய அபகீர்த்திமிக்க இனவாத வேலை நிறுத்தத்திலும் ஊர்வலத்திலும் தெளிவாகக் காணக் கூடியதாக இருந்தது. அவசரகாலச் சட்டத்தைக் கொண்டுவந்து இவ் ஊர்வலத்தைத் தடுத்து நிறுத்திய பொலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒரு பௌத்த பிக்கு கொல்லப்பட்டார். அந்தப் பிக்குவிற்கு பிற்காலத்தில் சிலை எழுப்பும் நடவடிக்கையும் மேற் கொள்ளப்பட்டது. இவ்வாறு இனவாதத்திற்குள் இறங்கியதன் மூலம் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் உழைக்கும் மக்களிடையேயும் வளர்ந்துவந்த வர்க்க உணர்வு மழுங்கடிக்கப்பட்டு இலகுவில் தட்டியெழுப்பி விடக்கூடிய இன உணர்வுகள் முன்செல்லும் போக்கு ஆரம்பமாகியது. இதன் எதிர்கால விளைவுகளின் பாரதூரத்தன்மை பற்றியோ அன்றி அதுவே தமக்குப் புதைகுழியாகும் என்பதையிட்டோ இப்பாராளுமன்ற இடதுசாரிகள் கவலைப்படாதுசெல்லும் போக்கே காணப்பட்டது. இதன் அடிப்படையில் தமிழர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வழிகளில் சில உரிமைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கக்கூடியதாக ஆக்கப்பட்ட மாவட்டசபை முறையினை எதிர்ப்பதிலும் இடதுசாரிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து எதிர்த்தனர். பதிலுக்கு பதில் நடவடிக்கையாகவோ அன்றி பழிக்குப்பழி என்ற விதத்திலோ இது அமைந்தது அன்று பண்டா—செல்வா ஒப்பந்தத்தை யூ. என். பி எதிர்த்து முறியடித்தது இப்போது டட்லி—செல்வா ஒப்பந்தத்தை சிறிலங்கா—இடதுசாரிக் கட்சிகள் எதிர்த்து முறியடித்தனர் இதனால் தமிழரசுக் கட்சி இறுதிக் காலத்தில் யூ. என். பி அரசில் இருந்து வெளியேறி தனது நல்லபிள்ளைப் பெயரைப் பாதுகாத்துக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்பட்டது. யூ. என். பி—தமிழரசு கூட்டணியை உடைத்ததில் பூரிப்படைந்த இவ் இடதுசாரிகள் அதன் இனவாத அம்சத்தின் எதிர்விளைவு நாட்டுக்கும் மக்களுக்கும் அதேவேளை தமிழ்பேசும் மக்களுக்கும் மோசமான எதிர்காலத்தை உருவாக்கப்போகிறது என்ற உண்மையைத் தூரநோக்குடன் காணமறுத்து உடனடி லாபமாகக் கருதிய பாராளுமன்ற மோகத்தில் சிக்கிக்கொண்டனர். இத்தகைய சூழலிலேயே 1970 நடுப்பகுதியில் பொதுத் தேர்தல் நடைபெற்றது.

## □ மாபெரும் விவாதமும் கம்யூனிஸ்ட் கட்சிப் பிளவும்

மகத்தான ஒக்டோபர் சோஷலிசப் புரட்சியை வழிநடத்தியவர்களில் ஒருவரும், மாபெரும் லெனின் மறைவுக்குப்பின் சோஷலிச சோவியத் யூனியனைத் தலைமை தாங்கி வந்தவரும், இரண்டாவது உலக யுத்தத்தின்போது ஹிட்லரையும்—பாசிசத்தையும் தோற்கடிப்பதில் தனது ஒப்பற்ற தலைமைத்துவத்தை வழங்கியவருமான தோழர் ஜே. வி. ஸ்டாலின் 1953ம் ஆண்டில் இறந்தார். அவரது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழப்பின் இடத்தை நிகட்டா குருஷ்ச்சேவ் என்ற மனிதர் தனதாக்கிக்கொண்டார். ஆரம்பத்தில் ஸ்டாலினின் வாரிசு தானே என மார்புதட்டி நின்ற குருஷ்ச்சேவ் சில ஆண்டுகளில் ஸ்டாலினை நிராகரிக்கும் பாதையில் இறங்கி கடந்த காலத்தின் ஒவ்வொரு வெற்றிகளையும் சாதனைகளையும் மறுத்து நிற்கும் கொள்கைகளை முன் வைத்தும் வந்தார். 1956ல் தொடங்கிய அவரது சீரழிவுக் கொள்கைகள் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 20வது 22வது காங்கிரஸ்களில் முழுமையடைந்து நவீன திரிபுவாதம் என்ற தவறான கொள்கை நிலைப்பாடாக மாற்றம் பெற்றது. குருஷ்சேவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் இத்தவறான மார்க்கத்தில் விடாப்பிடியாக நின்றதன் காரணமாக இந்நவீன திரிபுவாதப் போக்கினை எதிர்த்து சர்வதேச ரீதியாக மார்க்கிச—லெனினிச சக்திகள் பெரும் தத்துவார்த்தப் போராட்டம் ஒன்றினைத் தொடுக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதுவே சர்வதேச தம்யூனிஸ்ட் இயக்கத்தின் மத்தியில் மாபெரும் விவாதமாக உருவெடுத்தது.

இம்மாபெரும் விவாதத்தில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியும் மாஓசேதுங்கும் மார்க்சிச லெனினிசத்தின் அடிப்படை அம்சங்களில் தங்கிநின்று நவீன திரிபுவாதத்தை எதிர்த்துநிற்க அவர்களின் நிலைப்பாட்டினை ஆதரித்து உலகின் சகல மார்க்சிச லெனினிச சக்திகளும் அணி திரண்டனர். அதேவேளை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் குருஷ்ச்சேவும் நவீன திரிபுவாதக் கொள்கைகளை சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுள் திணிக்க முற்பட்டனர். நவீன திரிபுவாதக் கொள்கை பின்வரும் அம்சங்களில் வெளிப்பாடடைந்து காணப்பட்டது. (1) உன்னதமான பாட்டாளிவர்க்கப் புரட்சிவாதியான தோழர் ஜே. வி. ஸ்டாலினின் வரலாற்றுப் பாத்திரத்தை மறுத்து அவரைச் சம்பூரண நிராகரிப்புக்கு உள்ளாக்

கியமை. (2) சோஷலிசத்திற்கான பாதை இனிமேல் பலாத்காரம் அற்ற வழிகளில் சமாதானமான பாராளு மன்றப்பாதையாகவே இருக்கமுடியும். அதாவது ஒக்டோபர் புரட்சி வெற்றியடைந்த மார்க்கத்தில் இருந்து வேறுபட்டதாகவே இருக்கவேண்டும் என்பதாகும். (3) சோவியத் யூனியன் இரண்டாவது உலக யுத்தத்தில் இரண்டுகோடி மக்களையும் அதன் வளங்கள் அனைத்தையும் இழக்கநேரிட்டதால் இனிமேல் யுத்தம் ஏற்படக்கூடாது. அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியத் தோடு சமாதான சகஜீவனம் நடத்துவதன் மூலம் உலக சமாதானத்தைப் பேணமுடியும் என்பதாகும். (4) சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியை சர்வதேச கம்யூனிச இயக்கத்தின் தலைமைக் கட்சியாக சகல கட்சி களும் ஏற்றுக்கொள்வதை நிர்ப்பந்தித்துக் கொண்டமை யாகும். மேற்கூறப்பட்ட அம்சங்களை மையமாகக் கொண்டே மேற்படி விவாதம் இடம்பெற்றது. இவ் விவாதம் உலகின் ஒவ்வொரு கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிக்குள்ளும் பிரதிபலித்தது. வாதப்பிரதி வாதங்கள் வேகமடைந்தன. சீனக் கம்யூனிஸ்ட் கட்சி தர்க்கபூர்வ மாகவும் நடைமுறை அனுபவங்களின் அடிப்படையிலும் மார்க்சிச லெனினிசத்தின் சரியான நிலைப்பாட்டினைப் பாதுகாக்க போராடிநின்றது. உலகின் ஒவ்வொரு மார்க்சிச லெனினிசவாதியும் இவ்விவாதத்தில் சரி யானதோ அன்றித் தவறானதோ நிலைப்பாடு ஒன்றினைத் தேர்ந்தெடுக்கவேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இத்தகைய சூழலிலேயே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக் குள்ளும் இவ்விவாதத்தின் எதிரொலிகள் கிளம்பி 1963ல் அவை உச்ச கட்டத்திற்கு சென்றன. கட்சியின் பொதுச் செயலாளர் பீற்றர் கெனமன், தலைவர் எஸ் ஏ. விக்கிரம சிங்கா, அ. வைத்தியலிங்கம், எம்.ஜி. மெண்டிஸ் போன்ற தலைவர்கள் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன திரிபுவாதக் கொள்கைகளை நன்கு விழுங்கிக் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். அதேவேளை நா. சண்முகதாசன், பிரேம்லால் குமாரசிறி, வாட்சன் பெர்ணாண்டோ, மு. கார்த்திகேசன், கே. ஏ. சுப்பிரமணியம் போன்றோர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சி முன்வைத்த மார்க்சிச லெனினிசத்தைப் பாதுகாத்து முன்னெடுக்கும் புரட்சிகர நிலைப்பாட்டைப் பற்றி நின்றனர். இதனால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவில் இருந்து நா. சண்முகதாசன் வெளியேற்றப் பட்டார். அவரைத் தொடர்ந்து மேலும் சில மத்திய குழு உறுப்பினர் வெளியேற்றப்பட்டனர் அல்லது வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அதேவேளை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் சக்திமிக்க தொழிற்சங்க இயக்கமாக இயங்கிவந்த இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் 1963ம் ஆண்டின் இறுதியில் பிளவடைந்தது அதேபோன்று வாலிபர் இயக்கம் மாதர் அணி என்பனவற்றிலும் பிளவுகள் இடம் பெற்றன. பிளவடைந்த இருசாராருக்குமிடையில் காரசாரமான தத்துவார்த்த விவாதங்கள் நடைபெற்றுவந்த அதேவேளை தத்தமது அணிகளைப் பலப்படுத்துவதிலும் ஈடுபட்டனர். கம்யூனிஸ்ட் கட்சியில் ஏற்பட்ட இப்பிளவு நாட்டின் சகல பிரதேசங்களிலும் எதிரொலித்தது. இப் பிளவு தேசியளவில் தொழிலாளி வர்க்க இயக்கத்தைப் பலவீனப்படுத்தியது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அதே நேரத்தில் தத்துவார்த்த கொள்கை அடிப்படையில் மார்க்சிசம் லெனினிசம் விளங்கிக் கொள்ளப்படுவதற்கும், பாதுகாக்கப்படுவதற்கும் இது உரிய சந்தர்ப்பத்தை வழங்கியது.

இவ்வாறு சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் ஒரு விவாதம் இடம் பெற்றது சரியானதா? அதன் அடிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படையில் உலகின் ஒவ்வொரு கட்சியின் மத்தியிலும் பிளவு இடம்பெற்றது நியாயமானதா? இலங்கையில் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுள் இத்தகைய பிளவினைத் தவிர்த்திருக்க முடியுமா? என்ற கேள்விகள் பிற்காலத்தில் எழவே செய்தது. விவாதமும் பிளவும் வரலாற்றுப் போக்கில் தவிர்க்கமுடியாதது என்பதனை அன்மைக்கால சோவியத் யூனியனின் இறுதியான நடைமுறைகள் எடுத்துக் காட்டியுள்ளன. மார்க்சிச லெனினிசத்திற்கும் நவீன திரிபுவாதத்திற்குமிடையிலான அவ்விவாதம் உரிய வேளையிலும் சரியான விதத்திலும் இடம் பெற்றிருக்காது விட்டிருந்தால் சர்வதேச கம்யூனிச இயக்கத்திற்கு மேலும் அதிகரித்த இழப்பு ஏற்பட்டிருக்கும். அத்தகைய விவாதத்தை ஒவ்வொரு கட்சியும் விவாதித்த முறைகளில் பிளவு ஒன்றினை நோக்கிச் சென்றிருக்கவேண்டும் என்ற கட்டாயத்திற்கு உள்ளாகி இருக்கக்கூடாது என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதாகும். அவ்வாறு ஜனநாயக மத்தியத் துவத்தின் அடிப்படையிலும் தத்துவார்த்த ஸ்தாபன வழிகளிலும் இவ்விவாதம் கட்சிகளுக்குள் இடம் பெற்று முடிவுகள் நியாயமான வழிகளில் எடுக்கப்பட்டிருந்தால் பிளவு ஒன்று இன்றியே உட்கட்சிப் பிரச்சினையாகத் தீர்த்துக்கொண்டிருக்க முடிந்திருக்கும் கட்சிக்குள் விவாதிக்கவேண்டிய தத்துவார்த்த கொள்கைப் பிரச்சினைகளை பகிரங்க மேடைகளில் மக்கள்முன் விவாதங்களாக முன்வைத்ததுமட்டுமன்றி இறுதியில் தனிநபர் தாக்குதலாகவும் கடந்தகாலக் கழிவுகளை அள்ளி ஒருவர் முகத்தில் மற்றவர் வீசும் கீழ்நிலைக்கும் செல்லவேண்டி ஏற்பட்டது. குடும்ப விவகாரங்கள் மட்டுமன்றி இனவாதம் கலந்த பிரசாரங்களும் இப்பகிரங்க விவாதங்களில் முன்வைக்கப்பட்ட துர்ப்பாக்கியநிலை தோன்றியது. இதில் மார்க்சிச லெனினிசவாதிகள் முன்வைத்த தர்க்க ரீதியிலான தத்துவார்த்தப் பிரச்சினைகளுக்கு பதில்கூறமுடியாத பீற்றர் கெனமன்-விக்கிரமசிங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிலான நவீன திரிபுவாத கட்சியினர் பல படிகள் கீழே இறங்கி தனிநபர் தூற்றுதலாகவும் மாற்றினர் நாகலிங்கம் சண்முகதாசன் என்று முழுப்பெயர் உச்ச ரிப்பின் மூலம் அவர் ஒரு தமிழர் என்பதை மறைமுகமாகச் சுட்டிக் கட்டினார். இந்நிலை அவர்களது இனவாதச் சீரழிவு மட்டுமன்றி நவீன திரிபுவாதக் கொள்கையின் கையறுநிலையாகவும் காணப்பட்டது.

## ☐ பழைய கட்சியும் புதிய கட்சியும்

குருஷ்ச்சேவ் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் நவீன திரிபுவாத மார்க்கத்தை முற்றுமுழுதாக ஏற்று அதன் வழியில் செல்லத் தயாராகிய பீற்றர் கெனமன் — விக்கிரமசிங்கா தலைமையிலான பழைய கம்யூனிஸ்ட் கட்சி தனது கொள்கையை வகுப்பதில் முற்றுமுழுதான முதலாளித்துவப் பாராளுமன்றப் பாதையைத் தேர்ந்தெடுத்தது. அதன் மூலம் தனது கடந்தகாலச் சாதனைகள் என்று கருதக்கூடிய யாவற் றையும் பாராளுமன்ற சந்தர்ப்பவாதம் என்ற சகதிக்குள் புதைத்துக்கொள்ளத் தயங்கவில்லை. இலங்கையில் எவ்வி தமான புரட்சிகர மக்கள் போராட்டமும் இன்றி தேசிய முதலாளித்துவத்துடன் இணைந்து பாராளுமன்றத்தின் மூலமாக சோஷலிஸத்தை வென்றெடுக்கலாம் என்ற அபத்தமிக்க நம்பிக்கையைப் பிரசாரப்படுத்தியது. இன் றைய காலகட்டம் சமாதானமான சோஷலிச மாற்றம் நிகழக்கூடிய ஒரு காலகட்டம் என்பதை வலியுறுத்தி நின்ற அவர்கள் தேர்தல்களில் முழுமையாகப் பங்குகொள் வதையும் அதற்கு அப்பாலான புரட்சிகரப் போராட் டங்கள் எதுவும் தேவையற்றவை என்ற நிலைக்குச் சீரழிந்தனர். எனவே ஒரு முதலாளித்துவப் பாராளுமன்றத் தேர்தலுக்காக எத்தகைய கீழ்த்தர வழிகளையும் கையாளத் தயங்காத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் வலதுசாரிப் பாதையைத் தேர்ந்தெடுத்தனர். அதுவே 1965-70ம் ஆண்டு காலப்பகுதியில் தொழிலாளி வர்க்கத்தை இனவாதப் பாதையில் அழைத்துச்சென்று தமது சகாக்களான சமசமாஜ, சுதந்திரக் கட்சிகளுடன் இணைந்து வர்க்கப் பார்வைக்கு அப்பால் இனவாதத்தை முன்னெடுப்பவர்களாக மாறிநின்றனர். இவர்கள் தமது பாராளுமன்ற வெற்றிக்காக முன்னெடுத்த இனவாதத்தை அவ்வாறு இல்லை என்று கூற ஆயிரம் சத்தியங்கள் செய்தாலும் அவர்களது பேச்சுக்களும் நடைமுறைகளும் மட்டுமன்றி அவர்களது நாளிதழான 'அத்த' பத்திரிகை போன்றன அதற்குரிய சாட்சியத்தை வழங்கும். தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் கட்டி எழுப்பப்பட்டு வந்த வர்க்க உணர்வும், புரட்சிகர மனப்பான்மையும் நச்சுப்படுத்தப்பட்டு ஸ்தாபன ரீதியில் சீர்குலைவுக்கு உட்படுத்தப்பட்டது. யாவற்றுக்கும் மேலால் இக்கட்சி பின்பற்றிய சோவியத் சார்பின் அப்பட்டமானநிலை சோவியத் யூனியனின் சகல தவறுகளுக்கும் இலங்கையில் வியாக்கியானங்களும், விளக்கங்களும் அளித்துப்பாதுகாக்கும் போக்கினை வலுப்படுத்தியது. அதனால் பத்திரிகைகள் தமது எழுத்துக்களில் 'மாஸ்கோ சார்பு' கம்யூனிஸ்ட் கட்சி என நாமம் சூட்டிக்கொண்டன. இந்நிலை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பதன் சுயத்தை இழந்துநிற்பதன் ஒரு குறியீடாகவும் காட்டப்பட்டது. இவ்வாறு ஒரு தொழிலாளி வர்க்கத்தின் கட்சி தனது தனித்துவத்தை இழந்தநிலையில் முற்றுமுழுதான பாராளுமன்றக் கட்சியாக மாறி அறுபதுகள் முழுவதிலுமாக செயற்பட்டு வந்ததன் விளைவாக 1970ம் ஆண்டின் பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி, சமசமாஜக் கட்சியுடன் ஐக்கிய முன்னணி அமைத்து ஆகக்கூடிய ஆசனங்களாக ஆறு தொகுதிகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. அது அவர்களுக்கு அதிக திருப்தியையும் அளித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேவேளை பழைய கட்சியில் இருந்து பிளவடைந்து வந்த மார்க்சிச லெனினிச சக்திகள் தங்களைப் புதிய கட்சியாகிக்கொண்டனர். அவர்கள் 1964 இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயரில் பழைய கட்சியினால் நீண்டகாலம் கூட்டப்படாதிருந்த ஏழாவது மாநாட்டைக் கூட்டி புதிய மத்திய குழுவையும் தெரிவு செய்தனர். இக்கட்சியின் பொதுச்செயலாளராக பிரேமலால் குமாரசிறியும், நா. சண்முகதாசன் தேசிய அமைப்பாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர். இக்கட்சியின் பின்னால் பல்வேறு மட்டங்களில் உள்ள ஸ்தாபனங்களில் இருந்தும் புரட்சிகர எண்ணம் கொண்டவர்கள் அணிதிரண்டனர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சி, அல்பேனிய தொழிற்கட்சி போன்ற அனுபவம் மிக்க கட்சிகள் மார்க்சிசம் லெனினிசத்தைப் பாதுகாத்து முன்னெடுக்கும் நோக்குடன் நவீன திரிபுவாதத்தையும் அதன் கேந்திரமாக விளங்கிய சோவியத் கட்சியை எதிர்த்துப் தத்துவார்த்தப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தமையை இப்புதிய கட்சியானது வரவேற்றது மட்டுமன்றி அதனை முழுமையாகப் ஏற்றுக்கொண்டும் நின்றது. இதனால் இக்கட்சியின் பேச்சு, எழுத்து, பிரசாரம் அனைத்திலும் சீன கட்சியின் உதாரணங்களும், முன் அனுபவங்களும் பெருமளவிற்கு எடுத்தாளப்பட்டன. இவற்றை மேலும் வேகப்படுத்துவதற்கு ஏதுவாக 1966ம் ஆண்டில் சீனாவில் தொடக்கிவைக்கப்பட்ட கலாசாரப் புரட்சி பெரும் உந்துதலைக் கொடுத்தது. பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புரட்சிகர பலாத்காரம் பற்றிய பிரசாரங்கள் பரவலாக்கப்பட்டன. முதலாளித்துவப் பாராளுமன்றப் பாதையின் மூலம் சோஷலிசத்தை அடையமுடியாது என்பதனை கடந்தகால வரலாற்றுப் படிப்பறிவாக எடுத்து விளக்கப்பட்டது. பாராளுமன்றத்தைக் 'கள்வர் குகை' எனப் பாராளுமன்றத்தில் வைத்து கண்டிக்கும் அளவுக்கு புதிய கம்யூனிஸ்ட் கட்சியின் பிரசார வேகம் ஓங்கியிருந்தது. அன்றைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரக் கட்சியின் கம்பஹா தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பின் இப்புதிய கம்யூனிஸ்ட் கட்சியில் உறுப்பினராக இணைந்த எஸ். டி. பண்டார நாயக்காவே இக் 'கள்வர் குகை' என்ற பதத்தைப் பாராளுமன்றத்தில் பாவித்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தினார். இவ்வாறு புரட்சிகர அம்சங்கள் நிறைந்த பிரச்சாரங்கள் இலங்கையின் நாலாதிசை களிலும் என்றுமில்லாதவாறு நிறைந்து காணப்பட்டது. இதற்கு அன்றைய தேசிய சர்வதேசிய சூழலும் உறுதுணையாக நின்றன.

1965ம் ஆண்டு ஜனவரியில் கட்சியின் எட்டாவது தேசிய மாநாடு இடம் பெற்றது. இம்மாநாடு இலங்கைப் புரட்சிக்கான கொள்கையை வகுத்துக் கொள்வதில் பெரும் இழுபறிக்கு உள்ளாகியது. இதனால் ஏற்கனவே கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த பிரேமலால் குமாரசிறி குழுவினருக்கும் சண்முக தாசனுக்குமிடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. தேசிய முதலாளித்துவத்துடன் இணங்கிச்சென்று தேசிய ஜனநாயகப் புரட்சிக்கான பரந்த ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்பவேண்டும் என்பதை வலியுறுத்திய பிரேம்லால் சிங்களத் தொழிலாளி வர்க்கத்தினதும் விவசாயிகளினதும் முக்கியத்துவத்தை வலியுறுத்தி நின்றார். அதேவேளை மலையகத் தோட்டத் தொழி லாளர்களின் முக்கியத்துவத்தை இன அடிப்படையில் முற்றாக நிராகரித்தார். அவரது நிலைப்பாட்டை சண்முகதாசன் தனது வாதத்திறமையினால் மறுத்து முறியடிக்க முனைந்து தேசிய முதலாளித்துவத்தின் வாலாக நாம் செயல்பட முடியாது என்றும் தொழிலாளி வர்க்க கட்சியின் தலைமையிலேயே ஐக்கிய முன்னணி உருவாகவேண்டுமே தவிர தேசிய முதலாளித்துவத்துடன் இணங்கிப் போக முடியாது என வாதிட்டதுடன் இலங் கையில் ஆகக் கூடிய புரட்சிகர வர்க்கம் தோட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளி வர்க்கம் தான் எனவும் வாதிட்டார். இவ்விவாதம் கொள்கை ஸ்தாபனம் தந்திரோபாயம் போன்றவற்றை புறநிலை யதார்த்த பூர்வமான ஆய்வு களின் அடிப்படையில் மேற்கொள்வதை தவிர்த்து விவாதத்திறமையின் வழியிலும் புத்தகவாத ரீதியிலும் அமைந்திருந்தது. இதனால் இவ்விரு பகுதியினர் முன் வைத்த கொள்கைகளில் தவறுகள் இருக்கக் காணப் பட்டது. அதனை உரிய வழிகளில் விவாதித்து ஜனநாயக மத்தியத்துவத்திற்கு உட்பட்ட வகையில் விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வும் கொண்டதாக முடிவுகள் மேற்கொண்டிருந்தால் சிறப்பான சூழலைத் தோற்றுவித் திருக்கலாம். அதற்குப் பதிலாக பிரேம்லால் தலைமையி லான குழுவினர் கட்சியை விட்டு விலகிச் சென்றனர். இது புதிய மார்க்சிச லெனினிசக் கட்சியின் முதலாவது பிளவு என்று குறிக்கக் கூடியதாக அது அமைந்தது. அதன் பின்பு ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே. வி. பி.) என்பதன் தலைவராகப் பிற்காலத்தில் தோற்றம்பெற்ற றோகண விஜயவீராவும் அவருடன் சேர்ந்த இளைஞர் களும் தவறான உள்நோக்கத்தின் அடிப்படையில் 1966ன் பிற்கூறிலே கட்சியையும் அதன் வாலிபர் இயக்கத்தையும் விட்டு வெளியேறிச் சென்றனர். பிரேமலாலின் வெளி யேற்றத்திற்குப்பின் நா. சண்முகதாசன் கட்சியின் பொதுச் செயலாளராகி தனது இறப்புவரை அந்தப் பெயருடனே உயிர் வாழ்ந்தார்.

சண்முகதாசனின் தலைமையின் கீழ் மார்க்கிச லெனினிச கட்சியாக அதே நேரத்தில் பழைய பெயரான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்ற பெயருடன் இயங்கி வந்த இப்புதிய கட்சி பிரச்சார அளவில் தொழி லாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள் மத்தியில் புரட்சி பற்றியும் மார்க்சிச லெனினிசம் பற்றியும் எடுத்துரைத்த போதிலும் கொள்கை ஸ்தாபன அளவில் அதிக தெளி வுடன் செயல்படமுடியாத ஒன்றாகவே காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்சி கொழும்பு நகர்ப்பகுதியில் குறிப்பிடக்கூடிய தொழில்துறைத்தொழிலாளர் மத்தியிலும் தனியார்துறை ஊழியர்களிடையேயும் தொழிற்சங்க ரீதியில் செல்வாக்குடையதாக விளங்கியது. இதற்கு புரட்சிகர அரசியல் மட்டும் அடிப்படைக் காரணம் என்று முழுமையாக கூறி விடமுடியாது. கடுமையான தொழிற்சங்க வேலை முறையின் தொடர்ச்சியே காரணமாகும். அதேபோன்று மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பெருமளவு செல்வாக்குக் காணப்பட்டது. அங்கு தொழிற் சங்க வேலைகளுடன் புரட்சிகர சுலோகங்களைக் கொண்ட பிரச்சாரமும் கலந்திருந்தமை புரட்சிகர சூழல் போன்ற தோற்றத்தை அளித்தது. அங்கும் அரசியல் ஸ்தாபன வேலை என்பது மிகக் குறைந்த அளவிலேயே காணப்பட்டது. தொழிற்சங்க வேலை முறையானது பழைய பாணியில் தொடர அரசியல் சுலோகங்கள் மட்டும் அவ்வப்போது இணைக்கப்பட்டன. இதனால் இளம் சந்ததியினரிடையே புரட்சிகர உணர்வின் வேகம் பரவிவந்தமை காணக்கூடியதாக அமைந்தது. வட பகுதியில் மேற்கூறப்பட்டவற்றைவிட சற்றுவித்தியாசமான நிலை வளர்ந்து வந்தது. அதற்குக் காரணம் வடபகுதியில் தொழிற்சங்க வேலை முறை குறைந்த அளவிலும் அரசியல் ஸ்தாபன வேலைகள் கூடியளவிலும் முன்னெடுக்கப்பட்டமை ஆகும். இவ்விடயத்தில் கட்சியின் மத்திய தலைமையை விட பிரதேச ரீதியிலான தலைமைத்துவம் மிகவும் புத்திக்கூர்மையுடனும் தூரநோக்குடனும் வர்க்க அடிப்படைகளைக் கணித்து செயல்பட்டமையைக் குறிப்பிட்டுக் கூறுவது அவசியம். ஏனெனில் ஏனைய பகுதிகளில் மேற்படி கட்சியின் வேலைகள் காலப்போக்கில் தேய்ந்து கொண்டு செல்ல வடபகுதியில் பல சிரமங்கள் மத்தியில் அதன் அடிப்படை தொடரக்கூடியதொன்றாகக் காணப்பட்டமை தக்கதோர் சான்றாகும்.

சண்முகதாசன் தலைமையிலான புதிய கம்யூனிஸ்ட் கட்சி 1964-70 காலகட்டத்தில் குறிப்பிடக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகள் சிலவற்றைச் சாதித்த அளவில் அதன் புரட்சிகரத்தன்மையும், மார்க்சிச–லெனினிச நிலைப் பாட்டையும் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது. ஆனால் ஒரு தொழிலாளி வர்க்கக் கட்சியை பலமுள்ள தாகக் கட்டி எழுப்புவதில் தலைமையின் பலவீனம் நாளுக்குநாள் அதிகரித்துச் சென்றது. பிளவுகளும் பிரிவுகளும் தொடர்ந்து கொண்டே சென்றன. அதற்கு அடிப்படையாக அமைந்தது கொள்கை வகுப்பதில் முன்னணிப் பாத்திரத்தை வகித்து நின்றவர்களில் தனது தத்துவார்த்த தர்க்கங்களை பிடிவாதமாகவும் ஒருமுனை வாதமாகவும் நிலை நிறுத்திவந்த நா. சண்முகதாசனின் நிலைமாறா நிலைப்பாடு ஒரு காரணமாகும். இந்நிலை மாறா நிலைப்பாடு என்பது அடிப்படையில் இயங்கியல் கோட்பாட்டின் எதிர்முனைபானநிலையியல் போக்குடன் இணைந்ததாக அமைந்திருந்தது. அவரது தத்துவார்த்த கொள்கை நிலைப்பாட்டின் குறைபாடுகள் பல சந்தர்ப் பங்களில் தவறான வெளிப்பாடாகவும் அதன் மூலமான பின்னடைவுகளாகவும் காணப்பட்டது. பாராளுமன்றப் பாதையை விமர்சனம் செய்து மிகப் பரந்த அளவிலான பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்ட 1964-65 சூழலில் 1965ம் ஆண்டு முற்கூறில் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர் தலில் பங்கு கொள்ளும் முடிவினை கட்சி மேற்கொள்ள சண்முகதாசன் காரணமாக இருந்தார். அவர் கொழும்பு மத்திய தொகுதியிலும் மற்றும் வவுனியாவில் ஆரிய வன்சா குணசேகராவும், காங்கேசன்துறையில் சு. வே. சீனிவாசகமும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டனர். பாராளுமன்றத்தை நிராகரித்து அதனை அம்பலமாக்க எம்மை அங்கு அனுப்பிவையுங்கள் என்ற சுலோகத் துடன் அத்தேர்தலில் கட்சி போட்டிக்கு நிறுத்தப் பட்டது. அதில் தோல்வி கிடைத்தது. அதன்பின் 1969ன் ஒன்பதாவது மாநாட்டில் பாராளுமன்றத் தேர்தலையும் ஏனைய உள்ளூராட்சித் தேர்தல்களையும் முற்றுமுழுதாக நிராகரித்துப் பகிஷ்கரிக்கும் முடிவு மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளப்பட்டது. இம்முடிவு முன்னுக்குப்பின் முரணானதும் கொள்கைத் தெளிவு அற்றதுமாகும்.

இப்புதிய கட்சியை பத்திரிகைகள், 'சீனசார்பு' கம்யூனிஸ்ட் கட்சி என்றே அடையாளப்படுத்திக் காட்டின. அவ்வாறு அவை செயற்படுவதற்கு சண்முகதாசன் கட்சியின் பெயரைப் பொறுத்து கொண்டிருந்த பிடிவாதமான அர்த்தமற்றப் போக்கும் ஒரு காரணமாகும். பழைய கட்சியின் பெயரைத் தொடர்வதையும் அதற்குக் காரணம் தமது புரட்சிகரக் கொள்கை காரணமாக அப்பழைய கட்சி விரைவில் அழிந்துவிடும் என்ற நப்பாசையைக் கொண்டிருந்தமையாகும். எனவே புதிய கட்சிக்குப் புதிய பொருத்தமான பெயர் சூட்டபபடாததால் 'சீனசார்பு' அல்லது 'பீக்கிங் சார்பு' எனப் பிரசாரங்கள் செய்யப்பட்டன இதில் அடங்கியிருந்த தவறான அம்சங்களின் தன்மைகளைப் புரிந்துகொள்ள சண்முகதாசன் மறுத்தார். மேலும் இலங்கையின் புரட்சி பற்றிய கண்ணோட்டத்தில் ஜனநாயக, சோஷலிச காலகட்டங்கள் பற்றியும் பரந்த ஐக்கிய முன்னணி பற்றியும் போதிய தெளிவைப் பெறுவதில் சண்முகதாசனால் உரிய தலைமைத்துவத்தை வழங்க முடியவில்லை. அவர் ஜனநாயகப் புரட்சியின் காலகட்டத்தை வெறும் சூத்திரமாகக் கொண்டாரே தவிர அதற்குரிய ஐக்கிய முன்னணித் தந்திரோபாயத்தை வகுக்க முடியாது சோஷலிச காலகட்டத்திற்கான கொள்கைகளையே திரும்பத் திரும்பக் கூறிவந்தார். இதனால் இலங்கையின் விசேஷ சூழலுக்கு ஏற்ப மார்க்சிச லெனினிசத்தைப் பிரயோகிக்கும் வழிமுறையைத் தேட முடியாதவராகினார். ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் என்பது அவரைப் பொறுத்து புத்தகவாதத் தன்மை கொண்ட தத்துவ விளக்கங்களாக மட்டும் இருந்தனவே தவிர நடைமுறை சார்ந்த செயல் வடிவங்களாக முன்னெடுக்கப்படவில்லை. இதே போன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையிலும் சுயநிர்ணய உரிமை சம்பந்தமாக ஆரம்பத்தில் குழப்பகரமான நிலைப் பாட்டை அவர் கொண்டிருந்தார். சுயநிர்ணய உரிமை சமன் பிரிவினை என்ற வாய்ப்பாட்டையும் தேசிய இனத் துக்குரிய தோழர் ஸ்டாலின் முன்வைத்த நான்கு வரை யறைகளை வளர்ச்சியற்ற வரட்டுக் கோட்பாடுகளாகவும் கைப்பிடித்து இருந்தார். இதனால் அவரால் சுயநிர்ணய உரிமை பற்றிய சரியான நிலையை எடுக்க முடியாது இருந்த அதேவேளை இறுதிக் காலத்தில் அதனை அக நிலை ரீதியாக மாற்றிக்கொள்ளவும் செய்தார். மேலும் சர்வதேசிய விவகாரங்களிலும் இப்புதிய கட்சியானது சீனக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்தும் அதனைப் பிரதி செய்ய முற்பட்டும் வந்தபோக்கு முனைப்புடையதாக இருந்தது. அது மட்டுமன்றி பல சகோதரக் கட்சிகளின் உள்விவகாரங்களில் தலையிட்டு சரி பிழைகளைப் பகிரங் கமாக எடுத்துக்கூறி விமர்சனம் செய்து நிற்கும் நிலை யினை மிகத் தவறானதொன்றாக சண்முகதாசன் மேற் கொண்டு வந்தார். மேற்கூறிய விடயங்களில் யாவற் றுக்கும் சண்முகதாசன் என்ற தனிநபர் மீது தவறுகளைச் சுமத்தி கண்டனம் தெரிவிப்பது நோக்கமன்று. ஆனால் ஒரு தலைமைத்துவத்தில் தனிநபரின் பாத்திரம் மிக முக்கியமானது என்பதனையும் பிடிவாதமும் விட்டுக் கொடாமையும் சுயவிமர்சனத்திற்கு அப்பால் நின்று செயல்பட முனைவதன் விளைவுகளும் எவ்வளவு ஆபத் தானவை என்பதற்கு சண்முகதாசனின் தலைமைத்துவப் பங்களிப்பின் குறைபாடுகள், தவறுகள் என்பன விமர்சன நோக்கில் முன் அனுபவமாகக் கொள்ளப்பட வேண்டிய தாகும். ஏனெனில் மார்க்சிச லெனினிசக் கட்சி ஒன்றி னைக் கட்டி எழுப்பிச் செல்லும் மார்க்கத்தில் மீண்டும் அத்தவறுகள் ஏற்படாதவாறு தடுக்கப்படுவதற்கு அதுவே உத்தரவாதமாகவும் அமையமுடியும். மேற்கூறப்பட்ட தவறுகள் காரணமாகவே 1964-65 காலகட்டத்தில் மார்க்சிச லெனினிச கொள்கைகளை முன்னெடுப்பதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதி பூண்ட புதிய கம்யூனிஸ்ட் கட்சியின் பின்னால் அணிதிரண்ட புரட்சிகர ஆவல் கொண்ட மிகப்பெரும் அணியினர் காலப்போக்கில் அதிருப்தி விரக்தி கொண்டவர்களாகி கட்சியை விட்டுவிலகிச் செல்லத் தொடங்கினர். இவ்வாறு காலத்திற்குக் காலம் விலகிச் சென்றவர்களில் சிலர் தமது சொந்த நலன்கருதி சுதந்திரக் கட்சியிலும் பழைய வலதுசாரிக் கம்யூனிஸ்ட் கட்சியிலும் இணைந்து கொண்டனர். இளம் சக்திகள் சில அதிதீவிர நிலைப்பாட்டுடன் ஜே.வி.பி.யின் பின்னாலும் அதே வேளை அநேகமான நல்ல சக்திகள் தம்மை உதிரி நிலைக்கு உள்ளாக்கியும் கொண்டன. இன்றும் அவர்களிடம் மார்க்சிச லெனினிசக் கருத்துக்கள் காணப்பட்ட போதிலும் தனிமனிதர்களாகிப் பார்வையாளர்களாகவே இருந்து வருகிறார்கள்.

பழைய கம்யூனிஸ்ட் கட்சி வலதுசாரிப் பாதையை மேற்கொண்டு பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தில் வீழ்ந்து சீரழிந்துநிற்க, மார்க்சிச லெனினிசக் கட்சியாக உருவாகிய புதிய கட்சி புரட்சிகரக் கொள்கைகளை குறிப்பிட்டளவிற்கு முன்னெடுத்துச்சென்ற போதிலும் தொடர்ந்தும் ஒரு பலமிக்க கட்சியாக வளரமுடியாது காலப்போக்கில் தேய்ந்து சிதைவுற்றுப் போகவேண்டியேற்பட்டது. அதேவேளை ஒரு பகுதி மட்டுமே மார்க்சிச லெனினிசத்தையும், புரட்சிகர லட்சியங்களையும் தொடர்ந்து முன்னெடுக்கும் நோக்கில் ஒரு கட்சியை கொள்கை, ஸ்தாபனம், தந்திரோபாயம் என்பனவற்றின் மீது கட்டியெழுப்ப முன்வந்தது. அதுவே சண்முகதாசனின் தலைமைத்துவத்தை இறுதியாக நிராகரித்து 1978ம் ஆண்டில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பெயரில் உருவாக்கப்பட்ட கட்சியாகும். அக் கட்சியே 1991ம் ஆண்டின் நடுக்கூறிலே தனது இரண்டாவது தேசிய மாநாட்டின் மூலம் தனது பெயரைப் புதிய ஜனநாயகக் கட்சி என மாற்றிக்கொண்டு செயல்பட்டு வரும்கட்சியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று மார்க்சிச லெனினிச அடிப்படையில் உருவாகி வளர முயன்ற புதிய கட்சிக்கு சண்முகதாசன் என்ற தலைமைத்துவ நபரினால் உரிய வழிகாட்டலும் தலைமையும் வழங்கப்பட்டிருப்பின் அதன் புரட்சிகரத் தாக்கம் இலங்கையில் வேறுவிதமாக அமைந்திருக்கும். அதற்குப் பதிலாக சண்முகதாசன் 'இறுதிவரை கொள்கை மாறாதவர்' 'பிடிவாதம்மிக்கப் புரட்சிவாதி', 'மார்க்சிச தத்துவவித்தகர்' என்ற அவரது அபிமானிகளது புகழ்ச்சிக்குரிய கூற்றுக்களின் நினைவுகளோடு மட்டும் திருப்தி கண்டு மறைந்து விட்டார். அவரது குறைபாடுகளை மட்டுமன்றி நிறைவான அம்சங்களையும் கவனத்திற் கெடுப்பது அவசியம். கொள்கைப்பற்று, துணிவு, தியாக மனப்பான்மை, எதிரி வர்க்கத்திற்கு விட்டுக்கொடாமை, சுயநலம்பாராது தொடர்ச்சியான பணி, வாதிடும் சாதுரியம் போன்றன என்றும் நிலைக்கக் கூடியவையாகும்.

## ◻ புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள்

பழைய கட்சியான பாராளுமன்றவாத கம்யூனிஸ்ட் கட்சி தொழிற்சங்க இயக்கத்தை ஒரு மிதவாதப்போக்கில் முன்னெடுப்பதையே குறியாகக் கொண்டிருந்தது. அதனையும்மீறி வேலைநிறுத்தப் போராட்டங்கள் இடம் பெற்ற சூழலில் அவற்றை முன்செல்லவிடாது தடுப்பதிலும் இனவாதத்தைப் புகுத்துவதிலுமே அக்கறையாக, இருந்துவந்தது. இதற்குக் காரணம் தாங்கள் பதவிக்கு வரும்வேளையில் தொழிலாளி வர்க்கம் தமது கோரிக்கைகளை முன்வைத்துப் போராடாமல் இருப்பதற்குரிய வர்க்க மழுங்கடிப்பை முன்கூட்டியே செய்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே அவ்வாறு நடந்து கொண்டார்கள். அவர்கள் 1965-70 யூ. என். பி தலைமையிலான ஆட்சியை எதிர்ப்பதற்கு இனவாத அடிப்படை கொண்ட இயக்கங்களை முன்னெடுத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய சூழலில் புதிய கட்சியான மார்க்சிச லெனினிசக் கம்யூனிஸ்ட் கட்சி குறைபாடுகளைக் கொண்டிருந்தபோதிலும் தொழிலாளி வர்க்கத்தையும் விவசாயிகளையும் மற்றும் உழைக்கும் மக்கள், அறிவுஜீவிகளிடையே புரட்சிகர இயக்கங்கள் போராட்டங்கள் பற்றிய தீவிர பிரச்சாரங்களை 1964–70 காலகட்டத்தில் முன்னெடுத்துவந்தது. இதற்கு சர்வதேசிய சூழலும் தேசிய ரீதியில் யூ. என். பி— தமிழரசு — தொண்டமான் இணைந்திருந்த 'தேசிய' அரசாங்கத்தின் மக்கள் விரோத நிலைப்பாடும் தகுந்த களமாக அமைந்தன.

கொழும்பு நகரத் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியில் பல்வேறு வேலைநிறுத்தப் போராட்டங்கள் இடம்பெற்று வந்தன. தனியார்துறையிலும், பொதுசேவைத்துறையிலும் நடைபெற்ற இவ்வேலை நிறுத்தங்களை புதிய கட்சியின் தலைமையிலான இ தொ ச. சம்மேளனம் (CTUF) தலைமை தாங்கி நடத்திவந்தது. அத்தவேளை 1966ம் ஆண்டு ஜனவரி எட்டாந்திகதி இடம்பெற்ற இனவாதம் கொண்ட வேலைநிறுத்தத்தை இப்புதிய கட்சியும் அதன் தொழிற்சங்கமும வன்மையாகக் கண்டித்து நிராகரித்து நின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் தனியார் துறைகளில் இடம்பெற்ற போராட்டங்களினால் சலுகைகளும் பொருளாதார வெற்றிகளும் கிட்டின. 1967ம், 1968ம் ஆண்டுகளில் நடைபெற்ற பொது வேலை நிறுத்தங்கள் தொழிலாளர்களின் புரட்சிகர உணர்வுகளை நன்கு வெளிப்படுத்தின. அத்துடன் ஆட்சியில் இருந்த யூ. என். பியை அம்பலமாக்கி நின்றன. வாழ்க்கைச் செலவின் உயர்வும், உலக வங்கியின் நிபந்தனைகளுக்கு இணங்கிப்போன செயல்களும் நன்கு வெளிச்சப்படுத்திக் காட்டப்பட்டன. கொழும்பு நகர்ப்புறங்களில் இவ்வாறு தொழிற்சங்க வேலைகளின் ஊடே புரட்சிகரப் பிரசாரங்களும் இயக்கங்களும் முன்னெடுக்கப்பட்ட அதேவேளை அனுராதபுரம், பொலநறுவை, மொனராகலை, எம்பிலிப்பிட்டிய, வவுனியா, கிளிநொச்சி முல்லைத்தீவு போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவசாயப் பிரதேசங்களில் விவசாயிகள் மத்தியில் குறிப்பிட்டளவுக்கு வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. இவற்றை ஒன்றிணைக்கும் விதத்தில் 1968ம் ஆண்டின் நடுக்கூறிலே அனுராதபுரத்தில் மிகப்பெரிய விவசாயிகளின் தேசிய மாநாடு நடைபெற்றது. அம்மாநாடு விவசாயிகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் சிலவற்றை அடையாளப்படுத்தி அதற்கான விவசாயிகளின் இயக்கங்களையும், போராட்டங்களையும் முன்னெடுக்க வலியுறுத்தியது. ஆரியவன்சா குணசேகரா, டி.டி. பெரேரா, டி. எல். அப்புகாமி, வீ. ஏ. கந்தசாமி போன்றவர்கள் அன்று விவசாயிகள் மத்தியில் செல்வாக்குடைய தலைவர்களாக விளங்கினர். விவசாயிகள் மத்தியிலான அக்கால வேலை முறைகளின் மூலம் விவசாயிகளிடையே காணப்பட்ட புரட்சிகர உணர்வும், போராட்ட அம்சங்களும் இலங்கைப் புரட்சியில் அவர்களது பங்களிப்பின் பாத்திரத்தை நன்கு எடுத்துக் காட்டியது.

மேலும் அக்காலத்தில் வாலிபர் இயக்கமும் வேகமாக வளர்ச்சி பெற்றுவந்தது. கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களில் மட்டுமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளில் அது பரவி நின்றது. இதன் பரந்த தாக்கத்தைக் கண்டு அதன் ஊடே தான் ரோகண விஜயவீரா தனது பேரினவாதப் போக்குக் கொண்ட சிறு முதலாளித்துவ புரட்சி இயக்கத்திற்கு அடிப்படையிலான சக்தியாக இளைஞர்களைத் திசைதிருப்பிச் செல்ல முடிந்தது. ஆனால் இத் தவறான மார்க்கத்தில் செல்லாது இரத்தினபுரியை மையமாகக்கொண்ட பகுதிகளில் இருந்தும், வடக்கில் வளர்ந்து வந்த வாலிபர் இயக்கமும், மலையகமும் மற்றும் சில குறிப்பான பிரதேசங்களில் இருந்த வாலிபர் இயக்கமும் தவறிக்கொண்டன.

**மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மார்க்சிச லெனினிசத்தின் அடிப்படையிலான புரட்சிகரப்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சாரங்கள் முதன்முதலாக கொண்டு செல்லப்பட்டது. இப்பிரச்சார வீச்சினால் தொழிலாளர்கள் மத்தியில் புதிய உத்வேகம் பிறந்து தமது சக்தியை உணரக்கூடிய சூழலும் உருவாகியது. இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கமான செங்கொடிச் சங்கம் தொண்டமானின் ஆதிக்கத்தில் இருந்து வந்த இ. தொ. காவிற்கு எதிரான புரட்சிகர தொழிற்சங்கம் என்ற நிலைக்கு வேகமாக வளர்ச்சி கண்டது. இவ்வளர்ச்சியானது அறுபதுகளின் பிற் கூறிலே எண்ணிக்கையளவில் ஒரு லட்சம் அங்கத்துவத்தை எட்டுவதாக அமைந்திருந்தது. இவ்வளர்ச்சி பல்வேறு தோட்டங்களில் இடம்பெற்ற வெற்றிகரமான வேலை நிறுத்தப் போராட்டங்களினால் உருவாகியவையாகும். தொழிலாளர்களின் பலமும் உணர்வலைகளும் வெள்ளைத் துரைகளின் அன்றுவரையான அதிகாரப்பிடிக்கு விடப் பட்ட புரட்சிகர சவாலாக அமைந்தது. மத்திய, ஊவா, சப்பிரகமுவா, மாகாணங்களில் செங்கொடிச் சங்கத்தின் செல்வாக்கு அதிகரித்து வந்ததுடன் நுவரெலியா மாவட்டத்தில் அதன் பலமும் வேகமும் வீறுடையதாக விளங்கியது. தோட்ட துரைமாரின் அட்டகாசத்தை நேரடியாக எதிர்த்து அவர்களது தற்பாதுகாப்பு ஆயுதங் களை பறித்தெடுக்கும் அளவுக்கு தொழிலாளர்களின் துணிவு வளர்க்கப்பட்டது. ஒரு வேலைநிறுத்தப் போராட்டத்தில் பொலீசினுடைய துப்பாக்கிகூடத் தொழிலாளர்களின் கைகளுக்கு மாறிய சம்பவம் இடம் பெற்றது. மலையகத் தொழிலாளர்களிடையே இடம் பெற்ற மூன்று முக்கிய வேலைநிறுத்தங்களில் இப்புதிய கட்சியும் அதன் தொழிற்சங்கமான செங்கொடிச் சங்கமும் புரட்சிகர நிலைப்பாட்டைக் கொண்டு தலைமை அளித்தமை அக்கால கட்டத்தில் குறிப்பிடக்கூடிய இடது சாரி இயக்க நிகழ்வாகியது. 1939–40களில் சமசமாஜக் கட்சி தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் முன்னெடுத்த போராட்டங்களைவிட இப்போராட்டங்கள் பல முனை களில் வளர்ச்சி பெற்றதாகக் காணப்பட்டது. ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டன் பகுதியில் அமைந்துள்ள மேபீல்ட் தோட்ட வேலைநிறுத்தம். இரண்டாவது வட்டகொட-தலவாக் கொல்லைக்கு அண்மித்த மடக்கம்புற தோட்டப் போராட்டம். மூன்றாவது பதுளை மாவட்டத்தில் கீனாகலைத் தோட்டத்தில் நடைபெற்ற போராட்டமாகும்.

மேபீல்ட் தோட்டத்தில் இடம் பெற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் வெள்ளைத்துரையின் பாதுகாப்புக்கு பொலீஸ் படையே திரண்டுவந்தது. ஆயுதம் ஏந்திய அப்படையுடன் தொழிலாளர்கள் நேருக்குநேர் மோதினார்கள். பொலீஸ் ஜீப் புரட்டப்பட்டு பொலீஸ் படை தாக்குதலுக்கு உள்ளாகியது. ஆண் - பெண் தொழிலாளர்கள் திரண்டு தமது பலத்தையும் புரட்சிகர மனோ திடத்தையும் வெளிப்படுத்தினர். அதே போன்றதே மடக்கம்புர தோட்டத்தில் இடம்பெற்ற வேலை நிறுத்தமாகும். மூன்றாவதாக பதுளை மாவட்டத்தில் கீனாகலைத் தோட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் பி இராமையா, லெ. அழகர்சாமி ஆகிய தொழிலாளிகள் தமது உயிர்களை பொலீஸ் துப்பாக்கிக்கு இரையாக்கி தியாகியானார்கள். அதில் ஒருவர் செங்கொடிச் சங்கத்தையும், மற்றையவர் இ. தொ. காவையும் சேர்ந்தவர்களாவர். இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பாராளுமன்ற இடதுசாரிகள் பங்கு கொண்ட ஐக்கிய முன்னணி ஆட்சியின் ஆரம்பத்திலேயே இடம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு *1964-70* காலகட்டத்தில் மலையகத் தொழிலாளரிடையே என்றுமில்லாதவாறான புரட்சிகர உணர்வு மிக்க வேலைநிறுத்தப் போராட்டங்களுக்கு மார்க்சிசக் லெனினிசக் கட்சி தனது தொழிற்சங்கத்தின் ஊடே தலைமை கொடுத்துவந்தபோதிலும் அரசியல் ஸ்தாபன வேலைகள் உரிய கவனிப்புடன் முன்னெடுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படவில்லை. அறிவுஜீவிகள், மாணவர்களிடையே ஆரம்ப தொடர்புகள் இருந்தபோதிலும் அவை நீண்டகால நோக்கில் கட்டி வளர்க்கப்படவில்லை. இருப்பினும் மலையகத் தோட்டத்தொழிலாளர்களின் நீண்ட இருள் சூழ்நத வரலாற்றில் இக்காலகட்டம் வரலாற்றுப் பதிவுக்குரிய தொன்றாகும். மலையகத்தின் முகடுகளிலே செங்கொடிகள் கம்பீரமாக பறந்துகொண்டிருக்க அதன் கீழ் தொழிலாளர்கள் ஆயிரமாயிரமாய் அணிவகுத்த ஓர் காலப்பகுதியாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் அறிவுஜீவிகள், பல்கலைக்கழக மாணவர்களிடையேயும் மார்க்சிச லெனினிசக் கருத்துக்கள் பரவி வந்தன. இலங்கை ஆசிரியர் சங்கம் பலமுள்ளதாக மாறவும் புரட்சிகரமான அரசியல் முடிவுகளை மேற்கொள்ளவும் அதனுள் இயங்கிவந்த புதிய கட்சி உறுப்பினர்களான இளம் ஆசிரியர்கள் முக்கியமான பாத்திரத்தைக் கொண்டிருந்தனர். அதேபோன்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தில் கணிசமான ஆதரவு கட்சிக்கு வளர்ந்து காணப்பட்டது. பல்கலைக்கழகங்களில் இக்கால கட்டத்தில் மாணவர்களிடையே கட்சி செல்வாக்கு உடையதாக விளங்கியது.பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சோஷலிச மாணவர் சங்கம் மிகப் பலமுள்ளதாகத் திகழ்ந்தது. இம்மாணவர் சங்கததின் தலைமையில் இடம் பெற்ற மாணவர் போராட்டம் பொலீஸ் தடையை எதிர்த்து மோதலை ஏற்படுத்தும் அளவுக்கு மாணவர்களின் புரட்சிகர அம்சமாக வெளிப்பட்டது. மாணவர்கள் மட்டுமன்றி பல்கலைக்கழக ஆசிரியர்களும் மார்க்சிச லெனினிசத்தின்பால் ஈர்க்கப்படும் நிலைக்கு புரட்சிகர அலை மேவி நின்றது. அக்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களில் அநேகமானோர் தங்களைப் 'பீக்கிங் சார்பினர்' எனக் கூறிக்கொள்வதை ஒரு 'நாகரீகமாக'க் கூடக் கொண்டிருக்கும் அளவுக்கு அவர்களிடையே கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வாக்கினை வகித்து நின்றது. அவ்வேளை சிங்கள தமிழ் முஸ்லீம் வேறுபாடு என்பது சிறிதளவும் வெளிப்படவில்லை என்பது கவனத்திற்குரியதாகும். இந்நிலை யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்ட பல்கலைக்கழக வளாகத்தில் 1977ம் ஆண்டின் நடுக்கூறுவரை நிலவி வந்தமையை சுட்டிக்காட்டுதல் அவசியமாகும், பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் மட்டுமன்றி பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் புரட்சிகர அரசியல் பரவி இருந்தது.

1964ல் உருவாகிய புதிய கம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றத்துடன் வடபகுதியில் புரட்சிகரமான போராட்டங்களுக்கான நிலைமைகள் வளரத்தொடங்கின. ஏற்கனவே குறிபிட்டளவுக்கு அரசியல் ஸ்பான ரீதியில் கட்சி பலமிடையதாக விளங்கிய வடபகுதியில் மு. கார்த்திகேசன், சு. வே. சீனிவாசகம், கே. ஏ. சுப்பிரமணியம், கே. டானியல், வீ. ஏ. கந்தசாமி போன்ற தலைவர்கள் புரட்சிகர நிலைப்பாட்டை எடுத்து புதிய கட்சியை வழிநடத்தினர். அதேவேளை அ. வைத்திலிங்கம், எம்.சி.சுப்பிரமணியம், வ. பொன்னம்பலம், ஐ. ஆர். அரியரட்ணம் போன்றோர் வலதுசாரிப் பாதையில் பழைய கட்சியை பாதுகாக்க முற்பட்டனர். ஆனால் ஆரம்பத்தில் இருந்தே கட்சி, வாலிபர் இயக்கம் என்பனவற்றில் பெரும்பான்மையான உறுப்பினர்கள் புரட்சிகர நிலைபாட்டையே எடுத்திருந்தனர். கட்சிப் பிளவுக்குப் பின் இடம்பெற்ற 1964ம் ஆண்டின் மேதினம் புதிய கட்சியின் மிகப் பெரிய செல்வாக்கினை வெளிப்படுத்தியது. அத்துடன் கட்சியின் மார்க்சிச லெனிசக் கொள்கை காரணமாக வாலிபர் இயக்கத்தின் ஊடாக புதிய இரத்தம் பாச்சப்பட்டு வீறும் வேகமுமுடையதாக கட்சி மாறியது. 1965ம் ஆண்டில் யூ. என். பி- தமிழரசு அரசாங்கம் கொழும்புநகர் தவிர்ந்த நாட்டின் எப்பகுதியிலும் மேதின ஊர்வலம் நடத்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது எனவும் கூட்டம் மட்டுமே நடத்தலாம் என்ற ஒரு தடை உத்தரவைப் பிறப்பித்தது. ஏனைய கட்சிகள் அதனை ஏற்றுக்கொண்டன. ஆனால் புதிய கட்சி அத் தடையை மீறி ஓர் ஊர்வலத்தை யாழ்பாணத்தில்நடாத்தி முடித்தது. ஊர்வலம் முடியும்வரை பொலீஸ் அவ்விடத் திற்கு வருவதைத் தவிர்த்து ஊர்வலம் முடிவுற்ற பின்பே வந்து விசாரித்துச் செல்லும் அளவுக்கு ஊர்வலம் சக்தி மிக்கதாக இருந்தது.

இத்தகைய ஓர் வளர்நிலைச் சூழலை நன்கு அவதா னித்த கட்சியின் வடபிரதேசத் தலைமை மத்திய குழுவின் முடிவோடு சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான இயக்கத்தையும் போராட்டத்தையும் முன்னெ டுக்க முடிவுசெய்தது. இதற்கான முடிவு மேற்கொள்ளும் கட்சியின் தலைமைப் பீடத்தில் சில தவறான கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதாவது சாதி தீண்டாமைக்கு எதிராகக் கட்சி தனியான போராட்டத்தை முன்னெ டுத்தால் அது உயர்சாதி எனப்படும் மக்களிடம் இருந்து தனிமைப் பட்டுவிடவேண்டி ஏற்படலாம் என்று வாதிடப்பட்டது. இது அடிப்படையில் வர்க்கப் பார்வையை இழந்து நிற்கும் பாராளுமன்றக் கண்ணோட் டம் கொண்டது என்பதனை சண்முகதாசன் உட்பட பெரும்பான்மையான தோழர்கள் எதிர்த்தனர். வட பிரதேசத்தில் இத்தவறான கருத்தினை எதிர்த்து சரியான கருத்தை வலியுறுத்துவதிலும் அதற்கான போராட்ட முனையைத் திறப்பதிலும் மு. கார்த்திகேசன், கே.ஏ. சுப்பிரமணியம், சு. வே. சீனிவாசகம், வீ.ஏ. கந்தசாமி, கே. டானியல் போன்றவர்கள் முக்கியமானவர்களாகத் திகழ்ந்தனர். இதன் அடிப்படையிலேயே 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21ம் திகதி இப்புதிய கம்யூனிஸ்ட் கட்சி சுன்னாகத்தில் இருந்து ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்த முன்வந்தது. 'சாதி அமைப்புத் தகரட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவ நீதி ஓங்கட்டும்' என்ற செம்பதாகையின் கீழ் அவ் ஊர்வலம் பொலீஸ் விதித்த தடையையும் மீறி சந்தை மைதானத்தில் இருந்து ஆரம்பித்து யாழ் நகர் நோக்கி வீறுநடை போட்டது. அவ் ஊர்வலம் சுன்னாகம் பொலீஸ் நிலைய முன்றலை சென்றடைந்தபோது முன்கூட்டியே தயார்நிலையில் வைக்கப்பட்ட குண்டாந் தடிப் பொலீஸ்படை ஊர்வலத்தின்மீது தனது மூர்க்கத்தனமான தாக்குதலை நடாத்தியது. உயர் பொலீஸ் அதிகாரிகள் ஸ்தலத்தில் நின்று ஆணையிட அத்தாக்குதல் தொடுக்கப்பட்டது. ஊர்வலத்தினைத் தலைமைதாங்கிச் சென்றவர்கள் தாக்கப்பட்டனர். கே. ஏ. சுப்பிரமணியம், வீ. ஏ. கந்தசாமி, இ.கா. சூடாமணி ஆகிய மூவரும் கடுமையாகத் தாக்கப்பட்டு மேல்சட்டைகள் கிழிக்கப்பட்ட நிலையில் பொலீஸ் நிலையத்தினுள் இழுத்துச் செல்லப்பட்டு அடைக்கப் பட்டனர். தாக்குதலுக்கு உள்ளான சு.வே. சீனிவாசகம், எஸ். ரி. என். நாகரட்ணம், கே. டானியல், சி. கா. செந்திவேல், டி.டி. பெரேரா மற்றும் கட்சி வாலிபர் இயக்க ஊழியர்கள் மீண்டும் ஊர்வலத்தை யாழ் நகர் நோக்கி நடாத்துவதில் விடாப்பிடியாக நின்றனர். இறுதியில் யாழ் நகர் நோக்கி ஊர்வலத்தினர் நடந்து செல்வதற்கு பொலீஸ் அனுமதிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. யாழ் நகர் முற்றவெளியில் பொதுக்கூட்டம் சு.வே. சீனிவாசகம் தலைமையில் இடம்பெற்றது. ஆயிரக் கணக்கான மக்கள் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அன்றைய கட்சியின் பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன், கே. டானியல், சி.கா. செந்திவேல் டி.டி. பெரேரா ஆகியோர் உரையாற்றினர். அக் கூட்டத்தில் சாதி அடக்குமுறைக்கு எதிரான போராட் டத்திற்கு கட்சியின் சார்பில் அறைகூவல் விடுத்த சண்முகதாசன் தனது பேச்சின்போது அமெரிக்க நீக்ரோ மக்களின் நிறவெறிக்கு எதிரான போராட்ட உதார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணத்தை எடுத்துக்காட்டினார். தாழ்த்தப்பட்ட மக்களின் போராட்டம் உயர்சாதியினர் அனைவருக்கும் எதிரான போராட்டமாக இருக்கவேண்டும் எனக் கூறிய கூற்று பின் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. இப்போராட்டம் உயர்சாதி தாழ்ந்தசாதி முரண்பாடு அல்லவென்றும் வர்க்க அடிப்படையில் உயர்சாதியில் உள்ள உழைக்கும் வர்க்க சக்திகளை அரவணைத்து சாதி தீண்டாமையை வற்புறுத்தும் சாதிவெறியர்களுக்கு மட்டும் எதிரான போராட்டமாக முன்னெடுப்பதினாலேயே அது பரந்த வெகுஜனப் போராட்டமாக வளரமுடியும் என்பதனை கே. ஏ. சுப்பிரமணியம், சு. வே. சீனிவாசகம் போன்ற தலைவர்கள் வற்புறுத்தினர். இத்தகைய அடிப்படையான கொள்கைத் தெளிவு சரியான மார்க்சிச லெனினிச நிலைப்பாட்டில் இருந்து எடுக்கப்பட்டதனாலேயே சாதி அடக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் மிகப் பரந்த ரீதியில் அதன் வெற்றிவரை முன்னெடுக்கப்பட்டது. மேற்படி புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் இடம், சூழலுக்கு ஏற்றவாறு சட்டத்திற்கு உட்பட்டும் சட்டத்தை மீறியும் பல்வேறு வடிவங்களில் முன்னெடுக்கப்பட்டது. அந்தவகையில் அன்று உருவாக்கப்பட்டதே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் என்ற பரந்த போராட்ட ஸ்தாபனமாகும். அதன் தலைவராக எஸ்.ரி.என். நாகரட்ணம் இருந்து வந்தார். அப்போராட்டத்தின் மையப்புள்ளி மக்களது முழுமையான பங்களிப்பாகவும் அவர்களது சொந்தப் போராட்டமாகத் திகழ்ந்தது. 1966-70 காலகட்டத்தில் மிக உச்ச நிலையில் முன்னெடுக்கப்பட்ட இப்போராட்டங்களில் கட்சியின் தலைமை குறிப்பாக வடபிரதேசத் தலைமையானது மிகவும் தெளிவான மார்க்சிச லெனினிச நிலைப்பாட்டைக் கொண்டு தலைமைதாங்கி நின்றமை குறிப்பான அம்சமாகும். ஒக்டோபர் 21 எழுச்சியுடன் முன்வைக்கப்பட்ட புரட்சிகரக் கொள்கையானது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கானையில் வெடித்த போராட்டத்தின் மூலம் புரட்சிகர வெகுஜனப் போராட்டம் என்னும் நடைமுறைக்குள் பிரவேசித்தது. சங்கானைப் போராட்டத்தின் உறுதியான நிலைப்பாடு தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அடக்கப்பட்ட அனைத்துத் தாழ்த்தப்பட்ட மக்களையும் விழித்தெழுந்து போராட்டப் பாதையில் முன்செல்ல வழிவகுத்தது. மட்டுவில்—சாவகச்சேரி, மந்துவில் — கொடிகாமம், மாவிட்டபுரம் — காங்கேசன்துறை, நெல்லியடி—கன்பொல்லை—கரவெட்டி, உரும்பிராய் போன்ற குறிப்பான பகுதிகளில் இடம்பெற்ற தேனீர்க்கடை—ஆலயப் பிரவேசப் போராட்டங்கள் தொடர்ந்து பல மாதங்கள் நீடித்தன. அவை புரட்சிகர வெகுஜனப் போராட்ட மையங்களாக விளங்கின. இப்போராட்டங்களின்போது சாதிவெறியர்களின் தாக்குதலுக்கு இலக்காகி பத்துக்கும் மேற்பட்டோர் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்தனர். யூ.என்.பி—தமிழரசுக் கட்சி இணைந்திருந்த 'தேசிய' அரசாங்கத்தின் பொலீஸ் சாதிவெறியர்களுடனும் பிற்போக்கு சக்திகளுடனும் இணைந்து நின்றமை குறிப்பிடக்கூடியதொன்றாகும். அதேவேளை ஏழு சாதிவெறியர்கள் புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் உயிரிழக்கவும் நேரிட்டது.

ஆண்டாண்டுகாலமாக சாதி அடக்குமுறையாலும் தீண்டாமைக் கொடுமையாலும் அல்லலுற்று அடிமைத்தன வாழ்வுக்கு நிர்ப்பந்திக்கப்பட்ட ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் தமது சொந்தக் கால்களில் எழுந்துநின்று புரட்சிகரப் போராட்டத்தின் மூலம் அடிமைவிலங்கை உடைத்தெறிய முன்வந்த நிகழ்வு வரலாற்றுத் திருப்புமுனையாகியது. இப் போராட்டம் அன்றுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறக்கப்படாத ஆலயக் கதவுகளைச் திறக்கச்செய்தது. சமத்துவமாக அனுமதிக்கப்படாத தேனீர்க் கடைகளில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமத்துவத்தைப் பெற்றுக்கொடுத்தது. மற்றும் பொது இடங்களில் இரண்டாந்தர நிலையில் புறக்கணிக்கப்பட்டு வந்த நிலையினை மாற்றியமைத்தது. மொத்தத்தில் தமிழ் மக்கள் மத்தியில் நிலவிவந்த உயர்ந்த தமிழரும் தாழ்ந்த தமிழரும் என்ற இரட்டைத்தர நிலையினைத் தகர்த்து தமிழர் சமுதாயம் என்ற நிலை உருவாகு வதற்கு வழிவகுப்பதில் இப்புரட்சிகரப் போராட்டம் தனது வரலாற்றுப் பங்களிப்பை வழங்கிநின்றது. பிற்காலத்தில் தமிழர்களிடையே பெரும் போராட்ட அலையாக எழுந்த தமிழ்த்தேசிய இனவிடுதலைக்கான போராட்டம் தோன்றி வளர்வதற்கான முன்தேவையை இக்காலப் போராட்டம் நிறைவுசெய்தது. அதன்மூலம் பல முன் அனுபவங்களைத் தமிழ் இளைஞர்கள் இப்போராட்டத்தின் ஊடே பெறக்கூடிய வாய்ப்பினையும் வழங்கிநின்றது.

இப்புதிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் வட பகுதியில் தனியே சாதி அடக்குமுறைக்கு எதிரான போராட்டங்கள் மட்டும் அக்காலகட்டத்தில் நடைபெற வில்லை. அதனோடு இணைத்து மேலும் பல போராட்டங் களை அக்கட்சியும், அதன் தொழிற்சங்கமும், வாலிபர் இயக்கமும் முன்னெடுத்தன. வடபகுதியில் உருவாகி வந்த தொழிலாளர்களின் உரிமைகளையும் கோரிக்கை களையும் வர்க்க ரீதியில் வென்றெடுப்பதில் மார்க்சிச லெனினிசக் கட்சி புரட்சிகரமான தொழிற்சங்க வேலை முறையினை முன்னெடுத்தது. 1950ம் ஆண்டளவில் இயங்கத் தொடங்கிய காங்கேசன் துறை சீமெந்து ஆலையிலே தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்கான வேலைநிறுத்தப் போராட் டம் 1964ல் பிற்கூறிலே இருபத்தியேழு நாட்கள்வரை இடம்பெற்றது. தொழிலாளர்களின் ஒற்றுமையும் புரட்சிகர உணர்வும் இறுதியில் பல கோரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளை வென்றெடுக்கவைத்தது. ஏற்கனவே இடம் பெற்ற வடபகுதி பஸ் தொழிலாளர் போராட்டத்திற்குப்பின் முன்னெடுக்கப்பட்ட பெரும் வேலைநிறுத்தப் போராட்டம் இதுவேயாகும். அதனைத் தொடர்ந்து பரந்தன் இரசாயனத் தொழிற்சாலைப் போராட்டமும் குறிப்பிடத்தக்கதாகும். தனியார் நிறுவனங்களாக விளங்கிய மில்க்வைற்சோப் தொழிலாளர் போராட்டம், வல்லை நெசவாலைத் தொழிலாளர் போராட்டம் மிக முக்கியமானவையாகும். தொழிற்சங்கம் செயல்படும் உரிமையை அன்று மில்க் வைற் சோப் நிர்வாகமும் முதலாளியும் ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். தொழிலாளர்களைப் பழிவாங்கியதுடன் குறைந்த கூலிக்கு அடிமைகள்போல் நடத்தப்பட்டு வேலைவாங்கப்பட்டனர். இம்முதலாளி ஒரு சமய சமூகப் பெரியார் என்ற பட்டத்துடனும், வள்ளல் என்ற பெயருடனும் தமிழ்த் தொழிலாளர்களை மோசமாக நடத்தி வந்த நிலையை கட்சியும் தொழிற்சங்கமும் அம்பலப்படுத்தியது. தொழிலாளர்களுக்காக தொழில் நீதி மன்றத்தில் சண்முகதாசன் வாதிட்டு நிற்க முதலாளிக்காக தமிழரசுக் கட்சியின் முக்கிய இளம் தலைவராக இருந்து பிற்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய மு. ஆலால சுந்தரம் வாதிட்டு தமது வர்க்க முத்திரையை தெளிவாக்கிக் கொண்டார். வல்லை நெசவாலைப் போராட்டத்தில் பொலிஸ் தனது முதலாளித்துவ நலன் காக்கும் வேலையைத் தொழிலாளர்கள் மத்தியில் அப்பட்டமாக நிரூபித்தது. இதனால் ஆத்திரமடைந்த தொழிலாளர்களும் அவர்களுக்கு ஆதரவு கொடுத்த ஊர்மக்களும் ஒரு கட்டத்தில் பொலிஸ் துப்பாக்கியைப் பறித்துச் சென்றனர். இச்சம்பவத்தால் பீதியடைந்த ஒரு பொலிஸ் இடைநிலை அதிகாரி தற்கொலை செய்துகொள்ளவேண்டியேற்பட்டது. அதேபோன்று இ. போ. ச. வடபிரதேசத் தொழிலாளர்கள் இரு வாரங்கள் நீடித்த வேலைநிறுத்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டத்தை சகல தொழிற்சங்கங்களின் ஐக்கியத்துடன் நடாத்தி வெற்றி பெற்றனர். இதற்குத் தலைமை கொடுப்பதில் இப்புதிய கட்சி புரட்சிகரமான தலைமைத்துவத்தை வழங்கியது. எழுபதுகளின் முற்கூறில் யாழ். மாநகரசபையில் அன்றுவரை உருவாக்கப்படாது இருந்து வந்த தொழிற்சங்கத்தை நிர்வாகத்தின் பலத்த எதிர்ப்பின் மத்தியில் உருவாக்கி நீண்டகாலமாக மறுக்கப்பட்டுவந்த அடிப்படை உரிமைகளை வேலைநிறுத்தப் போராட்டத்தின் மூலம் வென்றெடுத்து நிலைநாட்டுவதில் புதிய கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிற்சங்கமும் புரட்சிகரமான தலைமைப் பாத்திரத்தை வகித்தது. இவ்வாறு சினிமா ஊழியர் சங்கத்தை வடபகுதியில் ஆரம்பித்து பல கோரிக்கைகளை முன்வைத்துப்போராடி வெற்றி பெறுவதிலும் பின்நிற்கவில்லை. இவ் ஊழியர் உரிமைகளை மறுப்பதில் அன்றைய ராஜா தியேட்டர் முதலாளியாக இருந்த தமிழர் கூட்டணிப் பிரமுகர் தியாகராஜா முக்கியமானவராக இருந்தார். இக்காலகட்டத்தில் நடைபெற்ற தொழிலாளர்களின் போராட்டங்கள் வர்க்க வேறுபாடுகளைத் தமிழர்கள் மத்தியில் தெளிவுடன் எடுத்துக் காட்டின.

மேலும் இக்கால கட்டத்தில் இடம்பெற்றுவந்த சர்வதேச நிகழ்வுகள் பற்றிய அக்கறைகள் அதிகரித்துக் காணப்பட்டன. குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வீரதீரத்துடன் வியட்னாம் மக்கள் நடத்தி வந்த போராட்டத்திற்கு மக்கள் ஆதரவு திரட்டப்பட்டு வந்தது. அந்தவகையில் 1965ன் பிற்கூறிலே யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த அமெரிக்க கலாசார நிலையத்தின் முன் மிகப் பெரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடாத்தப்பட்டு அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்தள்ளப்பட்டது. அதன் மற்றொரு பிரதிபலிப்பு 1967ம் ஆண்டு பிற்கூறிலே இடம்பெற்றது. யாழ் பொதுசன நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்தின் ஒரு பகுதியில் அமெரிக்க நூல் நிலையத்தை இயங்கச் செய்வதற்காக அதனைத் திறந்துவைக்க அன்றைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகவிருந்த அன்ரூ வி. கொறி யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவரது வரவைக் காத்திருந்து எதிர்ப்பதில் புதிய கட்சியின் வாலிபர் இயக்கம் முன்னணியில் நின்றது. தூதுவர் நூல் நிலைய வாசலில் வந்து இறங்கியதும் அவருக்கு கூழ்முட்டைகளும், அழுகிய பழங்களும் வீசப்பட்டதுடன் அமெரிக்க எதிர்ப்பு சுலோகங்கள் எழுப்பப்பட்டு ஆர்ப் பாட்டம் இடம்பெற்றது. இவ் ஆர்ப்பாட்டத்தில் ஐந் நூறுக்கு மேற்பட்ட வாலிபர்கள் அன்று அணிதிரண்டு இருந்தமை குறிப்பிடக்கூடியதாகும். அதேபோன்று கட்சியின் தலைமையிலான வாலிபர் இயக்கம் மக்களது அன்றாடப் பிரச்சினைகளுக்கு இயக்கம் நடத்துவதில் முன்நின்றது. அன்றைய பிரதமராக இருந்த டட்லி சேனநாயக்காவை தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் போட்டிபோட்டு வரவேற்றனர். மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டிருந்த யூ.என்.பி-தமிழரசு ஆட்சியின் பிரதமரான டட்லியின் வரவை எதிர்த்து கட்சியும் வாலிபர் இயக்கமும் 'டட்லியே திரும்பிப்போ' என்னும் எதிர்ப்பியக்கத்தை நடாத்தியது.

இவ்வாறு புரட்சிகர இயக்கங்களும் போராட்டங் களும் இடம் பெற்று வந்த சூழலிலே 1969ம் ஆண்டு மேதினத்தை மே முதலாந் திகதி அன்று நினைவுகூர்வதை யூ. என். பி. அரசு தடைசெய்தது. வெசாக்தினம் அதே நாளில் வருவதால் மேதின ஊர்வலம் கூட்டம் நடாத்தப் படுவதை நாடுபூராவும் தடுக்கும் உத்தரவை பிரகடனப் படுத்தியது. இதனை மார்க்சிச லெனினிச கட்சியான புதிய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்வதில்லை எனத் தீர்மானித்தது. கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் பொதுக் கூட்டம் என்பனவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY



சட்டத்தை மீறி நடாத்துவது எனக் கட்சித் தலைமை தீர்மானித்தது. பிற்காலத்தில் இத்தீர்மானம் மிகத் தவறானதொன்று என்ற கருத்து கட்சிக்குள் ஏற்படலாயிற்று. அதாவது சிங்கள வெகுஜனங்கள் மத்தியில் இருந்து கட்சியைத் தனிமைப்படுத்திய சில குறிப்பான முடிவுகளில் இதுவும் ஒன்றெனச் சுட்டிக்காட்டப்பட்டது. கொழும்பில் இம்மேதின ஊர்வலம் ஆரம்பிக்கும் இடத்தைப் பொலீஸ் ஏற்கனவே தெரிந்து கொண்டமையால் அவ் ஊர்வலம் இடம்பெறுவதற்கு முன்னதாகவே தடுக்கப்பட்டதுடன் தயாரிப்பில் ஈடுபட்ட சிலர் கைதும் செய்யப்பட்டனர். மேதினக் கூட்டம் கட்சியின் தலைமைக் காரியாலய மண்டபத்தில் இடம்பெற்றது. அதனைத் தடுக்க பொலீஸ் மூயற்சி செய்தபோதிலும் அங்கு திரண்டிருந்த பெருந்தொகையான தொழிலாளர்கள், மக்களின் உறுதியான எதிர்ப்பால் கூட்டத்தை தடைசெய்ய முடியவில்லை.

அதே வேளை யாழ்ப்பாணத்தில் ஊர்வலம், கூட்டம் மிக எழுச்சிமிக்க புரட்சிகரமான தொன்றாக அமைந்தது. ஊர்வலம் தொடங்கும் இடத்தினை இறுதிவரை பொலிசினால் கண்டுபிடிக்க முடியவில்லை. நகரில் மத்தியில் எதிர்எதிரே இருந்த இரண்டு சினிமா தியேட்டர்களில் படம் பார்ப்பவர்கள் போன்று ஊர்வலத்தில் கலந்து கொள்ள வேண்டியவர்கள் முன்கூட்டியே நிரப்பிக் கொண்டனர். பி. ப. 5 மணியளவில் குறிப்பிட்ட வின்சர் தியேட்டர் சந்திக்கு அனைவரும் திரண்டு வந்து ஊர்வலத்தைத் தொடங்கினர். தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் தலைமை தாங்கிச் செல்ல ஆயிரக்கணக்கான மக்கள் இடியென முழங்கும் கோஷங்களுடன் செங்கொடிகளை ஏந்தியவாறு யாழ் நகர வீதிகளினூடாக ஊர்வலம் வந்தனர். ஊர்வலம் தொடங்கி அரைமணி நேரத்தின் பின்பே பொலீஸ்படை வாகனங்களில் வந்து ஊர்வலத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைமறித்து தொடர்ந்து செல்லக்கூடாது எனத் தடுத்தது. மேதினத்தன்று ஊர்வலம் செல்வது எமது உரிமையும் கடமையும் என பொலிசுக்கு எடுத்துரைத்து கலைந்து செல்ல முடியாது என மறுக்கப்பட்டது. பொலீஸ்படை ஊர்வலத்தின் மீது தனது கொடூரத் தாக்குதலைத் தொடுத்தது. ஊர்வலத்தினரும் திருப்பித் தாக்கத் தொடங்கினர், பொலீஸ் கடுமையான கண்ணீர் புகைப் பிரயோகத்தையும் தடியடியையும் நடாத்தியது. தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் கடுமையான தாக்குதலுக்கு ஆளாகினார். சி. கா. செந்திவேல், எம். ஏ. சி. இக்பால் உட்பட மேலும் பல முன்னணித் தோழர்கள் தாக்குதலுக்கு இலக்காகினர். கே. ஏ. சுப்பிரமணியம் உட்பட பத்துப் பேர்வரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவ் ஊர்வலத்தின்பின்பு தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றிலே மேதினக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தையும் பொலீஸ் தடுக்க முற்பட்டபோதிலும் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான மக்களின் பலத்தினால் அவ்வாறு செய்யமுடியாது போய்விட்டது. கட்சியின் தலைமையிலான இம்மேதின ஊர்வலம் பொதுக்கூட்டம் என்பனவற்றின் தாக்கம் அன்றைய புரட்சிகர வெகுஜனப் போராட்டச் சூழலிலே பெரும் உந்துவிசையாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் வடபகுதியில் வாலிபர் இயக்கம் ஓர் சக்திமிக்க மாணவர் இயக்கத்தைக் கட்டியெழுப்ப சகல அடிப்படை முயற்சிகளையும் செய்துவந்தது. அன்றைய கல்வி அமைச்சரான ஈரியகொல்லையின் கல்வி விரோத, மாணவர் விரோத நடைமுறைகளை எதிர்த்தே அம் மாணவர் இயக்கம் ஆரம்பித்தது. 'சியவச' சீட்டிழுப்பை பாடசாலைகளில் அறிமுகப்படுத்துவதற்கு எதிராக ஓரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளில் அவரது கொடும்பாவிகள் பாடசாலை வாசல்களிலும், நகரத்தின் முக்கிய பகுதிகளிலும் தொங்கவிடப்பட்டன. இம்மாணவர் இயக்கம் தனது பத்திரிகையாக 'தீ' என்ற பெயரில் ஒரு பத்திரிகையையும் வெளியிட்டது. இம்மாணவர் இயக்கத்தின் பிற்கால வளர்ச்சியானது தரப்படுத்தலுக்கு எதிரான பிரசித்திபெற்ற தமிழ் இளைஞர்கள் கொக்குவிலில் இருந்து நடாத்திய பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் முக்கியமான இடதுசாரி சக்தியாகக் கலந்து கொள்ளவும் செய்தது. இவ் ஊர்வலம் எழுபதுகளில் ஐக்கிய முன்னணி அரசு காலத்தில் இடம்பெற்றதாகும். அரசுக்கெதிரான இவ் ஊர்வலத்தில் அன்றைய கல்வி அமைச்சரை அவரது மதத்துடன் சம்பந்தப்படுத்தி தனிப்படக் கேவலமான கோஷங்களை சில இனசார்பு சக்திகள் எழுப்பியதால் இடதுசாரி மாணவர்களுக்கும் கோஷம் எழுப்பியவர்களுக்குமிடையில் முரண்பாடு ஏற்படுவதாயிற்று. இது இடதுசாரி மாணவர் பக்கம் ஏனைய மாணவர்கள் திரளாமல் இருப்பதற்காக பிற்போக்கு இனவாத சக்திகளால் திட்டமிட்டு செய்யப்பட்டதென்றே கொள்ளப்படல்வேண்டும். மாணவர்கள் மத்தியிலான தொடர்ந்த அரசியல் வேலைமுறையானது தொடர்ந்ததுடன் பல்கலைக்கழக யாழ். வளாகம் உருவாகியபோது பல்கலைக்கழக மாணவர்கள் இப்புரட்சிகர அரசியலில் ஆர்வம் கொண்டவர்களாகக் காணப்பட்டனர். பிற பிரதேசங்களின் மாணவர்கள் குறிப்பாக மலையகம், மட்டக்களப்பு, தென்னிலங்கை மாணவர்கள் இன, மத மொழி பேதமின்றி இப்புதிய கம்யூனிஸ்ட் கட்சியுடன் இணைந்து நின்றனர். மேதின ஊர்வலங்களிலும் பிற ஊர்வலங்களிலும் அவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். இதனால் தமிழ் சிங்கள முஸ்லீம் மாணவர்களின் ஐக்கியம் நன்கு வளரக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்புதிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய விவசாயிகள் சங்கம் மிகவும் துரித வளர்ச்சி கண்டது. பரந்த வெகுஜன அணியாக வளர்ந்த விவசாய சங்கத்தின் தலைமையில் பல்வேறு விவசாயப் பிரச்சினைகளை உள்ளடக்கிய போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. விசுவமடு, முத்தையன் கட்டு–படித்த வாலிபர் குடியேற்றத் திட்டங்களில் இளம் விவசாயிகள் அணிதிரண்டனர். ஏனைய குடியேற்றத் திட்டங்களிலும் கிராமங்களாக மாறிய விவசாயப் பகுதிகளிலும் விவசாய சங்கம் அதிக செல்வாக்கினை வகித்து வந்தன. நீர், நில, நிர்வாகப் பிரச்சினைகள் பலவற்றுக்கு விவசாய சங்கம் முகம் கொடுத்ததுடன் புரட்சிகர அரசியல் மார்க்கத்தில் விவசாயிகளின் பங்கு பற்றிய அக்கறைகளும் எடுத்தாளப்பட்டன. மேலும் பரந்து விரிந்த விவசாய இயக்கமாக முன்னெடுக்கப்படக்கூடிய சூழலில் இந்திய நக்சல்பாரி எழுச்சியின் தாக்கம் தவறான விளைவுகளை அவ்விவசாய இயக்கத்தில் ஏற்படுத்தியது. சிறிகாகுளப் போராட்டத்தை இங்கு பிரதிசெய்ய முற்பட்டதும், கூலி விவசாயிகளா? குத்தகை விவசாயிகளா? அல்லது தொழிலாளிகளா? புரட்சிகரவர்க்கம் போன்ற ஆய்வுத் தர்க்கங்கள் விவசாயப்பகுதிகளில் வலிந்து புகுத்தப்பட்டு அதன் வழியில் வெகுஜன மார்க்கம் அதிதீவிர வேலை முறைகளாக மாற்றப்பட்ட சூழலும் தோன்றியது. இதன் விளைவுகள் பாரிய பின்னடைவுகளை தோற்றுவித்தது. இருப்பினும் 1964-70 காலகட்டத்தில் விவசாயப் பகுதிகளில் கட்சி, வாலிபர் இயக்கம், விவசாயிகள் சங்கம் என்பனவற்றின் ஊடே புரட்சிகரப் பிரச்சாரங்களும் இயக்கங்களும் போராட்டங்களும் இடம்பெற்று நின்ற நிலைமைகள் குறிப்பிடக்கூடியதாகும்.

மேலும் இக்காலகட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை பிரதேசங்களில் கட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் வேலைகள் குறிப்பிடக்கூடிய அளவுக்கு முன் சென்றன. மட்டக்களப்பில் கட்சி வாலிபர் இயக்கம் அரசியல் ஸ்தாபன வேலைகளை முன்னெடுத்த அதே வேளை திருகோணமலையில் சக்திமிக்க தொழிற்சங்க இயக்கம் உருவாகி இருந்தது. மேற்படி முன்னெடுக்கப்பட்ட கட்சி, வாலிபர், தொழிற்சங்க இயக்கமானது கிழக்கின் குறிப்பிட்ட பிரதேசங்களில் தாக்கம் மிக்கதாக அமைந்திருந்தது. கே. வி. கிருஷ்ணகுட்டி, கவிஞர் சுபத்திரன் போன்றோர் கிழக்கிலங்கையின் கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சிக்கு கடும் பணி புரிந்தனர்,

மேற்கூறப்பட்ட புரட்சிகர போராட்ட இயக்க சூழலில் தமிழரசுக் கட்சியினர் யூ. என். பியுடன் இணைந்து நின்று தமது வர்க்க நோக்கிற்கு ஏற்ப நடந்து வந்ததுடன் புதிய கம்யூனிஸ்ட் கட்சியையும் அதன் புரட்சிகரப் போராட்டங்களையும் எதிர்ப்பதில் தீவிரமாக இருந்துவந்தனர். அதேவேளை பழைய கம்யூனிஸ்ட் கட்சியினர் இப்புரட்சிகரப் போராட்டங்களை எதிர்த்து தமது பாராளுமன்றப் பாதையில் இயங்கிவந்ததுடன் எதிர்ப்புரட்சிகரப் பிரச்சாரங்களையும் நடாத்திவந்தனர்.

எவ்வாறாயினும் சாதி அடக்குமுறைக்கு எதிரான போராட்டமானது ஏனைய தொழிலாளர், மாணவர் போராட்டங்களுடனும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்துடனும் புரட்சிகரமான வகையில் இணைந்து பிணைந்து காணப்பட்டமை வர்க்கப் போராட்டக் கண்ணோட்டத்தை வலிமைப்படுத்தி நின்றதொன்றாகவே அமைந்திருந்தது. சாதிப் போராட்டம் கம்யூனிஸ்ட் கட்சியை உயர்சாதி எனப்படும் மக்களிடம் இருந்து தனிமைப்படுத்திவிடும் என்ற தவறான கூற்று பொய்யாக்கப்பட்டதுடன் உயர்சாதி எனப்படும் மக்களில் உழைக்கும் மக்கள் பிரிவினரை கம்யூனிஸ்ட் கட்சியால் வென்றெடுக்க முடியும் என்ற நடைமுறை உண்மையை எடுத்துக்காட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யது. எனவே புதிய கம்யூனிஸ்ட் கட்சியான மார்க்சிச லெனினிசக் கட்சியின் தலைமையில் 1964-70 காலகட்டத்தில் நடைபெற்ற புரட்சிகர வெகுஜனப் போராட்டங்கள் யாவும் பலநூறு படிப்பினைகளை நடைமுறையில் எடுத்துக்காட்டியது. சரியான கொள்கை, உறுதியான தலைமை, சரியான தந்திரோபாயம் என்பனமுன்வைக்கப்பட்டால் வெகுஜனங்கள் கிளர்ந்தெழுந்து பல்வேறு சாதனைகளை நிலைநாட்டி தமது புரட்சிகரப் பயணத்தில் முன்னே நிற்கும் எந்தவகை எதிரியையும் தோற்கடிக்க முடியும் என்பதை அக்கால கட்டப் போராட்டங்கள் ஒரு வலிமைமிக்க வரலாற்றுப் பாடங்களாக எடுத்துக்காட்டின.

## ■ ஜே. வி. பியின் தோற்றம்

இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில் ஆயிரத்தித்தொளாயிரத்து அறுபதுகளின் பிற்கூறிலே உருவாகிய சிறுமுதலாளித்துவ அதிதீவிர கிளர்ச்சி இயக்கமே ஜே. வி. பி எனப்படும் ஜனதா விமுக்தி பெரமுனை (மக்கள் விடுதலை முன்னணி) இயக்கமாகும். இதனை ஆரம்பத்தில் தலைமைப் பாத்திரம் வகித்தவர் றோகண விஜயவீரா என்னும் தென் இலங்கையின் மாத்தாறை மாவட்டத்தின் தங்காலைப் பகுதியின் சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த ஓர் இளைஞராவர். இவர் மாஸ்கோவில் லுமும்பா பல்கலைக்கழகத்தில் அறுபதுகளின் நடுக்கூறிலே ஓர் மாணவராக இருந்தவர். அக்காலத்தில் சீன சோவியத் கட்சிகளுக்கிடையில் இடம்பெற்ற சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தின் மத்தியிலான மாபெரும் விவாதத்தில் தன்னை சீன சார்பினராகக் கூறிக்கொண்டு இலங்கைக்கு விடுமுறையில் வந்திருந்தார். அதேவேளை இவர் சீனசார்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர் எனக் கூறி மீண்டும் மாஸ்கோ செல்வதற்கு அனுமதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுக்கப்பட்டது என்ற ஒரே நற்சாட்சிப்பத்திரத்துடன இலங்கையில் தோற்றம்பெற்று நின்ற புதிய கம்யூனிஸ்ட் கட்சியின் மார்க்சிச லெனினிசக் கொள்கையை ஏற்றுக் கொள்வதாகக் கூறி அதில் இணைந்தும் கொண்டார். அவ்வாறு இணைந்துகொண்ட விஜயவீரா கட்சியின் வாலிபர் இயக்கத்திற்குள் தனது செல்வாக்கினை விரிவுபடுத்தி தலைமைப் பதவியையும் பெற்றுக்கொள்ள முயற்சிகள் செய்தார். ஆனால் அவரது ஆரம்ப நடவடிக்கைகளில் கொள்கை தெளிவீனம் வெளிப்பட்ட அதே வேளை இனவாதப் போக்கையும் காணமுடிந்தது இக் காரணத்தால் அவரை வாலிபர் இயக்கத்தின் தலைமைக்கு கொண்டுவரும் முயற்சி தடுக்கப்பட்டது. இதனால் கட்சிக்குள் இருந்துகொண்டே குழுவாத வேலைகளில் ஈடுபடத்தொடங்கினார். இத்தகைய சூழலிலேயே 1966ம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதிய எதிர்க்கட்சி களின் இனவாத வேலைநிறுத்தமும், 'தேசிய துக்கதின மும்', ஊர்வலமும் இடம்பெற்றது. இவற்றைப் பாராளு மன்ற இடதுசாரிகளான சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சி கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து ஒழுங்கு செய்திருந்தன. இவ்வேலை நிறுத்தத்தைப் புதிய கம்யூ னிஸ்ட் கட்சியும் தொழிற்சங்கமும், வாலிபர் இயக்கமும் கூட்டாக எதிர்த்து கண்டனம் செய்ததுடன் அந்நடவடிக் கைகளில் எவ்வித பங்கினையும் ஆற்றவில்லை. இம்முடி வினை மீறி விஜயவீராவும் அவருடன் இணைந்த சிலரும் அவ்வூர்வலத்தில் கலந்துகொண்டு 'மசாலவடே' இன வாத சுலோகங்களை எழுப்பிச்சென்றனர். அதன் மூலம் அவரது சுயரூபம் அம்பலமாகியது. விஜயவீராவின் பிற் கால இனவாதம் கலந்த அதிதீவிர கிளர்ச்சி நடவடிக் கையின் ஆரம்பப் புள்ளியாக அது அமைந்திருந்தது. விஜயவீராகவும் அவருடன் ஓரிருவரும் கட்சி வாலிபர் இயக்கம் ஆகியவற்றில் இருந்து வெளியேறறப்பட்டனர். அதன் பின்பே அவர் ஜே.வி. பியைத் தோற்றுவிப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரமாக இறங்கினார். விஜயவீரா இலங்கையின் மார்க்சிச லெனினிச இயக்கத்தை சீர்குலைக்கவும், புரட்சி என்ற பெயரில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களை திசைதிருப்பி அழிவுக்கு உள்ளாக்கவும் திட்டமிட்டே மாஸ்கோ நவீன திரிபுவாதத் தலைமையினால் பயிற்றப் பட்டு இங்கு அனுப்பிவைக்கப்பட்ட ஓர் எதிர்ப்புரட்சி வாதி என்ற கூற்றினை மார்க்சிச லெனினிச ஆய்வாளர் கள் திட்டவட்டமாக முன்வைத்து வநதுள்ளனர். அவர் களது ஆய்வுக்கூற்றில் ஆதாரபூர்வமான உண்மைகள் உள்ளன என்பதை விஜயவீரா தனது ஆயுள் காலத்தில் நிரூபித்துச் சென்றுள்ளதை எவரும் மறுக்கமுடியாது.

விஜயவீரா தன்னை மார்க்சிச லெனினிசவாதி என்றும், தமது கொள்கை புரட்சி என்றும், செங்கொடி யையும் அரிவாள் சம்மட்டியை ஏந்தியவாறும் அதிதீவிரக் கோஷங்களை உச்சரித்துக்கொண்டும் இளைஞர்களை ஊடுருவிச்சென்றார். இன்றைய சமுதாய அமைப்பின் இயலாமையாலும் பொருளாதார - வேலையின்மைப் பிரச்சினையாலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்த இளைஞர்கள் இலகுவாகத் திசை திருப்பப்பட்டனர். புரட்சி என்பதை மிகை எளிமைப்படுத்தி தொழிலாளர்கள் விவசாயிகள் வர்க்க ரீதியில் அணிதிரட்டப்படாமலேயே இளைஞர்கள் மட்டும் ஒன்று திரண்டு ஒரேநாளில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அமைந்துள்ள பொலீஸ் நிலையங்களைத் தாக்குவதன் மூலம் ஆட்சி அதிகாரத்தை அடைந்துவிடலாம் என்ற நம்பிக்கை ஊட்டப்பட்டது. அவர்கள் வழங்கிய ஐந்து அரசியல் வகுப்புகளின் மூலம் இளைஞர்கள் சில நாட்களிலேயே 'புரட்சிவாதிகளாக' மாற்றப்பட்டனர். இந்த ஐந்து வகுப்புகளில் ஒன்று 'இந்திய விஸ்தரிப்புவாதம்' என்ற தலைப்பாகும். இத் தலைப்பில் விபரிக்கப்பட்ட விடயங்கள் இலங்கையில் வாழ்ந்துவரும் இந்திய வம்சாவழித் தோட்டத் தொழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாளர்களுக்கு எதிரான இனவாதமாக இருந்ததுடன் தமிழர் விரோத மனப்பான்மை இடத்துக்கு ஏற்றவாறு வளர்க்கப்பட்டது. நாட்டின் பின்தங்கிய கிராமப்புறங் களில் இனவாதத்துடன் கலந்த சோஷலிசம் பற்றியும் புரட்சிபற்றியும் ஜே. வி. பியினர் இரகசிய கூட்டங்களை யும், அரசியல் வகுப்புகளையும் நடாத்திவந்தனர். இரகசிய வேலைமுறையும் ஏனைய ஆயுத நடவடிக்கை களும் இளைஞர்களை வெகுவாகக் கவர்த்தது. அடிப் படையில் ஜே. வி. பியிடம் ட்ரொஸ்கியவாதத் தத்துவமே உறைந்துகாணப்பட்டது. பழைய ட்ரொஸ்கியவாதிகள் பாராளுமன்ற சர்ந்தர்ப்பவாதத்தினுள் வீழ்ந்துநிற்க இப் புதிய ட்ரொஸ்கியவாதிகளான ஜே.வி. பியினர் அதிதீவிர ஆயுத நடவடிக்கையில் இறங்கித்தமது சிறுமுதலாளித்துவ நிலைப்பாட்டில் தங்கிநின்றனர். அவர்கள் தேவைக்கு ஏற்றவாறு மார்க்ஸ் லெனின் போன்ற தலைவர்களை மட்டுமன்றி லத்தீன் அமெரிக்கப் புரட்சிவாதியான சேகுவேராவின் நாமத்தையும் பயன்படுத்தத் தவற வில்லை. இளைஞர்களைக் கவரக்கூடிய நடை உடை பாவனை அனைத்தையும் கொண்டிருந்த இவர்களிடம் அடிப்படையிலான மார்க்சிச லெனினிசத் தத்துவமோ அதன் அடிப்படையிலான நடைமுறைகளோ இருக்க வில்லை என்பதை அவர்களை உற்று அவதானித்த நேர்மையான இடதுசாரி சக்திகளால் ஆரம்பம் முதலே அடையாளம் காணப்பட்டுவிட்டது. இவ்வாறு தங்களை உண்மையான இடதுசாரிகள் எனவும், புரட்சியின் மூலம் சோஷலிசத்தை கொண்டுவந்து விடுவோம் என்ற மேலெழுந்தவாரியான சுலோகங்களும், அவர்களது வேலை முறைகளும்; இனம், சாதி, அடிப்படையில் பயன் படுத்திய சந்தர்ப்பங்களும், பழைய இடதுசாரிகளினால் ஏற்பட்ட விரக்தி—வெறுப்பு ஆகியனவும் எழுபதுகளின் முடிவிலே ஒரு புரட்சிகர சக்தி என்ற மாயத்தோற்றத்தை ஜே. வி. பிக்கு வழங்கி இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

# ஐக்கிய முன்னணி ஆட்சியும் இடதுசாரிகளின் நிலையும்

1965-70 காலப்பகுதியில் யூ. என். பி தலைமையிலான தேசிய அரசாங்கம் எடுத்துவந்த மக்களின் விரோத நடவடிக்கைகள் நாடு முழுவதிலும் பெரும் எதிர்ப்பினை உருவாக்கியிருந்தது. அதே காலப்பிரிவில் எதிர்க்கட்சிகளாக விளங்கிய சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சமசமாஜக் கட்சி, பழைய கம்யூனிஸ்ட் கட்சி என்பன அரசுக்கு எதிரான இயக்கங்களில் ஈடுபட்டு வந்ததுடன் தமக்கிடையிலான ஓர் ஐக்கிய முன்னணியை உருவாக்கியும் கொண்டன. இவ் ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் அதிகாரத்தைக் கைப்பற்றும் நோக்கிலான ஒரு வேலைத் திட்டத்தை முன்வைத்து தமக்கு ஆகக்கூடுதல் பெரும்பான்மையை வழங்கினால் அதிசயிக்கத்தக்க மாற்றங்களை ஏற்படுத்துவதாக மக்களுக்கு வாக்குறுதி அளித்தது. தமது வேலைத் திட்டத்திற்கு சோஷலிச ஜனநாயக வேலைத்திட்டம் என்ற மகுடத்தை வைத்துக்கொண்டனர். யூ. என். பி ஆட்சியின் ஏகாதிபத்திய சார்பு கொண்ட பிற்போக்கு நிலைப்பாட்டினால் விரக்தியடைந்த மக்கள் இவ் ஐக்கிய முன்னணிக் கட்சிகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமோக ஆதரவளித்து பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டுக்கும் அதிகமான ஆசனங்களை வென்றெடுக்கச் செய்தனர். 1970ம் ஆண்டு மேமாதத்தில் இடம்பெற்ற இத்தேர்தலில் சமசமாஜக் கட்சி பதினான்கு ஆசனங்களையும், பழைய கம்யூனிஸ்ட் கட்சி ஆறு தொகுதிகளையும் வெற்றிகொண்டு சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசின் பங்காளிகளாகினர். அதேவேளை புதிய கம்யூனிஸ்ட் கட்சியான மார்க்சிச லெனினிச கட்சி தேர்தலை முற்றாக நிராகரித்து தன்னை தவறான தந்திரோபாயத்துக்கு உட்படுத்தி தனிமைப் பட்டு நின்றது. ஆனால் சுறுசுறுப்பாக வளர்ந்துவந்த ஜே. வி. பி. ஐக்கிய முன்னணியைத் தமது உள்நோக்க அடிப்படையில் ஆதாரித்து நின்றதன் மூலம் மக்கள் மத்திக்குச் செல்வதற்குரிய வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொண்டது.

## □ புதிய அரசியல் யாப்பும் இடதுசாரிகளும்

1970 மே மாதத்தில் பதவிக்கு வந்த திருமதி பண்டார நாயக்கா தலைமையிலான ஐக்கிய முன்னணி அமைச்சரவையில் ட்ரொஸ்கிய கட்சியான சமசமாஜக்கட்சி மூன்று முழு அமைச்சர்களையும் இரண்டு உதவி அமைச்சர்களையும் பெற்றுக்கொண்டது. என். எம். பெரேரா நிதியமைச்சராகவும், கொல்வின் ஆர். டி சில்வா அரசியல் யாப்பு மற்றும் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சராகவும், அனில் முனசிங்க போக்குவரத்து அமைச்சராகவும் பதவி பெற்றுக் கொண்டனர். அதேவேளை வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பீற்றர் கெனமன் வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சராகவும், பி. வை. துடாவை உதவி கல்வி அமைச்சராகவும் பதவி பெற்றுக் கொண்டனர். அத்துடன் அதே கட்சியின் வடபகுதித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர்களில் ஒருவரும் சிறுபான்மைத் தமிழர் மகாசபை யின் தலைவருமான எம். சி. சுப்பிரமணியம் நியமன உறுப்பினராக ஐக்கிய முன்னணி அரசினால் நியமனம் பெற்றார். அதன் மூலம் அவரது நீண்ட நாள் எதிர் பார்ப்பான பாராளுமன்றப் பிரவேசம் நிறைவேறியது. ஆனால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதனால் எவ்வித பயனும் கிடைக்கவில்லை. சமசமாஜிகள் தமது 'சோஷலிச ஜனநாயகத்திற்கான பாதை திறக்கப்பட்டுள் ளதாக' பீற்றிக்கொண்டனர். அதேநேரம் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினர் தமது நவீன திரிபுவாத மார்க்கம் முன்வைத்த 'முதலாளித்துவம் அற்ற பாதையில் சோஷலிசத்தை அடைவதற்கான காலகட்டம் வந் துள்ளது' எனப் பிரகடனம் செய்துகொண்டனர். ஆனால் 1970–77 காலகட்ட ஐக்கிய முன்னணி ஆட்சியின்போது இவ் இடதுசாரிகளால் சோஷலிசத்தையும் வென்றெடுக்க முடியவில்லை, ஜனநாயகத்தை நிலைநாட்டவும் இயல வில்லை. இது அவர்களின் தனிப்பட்ட திறமையீனத்தால் ஏற்பட்டதொன்றல்ல. அவர்கள் பின்பற்றிய தவறான தத்துவார்த்த கொள்கை நிலைப்பாட்டில் உருவாகியவை என்பதை நினைவுபடுத்திக்கொள்வது அவசியம்.

தமக்குக் கிடைத்த மூன்றில் இரண்டிற்கு அதிகமான பெரும்பான்மையைக்கொண்டு ஏற்கனவே இருந்துவந்த சோல்பரி அரசியல் யாப்புக்குப் பதிலான மற்றொரு புதிய அரசியல் யாப்பினை இவ் ஐக்கிய முன்னணி அரசு தயாரித்துக்கொண்டது. அதனை ஆக்கும் பொறுப்பு ட்ரொஸ்கிய வாதியும், சட்டவல்லுனருமான கொல்வின் ஆர்.டி. சில்வாவிடம் கையளிக்கப்பட்டது. ட்ரொஸ்கிய புரட்சி பற்றிப் பேசுவதில் மிக வல்லமைபடைத்த இந்த மனிதரிடம் புதிய அரசியல் யாப்புக்கான பொறுப்பு ஒப்படைக்கம்பட்டபோது சிலர் மனக்கிலேசமடைந்தனர். வேறும் சிலர் சோஷலிசம் அந்த அரசியல் யாப்பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக வரப்போவதாகக் கனவு கண்டனர். ஆனால் எதிர்பார்க்கப்பட்ட எதனையும் கொல்வின் ஆர். டி. தனது யாப்பு வரைவின்மூலம் செய்யவில்லை. செங் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட மேடைகளில் செஞ் சட்டை அணிந்து நின்றவண்ணம் அங்க அசைவுகள் கொண்ட தனது பீரங்கிப் பேச்சினால் முதலாளித்து வத்தைப் பிய்த்துவிட சூளுரைத்துநின்ற கொல்வின் தனக்கும் தனது சகாக்களுக்கும் கிடைத்த அமைச்சர் பதவிகளைத் 'துஷ்பிரயோகம்' செய்யாது பாதுகாத்துக் கொள்ளும் வகையில் தனது புதிய யாப்பினைத் தயாரித்துக்கொண்டார். இலங்கையின் சமூக பொருளா தார அரசியல் கலாசார கட்டமைப்பில் இப்புதிய யாப்பானது எவ்வித அடிப்படை மாற்றத்தையும் கொண்டுவரவில்லை. ஒரு சில சாதகமான அம்சங்களைப் புகுத்திநின்ற அவ் யாப்பு இன அடிப்படையில் மிகப் பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கும் அடிப்படை களைக் கொண்டிருந்தது.

பாராளுமன்றம் என்ற பெயரைத் தேசிய அரசுப் பேரவை என்றும் லங்கா என்ற பெயரை சிறிலங்கா எனவும் மாற்றியமைத்து குடியரசு என ஆக்கிக் கொண்டதன் மூலம் தேசியத் தன்மைக்கான முக்கியத்து வத்தையும் விதேசிய வழிபாட்டினை மறுப்பதாயும் காட்டப்பட்டது. மேலும் இலங்கையின் சுதந்திரம்; இறைமை, தன்னாதிக்கம் என்பனவற்றை வற்புறுத்தி பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடம் இருந்துவந்த இறுதித் தொடர்புகளையும் துண்டித்துக்கொண்டது. பிரித்தானிய அரசினால் செய்யப்படும் தேசாதிபதி நியமனமுறை மாற்றப்பட்டு தேசிய அரசுப் பேரவையின் பிரதமரால் ஜனாதிபதி நியமனம் பெறும் முறை உருவாக்கப்பட்ட துடன், பிரித்தானிய வகைசார்ந்த செனட்சபை ஒழிக்கப் பட்டலாயிற்று. நீதிபரிபாலனத்துறையில் இறுதித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்வினை எதிர்பார்க்கும் பிரித்தானிய பிரிவுக்கவுன்சில் முறை முற்றாக நீக்கப்பட்டு பல புதிய சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. இதனால் ஆங்கிலம் படித்த சட்ட உயர் குழாத்தினரின் ஆதிக்கப்பிடி தளர்த்தப்பட்டு சுயமொழிகளின் மூலம் சட்ட நீதித்துறைகள் செயலாற்றும் நிலைமைகள் தோன்றின. இவை போன்ற யாவும் புதிய அரசியல் யாப்பின் திருத்தவேலைகளும், ஒட்டுப்பூச்சு வகைப்பட்டனவே தவிர அடிப்படையான மாற்றங்கள் அல்ல என்பதை எளிதில் எவரும் விளங்கிக் கொள்ளமுடியும். ஆனால் பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சியினர் இவற்றைச் 'சோஷலிசத்திற்கான' செயற்பாடுகள் என்றே காட்ட முற்பட்டனர்.

இதே அரசியல் யாப்பு தமிழ்பேசும் மக்களுக்கு இன அடிப்படையில் பாதகமான அம்சங்களைக் கொண்டிருந் தது. அவை நான்குமுக்கியவிடங்களாக அமைந்திருந்தன. ஒன்று, சிங்களம் மட்டும் அரசகருமமொழி என்பதனை அரசியல் யாப்பு ரீதியாக வற்புறுத்தியமை. இரண்டு, பௌத்தமதம் அரசமதமாக அங்கீகரிக்கப்பட்டமை. மூன்று, 'நபர்கள்', 'பிரஜைகள்' என்ற வேறுபாட்டை வரையறை செய்ததன்மூலம் நாடற்றவர்கள் என்ற நிலையில் இருந்துவந்த இந்திய வம்சாவழித் தமிழ் மக்களுக்குரிய அடிப்படை உரிமைகளை மறுத்தமை. நான்கு. சோல்பரி அரசியல் யாப்பில் சிறுபான்மை யினருக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் (இச்ஷரத்து இருக்கக் கூடியதாக ஏற்கனவே சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான சட்டங்கள் அதே பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டன என்பனது கவனத்திற் கொள்ளப் படவேண்டியதாகும்) இருந்துவந்த 29வது ஷரத்தை முற்றாக நீக்கியமை. இனரீதியிலும், அடிப்படை உரிமைகள் என்ற வகையிலும் பாதகமானவையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்ந்த மேற்படி அம்சங்களைக் கொண்ட இப்புதிய அரசியல் யாப்பினை ஓர் இடதுசாரித் தலைவரான அமைச்சர் வரைந்து நிறைவேற்றியமையும் அதற்கு பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் தமது முழு ஆதரவினைத் தெரிவித்தமையும் இலங்கையின் இடதுசாரி இயக்க வரலாற்றில் இலகுவாக அழிக்கமுடியாத கறையாகப் படிந்துகொண்டது.

மேற்கூறியவை அரசியல் அமைப்பு ரீதியிலான குறிப்பிடக்கூடிய சாதக பாதக அம்சங்களாக இருந்த அதேவேளை இவ் ஐக்கிய முன்னணி அரசு தனது ஆயுட் காலத்தில் பல்வேறு முற்போக்கு நடவடிக்கைகளையும் மறுபுறம் தொழிலாளர் விரோத — மக்கள் விரோத செயற்பாடுகளையும் எடுத்திருந்தமையை கவனத்தில் எடுப்பது அவசியம். ஏனெனில் அவை யாவற்றிலும் இப்பாராளுமன்ற இடது சாரிகள் முழுமையான பங்களிப்பு இருக்கச்செய்தது. முதலில் சாதனைகள் என்ற வகையில் இவ் ஐக்கிய முன்னணி அரசு உள்நாட்டு பெருநிலச்சொந்தக்காரர்களின் நிலத்திற்கு நில உச்சவரம்பினை விதித்து நிலச்சுவீகரிப்பை மேற்கொண்டது. அதேபோன்று வீடுகள் வைத்திருப்ப தற்கும் உச்சவரம்பு கொண்டுவரப்பட்டது. அடுத்து பிரித்தானிய கம்பனிகளின் ஆதிக்கப்பிடியில் இருந்து வந்த பெருந்தோட்டத் தொழில்துறையை தேசிய மயத்திற்கு உட்படுத்திக் கொண்டதன் மூலம் தனது கணவனால் பத்துவருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு முக்கிய திட்டத்தை வெற்றிகரமாக திருமதி பண்டாரநாயக்கா நிறைவேற்றிக்கொண்டார். மேலும் முன்பு முயற்சிசெய்யப்பட்டு தோல்விக்கு உள்ளான ஏரிக்கரைப் பத்திரிகை அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது. இறக்குமதிக் கொள்கையில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டது. உப உணவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைகள், புடவைகள், மற்றும் உள்ளூர் உற்பத்திகளுக்கு என்றுமில்லாதவாறு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப் பட்டன. இதனால் சிறு உற்பத்தியாளர்களும், கிராமிய விவசாயிகளும் நன்மையடைந்தனர். இக்காலத்தில் வடபகுதி விவசாயிகள் தமது உப உணவு உற்பத்தி மூலம் என்றுமில்லாதவாறு வருவாய் நன்மைகளைப் பெற்றனர். முப்பது வருட காலத்தில் மூன்று கட்டங் களாக வடக்கே மகாவலி ஆறு திசைதிருப்பும் திட்டம் தொடங்கப்பட்டது. தென் இலங்கையில் ஜின்கங்கைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சீன நாட்டின் உதவியில் பண்டாரநாயக்கா நினைவாக மிகப் பெரிய சர்வதேச மாநாட்டு மண்டபம் கட்டும் வேலைகள் தொடங்கப் பட்டது. கல்வித்துறையில் கொண்டுவரப்பட்ட மாற்றங்கள் பிற்காலத்திலும் நினைவில் வைத்திருக்கக் கூடிய சில நல்லம்சங்களைக் கொண்டிருந்தன. பல்கலைக்கழக வளாகங்கள் திறக்கப்பட்டன. அதில் ஒன்றே யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகமாகும். தனியார் துறைக்கு நிகரான வகையில் கூட்டுறவு, கூட்டுத்தாபனங்கள், மற்றும் அரசாங்க பொதுத் துறை கள் என்பன பரந்த அளவில் விருத்திபெற்றன, தொழிலாளர்களுக்கு எதிர்பார்த்தளவு பொருளாதார சலுகைகள் வழங்கப்படாத அதேவேளை சிற்சில சலுகைகளும் உரிமைகளும் கிடைத்தன. அவற்றினால் தொழிலாளி வர்க்கத்தை முழுமையாகத் திருப்திப்படுத்த முடியாமல் இருந்தது என்பது மற்றொரு விடயமாகும்.

மேலும் இவ் ஐக்கிய முன்னணி அரசு சோஷலிச நாடுகளுடனான தொடர்புகளை வலுப்படுத்தியதுடன் அணிசேராக் கொள்கை என்பதனை உயர்த்திநின்றதன் மூலம் இலங்கையின் பெயரை உலக அரங்கில் மதிப்பு உடையதாக்கிக்கொண்டது. இதனால் அணிசேரா இயக்கத்தின் தலைமைப் பதவியை திருமதி பண்டார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயக்கா பெற்று இலங்கையில் அணிசேரா இயக்கத்தின் மாநாடு ஒன்றினை வெற்கரமாக நடத்தவும் முடிந்தது. இவ்வாறு 1960-64 காலப் பகுதியில் எடுத்த முற்போக்கு நடவடிக்கைகளையும் 1970ல் மீண்டும் பதவிக்கு வந்து அதன் தொடர்ச்சியாக முன்னெடுத்தவைகளையும் ஒருங்கிணைத்து நோக்கின் ஒரு தேசிய முதலாளித்துவக் கட்சி தேசிய நலன்களினதும் அபிலாஷைகளினதும் அடிப்படையில் எத்தகைய எல்லைகளுக்குள் நின்று முற்போக்கு நடவடிக்கைகளை ஆற்ற முடியுமோ அத்தகையவற்றையே ஐக்கிய முன்னணி ஆட்சியினால் சாதிக்கமுடிந்தது. அதேவேளை தேசிய முதலாளித்துவக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இடதுசாரி முற்போக்குப் பிரிவும் வலதுசாரிப் பிற்போக்கு பகுதியும் இருந்துவந்துள்ளன. இவ் இரண்டு பிரிவினரையும் இணைத்து நிற்பதில் பண்டாரநாயக்காவும் அதன்பின் திருமதி பண்டாரநாயக்காவும் தமது கட்சிக்குரிய தலைமைத்துவத்தை வழங்கி வந்துள்ளனர். இருப்பினும் காலத்திற்குக்காலம் எடுத்துவந்த முற்போக்கு நடவடிக்கைகளின் மத்தியில் வலதுசாரிகளின் நெருக்குதல்களுக்கு வளைந்து கொடுக்கவேண்டியும் ஏற்பட்டது. இவை மட்டுமன்றி தேசியம் என்ற பெயரில் இனவாதம் கொண்ட சிந்தனைப் போக்கிற்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி பின்நிற்கவில்லை. இவை யாவற்றையும் பகுத்து ஆய்வு செய்யாது அதிகாரப்பசி கொண்டவர்களாக மாறிய பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜிகளும், பழைய கம்யூனிஸ்ட் கட்சியினரும் 1670ம்ஆண்டின் ஐக்கிய முன்னணி வெற்றிபெற்றதும் இரவோடு இரவாக நாட்டில் சோஷலிசம் பிறந்து விட்டதாக மிகப்பெரும் ஏமாற்றை மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்திக் கொண்டனர். இவர்கள் எதனைச் சோஷலிச ஆட்சி என வர்ணித்தார்களோ அதே ஆட்சியில் இருந்து 1976-77 காலப்

பகுதியில் தேசிய முதலாளித்துவத்தால் உதைத்து வெளியே விரட்டப்பட்ட பரிதாப நிலைக்கும் தள்ளப்பட்டனர். அது மட்டுமன்றி 1977ம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஒரு பாராளுமன்ற ஆசனத்தைக்கூட பெறமுடியாத அளவுக்கு மக்கள் இவ் இடதுசாரிகளை மோசமான நிலையில் நிராகரித்து அவர்களது சோஷலிச ஏமாற்றுத் தனங்களுக்குத் தகுந்த பாடத்தினைப் புகட்டியும் கொண் டனர்.

இப்பாராளுமன்ற இடதுசாரிகள் ஐக்கிய முன்னணி ஆட்சியில் இருந்தவேளை தொழிலாளர் விரோத, மக்கள் விரோத செயற்பாடுகளை முன்னெடுப்பதில் பின்நிற்க வில்லை. இரட்டைக் கலாநிதியும் 'தங்கமூளை' என வருணிக்கப்பட்டவருமான ட்ரொஸ்கியவாதி என். எம். பெரேரா ஐக்கிய முன்னணி அரசின் நிதி அமைச்சராக இருந்தார். அவரது முதல் நடவடிக்கை எந்த உலக வங்கியை எதிர்த்து விமர்சனம் செய்து வந்தாரோ அந்த உலகவங்கியிடம் கடன்பெறச்சென்று கைகட்டிநின்று நிபந்தனைகளுடன் கடன் தொகையைப் பெற்றுவந்தமை யாகும். இவ் இடதுசாரிகளின் நிலைப்பாடு எவ்வாறு இருந்ததென்றால், சோஷலிசத்தை நடைமுறைப்படுத்தும் ஐக்கிய முன்னணி ஆட்சியின் கீழ் எவ்வித கோரிக்கை களையோ அன்றி போராட்டங்களையோ தொழி லாளர்கள், ஊழியர்கள் முன்னெடுக்கக்கூடாது என்ப தாகவே காணப்பட்டது அதாவது வாய் வயிறு என்பனவற்றை இறுக்கிக்கொண்டு சோஷலிசத்தின் வெற்றிக்கு கடும் உழைப்பை வழங்கவேண்டும் என்ப தாகும். இதற்கு மார்க்ஸ், லெனின் ஆகியோர்கூட துணைக்கு இழுக்கப்பட்டனர். ஐக்கிய முன்னணி நடாத்திய ஊர்வலங்களில் 'சீனி இன்றித் தேனீர் குடிப்போம்', 'மிளகாய் இன்றிக் கறி சமைப்போம்', 'மரவள்ளியைப் பயிரிட்டு உணவுத் தேவையைப் பூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வோம்'. 'கோரிக்கைகளும் வேண்டாம், வேலை நிறுத்தங்களும் வேண்டாம்' என்ற சுலோகங்களை முன்வைத்தனர் உண்மையில் சோஷலிசம் வருவதற்கான அடிப்படைகளும் அறிகுறிகளும் தென்பட்டிருந்தால் நிச்சயம் மக்கள் இவர்களது வேண்டுகோள்களுக்கு செவிமடுத்திருப்பார்கள். ஆனால் அவ்வாறான எதுவும் தென்படவில்லை. பதிலுக்கு இவ் இடதுசாரித் தலைவர்கள் உட்பட செல்வந்தர்கள் சகலதையும் அனுபவித்து நிற்க தொழிலாளர்களும், விவசாயிகளும், சாதாரண மக்களும் கடுமையான சுமைகளை சுமக்க நேரிட்டது. நாளாந்தம் வாழ்க்கைச் செலவும், வேலையின்மையும் கூடிக்கொண்டே சென்றது. அவ் ஆட்சியை அண்டிநின்ற பலர் புதிய முதலாளிகளாகவும் பணக்காரர்களாகவும் தோற்றம் பெற்றனர். மக்கள் பாணுக்கும், சீனிக்கும், அரிசிக்கும் மணிக்கணக்கில் வரிசை வரிசையாகக் காத்துக்கிடக்க ஆளும் வர்க்கத்தினரும் அவர்களோடு இணைந்த உயர்வர்க்கத்தினரும் சகலதும் பெற்றவர்களாகக் காணப்பட்டனர். இவற்றை எல்லாம் அனுபவித்த மக்கள் இதுதான் சோஷலிசம் என்றால் எமக்கு அது வேண்டாம் என்ற முடிவுக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டனர். இப்பாராளுமன்ற இடதுசாரிகள் தங்களைச் சீரழித்துக்கொண்ட அதேவேளை தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் நீண்ட காலமாக சோஷலிசத்தின் மீது கொண்டிருந்த உயர் மதிப்பினையும் எண்ணங்களையும் கைவிடுவதற்கான பாழ்நிலையை உருவாக்கிக்கொண்டனர்.

வங்கி ஊழியர்கள் முன்வைத்த நியாயமான கோரிக்கைகளை உதாசீனஞ்செய்து நிதி அமைச்சர் என்.எம். பெரேரா மூன்று மாதங்கள்வரை வேலை நிறுத்தம் இடம்பெறவைத்து இறுதியில் வங்கி ஊழியர் களைப் பழிவாங்கிக்கொண்டார். இது சோஷலிசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிய இடதுசாரிகளுக்கு ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில் வீழ்ந்த மிகப்பெரும் அடியாக அமைந்தது. இதுபோன்று வேறும் பல வேலைநிறுத்தங்கள் இடம் பெற்ற வேளைகளில் அவற்றைப் பிற்போக்கானவை எனக் குறிப்பிட்ட இடதுசாரித் தலைவர்கள் தமது தொழிற்சங்கத்தினரைக் கருங்காலிகளாக செயல்படுமாறு தூண்டிநின்றனர். இதனால் அவர்களது தொழிற் சங்கங்கள் அரசுக்கு முட்டுக்கொடுக்கும் நிலைக்கு மாறியதால் தமது அங்கத்துவ தொகையை இழக்க வேண்டியும் ஏற்பட்டது.

இக்காலத்தில்தான் மலையகத் தோட்டத் தொழி லாளர்கள் மாதச் சம்பளம், ஆண் பெண் சமசம்பளம், குடியிருப்பு, சுகாதார வசதிகள், சிறுதுண்டு நில விவசாயத்திற்கு காணிவழங்கல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர் அதாவது ஆண்டாண்டு காலமாக அந்நிய வெள்ளைக்கார கம்பனிகளின் ஆதிக்க கொடுமை களை அனுபவித்த தோட்டத் தொழிலாளர்கள் பெருந் தோட்டத் தொழில்துறைத் தேசியமயத்தால் தமது வாழ்வில் ஒளி பிறக்கும் என எதிர்பார்த்தே இக் கோரிக்கைகளை முன்வைத்தன்ர். மேலும் அவர்கள் நம்பிக்கையுடன் அக்கோரிக்கைகளை முன்வைப்பதற்கு மற்றுமோர் காரணம் இருந்தது. பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சராக இருப்பவர் ஒரு பெரும் இடதுசாரித் தலைவராகவும் தோட்டத் தொழிலாளர் களுக்காக முன்பு உயிர்விடவும் தயாராக இருந்தவருமான ஆர்.டி. சில்வா என்பவரேயாகும். ஆனால் கொல்வின் தோட்டத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கை களை மிக அற்பத்தனமாக உதாசீனம் செய்தார். உலகில் எங்காவது தோட்டத் தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா? என்ற ஏளனக் கேள்வியை அவரால் எழுப்பமுடிந்ததே தவிர எந்தளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

தானும் அக்கோரிக்கைகளுக்கு செவிசாய்க்க முன்வர வில்லை. அது மட்டுமன்றி இவ் ஐக்கிய முன்னணி காலத்திலேயே தரிசுநிலக் குடியேற்றம் என்ற பெயரில் தோட்டங்களைச் சுற்றி திட்டமிட்ட சிங்களக் குடியேற் றங்கள் செயல்படும் முன்மாதிரி தொடக்கிவைக்கப் பட்டது. இதன்மூலம் தோட்டத் தொழிலாளர்களின் இனத்துவ தனித்துவம் நீண்டகால நோக்கில் சிதைக்கப் படுவதற்குரிய அடிப்படைகள் தேடப்பட்டன. அதனால் இன முரண்பாடுகள் வளர்ந்து வர்க்க ஐக்கியம் தோன் றாமல் தடுப்பதற்கும் கால்கோள் இடப்பட்டது. தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டு அந்நியர் ஆதிக்கம் அகற்றப்பட்டது உண்மையாயினும் அவ்வெள்ளைத் துரைமாருக்குப் பதிலாக கறுப்புத்துரை நிர்வாகம் பழைய வகையிலேயே நீடித்தது. தோட்டத் தொழி லாளர்களின் வாழ்வில் எவ்வித மாறுதலும் ஏற்பட வில்லை. மேலும் பல புதிய பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்கியதுடன் அக்கால கட்டத்தில் கொடிய பஞ்சத்திற்கும் வறுமைக்கும் ஆளாக்கப்பட்டனர். அவை ஏற்படுத்திய மனக் கசப்பினையும், துயரமிக்க நினைவு களையும் தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் மறக்க வில்லை. மேலும் தொண்டமான் தலைமையிலான பிற்போக்கு சக்திகளின் முகாமுக்கு தோட்டத் தொழி லாளர்கள் விரைவாகவும் அதிக அளவிலும் சென்று அடைவதற்கு இவ் இடதுசாரிகள் வழிதேடிக் கொடுத்தார்கள்.

## ஜே. வி. பி. கிளர்ச்சியும் அடக்குமுறையும்

1965–70 காலகட்டத்தில் டட்லி சேனநாயக்காவின் தலைமையிலான யூ. என். பி ஆட்சியின் பிற்கால ஆண்டு களில் ஜே. வி. பி. இயக்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டனர். ஆனால் எழுபதில் பதவிக்குவந்த ஐக்கிய முன்னணி அரசு அவ்வாறானவர்களை விடுதலைசெய்து தேர்தலில் தம்மை ஜே. வி. பி ஆதரித்ததற்கு பிரதி உப காரம் வழங்கியது இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய ஜே.வி.பி ஒரு கிளர்ச்சிகான வேலைகளில் இரகசியமாக ஈடுபட்டுவந்தது. ஐக்கிய முன்னணி ஆட்சியின் ஒரு வருடப் பூர்த்தி கொண்டாடப்படுவதற்கு ஒருமாதம் முன்னதாக ஜே வி பி. தனது கிளர்ச்சி நடவடிக்கையில் இறங்கியது. 1971ம் ஆண்டு ஏப்பிரல் ஐந்தாம் திகதி வெள்ளவாயா என்னும் இடத்தில் உள்ள பொலீஸ் நிலையம் தாக்கப்பட்டதுடன் இக்கிளர்ச்சி தொடங்கப் பட்டது, அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு மாகா ணங்களில் தமிழர் பிரதேசங்கள் தவிர்ந்த பகுதிகளிலும், ஏனைய மாகாணங்களில் அமைந்துள்ள பல பொலீஸ் நிலையங்கள் சிறுரக ஆயுதங்களான நாட்டுத் துப்பாக்கி கள், எறிகுண்டுகள் போன்றனவற்றைக் கொண்டு தாக்கப் பட்டன. சில இடங்களில் பொலிசார் உயிரிழந்தனர். படுகாயங்கள் பட்டதுடன் தப்பி ஓடவும் செய்தனர். தாக்குதலில் ஏராளமான இளைஞர்கள் எவ்வித பயிற்சியும் இன்றி இறக்கிவிடப்பட்டனர். பொலீஸ் நிலையங்கள் வீழ்ச்சியடைந்ததும் அதிகாரம் கைகளுக்கு கிடைத்துவிடும் என்ற நம்பிக்கை பரப்பப்பட்டது. இக்கிளர்ச்சி தொடங்கப்படுவதற்கு ஒருவாரம் முன்னதாக றோகண விஜயவீர பொலிசினால் கைதுசெய்யப்பட்டிருந்தார். அதனால் அவர் கிளர்ச்சி யில் நேரடியாகப் பங்குகொள்வது தவிர்க்கப்பட்டது. அவ்வப் பிரதேச நிலைமைகளுக்குப் தன்மைக்கும் தகுந்தவாறு சில இடங்களில் பலவீனமாகவும் சில இடங் களில் பலமானதாகவும் தாக்குதல்கள் காணப்பட்டன. தென் இலங்கையின் தூரப்பகுதியில் அமைந்திருந்த அடர்த்திமிக்க சிங்கராஜா காடு கிளர்ச்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டது. அதேபோன்று கேகாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்டத்தின் காடுகளும் மலைப்பகுதிகளும் கிளர்ச்சியாளர்களின் எழுச்சிக்கு உகந்த இடங்களாக அமைந்தன. எவ்விதமான திட்டமோ அன்றி அரசின் எதிர் நடவடிக்கைக்குப் பதில் எவ்வாறு செயல்படவேண்டும் என்ற போராட்ட தந்திரோபாய முடிவோ இன்றி இளைஞர்களின் உணர்ச்சிகளைத் தூண்டிய கிளர்ச்சியாக இது முன்னெடுக்கப்பட்டதால் அதனை அடக்க ஆட்சிக்கு அதிக நாட்கள் செல்லவில்லை. ஆரம்பத்தில் அச்சத்துடன் காணப்பட்ட ஆட்சியினர் இந்தியப் படைகளை எவ்வித ஆரவாரமும் இன்றி இரகசியமாக வரவழைத்து சில பகுதிகளில் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கியதுடன் கடற்பிராந்தியத்திலும் இந்திய கடற்படையை நிறுத்தி வைத்தது. 'சிகப்புப் புரட்சி' பற்றி பெரும் அபாய அறிவிப்புகளை பத்திரிகைகள் வெளியிட்டதால் சீன, கொரிய நாடுகளின் தூதராலயங்கள் சந்தேகத்துடன் கண்காணிக்கப்பட்டன. கொரிய தூதரக அதிகாரிகளும் ஊழியர்களும் நாட்டைவிட்டு அனுப்பப்பட்டனர். பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டப நிர்மாணப்பகுதி பலத்த சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. சீன, கொரிய நாடுகள் இக்கிளர்ச்சியாளர்களுக்கு உதவியதாக எவ்விதமான சிறு ஆதாரமும் காட்ட முடியாது இருந்தபோதிலும் வேண்டுமென்றே தொடர்புபடுத்திய பிரசாரமும், ஆத்திரமூட்டும் செயல்களும் செய்யப்பட்டன.

ஜே. வி. பியின் மேற்படி கிளர்ச்சி மூன்று வாரங்களில் கடுமையான அடக்குமுறையின்கீழ் அடக்கப்பட்டு கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரப்பட்டது. ஐயாயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்கள் உயிரிழந்தனர் என்று மதிப்பிடப்பட்டது. பதினையாயிரம் இளைஞர்கள், சிறையில் அடைக்கப்பட்டனர். விஜயவீரா யாழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்தில் டச்சுக்கோட்டையில் மிகப் பாதுகாப்பாக அமைந்த சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவரை மீட்பதற்கு யாழ்ப்பாணத்தையே அறிந்திராத இளைஞர்களை உல்லாசப் பிரயாண பஸ் மூலம் அழைத்து வந்து கோட்டைமீது தாக்குதல் தொடுத்து அனைவருமே பொலிசினால் சுற்றிவளைத்து பிடிக்கப்படும் முட்டாள்தனமான திட்டத்தையும் இக்கிளர்ச்சியில் ஈடுபட்டோர் செயற்படுத்தி தோல்விகண்டனர். தாங்கள் பொலிஸ் நிலைய தாக்குதல்களில் ஈடுபடும் அதேவேளை இராணுவம், கடற்படை, விமானப்படையில் உள்ளவர்கள் தமக்கு ஆதரவாக கிளர்ச்சியில் ஈடுபடுவார்கள் என்ற பலத்த நம்பிக்கையை இளைஞர்களுக்கு ஜே.வி.பி வழங்கியிருந்தது. ஆனால் அப்படி எதுவுமே இடம்பெறவில்லை. இளைஞர்களின் இரத்தவெள்ளத்தில் அக்கிளர்ச்சி முறியடிக்கப்பட்டது. அதனை பழம்பெருந் பாராளுமன்ற இடதுசாரிகள் இணைந்திருந்த ஐக்கிய முன்னணி அரசு மிக மோசமான அடக்குமுறைகளினால் நிறைவேற்றிக் கொண்டது. ஒரேநாளில் நாடுபூராவும் கிளர்ச்சியை பொலீஸ் நிலையத் தாக்குதல்மூலம் வெற்றிபெறச்செய்யலாம் என்ற விஜயவீராவின் ட்ரொஸ்கிய வழிமுறை பெரும் தோல்வியைத் தழுவிக் கொண்டது. தொழிலாளர்கள், விவசாயிகள், அறிவுஜீவிகளின் பங்களிப்பை உதாசீனம் செய்துநின்ற இத்தவறான போக்கு அக்கிளர்ச்சி விரைவில் அடக்கப்படுவதற்கு வழியமைத்துக்கொடுத்தமையை ஓர் நடைமுறை அனுபவமாகவும் காணமுடிந்தது.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஜே,வி.பியை ஒருபுறத்தில் அடக்கியவேளை தமது ஆட்சிக்கு எதிர்ப்பு தெரிவித்துவந்த பல்வேறு சக்திகளையும் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பழிவாங்கிக்கொண்டது, இதன்முன்னணியில் பாராளுமன்ற இடதுசாரிகள் இருந்தனர். குறிப்பாக மார்க்சிச லெனினிசக் கட்சியான புதிய கம்யூனிஸ்ட்

கட்சியின் தலைமை உறுப்பினர்களும் தொழிற்சங்க, வாலிபர் இயக்க ஊழியர்களும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஜே.வி.பியை நேர்மையாக விமர்சித்து அதன் தவறான மார்க்கத்தை அம்பலப் படுத்திய புதிய கட்சியான மார்க்சிச லெனினிசக் கட்சியின் தலைவர்களான நா. சண்முகதாசன், சமல்த சில்வா, காந்தி அபயசேகரா போன்ற பலர் பல மாதங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். இக் காலத்தில் வடபகுதியின் இப்புதிய கட்சி, வாலிபர் இயக்க, வெகுஜன இயக்கத் தலைவர்களையும் ஊழியர் களையும் கைதுசெய்ய பொலீஸ் பெரும் முயற்சி செய்த போதிலும் அவர்களின் திட்டமிட்ட தலைமறைவினால் இறுதிவரை அவ்வாறு கைதுசெய்து சிறையில் அடைக்க முடியவில்லை.

ஜே.வி.பி. 1971ம் ஆண்டில் முன்னெடுத்த ஏப்பிரல் கிளர்ச்சியானது தோல்வியில் முடிந்த அதேவேளை உழைக்கும் வர்க்கத்திற்கும் சமுதாய மாற்றத்தை விரும்பி யோருக்கும் பயன்மிக்க அனுபவங்களைக் கொடுத்தது. ஒரு உண்மையான புரட்சிக்கு வெறும் அலங்காரத் சொற் தொடர்களோ, அன்றி இளைஞர்கள் மட்டும் என்ற மட்டுப்படுத்தலோ, பெயரளவிலான மார்க்சிச லெனினிசம் என்ற பிரசாரமோ அடிப்படையானவை யாக இருக்க முடியாது என்பதை தெளிவாக்கியது. அதற்குப் பதிலாக ஓர் உறுதியான மார்க்சிச லெனினிச பாதையிலான தொழிலாளிவர்க்கக் கட்சியும் அதன் தலைமையிலான வேலைத்திட்டமும், போராட்ட தந்திரோபாயங்கள் என்பனவற்றுடன் வெகுஜனங்களை முற்றுமுழுதாகச் சார்ந்து நிற்கும் மக்கள் படையின் உருவாக்கமும் இன்றி எத்தகைய புரட்சியையும் வெற்றிக்குக் கொண்டுவர இயலாது என்ற உண்மை நிரூபணமாகியது. எதிரி யார்? நண்பர்கள் யார்? என்பதைத் தெளிவுபடுத்தி, பலமுனை நட்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்திகளுடன் ஐக்கியம்பூண்டு, எதிரியைத் தனிமைப் படுத்தி, முன்னெடுக்கப்படும் புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களே புரட்சியின் அடிப்படை ஆதாரமாக விளங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை நிராகரித்த ஜே.வி.பியின் ஏப்பிரல் கிளர்ச்சி தோல்வியடைந்ததில் மார்க்சிச லெனினிச வாதிகளுக்கு வியப்பு ஏதும் ஏற்பட வில்லை. பதிலுக்கு புரட்சிகர சக்திகளாக வளரவேண்டிய பல்லாயிரம் சாதாரண வர்க்க அடிப்படைகொண்ட சிங்கள இளைஞர்களைப் பலிகொடுத்து அழிவுக்குள்ளாக் கிய அதேவேளை 'சும்மாகிடந்த சங்கை ஊதிக்கெடுத்தது' போன்று ஆளும் வர்க்கத்தின் அரசு யந்திரமான முப்படைகளையும் தரத்திலும் எண்ணிக்கையிலும் பெருக்கிவைப்பதற்கு அவ் ஜே. வி. பியின் ஏப்பிரல் கிளர்ச்சி வழிவகுத்துக் கொடுத்தது. பாராளுமன்ற இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதம் கொண்ட தொழிலாளி வர்க்கத் துரோகத் தனத்தினால் பலவீனமடைந்த இலங்கையின் புரட்சிகர இயக்கத்தை ஜே.வி.பி கிளர்ச்சியானது எதிர்மறையாக மேலும் பல வருடங் களுக்கு பின்னோக்கித் தள்ளிவிட்ட துயர்மிகுந்த வரலாற்று நிகழ்வு நடந்தேறியது.

## □ மார்க்சிச லெனினிசக் கட்சியில் பிளவு

ஏப்பிரல் கிளர்ச்சியின் பல்வேறு விதத் தாக்கங்கள் மார்க்சிச லெனினிசக் கட்சியினுள் பிரதிபலித்தது. அரசின் அக்கால அடக்குமுறையினால் சில தலைமை உறுப்பினர்களும் ஊழியர்களும் அதிர்ந்து காணப் பட்டனர். வாயளவில் புரட்சி பற்றிப் பேசிய அவர்களால் இத்தகைய அடக்குமுறைநிலை வந்தபோது அதற்கு முகம்கொடுக்க முடியாது திணறவேண்டியேற் பட்டது. சிறை சென்றவர்களும், தலைமறைவாக இருந்தவர்களும் உறுதியாக இருக்க வெளியில் இருந்த வர்கள் கட்சியின் கொள்கையில் மாற்றம் வேண்டும் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்புறுத்தினர். இக்கொள்கை மாற்றக் கோரிக்கையின் பின்னால் ஐக்கிய முன்னணி அரசின் கரங்களும் மறைந்திருந்தமை மறுக்கப்படமுடியாதவை ஆகும்.

பத்துமாதகால தடுப்புக் காவலுக்குப்பின்பு வெலிக்கடைச் சிறைச்சாலையில் இருந்து கட்சியின் பொதுச் செயலாளர் நா. சண்முகதாசன் விடுவிக்கப் பட்டார். அவர் வெளியில் வந்ததும் சிறையில் அடைக்கப் பட்டுள்ள அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யவேண்டும் என்ற கோரிக்கையை கட்சியின் சார்பாக முன்வைத்தார். அதற்கான ஓர் கூட்டம் கொழும்பில் வெற்றிகரமாக இடம்பெற்றது. ஏப்பிரல் கிளர்ச்சிக்குப் பின் இடம்பெற்ற முதலாவது இடதுசாரி அரசியல் கூட்டமும், துணிவான கோரிக்கையும் அதுவாகவே இருந்தது. இதனைத் தொடர்ந்து 1972ம் ஆண்டின் முற்பகுதியில் கட்சிக்குள் மாற்றுக் கொள்கை ஒன்றினை முன்வைக்க மத்திய குழு உறுப்பினர்களில் ஒரு பகுதியினர் முன்வந்தனர். அவ்வாறு முன்வந்தவர்கள் கட்சியின் கடந்தகாலக் கொள்கையில் ஏற்பட்ட தவறுகளை விமர்சனம் சுயவிமர்சன ரீதியில் அணுகி சரியானதோர் கொள்கையை உருவாக்க முயற்சிக்க வில்லை. கடந்தகால அதிதீவிரக் கொள்கையை உருவாக்குவதில் கட்சித் தலைமையில் தாம் வகித்த பங்கினை மறைத்து ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவு தரும் வகையில் பாராளுமன்றக் கண்ணோட்டத்திலான ஒரு கொள்கை அறிக்கையினை உருவாக்கி இருந்தனர். இதில் அடங்கியிருந்த முரண் அம்சம் யாதெனில் 'ரத்வத்தை குடும்பத்தின் உயில்களும் உறுதிகளும் கிழித்து எரிக்கப்படவேண்டும்' என உணர்ச்சிமிக்க அதிதீவிரப் புரட்சிப் பேச்சினை இரண்டு ஆண்டு களுக்கு முன்பு நிகழ்த்தியவர்களும் அதனைப் புரட்சி கரமான நிலைப்பாடு என ஆதரவு தெரிவித்தவர்களும் ஏப்பிரல் கிளர்ச்சிக்குப் பின் நேர் எதிர் நிலைக்கு வந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி பண்டாரநாயக்காவின் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு ஆதரவு கொடுக்க முன்வந்த நிலைப்பாடே முரண்சுவை மிகுந்ததாகக் காணப்பட்டதாகும். ஒரு கட்சியின் கொள்கை தேவை ஏற்படும்போது மீள்பரிசீலனைக்கும், விமர்சனம், சுயவிமர்சனத்திற்கும் உள்ளாக்கப்படுவது அவசியமானது. அதன் மூலம் சரியானவற்றை கைப்பிடித்து தவறானவற்றை நிராகரித்துக் கொள்வதால் கட்சியும் அதன் கொள்கையும் பலம் பெற முடியும். அதற்குரிய ஜனநாயக மத்தியத்துவம் கொண்ட ஸ்தாபன வழிமுறைகள் பின்பற்றப்படவேண்டும். ஆனால் கட்சிக்குள் புதிய கொள்கையை முன்வைக்க முன்வந்தவர்கள் பின்பற்றிய வழிமுறை தவறானதாக அமைந்தது. அவர்களது கொள்கையில் தெளிவீனங்களும் தவறுகளும் காணப்பட்டதுடன் பொதுச்செயலாளராக இருந்த சண்முகதாசன் அல்பேனிய, சீனப் பயணத்தைக் மேற்கொண்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரது தலைமையை நிராகரிக்கும் தவறான முடிவு மேற் கொள்ளப்பட்டதாகும். சண்முகதாசனின் தவறுகளை திருத்துவதாகக் கூறிக்கொண்டு அதிலும் மோசமான தவறுகளை இழைத்து கட்சியையும் பிளவடையச் செய்யும் நோக்கில் மத்திய குழுவின் அரைவாசிக்கு மேலானவர்கள் முன்வந்திருந்தனர். ஒரு விஷேச மாநாட்டின் மூலமோ அல்லது சண்முகதாசன் பங்குகொள்ளக்கூடிய மத்திய குழுவின் விவாத அடிப்படையிலோ அன்றி ஒருதலைப் பட்சமாக இப்பிளவு நடவடிக்கையில் மத்திய குழுவைச் சேர்ந்த வாட்சன் பெர்ணாண்டோ, வீ. ஏ. கந்தசாமி, ஹிக்கொட தர்மசேனா, மூ. கார்த்திகேசன், ஓ. ஏ. இராமையா ஆகியோர் ஈடுபட்டனர். இதனை ஏ.சி.எம். சாபீ, சமல்த டி சில்வா, காந்தி அபயசேகரா, கே.ஏ. சுப்பிரமணியம் போன்றோர் எதிர்த்தனர். இப்பிளவின் தவறான அம்சம் வடபகுதியில் இருந்தும் சுட்டிக்காட்டப் பட்டது. சண்முகதாசனின் அகநிலைப்பட்ட ஒருமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதத் தவறுகள் நிச்சயம் களையப்படவேண்டும். ஆனால் அதனைக் கூறிக்கொண்டு கட்சி வலதுசாரி சந்தர்ப்ப வாதத்தினுள் வீழ்ந்துவிடுவதையும் பிளவின் மூலம் கட்சி பலவீனம் அடைவதையும் நேர்மையான மார்க்சிச லெனினிச வாதிகள் ஏற்றுக்கொள்ள மறுத்தமையால் அவர்கள் சண்முகதாசனின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொண்டு அதேவேளை உட்கட்சிப் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பவர்களாகவும் இருந்துவந்தனர். ஆனால் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மா. லெ.) என்ற பெயருடன் பிளவடைந்த பிரிவினர் தொடர்ந்து ஒரு கட்சியாக செயலாற்றும் திறன் அற்று நாளடைவில் குன்றிப்போனதுடன் இறுதியில் உதிரிகளாகி செயலற்ற நிலைக்கும் ஆளாகினர். இப்பிளவு நவீன திரிபு வாதத்தை எதிர்த்து உருவாகிய புதிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு பாரிய பின்னடைவை ஏற்படுத்தியது.

## ■ கம்யூனிஸ்ட் கட்சியின் (இடது) தோற்றம்

1972ம் ஆண்டில் இடம்பெற்ற பிளவுக்குப் பின்பும் மார்க்சிச லெனினிசக் கட்சியாக கொள்கை, ஸ்தாபனம், தந்திரோபாயம் என்பனவற்றின் அடிப்படையில் முன் செல்வதற்காக உட்கட்சி மறு சீரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்ற வற்புறுத்தல் அதிகரித்தது. இதற் கமைய கட்சியின் பதினோராவது மாநாடு இடம் பெற்றது. சிற்சில கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப் பட்டு புதிய மத்திய குழுவும் தெரிவு செய்யப்பட்டது. பொதுச் செயலாளரான சண்முகதாசன் மீண்டும் தனது அகநிலைப்பட்ட ஒருமுனைவாதத் தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு பிடிவாதமாக மறுத்து வந்தார். இதனால் அவ்வப்போது உட்கட்சிப் போராட்டம் இடம்பெற்று வந்தது. ஐக்கிய முன்னணி பற்றிய சர்ச்சையில் சண்முக தாசன் தனது புத்தகவாத நிலைப்பாட்டை மீண்டும் மீண்டும் வற்புறுத்தினாரே தவிர இலங்கையின் யதார்த்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையை கவனத்தில் கொள்ளத் தவறினார். இதே போன்று தேசிய இனப்பிரச்சினையிலும் குறிப்பாக சுய நிர்ணய உரிமை பற்றிய விவாதத்தில் அவரது நிலைப் பாடு தெளிவற்றதாகவும் புதிய வளர்ச்சிப் போக்குகளை கணிப்பில் கொள்ளாத நிலையிலும் காணப்பட்டது. இத்தகைய உட்கட்சி ரீதியிலான கொள்கை விவாதங்கள் இடம்பெற்றுவந்த எழுபதுகளின் நடுக்கூறுக்குப் பின் னான காலப்பகுதியில் தோழர் மாஓசேதுங்கினால் முன் வைக்கப்பட்ட மூன்றுலகக் கோட்பாடு பற்றிய விவாதம் முன்னுக்கு கொண்டுவரப்பட்டது. அன்றைய சர்வதேசச் சூழலில் மாஓவினால் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட ஒரு கோட்பாடாகவே மூன்றுலகக் கோட்பாடு முன் வைக்கப்பட்டது. மேலாதிக்க வல்லரசுகளான சோவியத் யூனியனையும் அமெரிக்காவையும் முதலாம் உலகம் எனக் கண்டு, கைத்தொழில் வளர்ச்சிபெற்ற மேற்குலக முதலா ளித்துவ நாடுகளையும் யப்பானையும் சேர்த்து இரண்டாம் உலகம் எனவும், ஆசிய ஆப்பிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளான பின்தங்கிய வளர்முக நாடுகளை மூன்றாம் உலக நாடுகள் எனவும் வகைப்படுத்தப்பட்டது. இம்மூன்றாம் உலக நாடுகள் தமது முதல் எதிரியாக முதலாம் உலகத்தைச் சேர்ந்த இரண்டு மேலாதிக்க வல்ல ரசுகளையும் எதிர்த்த போராட்டத்தில் உறுதியாகவும், பரந்த ஐக்கியத்துடனும் செயல்பட்டு தமது தேசிய சுதந்திரத்தையும் தேசிய பொருளாதாரத்தையும் வென் றெடுத்துப் பாதுகாத்து வளர்த்துச் செல்வதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. இதன் அர்த்தம் வர்க்கப் போராட்டம் கைவிடப்பட்டதாக அமைய வேண்டும் என்பதற்கில்லை என்பதையும் இம்மூன்றுலக் கோட்பாடு வற்புறுத்தியது. அந்தந்த நாடுகளில் உள்ள பாட்டாளிவர்க்க கட்சிகள் அன்றைய சர்வதேசச் சூழலையும் புதிய வளர்ச்சிப் போக்குகளையும் தகுந்த வாறு கணிப்பில் கொண்டு தமது பாதையில் தங்களைச் சக்திப்படுத்திக் கொள்வதன் மூலம் பின்னடைவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாகி நிற்கும் சர்வதேசப் பாட்டாளிவர்க்க இயக்கத்திற்கு பலத்தைச் சேகரிக்கவேண்டும் என்பதையும இம்மூன்றுலகக் கோட்டுபாடு சுட்டிக்காட்டியது. மாஓவினால் முன்மொழியப்பட்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியினால் முன்வைக்கப்பட்ட இம்மூன்றுலகக் கோட்பாட்டினை சண்முகதாசன் விவாதத்திற்கும் கருத்து முரண்பாட்டிற்கும் உரியதொன்றாக வலிந்து தூக்கிக் கொண்டார். இக்கோட்பாட்டை மாஓ எச்சந்தர்ப்பத்திலும் முக்வைக்கவில்லை எனச் சுட்டிக்காட்டி, சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையின் நம்பகத் தன்மையை பலத்த சந்தேகத்துடன் கேள்விக்குறியாக்கினார். அத்துடன் தனது நிலைப்பாட்டிற்கு அல்பேனிய தொழிற் கட்சியையும் அதன் தலைவர் அன்வர் ஹோசாவையும் நாடி நின்றார். தனது சொந்தநாட்டின் பாட்டாளிவர்க்கக் கட்சியானது அவசியமற்றதோர் விவாதத்தில் ஈடுபட்டு பலவீனமடைந்து பிளவுக்கு உள்ளாவதையிட்டு எவ்வித கவலையும் கொள்ளாத சண்முகதாசன் சீனக்கட்சித் தலைமை மீது பிழைகண்டு அதனைக் கண்டித்து நிராகரிப்பதில் முனைப்புடையவராக விளங்கி நின்றார். தான் மட்டுமே சகலவற்றிலும் சரி. ஏனையவர்கள் யாவரும் தவறானவர்கள் என்ற தன்னங்காரம் கொண்ட தத்துவவாதியாக தன்னை நிலைநிறுத்த முயன்றார். இதன் விளைவு மீண்டும் கட்சிக்குள் தத்துவார்த்த கொள்கை முரண்பாடு உச்ச நிலைக்குச் சென்றது. அவரது நிலைப்பாடு கட்சி மத்திய குழுவிற்குள் கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தியது. இம்முரண்பாட்டினை தீர்ப்பதற்கு 1978ம் ஆண்டின் நடுக்கூறில் ஓர் விசேஷ மாநாடு கூட்டப்பட்டது. சண்முகதாசன் ஓர் அறிக்கையையும், சி.கா. செந்திவேல் மாற்று அறிக்கையையும் மாநாட்டில் சமர்ப்பித்து விவாதம் இடம்பெற்றது. இவ்விரு அறிக்கைகளும் ஏற்கனவே கட்சி ஸ்தாபனங்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. சி. கா. செந்திவேல் முன்வைத்த அறிக்கையை முற்று முழுதாக ஆதரித்து நின்ற கே. ஏ. சுப்பிரமணியம் மத்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவிலும், பின் மாநாட்டிலும் ஓர் முக்கிய ஆலோசனையை முன்வைத்தார். அதாவது இவ்விவாதத்தையும் அதன் சார்பான முடிவினையும் மூன்று வருட காலத்திற்கு ஒருபுறத்தில் ஒதுக்கி வைத்துக் கொண்டு ஏனைய விடயங்களில் விமர்சனம் சுயவிமர்சன ரீதியில் முடிவுகளைச் செய்து கட்சியைப் பலமுள்ள கட்சியாக முன்னெடுக்க வேண்டும் என்பதே அவ் ஆலோசனையாகும். ஆனால் இதனை சண்முகதாசன் ஏற்றுக் கொள்ள மறுத்து இவ்விவாதத்தில் உடனடி முடிவு மேற்கொள்ளப்பட வேண்டும் என வற்புறுத்தி நின்றார். விவாத முடிவில் அவரது அறிக்கைக்கு சிறு அளவு பெரும்பான்மை ஆதரவு கிடைத்தது. அவ்வேளை கட்சியின் ஐக்கியத்தையும் எதிர்கால வளர்ச்சியையும் கருதி இத்தீர்மானம் உட்கட்சி அளவில் இருக்கவேண்டுமே தவிர வெளியில் தெரியப்படுத்தப் படுவதில்லை எனவும் ஓர் தீர்மானம் அம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் சண்முகதாசன் இம் முடிவினை மீறி ஓரிரு நாட்கள் கழித்து கட்சியின் விசேஷ மாநாட்டின் முடிவாக மூன்றுலகக் கோட்பாடு நிராகரிக்கப்பட்டிருப்பதை பத்திரிகை அறிக்கையாக வெளியிட்டார். மேலும் மாற்று கொள்கையை ஜனநாயக மத்தியத்துவ அடிப்படையில் நேர்மையுடன் முன்வைத்த தோழர்கள் பற்றிய அவதூறுகளும் பொய்க் குற்றச்சாட்டுகளும் பல்வேறு மட்டங்களில் பரப்பட்டன. இந்நிலையில் தொடர்ந்தும் அக்கட்சிக்குள் இருந்து கொண்டு நேர்மையான உட்கட்சிப் போராட்டம் நடத்துவது என்பதோ அல்லது சண்முகதாசனின் தத்துவார்த்த, கொள்கை, ஸ்தாபனத் தவறுகளை திருத்துவதோ முடியாத காரியம் என்ற நிலையில் கணிசமான கட்சி உறுப்பினர்கள் மிக நிதானமாகத் தீர்மானித்ததன் விளைவாக புதிய கட்சியைத் தோற்றுவிக்கும் முடிவுக்கு வந்தனர். அதுவே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) ஆகும். 1978ம் ஆண்டு யூலை மாதத்தில் இக்கட்சியின் உறுப்பினர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றிணைந்து கட்சிக் காங்கிரசுக்கான மத்திய தயாரிப்பு குழு ஒன்றினைத் தெரிவுசெய்தனர். அதன் செயலாளராக கே.ஏ. சுப்பிரமணியம் தெரிவுசெய்யப் பட்டார். 1984ம் ஆண்டின் பிற்கூறிலே கட்சியின் முதலாவது தேசிய காங்கிரஸ் இரண்டு நாட்கள் இடம்பெற்றது. இக் காங்கிரஸ் புதிய மத்திய குழுவையும், மத்தியகுழு கே. ஏ. சுப்பிரமணியத்தை பொதுச் செயலாளராகவும் தெரிவு செய்துகொண்டது. கொழும்பு, மலையகம், வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மேற்படி கட்சி தனது வேலைகளை முன்னெடுத்து வந்தது. சண்முகதாசன் தலைமையிலான கட்சிக்குள் முன்னெடுக்க முற்பட்ட உட்கட்சிப் போராட்டத்தின்போது முன் வைக்கப்பட்ட நான்கு முக்கிய அம்சங்களுக்கு இப்புதிய கட்சி தனது முக்கியத்துவத்தைக் கொடுத்தது. ஐக்கிய முன்னணி, தேசிய இனப்பிரச்சினையிலே சுயநிர்ணய உரிமைக்கான போராட்டம் பற்றிய கண்ணோட்டம், கட்சியை ஸ்தாபன ரீதியில் ஜனநாயக மத்தியத்துவம் மிக்க கட்சியாக கட்டியெழுப்புதல், மற்றும் தத்துவார்த்த கொள்கை ரீதியான தெளிவு, என்பனவற்றுக்கு முன்னுரிமை வழங்கிநின்றது. இதனடிப்படையில் பல்வேறு நிலைகளிலும் நடைமுறைசார்ந்த வேலைகள் முன்னெடுக்கப்பட்டன. கட்சி 'செம்பதாகை' 'ரெட்பனர்' ஆகிய பெயர்களில் தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளையும் 'தாயகம்' கலை இலக்கிய சஞ்சிகையையும் வெளியிட்டது. செம்பதாகைப் பத்திரிகை பிற்காலத்தில் புதிய பூமியாகப் பெயர் மாற்றிக் கொண்டது. மேலும் கட்சி தனது வளர்ச்சிப் பாதையில் இரண்டாவது தேசிய காங்கிரசினை நடத்துவதற்கு தயாரிப்புச்செய்துவந்த வேளையில் கட்சி யின் பொதுச் செயலாளர் மரணமடைந்தார். அவரது மரணத்தை தொடர்ந்து சி, கா. செந்திவேல் கட்சியின் பொதுச்செயலாளராக தெரிவுசெய்யப்பட்டார். 1991 மே மாதத்தில் கட்சியின் இரண்டாவது தேசிய காங்கிரஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. இக்காங்கிரஸ் முதலாவது காங்கிரஸ் வகுத்துக்கொண்ட கொள்கை தந்திரோபாயம் என்பனவற்றை மேலும் விரிவுபடுத்தி நாட்டின் அரசியல் பொருளாதார கட்டமைப்பின் தன்மைகளை மார்க்சிச லெனினிச அடிப்படையில் ஆய்வுக்கு உட்படுத்திக் கொண்டது. நவகொலனித்துவ அமைப்புமுறை இலங்கை மீது தனது இறுக்கத்தை வேகப்படுத்தி வருவதனை அடையாளப்படுத்தி ஆட்சியில் அமர்ந்துள்ள பெரு முதலாளித்துவ யூ.என்.பி. அரசு அதற்குரிய அடிப்படைகளை வழங்கிநிற்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்நிலையில் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ, பெரு முதலாளித்துவ சக்திகளின் பிரதிநிதியாக ஆட்சி செய்து வரும் யூ. என். பிக்கு. எதிரான சகல சக்திகளினதும் ஐக்கியத்திற்கான ஒரு பொது வேலைத்திட்டம் முன்வைக்கப்படுவதன் அவசியத்தை கட்சிக் காங்கிரஸ் வலியுறுத்தியது. அதேவேளை புரட்சிகர வெகுஜனப் போராட்டங்களை பல்வேறு வடிவங்களிலும் முன்னெடுப்பதை கட்சி தனது போராட்ட மார்க்கமாக வரையறை செய்துகொண்டது. வெகுஜனப் போராட்ட எழுச்சி இறுதியானதும் மிக உயர்ந்த போராட்ட வடிவம் என்பதனை உறுதிப்படுத்தும் அதேவேளை பாராளுமன்றம் உள்ளிட்ட சாத்தியமான சகல வடிவங்களிலும் அமைந்த போராட்டங்களை முன்னெடுத்துச்செல்வதனை கட்சிக் காங்கிரஸ் தெளிவுடன் ஏற்றுக்கொண்டது. மேலும் உடனடியானதும் நீண்ட காலத்திற்குமான இரு வெவ்வேறு வேலைத்திட்டங்களையும் காங்கிரஸ் நிறைவேற்றிக் கொண்டது. இன்றைய உடனடி இலக்கு தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்தலும், சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்பதும் என வரையறை செய்த அதேவேளை நீண்டகால இலக்கு தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் புதிய-ஜனநாயக அரசமைப்பைத் தோற்றுவித்து அதன் ஊடாக சோஷலிசத்தை முன்னோக்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அதனை நிலைநிறுத்துவதாகும் எனச் சுட்டிக் காட்டியது. மேலும் பல்வேறு நிலைகளிலும் கம்யூனிஸ்ட் கட்சியின் பெயர் சீரழிக்கப்பட்டுள்ள சூழலில் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்னும் பெயரினை புதிய-ஜனநாயக கட்சி எனப் பெயர் மாற்றிக்கொள்ளும் முடிவினையும் மேற்படி இரண்டாவது காங்கிரஸ் நிறைவேற்றியது. இக்கட்சியின் பொதுச் செயலாளராக சி.கா. செந்தில்வேல், தேசிய அமைப்பாளராக இ. தம்பையா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். அதன் வாலிபர் இயக்கமாக இலங்கை ஜனநாயக வாலிபர் இயக்கம் தொடர்ந்து செயல்படுவதையும் கட்சிக் காங்கிரஸ் அங்கீகரித்தது. சர்வதேச அளவிலும், தேசிய ரீதியிலும் கம்யூனிஸ்ட் இயக்கம் பின்னடைவுகளையும் பலவீனங்களையும் கண்டுள்ள ஒரு சூழலில் மார்க்சிச லெனினிசத்தையும் அதன் வளர்ச்சியான மாஓசேதுங் சிந்தனையையும் பேணிப் பாதுகாத்து அவற்றின் செழுமைமிக்க அனுபவங்களை நமது நாட்டின் வளர்ந்துவரும் புதிய சூழலுக்கு ஏற்ற வாறு பிரயோகித்து கட்சியையும் அதன் தலைமையிலான போராட்டங்களையும் உறுதியுடன் முன்னெடுப்பதற்கு புதிய-ஜனநாயக கட்சி தன்னை முற்று முழுதாக அர்ப்பணிக்கும் முடிவினை மேற்படி இரண்டாவது தேசிய காங்கிரஸ் உறுதிமொழியாக எடுத்துக் கொண்டது.

இலங்கையின் இடதுசாரி இயக்கத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியில் காலத்திற்குக்காலம் பிளவுகள் இடம் பெற்றதுபோன்று ட்ரொஸ்கிய கட்சியான சமசமாஜக் கட்சியிலும் பிளவுகள் இடம்பெற்றுவந்துள்ளன. கட்சியின் ஆரம்பகால ட்ரொஸ்கிய வாதியான பிலிப் குணவர்த்தனா சமசமாஜக் கட்சியில் இருந்து விலகிச் செல்வதும் மீண்டும் இணைந்து கொள்வதுமாக இருந்து வந்தார். அவர் 1956ல் பண்டாரநாயக்காவுடன் இணைந்துகொண்டதுடன் மூலம் முற்றாக சமசமாஜக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியில் இருந்து விலகி இருந்தார். அவர் இறுதியில் 1965–70யூ. என். பி ஆட்சியில் அமைச்சர் பதவி பெற்று தனது இறுதிக்காலத்தை முடித்துக்கொண்டார். அதன் பின்பு சமசமாஜக் கட்சியில் இருந்து எட்மன் சமரக் கொடி, மெரில் பெர்னாண்டோ, பாலாதம்பு ஆகியோர் விலகினர். அவர்கள் உருவாக்கிய சமசமாஜக் கட்சி (பு) இரண்டாகப் பிளவுபட்டு பாலாதம்பு தனியான ட்ரொஸ்கிய கட்சி அமைத்து நான்காவது அகிலத்தின் உறுப்புரிமையைப் பெற்றார். இதேபோன்று சிறு குழுக் களாகவும் பல்வேறு ட்ரொஸ்கிய குழுவினர் பிரிந்து சென்றனர். இறுதியாக 1978ல் சமசமாஜக் கட்சியில் இருந்து வாசுதேவ நாணயக்கார, விக்கிரமபாகு கருணரத்தினா ஆகியோர் தலைமையில் நவசமசமாஜக் கட்சி என்னும் பெயரில் பிளவுற்று புதிய கட்சி தோற்றம் பெற்றது. சமசமாஜக் கட்சியில் உருவாகிய பிளவுகள் அனைத்திலும் இருந்து உருவாகிய புதிய குழுக்களும் கட்சிகளும் தமது அடிப்படை நிலைப்பாடான ட்ரொஸ்கிய தந்துவார்த்த சிந்தனைப் போக்கில் இருந்து விடுபட்டவையாக இருக்கவில்லை என்பது குறிப்பிடக் கூடியதாகும். அத்தத்துவார்த்த அடிப்படைக்குரிய குண இயல்புகளையும் நடைமுறைகளையும் சிறிதளவும் மாற்ற மின்றி எடுத்துச்செல்வதில் இவ் ட்ரொஸ்கியவாதிகள் முனைப்புடையோராகவே விளங்கிநின்றனர். இவர்களது அணியில் குறிப்பிடக்கூடிய அளவுக்கு புரட்சிகர உணர்வு கொண்ட தொழிலாளர்களும் இளம் சக்திகளும் இருக்கக் காணப்பட்ட போதிலும் இத் தலைமையின் குறுகிய நிலைப்பாடுகளின் காரணமாக இறுதியில் பாராளுமன்றச் சுற்று வட்டத்தினுள் சுழன்று வரும் போக்குடையதும், பரந்த ஐக்கிய முன்னணியை நிராகரிப்பவர்களாகவுமே காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

# 77ல் யூ.என்.பி மீள்வரவும் இடதுசாரிகளின் தோல்வியும்

1970-77 கால காலகட்டத்தின் இடதுசாரிகள் இணைந்திருந்த ஐக்கிய முன்னணி அரசு சாதித்த முற்போக்கான சாதனைகள் சிலவற்றை விடவும் பாதகமான நடைமுறைகள் மேலோங்கி நிற்கக் காணப்பட்டன. இதனை எதிர்ப்புறத்தில் நின்ற உள்நாட்டு வெளிநாட்டு பிற்போக்கு சக்திகள் பயன்படுத்த முனைந்தன. அதே வேளை யூ. என்.பிக்குள் டட்லி சேனநாயக்காவிற்கும் ஜே. ஆருக்குமிடையில் கடும் கருத்துவேறுபாடுகள் காணப்பட்டன. இலங்கையில் நவகாலனித்துவத்தை புகுத்தி அதனை வலுவுள்ள அமைப்பாக மாற்றுவதற்கு யூ. என். பி கட்சி தன்னை தகுந்தவாறு தகவமைத்துக் கொள்ளவேண்டும் என்றும், அதற்கு அமெரிக்க ஏகாதிபத்தியத்தை முழுமையாகச் சார்ந்து நிற்பதன் ஆவசியத்தையும் நீண்டகால நோக்கில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா வற்புறுத்தினார். ஆனால் பிரித்தானிய விசுவாசம் மிக்க உயர் குடும்பவழிவந்த டட்லி சேனநாயக்காவினால் அதனை முழுமையாகச் சீரணிக்க முடியவில்லை. ஜே.ஆர். தனது உள்நோக்கதை ஈடேற்றிக் கொள்ள சிறிலங்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரக் கட்சிக்குச் செல்வதற்குக் கூட தயக்கமில்லாது தனது வைரம் பாய்ந்த உயர்வர்க்க நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். மேற்கூறிய கருத்து முரண்பாடு டட்லி சேனநாயக்காவின் மரணத்தினால் எளிதாகத் தீர்க்கப் பட்டது. ஜே. ஆர். தனது தலைமைத்துவத்தை யூ. என். பிக்குள் நிலைநிறுத்தி அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பூரண ஆதரவுடன் செயல்படத் தொடங்கினார். ஜே. ஆரின் தலைமைத்துவத்தை ஆர். பிரேமதாசா தனது அடுத்த கட்ட உள்நோக்கில் ஏற்றுக்கொண்டு யூ. என். பியை பல மட்டங்களிலும் பலப்படுத்தும் வேலையைத் தொடர்ந்தார்.

ஐக்கிய முன்னணி ஆட்சியின் பலவீனங்களையும், மக்கள் விரோத செயற்பாடுகளையும் தங்களுக்குச் சாதக மாகப் பயன்படுத்துவதில் ஜே. ஆரும் யூ. என். பியும் தலைமைதாங்கி நின்றனர். முதலாளித்துவ நலன்களை முதன்மைப்படுத்தும் எஸ். தொண்டமானும், தமிழர் கூட்டணியினரும் ஜே. ஆருடன் பக்கத்துணையாகினர். வேலைநிறுத்தங்கள், சத்தியாக்கிரகங்கள், எதிர்ப் பிரசாரங்கள் என்பனவற்றை ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராகப் பல பக்கங்களில் இருந்தும் முன்னெடுத்தனர். ஐக்கிய முன்னணி அரசு இறுதி ஆண்டுகளில் பல்வேறு நிலைகளிலும் தமது செல்வாக்கினை இழந்துநிற்க வேண்டி ஏற்பட்டது. தமிழ் மக்களுக்கு எதிரான அதன் இனவாத செயற்பாடுகளும் அடக்குமுறைகளும் மலிந் திருந்தன. அரசமைப்பில் புறக்கணிப்பு, தரப்படுத்தல், தமிழ் இளைஞர்களை சிறைப்படுத்தியமை, தமிழாராய்ச்சி மாநாட்டினைக் குழப்பி ஒன்பது பேரின் உயிர்களுக்கு உலைவைத்தமை போன்றன ஐக்கிய முன்னணிக்கு தமிழர் களின் எதிர்ப்பை சம்பாதித்துக்கொடுத்தது. அதேபோன்று முஸ்லீம் மக்கள் மீதான பொலீஸ் வன்முறைகளும் அதிகரித்திருந்தன. மலையகத்தில் டெவன் தோட்ட நிலத்தைப் பறிப்பதற்கு முயற்சி செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை எதிர்த்த தொழிலாளர்களின்மீது பொலீஸ் துப்பாக்கிச் சூடு நடாத்தியது. சிவனு லட்சுமணன் என்னும் இளம் தொழிலாளி கொல்லப்பட்டார். இச் சம்பவம் தோட்டத் தொழிலாளர்களை கொதிப் படையச் செய்தது. அதேபோன்று பேராதெனிய பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மீதும் பொலீஸ் சூடு இடம்பெற்றது. வீரசூரியா என்ற மாணவன் கொல்லப் பட்டான். ஏற்கனவே 1971 ஏப்பிரல் கிளர்ச்சியினால் பல ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்பட்டமையும் சிறை களில் அடைக்கப்பட்டுள்ளமையும் சிங்கள மக்களை அதிக வெறுப்புக்குள்ளாக்கி இருந்தது. இவை யாவற்றுடனும் பொருளாதாரப் பிரச்சினைகள் பூதாகாரமாகி நின்றன. ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் பெற்ற இடதுசாரிகளில் ட்ரொஸ்கியவாதிகளான சமசமாஜிகள் இறுதி ஆண்டு களில் அரசாங்கத்தைவிட்டு வெளியேற்றப்பட்டனர். அதன் பின்பு வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் வெளி யேற்றப்பட்டது. இறுதியில் ஐக்கிய முன்னணி அரசு புதிய தேர்தலுக்கு திகதி குறித்து தனது ஆயுளை முடித் துக்கொண்டது.

## □ பாராளுமன்றத்தில் இடதுசாரிகளின் தோல்வி

1977ம் ஆண்டில் யூலைமாதத்தில் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. யூ. என். பி. கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று அமோக வெற்றி ஈட்டியது. பத்தொன்பது வருடங்களுக்குப் பின்பு பழைய பாராளு மன்றக் கட்சி ஒன்று திரும்பவும் அரங்குக்கு வந்தது. அதாவது 1956ல் பண்டாரநாயக்கா வெற்றிபெற்ற வேளை யூ. என். பி எட்டு ஆசனங்களைப் பெற்று எதிர் வரிசையில் குந்திக்கொண்டதுபோல் 1977ல் யூ. என். பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றபெற சிறிலங்கா சுதந்திரக் கட்சி எட்டு ஆசனங்களைப் பெற்று எதிர்க்கட்சித் தலைமையைக்கூடப் பெற முடியாத மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டது. தமிழர் கூட்டணி தனது தமிழீழக கோரிக்கையை முன் வைத்து பதினாறு இடங்களைப் பெற்று பிரதான எதிர்க் கட்சியாகி அ. அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகவும் வந்தார். யாவற்றிலும் குறிப்பான பரிதாபநிலை பாராளுமன்ற இடதுசாரிகளான ட்ரொஸ்கிய சமசமாஜிகளுக்கும் நவீன திரிபுவாத கம்யூனிஸ்ட்டுகளுக்கும் ஏற்பட்டது. தனி ஒரு தொகுதிதானும் இவர்களுக்கு கிடைக்கவில்லை, 1931ம் ஆண்டின் முதலாவது சட்டசபைக்கு தெரிவான காலம் முதல் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் அதீத நம்பிக்கையுடன் சில தொகுதிகளைத் தானும் பெற்றுவந்த இவ் இடதுசாரிகளை முற்று முழுதாகப் பாராளுமன்றத்திற்கு செல்லவிடாது மக்கள் நிராகரித்துவிட்டமை தற்செயலானதல்ல. உண்மையான இடதுசாரி இலட்சியங்களுக்கு இவர்கள் தமது புறமுதுகினைக் காட்டித் துரோகம் செய்து கொண்டதன் விளைவு தான் என்பதைத் தெளிவாகக் காணமுடிந்தது. தமது பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்தினால் இலங்கையில் வளர்ந்து செல்லக்கூடிய ஓர் புரட்சிகர இயக்கத்தின் வளர்திசைப்போக்கினை மழுங்கடித்துக் கொண்ட அதே வேளை அவர்கள் நம்பிக்கையுடன் துதிபாடிநின்ற முதலாளித்துவப் பாராளுமன்றத்திற்குச் செல்லமுடியாத சீரழிவின் உச்சத்திற்கும் உள்ளாகினர். மார்க்சிச லெனினிசத்தின் அழிக்கமுடியாத தத்துவார்த்த உண்மை இதன் மூலம் இலங்கையில் நடைமுறை ரீதியாக நிரூபிக்கப்பட்டது.

## □ ஜே. ஆரின் திட்டமிட்ட செயற்பாடுகள்

1977ம் ஆண்டின் தேர்தலில் வெற்றிபெற்ற யூ. என்.பி தொண்டமானையும் அரவணைத்துக் கொண்டு ஜே. ஆர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையில் ஆட்சியை அமைத்தது. அவ் ஆட்சி பதவிக்கு வந்த அடுத்த மாதத்தில் 1977 ஆகஸ்ட் இனவன் செயலை தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்டது இவ் இனவன் செயல் யூ. என். பி. ஆட்சியின் முதலாவது இன வன்முறை நடவடிக்கையாக அமைந்தது. தமிழ் மக்களை அச்சுறுத்தி அடிபணியவைப்பதன் ஆரம்ப முயற்சியே இவ் இனவன்முறையாகும். இதனை ஜே.ஆரின் பாராளுமன்றப் பேச்சின் அவப்பெயர் கொண்ட வசனங்களான 'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' என்பதனூடாக விளங்கிக் கொள்ளமுடிந்தது. மேலும் இவ் இனவன்செயல் ஒரு பழிதீர்க்கும் வகையில் அமைந் திருந்தமையையும் சுட்டிக்காட்டுதல் வேண்டும். அதாவது ஜே. ஆர். தனது தேர்தல் வெற்றி பெறுவதற்கு சில மாதங்கள் முன்பாக யாழ்ப்பாணம் முற்றவெளியில் அவரது கட்சியின் பகிரங்க கூட்டத்தில் பேச முற்பட்ட வேளை அங்கு திரண்டிருந்த இளைஞர்கள் — மக்கள் செருப்புக்களாலும் கற்களாலும் எறிந்து கூட்டத்தை முற்றாகக் குழப்பினார்கள் என்பதே அதுவாகும். மேற் படி 77 இன் இனவன் செயல் ஜே. ஆரும் யூ. என்.பியும் எவ்வழியில் தமிழ் மக்களுக்கு எதிராகச் செல்லத் தீர்மானித்து விட்டார்கள் என்பதைத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியது.

ஜே. ஆர். தலைமையிலான யூ. என். பி அரசாங்கம் தனது உள்நாட்டு பிற்போக்கு சக்திகளினதும் வெளி நாட்டு ஏகாதிபத்திய எசமானர்களினதும் ஆலோசனை ஆதரவுடன் தனது திட்டமிட்ட செயற்பாடுகளை ஒன்றன் பின் ஒன்றாகச் செயற்படுத்தத் தொடங்கியது. 1978ல் ஜே. ஆர். புதிய அரசியல் யாப்பினை உருவாக்கி பாராளு மன்றத்தின் அதிகாரங்களைப் பெயரளவில் வைத்துக் கொண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறையினைப் புகுத்திக்கொண்டார். இதனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல அதிகாரங்களையும் ஜனாதிபதி என்ற தனிநபரிடம் குவியச்செய்து அதிகார மையத்தின் தனிப்பெரும் பதவி யைத் தனதாக்கிக்கொள்ளமுடிந்தது. இது அமெரிக்கா, பிராஸ்ஸ் வகைசார்ந்த தனிக்கட்சி, தனிநபர் சர்வாதி கார-முதலாளித்துவ ஆட்சி அமைப்பாகியது. ஜே. ஆர். தன்னைத்தானே ஜனாதிபதியாக்கிக் கொண்டதுடன் அரசியல் எதிரியான திருமதி பண்டாரநாயக்காவின் அரசியல் உரிமைகளைப் பறித்து அவரை ஐந்து வருட காலத்திற்கு அரசியல் ரீதியில் முடங்கச்செய்தும் கொண் டார். தனது பொருளாதாரக் கொள்கையாக சுதந்திர வர்த்தக கொள்கையை அறிமுகம்செய்து அந்நிய ராட்சத பல்தேசிய நிறுவனங்களுக்கு நாட்டின் கதவுகள் திறந்து விடப்பட்டன. சுதந்திர வர்த்தக வலயம் நமது நாட்டின் உழைப்பு சக்தியை மிகக் குறைந்த கூலியில் கொள்ளை யிட்டுச் செல்வதற்கு வாய்ப்பளித்தது. இவ் வலயத்தில் தொழிற்சங்க உரிமைகள் மட்டுமன்றி அடிப்படை மனித உரிமைகள் கூட தொழிலாளர்களுக்கு சட்டரீதியாக மறுக்கப்பட்டது. தனியார் மயப்படுத்தும் போக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டு முன்னைய ஆட்சியின் தேசிய மயங்கள் எனப்பட்ட யாவும் சீரழிக்கப்பட்ட நிலையில் அந்நிய உள்நாட்டுப் பண முதலைகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்டன. எதிரணித் தொழிற்சங்கங்கள் பழிவாங்கப்பட்டதுடன் திட்டமிட்டு சீர்குலைக்கப் பட்டன. தொழிலாளி வர்க்கத்தின் வேலைநிறுத்தம் செய்யும் அடிப்படை உரிமையை மறுக்கும் வகையில் அத்தியாவசிய சேவைகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச்சட்டத்திற்கு மலையகத் தொழிலாளர்களின் தலைவர் தானே என்று உரிமை கொண்டாடும் தொண்டமான் அமைச்சராக நின்று ஆதரவு வழங்கியமை குறிப்பிடக் கூடியதாகும். இச்சட்டத்தின் கீழ் 1980 யூன் மாதத்தில் முந்நூறுரூபா சம்பள உயர்வு கேட்டுப் பொது வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள்—ஊழியர்களில் எழுபக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தையாயிரம் பேர் வேலை நீக்கப்பட்டு நடுவீதிக்குத் துரத்தப்பட்டனர். அவர்களில் மீண்டும் வேலை வழங்கப் படாத பலர் இன்றும் தொழில் இன்றி இருந்துவரு கிறார்கள். அவ்வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்ட தொழிலாளர்கள் ஆயுதப்படைகளாலும், யூ. என். பியின் குண்டர்களாலும் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டனர், சோமபாலா என்ற தொழிலாளி இத்தாக்குதலில் கொல்லப்பட்டார். அரசியல் அடக்குமுறைகள் பரந்த அள வில் கட்டவிழ்த்து விடப்பட்டு ஆயுதப் படைகளுக்கு மேல திக அதிகாரங்கள் வழங்கி அவசரக்காலச் சட்டத்தின்கீழ் ஆட்சி தொடரப்பட்டது. அடிப்படை ஜனநாயக-மனித உரிமைகள் மோசமான வழிகளில் மறுக்கப்படும் சூழல்கள் வளர்ந்துசென்றன. இவற்றுக்கு ஆயுதப்படைகள் மட்டுமன்றி 'பச்சைப் புலிகள்', 'கறுப்புப் பூனைகள் மற்றும் சட்டபூர்வமற்ற யூ.என்.பி. குண்டர் படைகள் பயன்படுத்தப்பட்டன. இதனால் அரசுக்கு எதிரான வர்கள் யாவரும் வேட்டையாடப்பட்டனர்.

இதேவேளை இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பூதாகரமாக யூ.என். பியால் வளர்க்கப்பட்டு பேரினவாத வெறி ஊட்டப்பட்ட நிலையில் யுத்த சூழலுக்குள் தள்ளப் பட்டது. 1977 இனவன்முறை மேலும் விஸ்தரிக்கப்பட்டு 79ம், 81ம், 83ம் ஆண்டுகளில் மோசமாக முன்னெடுக்கப் பட்டது. 1983ம் ஆண்டின் இன வன்செயல் உச்ச மானதும் மிக அருவருக்கத்தக்க பேரினவாத வெறியுடன் யூ.என்.பியால் நடாத்தப்பட்டதுடன் விரக்திக்கும் வெறுப்புக்கும் உள்ளான தமிழ் இளைஞர்களை ஆயுதம் தாங்கிய அதி தீவிரப்பாதையில் செல்வதற்கும் வழி வகுத்தது. இவ்வாறு இலங்கையில் யூ.என்.பி கட்டவிழத்து விட்ட கொடிய அடக்குமுறையால் தமிழ் இளைஞர்கள் மட்டுமன்றி சிங்கள இளைஞர்களும் அதிதீவிரவாதப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையை நாடுவதற்கும் அதற்கு மக்களிடம் ஓரளவு ஆதரவு பெருகுவதற்கும் உரிய சூழல் உருவாகியது.

இவ்வாறு 1977ம் ஆண்டின்பின் பெருமுதலாளித்துவ யூ.என்.பி ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ சக்திகளின் பூரண ஒத்துழைப்புடன் நாட்டின் பொருளாதாரத்தை நவகொலனித்துவ மயப்படுத்தும் போக்கினைத் துரிதப் படுத்திக்கொண்டது. அதற்கு இடையூறாகக் காணப் பட்ட அரசியல் தடைகளை எல்லாம் தனது அடக்கு முறையின் மூலம் துடைத்தெறியத் தயங்கவில்லை. தேசிய இனப்பிரச்சினையை ஒரு திரையாகப் பாவித்து அதன் பின்னால் தனது பேரினவாதம் கொண்ட பெரு முதலாளித்துவ பாசிச நடைமுறைகளை செயல்படுத்தி வந்தது.

## ☐ ஜே.வி.பியின் எழுச்சியும் வீழ்ச்சியும்

1971ம் ஆண்டின் தோல்விகண்ட ஜே.வி.பி கிளர்ச்சியின் பின் அதில் ஈடுபட்டோருக்கு எதிரான விசாரணை இடம்பெற்றது. ஐக்கிய முன்னணி அரசு காலத்தில் நடைபெற்ற இவ் விசாரணையில் ஜே.வி.பி. தலைவர் றோகன விஜயவீராவுக்கு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் முக்கியமானவர்கள் பல்வேறு நிலைத் தண்டனைகள் பெற்றனர். அநேகர் புனர்வாழ்வு முகாம்களில் வைக்கப்பட்டு கட்டம் கட்டமாக விடுவிக்கப் பட்டனர். வேறும் சிலர் ஜே.வி.பியை விமர்சனம் செய்து அதிலிருந்து வெளியேறிக்கொள்ளவும் செய்தனர்.

'77ல் ஜே. ஆர் தலைமையிலான யூ. என். பி அரசு விஜயவீராவையும் அவரது சகாக்களையும் தங்களது நலன் கருதி உள்ளார்ந்த தொடர்பு புரிந்துணர்வின் அடிப்படை யில் விடுதலை செய்தது. வெளியில் வந்த விஜயவீரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றிக்கடன் செலுத்துவதுபோன்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் பழைய இடதுசாரிகளையும் கடுமையாகத் தாக்கி பிரசாரங்களைச் செய்து கொண்டே மீண்டும் ஜே. வி. பிக்கு புத்துயிர் அளிக்க முன்வந்தார். விஜயவீரா தலைமையில் மீண்டும் ஜே. வி. பி செயல்பட முனைந்த போது கடந்த காலத்தைப்பற்றிய சுயவிமர்சனமோ அன்றி புதிய வேலைத்திட்டமோ எதுவும் முன்வைக்கப் படவில்லை. இதனால் அந்த அணியின் முன்னைய சகாக்கள் பலர் ஜே. வி. பியின் போலித்தனமான இடது சாரி வாயபந்தல் நடவடிக்கைகளை எதிர்த்துவெளியேறிச் செல்ல நேர்ந்தது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி இடது சாரிக் கட்சிகளை கடுமையாகத் தாக்கி வந்ததன்மூலம் எதிர்மறை நிலையிலேயே ஜே. வி. பி. யூ. என்பிக்கு உதவி வரும் வேலையை நேர்த்தியாகச் செய்துவந்தது. அதே வேளை யூ. என். பித் தலைவர்கள் ஜே. வி. பிதான் உண்மையான இடதுசாரி சக்தி எனக் கூறி அதனை முன் தள்ள பக்கத்துணையாக நின்றனர். பெருந்தொகையான பணச்செலவு செய்து செங்கொடிகள், அரிவாள் சம்மட்டி கள். அடங்கிய சிகப்பு மயமான பிரச்சாரம் பெருமளவில் மிகக் கவர்ச்சிகரமாக முன்னெடுக்கப்பட்டது. ஓர் நேர்மையான தொழிலாளி வர்க்கம் சார்பான மார்க்சிச லெனினிசக் கட்சியினால் இவ்வாறு பணத்தை பெரு மளவில் செலவுசெய்து ஆடம்பரமாகச் செயல்பட முடியுமா என்ற கேள்வி பலத்த சந்தேகத்தைக் கிளப்பி நின்றது. அது மட்டுமன்றி விஜயவீரா தனது முன்னைய அதிதீவிர புரட்சி மார்க்கத்தை கைவிட்டதாகக் கூறிய பாராளுமன்றப் பாதைக்கு வந்துவிட்ட நிலையையும் மேற்கொண்டார். இதன் அடிப்படையில் ஜே. வி. பி ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாகவும் பதிவு பெற்றுக்கொண்டது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது நரித்தந்திரம் மிக்க முதலாளித்துவ அரசியல் சாதுரியத் தால் ஜே. வி. பியை தனது 1982ம் ஆண்டின் ஜனாதிபதித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் வெற்றிவரை நன்கு பயன்படுத்தினார். இதற்கு ட்ரொஸ்கியவாத அடிப்படையைக் கொண்ட ஜே. வி. பி தகுந்தவாறு ஒத்துழைப்பு வழங்கியது. சிங்கள மக்களிடையே பெரும் கூட்டங்கள், ஊர்வலங்கள் திட்டமிட்ட வகையில் நடாத்தி தமக்கு மிகப்பெரும் ஆதரவு இருப்பதாக ஜே. வி. பி காட்டிக்கொண்டது. 1982ம் ஆண்டில் திருமதி பண்டாரநாயக்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி அபேட்சகராக தேர்தலில் நிற்பதற்கு அவருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த அரசியல் உரிமை மறுப்பு ஆணை அமுலில் இருந்தது. அதனால் ஹெக்டர் கொப்பேகடுவா அக்கட்சியின் அபேட்சகராக நிறுத்தப்பட்டார். அவருக்குக் கிடைக்கக்கூடிய வாக்குகளை சிதறவைப்பதற்காக இரண்டு ட்ரொஸ்கிய வாதிகளான கொல்வின் ஆர். டி. சில்வாவும், றோகண விஜயவீராகவும் ஜனாதிபதித் தேர்தலில் அபேட்சகராக நிறுத்தப்பட்டனர் என்றே கூறுதல் தகும். முன்னையவர் பழம்பெரும் ட்ரொஸ்கிய வாதி என்றால் பின்னையவர் பிற்காலத்தில் உருவாகிய இளம் ட்ரொஸ்கியவாதியாவார். அதிதீவிர ஒருமுனை வாதமும் வலது சந்தர்ப்பவாதத் சரணடைவும் அவர்களுக்குரிய நிலைப்பாடு என்பதனை இச்சம்பவம் தெளிவு படுத்திக் காட்டியது. அத்தேர்தலில் ஜே. ஆர். வெற்றி பெற்று மீண்டும் ஜனாதிபதிப் பதவியை மிகச் சுலபமாகப் பெற்றுக்கொள்ள முடிந்தது.

இரண்டாவது ஜனாதிபதி காலத்தில் ஜே.ஆர். தனது திட்டங்களை மேலும் விரிவுபடுத்திக் கொண்ட அதே வேளை ஜே.வி.பியைப் பயன்படுத்திவந்த வேலையும் முடித்துக்கொள்ள முன்வந்தார். 1983ம் ஆண்டில் யூலைமாதத்தில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி என்னும் இடத்தில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலில் பதின்மூன்று இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து ராணுவம் வடபகுதியில் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA 24-2-1996 LIBRARY

வெறியாட்டத்தை நடத்தியது. மறுநாள் கொழும்பிலும் ஏனைய சிங்களப் பிரதேசங்களிலும் தமிழர்களுக்கு எதிரான பாரிய இன வன்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. தமிழர்களுக்கு எதிரான இவ் இனவன் செயல்களால் உயிரிழப்புக்கள், உடமை அழிப்புகள், சொத்து அபகரிப்புகள் மிகக் கூடிய அளவில் ஏற்பட்டன. மிகவும் அநாகரிமானதாக வெலிக்கடைச் சிறைச்சாலை யில் ஐம்பத்திமூன்று தமிழ் அரசியல் கைதிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். யூலை 25ம், 27ம் திகதிகளில் இடம்பெற்ற இச்சிறைச்சாலைப் படு கொலைகளினால் சிங்களப் பேரினவாதத்தின் குரூரமான இரத்தவெறிபிடித்த போக்கு உலகின் முன் அம்பலத்திற்கு வந்தது. இவ்வன்செயலுடன்தான் இந்தியா இலங்கையில் நேரடியாகத் தனது தலையீட்டைத் தொடக்கிவைத்தது.

மேற்படி இனவன் செயலில் யூ.என்.பி யின் கரங்கள் மறைவாக அதேவேளை வலுவுள்ளதாக இருந்தன என்பது பிற்காலத்தில் தெளிவானது. இருந்தபோதிலும் ஜே. வி. பியின் பங்கு ஆதாரப்படுத்தமுடியாத அளவில் காணப்பட்டது. ஆனால் அக்கலவரத்திற்கு ஜே. வி. பி முழுமையான காரணமல்ல என்பதும், இடதுசாரிகளின் மீதான பழிசுமத்தல் அர்த்தமற்றதொன்றுமாகும். இருப்பினும் யூ. என். பி ஆட்சி அச்சந்தர்ப்பத்தைப் பாவித்து ஜே. வி. பியையும் பழைய கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி என்பனவற்றைத் தடைசெய்து அதன் தலைவர்களை கைதுசெய்ய முடிவுசெய்தது. அவ் இனவன்செயலில் இரத்தக்கறை படிந்த தனது கரங்களை மறைப்பதற்கு இத்தகைய முயற்சியில் இறங்கியது. ஆனால் சிந்திக்கும் திறன் கொண்ட அனைத்து சிங்கள மக்களும் உண்மைகளை உணர்ந்துகொள்ளவும், இடம் பெற்ற அநாகரிகச் செயல்களுக்கு வெட்கித் தலை குனியவும் செய்தனர். ஜே. ஆர். ஜெயவர்த்தனா இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்செயல் காலத்தில் 'நான் சிங்கள மக்களின் தேசிய உணர்வுகளுக்கு மதிப்பளித்து அவர்களின் தலைவனாக இருக்கவே விரும்புகிறேன்' எனக்கூறி தனது பேரினவாதத் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்திக் கொண்டமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும். இத்தகைய ஜே. ஆர். 1977ம் ஆண்டில் வெற்றிபெற்றபோது தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமான அ. அமிர்தலிங்கம் 'ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வெற்றி ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி' என்று வாழ்த்தி நின்றது மட்டுமன்றி 1982ம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் கூட்டணி யாரையும் ஆதரிப்பதில்லை என்ற பெயரில் உள்ளூர ஜே. ஆரின் வெற்றிக்கு வழிவகுத்துக் கொடுத்த செயலும் இன அடிப்படைக்கும் அப்பால் தமது வர்க்க பாசத்தையும் ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்திக் கொண்டமையும் இவ்வேளை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டியதாகும்.

1983ம் ஆண்டின் ஜே. வி. பி தடைக்குப் பின் அவ் இயக்கம் மீண்டும் தனது ஆயுதம்தாங்கிய பாதைக்குத் திரும்பியது. அவ்வேளையிலும் தமது தவறுகள் என்ன என்பது பற்றியோ இலங்கையின் யதார்த்த நிலைமைகள் யாது? என்னும் கேள்வியினையோ அதுமுன் எழுப்பவில்லை எதிரியார்? நண்பர்யார்? என்பது பற்றியும் அக்கறைகாட்டபடாதுடன் மக்களைச் சார்ந்து அவர்களை அணிதிரட்டி அவர்களில் தங்கி நின்று ஓர் புரட்சிகரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லவும் ஜே. வி, பி தயாராக இருக்கவில்லை. அவர்கள் தனிநபர் பயங்கரவாதம் என்ற வகைச் செயற்பாடுகளிலேயே முழுமையாகத் தங்கியிருந்தனர். பழிக்குப்பழியாகவும், பயங்கரம் கொண்டதாகவும் ஆயுத நடவடிக்கைகள் தொடரப்பட்டபோது அதேவழிவகையினை ஆளும் யூ. என். பியும் தேர்ந்தெடுத்துக்கொண்டது இனம் காட்டாத ஆயுதம் தரங்கிய குண்டர் படைகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி ஜே. வி. பி எனச் சந்தேகிக்கப்பட்ட அனை வரையும் வகைதொகை இன்றிக் கொன்று குவிக்கும் கொலைத்தொழில் விரிவாக்கப்பட்டது. ஜே. வி. பியினர் மட்டுமன்றி தமக்குத் தடையாகக் காணப்பட்டவர்கள் அனைவரும் இவ்வாறு யூ. என். பியால் கொன்று அழிக்கப்படலாயினர். பழி ஓர் இடத்திலும் பாவம் மற்றோர் இடத்திலும் என்பதற்கிணங்க ஒருபுறத்தில் ஜே. வி. பியும் மறுபுறத்தில் யூ. என். பி குண்டர் படைகளும் செயலாற்றி வந்தன. இவற்றின் மத்தியில் ஆயுதப்படைகள் பரந்தள வில் கொலைகளையும் ஆட்கடத்தல்களையும் செய்து வந்தன. தெற்கில் 'நாசகாரசக்திகள்' என்ற பெயரில் அறுபதினாயிரம் பேர்வரை கொல்லப்பட்டனர். மேலும் ஐம்பதினாயிரம் பேர் காணாமல்போயினர். அதேவேளை வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஏறத்தாழ இருபத்தையாயிரம் பேர் கொல்லப்படவும் பல ஆயிரக்கணக்கானோர் காணாமல் போகவும் செய்தனர். இக்காலப்பகுதியில் இலங்கை என்றுமே கண்டிராத ஜனநாயக மனித உரிமை மீறல்களை கொடுமையான வழிகளில் மக்கள் அனுபவிக்க நேரிட்டது, இவை அனைத்தும் அன்பு கருணை அகிம்சை ததும்பிய பௌத்த மதத்தினைப் பாதுகாக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டதாகக் கூறப்பட்ட இலங்கைத் தீவில் எழுபதுகளிலும் எண்பதுகளிலும் இடம்பெற்ற கொடூரச் செயல்களாகப் பதிவு பெற்றுக்கொண்டது.

என்பதுகளின் பிற்கூறிலே ஜே.வி.பியின் தனிநபர் ஆயுத நடவடிக்கைகளும் மக்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் செயல்முறைகளும் உச்சநிலைக்குச் சென்றன. இக்காலகட்டத்திலேயே 1988ம் ஆண்டின் இறுதியில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றது. ஆர். பிரேமதாசா ஜனாதிபதி அபேட்சகராகப் போட்டியிட்டார். எதிர் நிலையில் திருமதி பண்டாரநாயக்கா நின்றார். வடக்கு கிழக்கில் இந்தியப் படைகள் நிலை கொண்டிருக்க தென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் ஜே. வி.பியின் தனிநபர் பயங்கரவாத் நடவடிக்கைகள் உச்சநிலையில் இருந்த இச்சூழலில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஆர். பிரேமதாசா சிறு அளவு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். இவ் வெற்றிக்கு யூ. என்.பியின் திட்டமிட்ட தேர்தல் தில்லு முல்லுகள் ஒரு புறத்திலும், ஜே.பி.பியின் செயற்பாடுகள் மறுபுறத்திலும், ஜே. வி.பியின் செயற்பாடுகள் மறுபுறத்தாலும் உதவின. மீண்டும் யூ. என், பியைப் பதவிக்கு கொண்டுவருவதில் ஜே வி.பி. தனது பங்களிப்பை வழங்கியது. ஆனால் அதே ஜே. வி. பியை ஆயுதப்படைகள் அதிக காலம் விட்டு வைக்கவில்லை. புரட்சிகர இளைஞர் களையும் முற்போக்கு சக்திகளையும் பல்லாயிரக்கணக்கில் கொன்றொழித்தபின் ஜே, வி. பியின் தேவை முடிந்த சூழலில் அதன் தலைவர்களை அழிப்பதற்கு யூ. என். பி ஆட்சி சற்றும் தயங்கவில்லை. றோகண விஜயவீரா, கமனநாயக்கா போன்ற தலைவர்கள் மறைந்திருந்த இடங்களில் கைதுசெய்யப்பட்டு இரவோடு இரவாகக் கொல்லப்பட்டனர். 1990ம் ஆண்டின் முற்பகுதியில் இடம்பெற்ற இத்தலைமை அழிப்புடன் ஜே. வி. பியின் எழுச்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. அதேநேரம் சிறைகளில் அடைக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான ஜே. வி. பி. சந்தேகநபர்கள் நீதி விசாரணையின்றி தற்போதும் இருந்து வருகின்றனர். தொடர்ந்தும் ஜே. வி. வியினர் என்ற சந்தேகத்தில் மக்கள் கைது செய்யப்படும் நடைமுறைகள் தொடர்கின்றன.

ஜே. வி. பியின் தோற்றமும் எழுச்சியும் இறுதியில் அதன் வீழ்ச்சியும் இலங்கை இடதுசாரி இயக்கத்தின் கால் நூற்றாண்டுகாலத்தில் இடம்பெற்ற மிக முக்கிய நிகழ்வாகும். ட்ரொஸ்கிய தத்துவத்தாலும் அதன் தவறான போராட்டத் தந்திரோபாயங்களினாலும் இலங்கை போன்றதோர் நாட்டில் புரட்சிகர இயக்கமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைக்கும் மக்களும் எத்தகைய தீய விளைவுகளை பின்னடைவுகளை சந்திக்க முடிந்தது என்பதற்கு சிறந்த வரலாற்று உதாரணத்தை ஜே.வி.பிஎன்ற போலித் தனமான இடதுசாரிப் பெயர்ப்பலகை கொண்ட இயக்கம் வழங்கி உள்ளது என்பதை ஆழ்ந்து நோக்குதல் அவசியமாகும். ஜே.வி.பி ஒரு மார்க்சிச லெனினிச இயக்கம் அல்ல. அதேபோன்று தனது பிரசாரத்திற்காகப் பயன்படுத்திய லத்தீன் அமெரிக்கப் புரட்சிவாதியான சேகுவராவின் (அவர் மார்க்சிச-லெனினிசவாதி இல்லாவிடினும் நேர்மையான ஏகாதிபத்திய-பிற்போக்கு எதிர்ப்பில் உறுதியாக நின்றவர்.) நிலைப்பாட்டினைக் கொண்டதுமல்ல, ட்ரொஸ்கீயத் தத்துவத்தை நடைமுறைப் படுத்த முன்னெழுந்த சிறுமுதலாளித்துவ அதிதீவிர புரட்சி இயக்கமே ஜே.வி.பியாகும். இவ்வாறு அதனை விமர்சிக்கும்போது அந்த இயக்கத்தால் கவரப்பட்டு அதனையே ஓர் அடிப்படை மாற்றத்திற்கான புரட்சிகர இயக்கம் என நம்பிச் சென்று தமது இன்உயிர்களைத் தியாகம்செய்த பல்லாயிரக்கணக்கான புரட்சிகர இளைஞர்களையும் யுவதிகளையும் தவறான ஜே.வி.பி தலைமையையும் வேறுபடுத்தியே கண்டு கொள்ளவேண்டும். அவ் இளம் தலைமுறையினரின் அர்ப்பணிப்பும் தியாக சிந்தையும் போற்றப்படும் அதே வேளை தலைமையின் தவறான நிலைப்பாடும் போராட்ட மார்க்கமும் கண்டித்து நிராகரிக்கப்படவேண்டியதாகும். ஜே.வி.பி தலைமை தனது தவறான மார்க்கத்தால் இளைஞர்கள்-மக்களைப் பலியாக்கி, தன்னையும் அழிவுக்கு உள்ளாக்கிக்கொண்டபோதிலும் அதனோடு இணைந்த புரட்சிகர சக்திகளினதும் அதற்கு ஆதரவு வழங்கிய மக்களதும் நேர்மையான உணர்வுகள் என்றுமே அழிக்கப்படமுடியாதவையாகும். அவை சரியான வெகுஜனப் புரட்சிகர மார்க்கத்தால் மட்டுமே மீட்டெடுக்கப்பட்டு வழிநடாத்தப்பட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## □ இடதுசாரிகளின் இயலாமையும் பின்னடைவும்

1977ம் ஆண்டில் இடம்பெற்ற அரசியல் மாற்றத்தின் பின் பாராளுமன்ற இடதுசாரிகள் முற்றாக நிராகரிக்கப் பட்ட நிலைக்கு உள்ளாகினர். புரட்சிகர சக்தியாக முன்னேறிக்கொண்டிருந்த மார்க்கிச லெனிசை சக்திகள் தம்முள் பிளவுபட்டு பலமிழந்து காணப்பட்டனர். ஜே.வி.பி தனது தவறான மார்க்கத்தில் சென்று அழிவுக் குள்ளாகிக் கொண்டது. மொத்தத்தில் இடதுசாரி இயக்கம் குழப்பத்திலும், இயலாமையிலும் இருக்கக் காணப்பட்டதுடன் பின்னடைவுகளை சந்திக்க நேரிட்டது. ஒவ்வொரு இடதுசாரிக் கட்சியும், குழுக் களும் தங்களை மீள் அமைத்தலுக்கு உள்ளாக்க முனைந்த போதிலும் அவற்றினால் அதனை வெற்றிகரமாக முன்னெடுக்கமுடியவில்லை. அதற்கான அடிப்படைக் காரணம் இலங்கையின் பொருளாதார அரசியல் சமூகத் துறைகளிலான புதிய வளர்ச்சிப் போக்கினை உரியபடி மார்க்சிச லெனினிச அடிப்படையில் பகுப்பாய்ந்து உரிய மார்க்கத்தில் செல்லமுடியாத நிலைப்பாட்டினையே அவை கொண்டிருந்தன. அவை யாவும் பழைய தத்தமது பாதைகளில் செல்வதிலேயே விடாப்பிடியாக நின்றனர். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மட்டுமே குறிப்பிடக்கூடிய அளவுக்கு சுய விமர்சன அடிப்படையிலும், புறநிலை யதார்த்த வழி யிலும் தன்னைப் பலப்படுத்துவதற்கு முயற்சிசெய்து அதன் வழியில் கொள்கை, வேலைத் திட்டம், தந்திரோ பாயம் என்பனவற்றை வகுத்துக்கொண்டது. இருப் பினும் தேசிய இனப்பிரச்சினை உருவாக்கிய யுத்த சூழலும் அரசின் மோசமான அடக்குமுறையும், ஜே.வி.பி அழிவின் விரக்தியும், சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னடைவும் மேற்படி கட்சியின் வளர்ச்சியினை வழி மறிக்கும் தற்காலிகத் தடைகளாகின. இத்தடைகள் தகர்க்கப்பட்டு முன்னே செல்வதற்கான அடிப்படைகளை அக்கட்சி கொண்டிருப்பது நம்பிக்கை தரும் செய்தி யாகும்.

பாராளுமன்ற இடதுசாரிகளைப் பொறுத்தவரை அவர்கள் மீண்டும் மீண்டும் தமது கால்களை பாராளு மன்ற சேற்றில் புதைத்துக்கொண்டே வழிநடக்க முற் படும் போக்கினையே பின்பற்றி வந்தனர். அவர்களது கடந்தகால வரலாறு போன்று காலத்துக்குக்காலம் ஏதா வது ஒரு பெயரில் ஒரு கூட்டணியை உருவாக்கி அதன் மூலம் பாராளுமன்ற வெற்றியை மட்டும் எதிர்நோக்கி நிற்பதனையே குறியாகக்கொண்டு செயல்பட்டு வந்தனர். இதனைப் பின்னோக்கிச் சென்று கண்டு கொள்ள முடியும்.

இலங்கையின் ஆரம்பகால ட்ரொஸ்கியவாதியான பிலிப் குணவர்த்தனாவும் அவரது ஆதரவாளர்களும் சமசமாஜக் கட்சியை விட்டுப் பிரிந்து சென்றபின் திரு. பண்டாரநாயக்கா தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து மக்கள் ஐக்கிய முன் னணியை (Mahajana Eksath Peramuna–Map) உரு வாக்கி அரசாங்கத்திலும் அமைச்சராகினார். இதனைக் கண்டித்து வந்த சமசமாஜிகள் 1963ல் அடுத்து ஒரு முன்னணியை சமசமாஜ, கம்யூனிஸ்ட், பிலிப்பின மக்கள் ஐக்கிய முன்னணி ஆகிய மூன்று கட்சிகளும் சேர்ந்து இடதுசாரி ஐக்கிய முன்னணி (United Left Front-Ulf) என்பதனை உருவாக்கினர். அம்முன்னணியும் சமசமாஜக் கட்சியின் செயலால் உடைந்தது. பின் 1964ல் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் சமசமாஜிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து கூட்டரசாங்கத்தை (Coalition Government) உருவாக்கி அதில் மந்திரிப் பதவி பெற்றனர். இதன்பின்பு 1970ம் ஆண்டு தேர்தலில் சமசமாஜ, கம்யூனிஸ்ட், சிறிலங்கா சுதந்திரக் கட்சி இணைந்து ஐக்கிய முன்னணி (United front) அமைத்து தேர்தல் வெற்றி பெற்று ஐக்கிய முன்னணி அரசு (United front Government) அமைத்தனர். 1977ல் அதன் பூரண தோல்விக்குப் பின் சுதந்திரக் கட்சியை நிராகரித்து 1987ல் மூன்று இடதுசாரிக் கட்சிகள் சிறிலங்கா மக்கள் கட்சியுடன் இணைந்து ஐக்கிய சோஷலிச முன்னணியை (United -socialist Alliance-usa) உருவாக்கி அதனையும் முன்னெடுக்க முடியாது திண்டாடினார். இறுதியில் அக்கூட்டுப் செயலிழந்து நிற்க 1992ம் ஆண்டில் மீண்டும் இவ் இடதுசாரிக் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து பொதுசன ஐக்கிய முன்னணியை (Peoplis Allance) உருவாக்கி நிற்கின்றனர். இத்தகைய கூட்டுப் குலைவுமே பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகளின் சந்தர்ப்பவாத ஐக்கிய முன்னணிகளாக இருந்துவந்துள்ள வரலாற்றினைக் கண்டுகொள்ளமுடியும்.

77ல் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் முரண்பாடு கொண்டு அதனோடு கசப்புநிலை உருவாகிய பின் இப்பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ– கம்யூனிஸ்ட் கட்சிகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்த ஒரு பகுதியை உடைத்து வெளியே எடுத்து அதனைத் தனிக் கட்சியாக்குவதில் மும்மரம் காட்டினர். அவ்வாறு உருவாக்கப்பட்டதே பிரபல சினிமா நடிகரும், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் மகளான சந்திரிகாவை தற்போதைய ஜனாதிபதி மணம் முடித்த வருமான விஜயகுமாரரணதுங்கா தலைமையிலான சிறிலங்கா மக்கள் கட்சியாகும். இக்கட்சியை உருவாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனோடு ஒட்டி உறவாடி புதிய இடதுசாரிக் கூட்டணியை உருவாக்கும் நோக்குடன் இவ் இடதுசாரிகள் செயல்பட்டுவந்தனர். இவ்வேளையிலேயே 1988ம் ஆண்டில் விஜயகுமாரணதுங்கா திட்டமிட்டே கொல்லப்பட்டார். அவரது இறப்பு இடதுசாரி முற்போக்கு ஜனநாயக மக்கள் பிரிவினருக்கு பெரும் இழப்பாகியது. அவரது மரண இறுதிச் சடங்கு நிகழ்வில் ஓர் இடதுசாரி முன்னணிக்கான பிரகடனம் நான்கு கட்சிகளால் கைச்சாத்திடப்பட்டது. சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி நவசமசமாஜக்கட்சி, சிறிலங்கா மக்கள் கட்சி ஆகியவை இணைந்து ஐக்கிய சோஷலிச முன்னணி என்ற பெயரில் மேற்படி இடதுசாரிக் கூட்டணி உருவாக்கப்பட்டது விஜயகுமாரரணதுங்காவின் இறப்பினால் ஏற்பட்ட அனுதாப அலையைப் பயன்படுத்தி இச்சோஷலிச முன்னணி உருவாக்கப்பட்டபோதிலும் அதன் நோக்கம் தனியே பாராளுமன்றப் பாதையிலான வெற்றியை அடிப்படையானதாகக் கொண்டிருந்ததேயன்றி தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் உழைக்கும் மக்களின் புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பாதையை முன்னெடுப்பதாக அமையவில்லை. இச்சோஷலிச முன்னணி சார்பாக 1989ம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலில் மூன்று ஆசனங்களை மட்டும் பெற்றுக் கொண்டனர். இரண்டு ட்ரொஸ்கீயவாதிகளான வாசுதேவநாணயக்காரவும், அதாவுட செனிவரத்தினாவும் தெரிவுசெய்யப்பட்டு மேலும் ஒருவர் இச்சோஷலிச முன்னணி சார்பில் தேசியப் பட்டியலில் இருந்து தெரிவு செய்யப்பட்டார். 1977-89 கால கட்டத்தில் இடம் பெற்ற ஒரு இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினராக சரத்முத்தட்டுகம தெரிவுசெய்யப்பட்டார். அவரது குறுகியகாலப் பாராளுமன்றப் பேச்சுக்கள் யூ. என். பி ஆட்சியை சகல நிலைகளிலும்

இ—15

அம்பலப்படுத்திநின்றமை குறிப்பிடக் கூடியதாகும். ஆனால் அவரும் 'வீதிவிபத்தில்' கொல்லப்பட்டார். அந்த இடத்திற்கு ஒருவரை கம்யூனிஸ்ட் கட்சி நியமனம் செய்தபோதிலும் 1989ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அக்கட்சி ஒரு ஆசனத்தையும் பெறமுடியவில்லை. இவ் ஐக்கிய சோஷலிச முன்னணி பெயரளவில் இருந்த போதிலும் செயலளவில் அதனால் எதனையும் சாதிக்க முடியவில்லை. இலங்கைக்கு இந்தியப் படைகளை வரவழைத்த இலங்கை—இந்திய ஒப்பந்தத்தை இச்சோஷலிச முன்னணி வரவேற்று ஆதரித்து நின்றதன்மூலம் மக்கள் விரோதத்தை சம்பாதித்துக் கொண்டதையும் குறிப்பிட வேண்டும். சிங்கள மக்களோ அன்றி தமிழ் மக்களோ இலங்கை இந்திய ஒப்பந்தத்தை ஆதரிக்கவில்லை. அதே போன்று பிராந்திய மேலாதிக்க நோக்குடன் இலங்கைக்குள் கொண்டுவந்து இறக்கப்பட்ட இந்திய இராணுவத்தின் வரவை நேர்மையான மார்க்சிச லெனினிசவாதிகள் எவரும் ஆதரிக்கவில்லை. ஆனால் பாராளுமன்ற இடதுசாரிகள் அதனை வெகுவாக வரவேற்று ஆதரித்து நின்ற செயல் இவர்களது சந்தர்ப்பவாத சோஷலிச வேடத்தை அம்பலப்படுத்திக் காட்டியது. இலங்கை—இந்திய ஒப்பந்தம் இருநாட்டுத் தலைவர்களினதும் அவர்களது உள்நோக்க அடிப்படையிலும் உருவாக்கப்பட்டதே அன்றி மக்களினதும், தேசிய இனப்பிரச்சினையினதும் சார்பில் நேர்மையாக உருவாக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய மார்க்சிச லெனினிசக் கட்சியான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) இலங்கையில் இருந்து இந்திய இராணுவம் வாபஸ் பெறப்படவேண்டும் என்பதை தெளிவான தனது நிலைப்பாட்டினால் சுட்டிக் காட்டியது. கட்சியின் அறிக்கைகள், பிரசுரங்கள், பொதுக் கூட்டங்கள், கருத்தரங்குகள் மூலம் தனதுநிலைப் பாட்டினை மக்கள் முன் வைத்தது. இவ் ஒப்பந்தம் உருவாக்கப்படுவதற்கு முன்பாக இந்திய விமானங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் வடக்குப் பிரதேசத்தில் அத்துமீறிப் பிரவேசித்து உணவுப் பொதிகளை வீசிச்சென்ற வுடனேயே அதனைக் கண்டித்து இச்செயலுக்குப் பின்னால் பிராந்திய மேலாதிக்கத்தின் கரங்கள் மறைந் திருக்கின்றன என்பதையும் மேற்படி கட்சி சுட்டிக்காட்டி யிருந்தது. அக்காலக்கட்டத்தில் கட்சியின் பத்திரிகை களிலும் ஏனைய பிரசுரங்களிலும் வெளிவந்த 'அயலார் வருகை', 'குரங்கும் பூனையும்', 'இலங்கை—இந்திய ஒப்பந்தம்' ஆகிய கட்டுரைகள் இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் பின்னணிகளையும் இந்திய இராணுவத் தலையீட்டையும் பற்றிய மார்க்சிச லெனினிசவாதிகளின் கொள்கை நிலைப்பாட்டினை தெளிவுறுத்திக் காட்டின. இதன் அடிப்படையிலேயே 1988ம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இந்திய ராணுவத்தை வெளியேற்றக் கோரியும், தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்கு உத்தரவாதம் அளித்த கோரிக் கையை உள்ளடக்கிய ஒரு வேலைத் திட்டத்தை முன் வைத்த திருமதி சிறிமாபண்டாரநாயக்காவிற்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தனது பூரண ஆதரவை வழங்கியது. அத்தேர்தலில் பாராளுமன்ற இடதுசாரிகள் திருமதி பண்டாரநாயக்காவை ஆதரிக்க மறுத்து விட்டனர். ஆனால் தான் முன்பு ஏற்றுக் கொண்ட தமிழர் சம்மந்தமான வேலைத்திட்டத்தை திருமதி பண்டார நாயக்கா நிராகரித்து வாபஸ் செய்து கொண்ட பின் இவ் இடதுசாரிகள் அவருடன் இணைந்து ஐக்கிய முன்னணி அமைத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் பாராளுமன்றஇடதுசாரிகள் மிகவும் கீழ்நிலைக்கு இறங்கி இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கும், இந்திய இராணுவத் தலையீட்டிற்கும் தமது ஆதரவினைத் தெரிவித்து நின்றமை மேலும் அவர்களது இடதுசாரி. சோஷலிச நம்பகத்தன்மையை மக்கள்மத்தியில் கேள்விக்கு உள்ளாக்கியது. இந்நிலையில் அவர்கள் உருவாக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐக்கிய சோஷலிச முன்னணி செயலற்றுக் காணப்பட்ட நிலையில் சிறிலங்கா மக்கள் கட்சி பிளவுபட்டு அதன் ஒரு பகுதி ஓசி அபயகுணசேகரா தலைமையில் நேரடியாகவே யூ. என். பியின் ஒரு தொங்கு தசையாக மாறிக் கொண்டது. மறு பகுதியினர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்து 1994 பொதுத் தேர்தலில் பொதுசன முன்னணியில் ஓர் அங்கமாகிக் கொண்டனர்.

பாராளுமன்ற இடதுசாரிகளான சமசமாஜ- கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைவர்கள் நாட்கள் செல்லச் செல்ல தம்மைச் சீரழிவின் உச்சத்திற்கு இட்டுச்சென்றனர். ஒரு காலத்தில் தத்துவம், கொள்கை, இலட்சியம் என்று பேசிநின்ற இத்தலைவர்கள் அவை யாவற்றிலும் தலைகீழாக மாற்றமடைந்து காணப்பட்டனர். அவர்கள் கண்டிக்குக் சென்று தலதாமாளிகையில் புத்தபெருமானுக்கு காணிக்கை செலுத்தி வணங்கிய பின்பேதமது சத்தியாக்கிரக இயக்கம் ஒன்றை ஆரம்பிக்கும் அளவுக்குச் சீரழிந்தனர். அச்சத்தியாக்கிரகத்தைக் கலைப்பதற்கு பொலிஸ்படை வந்து தாக்கியபோது புத்தபிரானை துதி செய்து தாங்கள் ஏற்கனவே கொழும்பு பொலிஸ் தலைமையகத்தில் அச்சத்தியாக்கிரகத்திற்கு அனுமதி பெற்றுவந்த கடிதத்தை தாக்குதல் நடாத்திய பொலிசுககு காட்டிப் பாதுகாப்புத்தேட முயன்றனர். ஆனாலும் பொலிஸ் தனது தாக்குதலை நடாத்தி இத்தலைவர்களை அவ்விடத்தில் இருந்து கலைத்துவிட்டது ஒரு காலத்தில் புரட்சிகர உணர்வும், தொழிலாளிவர்க்க சனசமுத்திரமும் கொண்ட ஊர்வலங்களையும், கூட்டங்களையும், போராட்ட இயக்கங்களையும் நடாத்தி ஆளும்வர்க்கத்தை அதிரச்செய்த தலைவர்கள் பிற்காலத்தில் புத்தபகவானை நாடிநின்று அமைதியான சத்தியாக்கிரகத்தைக்கூட நடாத்தமுடியாத சீரழிவு நிலைக்கு வந்தமை தற்செயலான சம்பவமல்ல. அவர்களது வழிதவறிய பாதையின் தொடர்ச்சியேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பாராளுமன்ற இடதுசாரிகள் எண்பது களின் பிற்கூறிலே உருவாக்கிய ஐக்கிய சோஷலிச முன்னணி நாளடைவில் செயலற்றுச் சென்ற சூழலில் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் அவை தமது உறவை வளர்த்துக் கொள்ளத் தொடங்கின. சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தீவிர வலதுசாரிப் பிரிவினர் எப்பொழுதும் இடதுசாரிகளுடனான இணைக்கத்தை எதிர்த்து வந்துள்ளனர். பிற்காலத்தில் அனுரா பண்டார நாயக்கா இவ்வலதுசாரிப் பிரிவின் தலைமைப் பிரதிநிதி யாக இருந்துவருகிறார். அதேவேளை தனது கண வனுக்குப் பின்னணியாக இருந்துவந்த திருமதி சந்திரிகா குமாரணதுங்கா சோஷலிச முன்னணியின் செயலின்மைக் குப் பின் தானே தனிஒரு கட்சியை உருவாக்கியபோதிலும் இறுதியில் சுதந்திரக் கட்சிக்குள் தனது தாயாரின் ஆதரவுடன் புகுந்து கொண்டதுடன் படிப்படியாக அதன் தலைமைத்துவத்திற்கு வரும் முயற்சியிலும் ஈடுபட்டார். 1993 மேமாதத்தில் இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தல்களில் இடதுசாரிகளுடன் இணைந்து பொதுசன ஐக்கிய முன்னணி அமைத்து கணிசமான வாக்குகளைப் பெறமுடிந்தது. மேல் மாகாணசபையை இம்முன்னணி எதிர்க்கட்சியின் ஆதரவுன் கைப்பற்றி திருமதி சந்திரிகா குமாரணதுங்கா முதலமைச்சராகவும் வரமுடிந்தது. இத்தேர்தலில் சந்திரிகா இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொண்டதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் தனது தலைமைத்துவத்திற்கான அடிப்படையினை உறுதிப்படுத்திக்கொள்ள வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் அனுரா பண்டாரநாயக்கா (சந்திரிகாவின் சகோதரன்) கட்சிக்குள் போர்க்கொடி தூக்கி பிளவுக்கு தயார்படுத்தத் தொடங்கினார். இவ் உட்கட்சி முரண்பாட்டில் திருமதி சந்திரிகா இடதுசாரி சார்பாக நிற்கும் போக்கினை கடைப்பிடித்துநிற்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு தாயாரான திருமதி பண்டாரநாயக்கா ஆதரவு தெரிவிக்கும் நிலையை மேற்கொண்டார்.

இந்நிலையிலேயே சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் திருமதி பண்டாரநாயக்காவின் தலைமையில் ஒன்றிணைந்து பொதுசன ஐக்கிய முன்னணி என்னும் புதிய அமைப்பினைத் தோற்றுவித்தனர். இம்முன்னணி மாகாணசபைத் தேர்தலில் பங்குகொண்டது மட்டுமன்றி அடுத்த ஜனாதிபதி-பாராளுமன்றத் தேர்தலையும் எதிர் நோக்கி தனது செயற்பாட்டினை முன்னெடுத்தது. இதனை உற்றுநோக்கும்போது இவ் இடதுசாரிக் கட்சிகளினால் தனித்துநின்று ஆரம்பகால நிலைப்பாடாக முன்னெடுத்த வர்க்க அடிப்படையை உறுதியாகக் கொண்டிருக்க முடியாத கையறு நிலையால் இனவாதத்தை உறுதியாக எதிர்த்து நிற்கமுடியாத சீரழிந்த நிலைக்குத் தங்களை ஆக்கிவைத்துள்ள போக்கினையே காண முடிகின்றது. இதேவேளை பழைய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஏற்பட்ட பல பக்கப் பின்னடைவுகளில் ஒன்றாக சோவியத் யூனியனது சிதைவு ஓர் முக்கியமானதாகும். இக்கட்சி மிக விசுவாசமாகத் துதித்துப் போற்றிநின்ற சோவியத் யூனியனதும்—நவீன திரிபுவாதத்தினதும் தோல்வியும் அழிவும் அவர்களது அணியை மேலும் பலவீனப்படுத்தி பின்னடைவுக்கு உள்ளாக்கியது.

மேலும் சமசமாஜக் கட்சியின் ட்ரொஸ்கிசத் தலைமையின் மூத்த உறுப்பினர்களும் ஆரம்பகாலத் தலைவர்களும் மறைந்துவிட்ட நிலையில் ஏதோ பழைய பெயரிலும் பாராளுமன்றப் பாதையிலும் மிகச் சிரமப்பட்டு அக் கட்சி நகர்ந்துகொண்டிருக்கின்றது. அதற்குப் அக்கப் பக்கத் துணையின்றிச் செல்லமுடியாது-தள்ளாத நிலையிலேயே காணப்படுகிறது. அதேவேளை 1978ல் அக்கட்சியில் இருந்து பிளவுபட்டு சென்றவர்கள் புதிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையிலான நவசமசமாஜக் கட்சியை உருவாக்கிய போதிலும் அதனிடத்தில் மாற்றமடையாத ட்ரொஸ்கியப் போக்கு இறுக்கமுடையதாக உள்ளது அதனால் தனக்குத் தேவைப்படும்போது ஐக்கியம் பற்றிப் பேசி அதற்கு முயற்சிசெய்வதும் சிறிது பிரசாரம் கிடைத்து உற்சாகம் ஏற்பட்டதும் அவ் ஐக்கியத்தை உதறித்தள்ளுவதும் அதன் ட்ரொஸ்கிய நிலைப்பாடாகப் பின்பற்றி வருகிறது இதன் அடிப்படையிலேயே அக்கட்சியின் தலைவரான வாசுதேவநாணயக்கார 1988ம் ஆண்டின் ஜனாதிபதித் தேர்தலில் அபேட்சகராக நின்று யூ. என். பிக்கு உதவும் வேலையை செய்து முடித்தார். இவர்களது அடிப்படைக் குறைபாடு பெருமுதலாளித்துவ யூ. என். பிக்கும் தேசிய முதலாளித்துவ சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் வர்க்க வளர்ச்சி அடிப்படையில் வித்தியாசம் காணமறுப்பதும், ஐக்கிய முன்னணித் தந்திரோபாயம் பற்றி தெளிவான பார்வையைக் கொள்ள டியாமல் இருப்பதுமாகும். அதேவேளை வெறும் வரட்டுத்தன மான புரட்சிகர சுலோகங்களை எழுப்பி ஒருவகைத் 'தோற்றத்தை' அளிக்க முற்படுவதுமாகும். இதனை அதிக காலத்திற்கு செய்துகொண்டிருப்பது கடினம் என்பதைப் பழைய சமசமாஜ கட்சியின் வரலாற்றில் இருந்து தெரிந்து கொள்ளவேண்டியதாகும் இதே போன்று மேலும் சில ட்ரொஸ்கிய குழுக்கள் தனித்தனி யாக இயங்கி வருகின்றன. அதே போன்று மார்க்கிச லெனினிசக் கருத்துக்களுடன் கட்சி ஸ்தாபனமாக இல்லாது சிலர் குழுக்களாகவும் தனிநபர்களாகவும் இருந்து வருகின்றனர். இத்தகைய நிலையை நோக்கும் போது இலங்கையின் இடதுசாரி இயக்கம் பின்னடைவு களைச் சந்தித்த ஒரு தேக்க நிலையில் இருந்துவருவதனை மறுக்கமுடியாது. இச்சாதகமற்ற சூழல் சாதகமான தென்றாக மாற்றப்படல்வேண்டும். அதற்குரிய வழி வகைகள் இனம் காணப்பட்டு முன்னெடுக்கப்படுவதன் மூலமே புதிய நிலைமைகளை சிருஷ்டிக்க முடியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ❑ தேசிய இனப்பிரச்சினையும் இடதுசாரிகளும்

இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை இன்று யூதாகரப் பிரச்சினையாகி உள்ளது. பேரினவாத ஒடுக்குமுறை தனது கோரத்தனத்தை முழுமையாக வெளிக்காட்டி நிற்கின்றது. தமிழ்பேசும் மக்களான இலங்கைத் தமிழர், முஸ்லீம் மக்கள், இந்திய வம்சாவழித் தமிழர்கள் ஆகிய முத்தரப்பினரும் இப்பேரினவாத ஒடுக்குமுறையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ் இன ஒடுக்குமுறை வரலாற்று வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் பற்பல வடிவங்களாகத் தோற்றம் பெற்று வளர்ந்தவையாகும். இலங்கையில் பேரினவாதத்தின் ஊற்றுமூலம் இந்த நூற்றாண்டு தோன்றுவதற்கு முன்பே உடைப்பெடுத்து விட்டது. அதன் வளர்ச்சி ஒவ்வொரு கட்டத்திலும் சிறுபான்மையினருக்கு எதிரானதாக வளர்ந்துவந்துள்ளது. இதனை 1915ல் நடைபெற்ற சிங்கள — முஸ்லீம் வன்செயல் நன்கு வெளிப்படுத்தியது. இருபதுகளின் ஆரம்பத்தில் தமிழ் — சிங்களத் தலைவர்களுக்கிடையிலான கசப்புணர்வு தோற்றம் பெற்றது. முப்பதுகளில் மலையாளிகளான இந்தியத் தொழிலாளர்களுக்கு எதிரான சிங்களத்தலைவர்கள் சிலரின் துவேசமும் எதிர்ப்பும் திசைகாட்டப்பட்டது. 1948ல் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதிரான பிரசாவுரிமை — வாக்குரிமை மறுக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. அதே காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் குறிப்பான பிரதேசங்களிலும் பின் வடக்கின் எல்லைப் பிரதேசங்களிலும் தமிழர்களின் நில, நீர் அபகரிப்புக்கான திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் நிறுவப்பட்டு விஸ்தரிக்கும் போக்கு வேகப்படுத்தப்பட்டன. 1957ல் தனிச்சிங்கள மொழிச் சட்டத்தின் மூலம் தமிழர்களின் மொழி உரிமை மறுக்கப்பட்டதுடன் அவர்களது கலாசாரத் தனித்துவங்களை உதாசீனப்படுத்தும் நிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றின. 1958ம் ஆண்டில் தமிழர்களுக்கு எதிரான சிங்கள இன வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. 1960களின் ஆரம்பத்துடன் தமிழர்களின் இன உரிமைக் கோரிக்கைகள் வலுவடைந்த அதேவேளை இன ஒடுக்கு முறைக்கான ஆரம்ப முன்னெடுப்புக்கள் ஆயுதப்படைகளின் ஊடாக முன்தள்ளப்பட்டன. இருப்பினும் அவை அதிக வேகமுடையதாகக் காணப்படவில்லை. எழுபதுகளின் ஆரம்பத்துடன் இனப்பிரச்சினைக்கு குறைந்த பட்சத் தீர்வுதானும் எய்தப்படுவதற்குப் பதிலாக எழுபத்தி இரண்டாம் ஆண்டின் புதிய அரசியல் யாப்பு தமிழர்களை மேலும் புறம்தள்ளி இனரீதியில் கடுமையான அதிருப்திக்கும் வெறுப்புக்கும் உள்ளாக்கிவிட்டது. இதே காலப் பகுதியில் தமிழ் மாணவர்களின் கல்வியை பாதித்த தரப்படுத்தல்முறை நடைமுறைப்படுத்தப் பட்டது. இந்நிலையில் தமிழர் தலைமை தமிழீழக் கோரிக்கையை முன்வைத்தது. இதனை கண்டு மிரண்ட சிங்கள ஆளும்வர்க்க சக்திகள் அதனை ஆயுதபலம் கொண்டு முறியடிக்க கங்கணம் கட்டியதே அன்றி அதற்கு மாற்றாக தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வினை குறைந்தபட்சமாவது மனப்பூர்வமாக முன் வைக்கத் தயார் இல்லாத நிலையிலேயே இருந்தனர். இச் சூழலிலேயே 1974ம் ஆண்டின் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடு ஆட்சியினால் குழப்பப்பட்டு ஒன்பது தமிழர் கொல்லப்பட்ட நிகழ்வு நடந்தது. 1977ல் தமிழீழக் கோரிக்கையை ஒரு சவாலாக ஏற்ற ஜே. ஆர். தலைமையிலான யூ. என்.பி பேரினவாத பெருமுதலாளித்துவ அரசு, பாசிச நடைமுறைகளின் ஊடே தமிழர்களுக்குப் பாடம் புகட்டும் வகையில் செயல் பட ஆரம்பித்தது. 77ம், 79ம், 81ம், 83ம் ஆண்டுகளில் தொடரான இன வன்செயல்கள் மிகவும் கொடூரமான வழிகளில் அரசினால் திட்டமிட்டு நடாத்தப்பட்டன. இவ் இனவன்செயல்கள் இலங்கையில் வாழும் அனைத்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களுக்கும் எதிரானதாக ஆக்கப்பட்டிருந்ததுடன் தொன்னூறாயிரத்துக்கு அதிகமான நூல்களைக் கொண்டிருந்த நூல்வளம் மிக்க யாழ்ப்பாண நூல்நிலையம் ஆயுதப்படைகளால் கொழுத்தி எரிக்கப்பட்டது. இவ்வாறு பேரினவாத யூ. என். பி ஆட்சியின் ஆயுத அடக்குமுறையின்கீழ் பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் வடக்கு கிழக்கு மலையகம் மற்றும் பிரதேசங்களில் உயிர் இழப்புக்களுக்கும் உடமை நாசங்களுக்கும் ஆளாக்கப் பட்டனர். இச்செயல்முறைகளால் மிதவாதத் தமிழர் தலைமையை ஜே.ஆர். தனது வழிக்கு கொண்டுவர முயன்றார். அதில் ஓரளவு வெற்றியும் கண்டார் ஆனால் அவரது எதிர்பார்ப்பு உள்ளூரத் தோல்வி கண்டது. அதாவது இன ஒடுக்குமுறையின் கோரத் தனத்தால் தீவிரவாதத் தமிழ் இளைஞர்கள் ஆயுதங் களைத் தூக்கி நிற்கும் நிலை உருவாகி ஆயுதப்படை களுடன் மோதும் புதிய சூழல்கள் உருவாகி வளர்ந்தன. எனவே தேசிய இனப் பிரச்சினை எவ்வித அரசியல் தீர்வுக் கும் உட்படாது யுத்த நிலையை நோக்கி வளர்வதாயிற்று. இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு தனது சொந்த நாட்டில் உரிய தீர்வை சுயதீனமாக உருவாக்கி வெற்றி காணமுடியாத கையறுநிலையில் ஜே. ஆர். இந்தியாவின் காலடியில் சரணடைந்து இருநாடுகளினதும் ஆளும் வர்க்கத் தலைமை மட்டத்தில் இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. சாராம்சத்தில் அவ் ஒப்பந்தம் காட்டிய தீர்வும் பிரச்சினையைத் தீர்ப்பதாக அமைய வில்லை அதேநேரத்தில் அவ் ஒப்பந்தம் இந்திய இராணுவத் தலையீட்டுக்கு வழிவகுத்து இராணுவத் தீர்வுக்கான வழிவகைகளைத் தேடமுற்பட்டது.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஆளும் பேரினவாத யூ.என்.பி ஆட்சி இராணுவத் தீர்வையே நாடிநிற்கின்றது. அரசியல் தீர்வுக்கான முயற்சிகளுக்கு சிங்களப் பேரினவாதம் இசைவு காட்டுவதாக இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால் யதார்த்த நியதியான 'எங்கு அடக்குமுறை உண்டோ அங்கு போராட்டம் இருக்கும்' என்பதற்கு இணங்க பேரினவாத ராணுவ ஒடுக்கு முறைக்கு எதிராகத் தமிழர் மத்தியில் உறுதியான போராட்டம் இருக்கவே செய்கிறது. இவ்விடத்தில் போராடும் சக்திகள் யார்? அதன் வர்க்க இயல்பு என்ன? வெற்றி பெறுமா? என்பன போன்ற கேள்விகள் முக்கியமானவையாக இருந்த போதிலும் அவை இரண்டாம் பட்சமானவையாகவே காணப்படவேண்டும். போராட்டத்தின் எதிர்கால வெற்றிக்காக அவை முழுமையாகக் கவனத்திற்கு எடுக்கப் படவேண்டிய அதேவேளை நமது பிரதான கவனம் தமிழர்களை ஒரு இனம் என்ற வகையில் பூரணமாக ஒடுக்கி அடிமைதனத்திற்குள் தள்ளமுயலும் பேரினவாத இராணுவ ஒடுக்குமுறையின் மீதே செலுத்தப்பட வேண்டும். இதுவே ஓர் இனத்தினது இருப்பையும் எதிர் கால வளர்ச்சியையும் தீர்மானிப்பதற்கான அடிப்படை யாக உள்ளது. இதன் அடிப்படையிலேயே மார்க்சிச லெனினிசவாதிகள் இன ஒடுக்குமுறை சார்ந்த ராணுவத் தீர்வினை நிராகரித்து எதிர்க்கிறார்கள். அதேவேளை சுயநிர்ணய உரிமை அடிப்படையில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய நீதியான தீர்வினை வற்புறுத்துகிறார்கள்.

மேலே குறிப்பிட்ட இலங்கை தேசிய இனப்பிரச் சினையின் வளர்ச்சியானது ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலப்பகுதியை உள்ளடக்கியதாகவே காணப்படுகிறது. அவ்வாறாயின் அதே காலப்பகுதியில் தோற்றம் பெற்று வளர்ச்சிகண்டுவந்த இடதுசாரி இயக்கம் இத்தேசிய இனப்பிரச்சினையில் எத்தகைய பாத்திரத்தை வகித்து வந்தது என்பதனையிட்டு அக்கறைப்படுவது இயல் பானதேயாகும் இதுபற்றி முன் அத்தியாயங்களிலே ஆங்காங்கே எடுத்துக் கூறப்பட்டுள்ளனவாயினும் இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தில் சுட்டிக்காட்டுவதும் பொருத்தமுடையதாகும். சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆரம்பகாலம் தொட்டு அவற்றிடையே இனவாதம் துளியளவும் காணப்பட வில்லை என்பது தெளிவுடன் காணக்கூடியதாகும். ஏகாதிபத்திய எதிர்ப்பும், தேசிய உணர்வும், தொழிலாளி வர்க்கப் பார்வையும் கொண்ட அவ் இடதுசாரிகள் முப்பதுகளிலே ஏ.ஈ. குணசிங்காவினால் முடுக்கிவிடப் பட்ட இனவாதத்திற்கு எதிராக உறுதியாகப் போராடி வர்க்க ஐக்கியத்தை பாதுகாத்து வளர்த்துவந்துள் ளார்கள். நாற்பதுகளில் தெற்கிலும் வடக்கிலும் தங்கள் வெளிப்படையாக இனம் காட்டத் தொடங்கிய சிங்கள, தமிழ் இனவாதத்திற்கு எதிராக இவ் இடதுசாரிகள் சளைக்காது தமது கொள்கை நிலைப் பாட்டில் இருந்து போராடி வந்திருக்கிறார்கள். 1948ல் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு எதிரான பிரசாரவுரிமை, வாக்குரிமைப் பறிப்பில் தமது வன்மையான எதிர்ப்பைத் தெரிவித்து இது அடிப்படையான மனித உரிமை மீறலும் — ஜன நாயக படுகொலையும் எனச் சுட்டிக்காட்டி நின்றனர். இலங்கை இந்தியக் காங்கிரசுடன் இணைந்து தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் தெரிவித்தனர். அதே போன்று ஐம்பதுகளின் பிற்கூறிலே தனிச் சிங்களச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது அதனை எதிர்த்து இரு மொழிகளையும் அரசாங்க மொழிகளாக்குவதன் அவசியத்தை சுட்டிக்காட்டி வாதாடினர். தனிச் சிங்கள மொழிச்சட்டத்தின் எதிர்கால அபாயத்தை சுட்டிக் காட்டிய இவ் இடதுசாரிகள் தமது பாராளுமன்ற உரைகளின் போது 'ஒரு மொழி இரண்டு நாடுகள், இரண்டு மொழிகள் ஒரு நாடு' என்ற பிரசித்தி பெற்ற கூற்றினைக் கூறி நின்றனர். இம்மொழிப் பிரச்சினை நாடு தழுவிய விவாதத்திற்கு உட்பட்டிருந்த 1955ம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தில் கொழும்பு நகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY



மண்டபத்தில் சமசமாஜக்கட்சி மொழிப் பிரச்சினை பற்றிய பகிரங்க கூட்டத்தை நடாத்தியது. அக்கூட்டத்தில் துணிவுடன் அக்கட்சி சிங்களமும் தமிழும் நாட்டின் ஆட்சிமொழிகளாக வேண்டும் என வற்புறுத்தியது. இக் கூட்டத்தின் மீது சிங்கள இனவாதக் காடையர் தாக்குதல் நடாத்தினர். பொலீஸ் நிற்கக்கூடியதாக கைக்குண்டுகள் வீசப்பட்டன. இதனால் ரெஜி மெண்டிஸ் என்ற சம சமாமஜக் கட்சியைச் சேர்ந்த சிங்களவர் தமது இடது கையை இழக்க நேரிட்டது. பலர் காயங்கள் பெற்றதுடன் பொலீஸ் தடியடியும் நடாத்தி கூட்டத்தை கலைக்க முயன்றது. இதே போன்று கம்யூனிஸ்ட் கட்சியும் துணி வுடன் தனது வர்க்க நிலையை முதன்மைப்படுத்தி இரு மொழிகளையும் ஆட்சி மொழியாக்கக் கோரியது.

1956ல் வடபகுதி வல்வெட்டித்துறையில் இடம்பெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் இம்மொழிக் கொள்கை வற்புறுத்தப்பட்ட அதே வேளை இனப்பிரச் சினைக்கு பிரதேச சுயாட்சி அமைப்புமுறை தீர்வாகக் கட்சியினால் முன்வைக்கப்பட்டது. இப்பிரதேச சுயாட்சி முறையினால் தமிழர் பிரதேசங்கள் பொருளாதார, சமூக, கல்வி, கலாசாரத் துறைகளில் சுயவளர்ச்சி எய்தப்படும் என்பதை கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியது. கட்சியின் மேற்படி முடிவானது தமிழர்களிடையே கூடிய கவனத்தைப் பெற்று நின்றது. இதனால் 1956ம் ஆண்டின் பொதுத் தேர்தலில் பருத்தித்துறை தொகுதியின் பிரதிநிதி யாக பொன். கந்தையா பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். அவர் பாராளுமன்றத்தைத் தகுந்த வாறு பயன்படுத்திய ஒரு கம்யூனிஸட்டாக விளங்கினார். அவரது காலத்தில் பருத்தித்துறை தொகுதி பல அபி விருத்திகளைப் பெற்ற அதே வேளை தாழ்த்தப்பட்ட மக்களின் கல்வி மேம்பாட்டிற்காக அவர் கூடுதல் முன்னுரிமை வழங்கினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதியில் முப்பதுகளின் பிற்கூறிலே சமசமாஜக் கட்சி தோற்றுவிக்கப்பட்டது. யாழ்ப்பாண வாலிபர் காங்கிரசின் செயலிழப்புக்குப்பின் அதிலிருந்த இளைஞர் களில் சிலர் இம்சமசமாஜக் கட்சியைத் தோற்றுவித்தனர். இவர்களில் பி. நாகலிங்கம், ஸி. தர்மகுலசிங்கம் முக்கிய மானவர்கள். இவர்கள் ஆரம்ப காலத்தில் பஸ் தொழி லாளர்கள், சுருட்டுத் தொழிலாளர்கள் என்போரை அணிதிரட்டி நின்றனர். இவர்களைத் தொடர்ந்து அ. விசுவநாதன், ஆ துரைராஜசிங்கம், ஆர். ஆர். தரும ரத்தினம் போன்றோர் சமசமாஜ இயக்கத்தின் முன்னணி யாளர்கள் ஆகினர். நாற்பதுகளின் நடுக்கூறிலே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசக் குழு உருவாக்கப்பட்டது. கட்சி வேலைகளுக்காக மு. கார்த்திகேசன், யாழ்ப்பாணம் வந்தார். அவருடன் சு. வே. சீனிவாசகம், எஸ். கே. கந்தையா, எம். ஏ. காதர் ராமசாமி ஐயர், எம். சி. சுப்பிரமணியம், க. மகாலிங்கம் போன்றோர் ஒன்று கூடி கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித் தனர். இக்கட்சி தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அதிக செல்வாக்குப்பெற்ற கட்சியாக விளங்கியமை குறிப்பிடத் தக்கதாகும். இதனால் கம்யூனிஸ்ட் கட்சி என்றால் அது 'பள்ளர், நளவர் கட்சி' என தமிழ்ப் பழமைவாதிகளினால் சுட்டிக்காட்டப்பட்டது. மு. கார்த்திகேசன், சு. வே சீனிவாசகம், எம். சி. சுப்பிரமணியம், கே. ஏ. சுப்பிரமணியம் போன்ற நெஞ்சுரம்மிக்க தலைவர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் தமது கம்யூனிஸ்ட் இலட்சியப் பாதையில் உறுதியுடன் முன்சென்றனர். மு. கார்த்தி கேசன், அ. விசுவநாதன் ஆகியோர் யாழ். மாநகரசபை யின் பிரதிநிதிகளாக இருந்தனர். பி. நாகலிங்கம் சுன்னாகம் பட்டினசபையிலும், சு. வே. சீனிவாசகம் காங்கேசன்துறை பட்டினசபையிலும், மேன். முத்தையா சங்கானைப் பட்டினசபையிலும் உறுப்பினர்களாகவும் தலைவர்களாகவும் பணியாற்றுமளவிற்கு மக்கள் மத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் அதிக செல்வாக்குடைய இடதுசாரிகளாக வடபகுதி யில் இருந்து வந்தனர்.

இவ்வாறு சமசமாஜ—கம்யூனிஸ்ட் இயக்கம் அறுபது களின் முற்கூறுவரை தமிழர்களை உள்ளடக்கிய இனப் பிரச்சினையில் முற்போக்கானதும் வர்க்க நிலைப்பாட் டினைக் கொண்டதுமான நிலைப்பாட்டினை வகித்து வந்துள்ளமை பாராட்டப்பட வேண்டியதும் கவனத்திற்கு கொள்ளப்பட வேண்டியதுமாகும். இதில் சுட்டிக் காட்டப்படவேண்டிய மற்றொரு விடயம் யாதெனில், அறுபதுகள் வரை இவ் இடதுசாரிகள் தமது வர்க்க நிலைக்கு ஏற்ப தமிழர்களின் நியாயமான கோரிக்கை களுக்கு ஆதரவு தெரிவித்து நின்ற போதிலும் தமிழர் தலைமைகள் தமது வர்க்க நிலைக்கு ஏற்ப இவ் இடது சாரிகளை எதிர்த்து வந்துள்ளமையாகும். அவர்கள் இடதுசாரிகளை தமிழர்களின் எதிரிகளாகவே இனம் காட்டி வந்துள்ளனர். இடதுசாரிகளைத் தமிழர்களின் இன உரிமைக்கு விரோதிகளாகக் காட்டிக்கொண்ட அதே வேளை இன உரிமைகளை மறுத்துநின்ற யூ. என். பி பிற்போக்கு சக்திகளுடன் ஐக்கியப்பட்டு நிற்பதில் இத் தமிழர் தலைமைகள் எவ்வித தயக்கத்தையும் அன்று காட்டவில்லை. இது அவர்களது உயர்வர்க்க ஒருமைப் பாட்டினைச் சுட்டிக்காட்டியது. அதேபோன்று இடது சாரிகளினால் ஆதரிக்கப்பட்ட சகல முற்போக்கு நடவடிக் கைகளையும் எதிர்ப்பதில் இத்தமிழர் தலைமைகள் முன்னணியில் நின்றன என்பதும் அழுத்தத்துடன் அவதானிக்கவேண்டியதாகும்.

இலங்கையில் இடதுசாரி இயக்கம் உருவாக்கப்பட்டு ஏறத்தாழ இருபத்தைந்து வருடங்களுக்கு மேல் வர்க்க நிலைப்பாட்டினை முன்நிறுத்தி அந்நோக்கின் ஊடே இனப்பிரச்சினையில் நியாயமான போக்கினைப் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி வந்த சமசமாஜ—கம்யூனிஸ்ட் கட்சிகள் அறுபது களுக்குப்பின் படிப்படியாக தமது நிலைப்பாட்டில் சீரழி வினை உள்வாங்கிக்கொண்டனர். ஆட்சியில் பங்கு கொள்ளும் வகையில் பாராளுமன்ற சந்தர்ப்பவாதத் திற்குள் வீழ்ந்தனர். தமது முன்னைய கொள்கைகளை கைகழுவிக்கொண்டு எதை நிராகரித்து எதிர்த்தார்களோ அதனைக் கைப்பிடித்து இனவாதத்திற்குத் தங்களை பலி யாக்கிக்கொண்டனர். அவர்கள் 1670ம் ஆண்டின் ஐக்கிய முன்னணி அரசின் முழுமையாக அங்கம் பெற்று ஆட்சிப்பங்கைப் பெற்றதன்மூலம் அந்த அரசு நடத்திய தமிழர் விரோதம் கொண்ட இனவாத நடவடிக்கை களுக்கு தாமும் பங்காளிகளாகினர். இனவாதம் பேசும் எதிர்நிலைக்குச் சென்று கீழ்ப்படிகளுக்கு இறங்கினர். இவர்கள் இடதுசாரிகளா என்று ஆச்சரியப்படுமளவிற்கு அவர்களது பேச்சும் செயலும் காணப்பட்டது. இதனால் சகல இடதுசாரிகளும் தமிழ்த் தேசியவாத சக்திகளால் பழிக்கப்படுவதற்கான சூழ்நிலைகள் தோன்றின. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மிதவாத தமிழர் தலைமை கள் தமது வர்க்க நிலைப்பாட்டைப் பாதுகாக்க இடது சாரி எதிர்ப்பை ஒரு துரும்பாகப் பாவிக்க முன்வந்தனர். அதற்கு களம் அமைப்பதுபோல் எழுபதுகளில் தமிழர் களிடையே பாராளுமன்ற இடதுசாரிகள் கண்மூடித் தனமாகச் செயல்பட்டனர். உதாரணமாக 1976ல் காங்கேசன்துறைத் தொகுதியின் பிரதிநிதித்துவத்தை இராஜினாமாச்செய்து மீண்டும் இடைத்தேர்தலில் எஸ். ஜே. வி. செல்வநாயகம் போட்டியிட்டார். அவ் வேளை பழைய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக வ. பொன்னம்பலம் எதிர் வேட்பாளராகப் போட்டி யிட்டார். ஐக்கிய முன்னணி அரசு அதனை ஆதிரித்தது. இத்தேர்தலை புதிய கம்யூனிஸ்ட் கட்சியான மார்க்சிச லெனினிசக் கட்சி பகிஷ்கரித்தது. வ. பொ. விற்கு ஒன்பதினாயிரம் வாக்குகள் கிடைத்தது. செல்வநாயகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றார். ஆனால் வ. பொ. ஓரிரு ஆண்டுகள் செல்வதற்கு முன்பே தனது கம்யூனிஸ்ட் கட்சியை விட்டு 'செந்தமிழனாக' மாறி தமிழர் கூட்டணி மேடையில் நின்றது மட்டுமன்றி தனக்காக வாக்களித்த மக்களைத் துரோகிகள் எனக் காட்டுவது போன்று அவ் இடைத் தேர்தலில் 'தனது மனசாட்சியின்படி தந்தை செல்வநாயகத்திற்கே தமது வாக்கினை அளித்ததாகக் கூறினார். இதுபோன்ற குத்துக்கரணத்தை இலங்கை அரசியலில் காண்பது மிக அரிதிலும் அரிது எனலாம். இதன் அடிப்படை அவர்கள் வரித்துநின்ற தவறான கொள்கையின் அதாவது முற்றுமுழுதான பாராளுமன்றப் பாதை என்ற நவீன திரிபுவாத — சந்தர்ப்பவாதத்தின் வெளிப்பாடு என்பதே உண்மையானதாகும்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் பாரம்பரிய இடதுசாரி கட்சிகளான சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகள் பிற்காலத்தில் பாரிய தவறுகளை இழைத்து நின்ற அதேவேளை புரட்சிகர சக்திகளான மார்க்சிச லெனினிசவாதிகள் பேரினவாதத்தை எதிர்ப்பதிலும் தமிழர்களின் நியாயமான உரிமைகளை வற்புறுத்துவதிலும் உறுதியாக நின்றனர். சுயநிர்ணய உரிமை பற்றிய நோக்கில் குறிப்பாக எழுபதுகளின் பிற்கூறுக்குப்பின் மார்க்சிச லெனினிசவாதிகள் தெளிவானதும தூரநோக்குடையதுமான கொள்கை நிலைப்பாட்டினை முன்வைத்தமை கவனத்திற்குரியதொன்றாகும். ஒருபுறத்தில் வர்க்க நிலைப்பாட்டை வலியுறுத்தி இனத்துவ அம்சங்களைப் புறக்கணித்து வந்த தவறான இடதுசாரிப் போக்கு அடையாளம் காணப்பட்டது. அதேவேளை வர்க்க நோக்கை நிராகரித்து தனியே இனத்துவத்தை மட்டும் தூக்கி நிறுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும் நிலையால் முன்னே செல்வது இயலாது என்பது பட்டறிவாகச் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே தேசிய இனப்பிரச்சினையில் தெளிவான நிலை தோன்றுவதற்கு வர்க்கம், இனத்துவம் ஆகிய இரண்டும் ஒன்றையொன்று நிராகரிக்காத ஒரு புரிந்துணர்வு நிலை தோற்றுவிக்கப்படுவதை நோக்கிய புதிய சூழலுக்குச் செல்வதே சரியான மார்க்கமாக அமையமுடியும் என்பதையே மார்க்சிச லெனினிசவாதிகள் தற்போது வற்புறுத்துகின்றனர். வர்க்கப் போராட்டத்தின் அடிப்படையில் இனத்துவ அம்சங்களை கையிழக்காத பாதையில் தேசிய இனபிரச்சினயின் தீர்வுக்கான போராட்டம் சுயநிர்ண உரிமையின் அடிப்படையில் முன்னேறிச் செல்வதையே மார்க்சிச லெனினிசவாதிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். சுயநிர்ணய உரிமை என்னும் கோட்பாட்டின் புதிய கட்ட வளர்ச்சியை இலங்கையின் விஷேட சூழலுக்கு ஏற்றவாறு பிரயோகிப்பதை மார்க்சிச லெனினிசவாதிகள் தொடர்ந்தும் வலியுறுத்திவருகிறார்கள். இந்நிலைப்பாடு ஒரு புறத்தில் வரட்டுத்தனமான மார்க்சிச நோக்கை நிராகரித்தும் மறுபுறத்தில் தனியே இனத்துவத்தை வற்புறுத்தி சுய்நிர்ணய உரிமைக் கோட்பாட்டை கொச்சைப் படுத்துவதை மறுத்தும் நிற்கின்றமை குறிப்பிடத் தக்கதாகும். இதனாலேயே பழைய இடதுசாரிகளின் வரட்டுத்தனமான நோக்கிலும் போக்கிலும் இருந்து வேறுபட்டவர்களாக மார்க்சிச லெனினிசவாதிகள் தம்மை அடையாளம் இட்டுக் காட்டுகின்றனர். இன்றைய அரசியல் யதார்த்தங்களை விளங்கி ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தின் வரலாற்று வளர்ச்சிக்கு இசைவான போக்கில் மார்க்சிசம் லெனினிசம் மாஓ சிந்தனையின் பிரயோகத்தை அவர்கள் வேண்டிநிற்கிறார்கள். மேலும் புதிய அனுபவங்களைத் தொகுத்துக்கொள்ளவும் தவறுகளைக் களைந்து சரியானவற்றை கையேற்றுச் செல்வதிலும் மார்க்சிச லெனினிசவாதிகள் தமது சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் செயற்பாடுகளையும் கொண்டிருப்பது அடையாளம் காணக்கூடிய அம்சங்களாகத் தோன்றுகின்றமை சாதகமானதேயாகும்.

## ☐ இடதுசாரி இயக்கத்தின் எதிர்காலம்

இலங்கை இடதுசாரி இயக்கத்தின் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தை தொகுத்து நோக்கின் அவ் இயக்கம் சாதனைகளைப் புரிந்தும் அதேவேளை தவறுகளை இழைத்தும் வந்துள்ளமையை அடையாளம் காணமுடியும். தனது ஆரம்ப காலத்தில் இருந்து எத்தகைய குறிக்கோள்களை இவ் இடதுசாரி இயக்கம் வரித்துக்கொண்டதோ அவற்றின் இலக்குகளை இக்கால கட்டத்தினுள் சென்றடைய முடியாத சூழலுக்குத் தன்னை இட்டுச் செல்ல வேண்டியதாயிற்று. முற்போக்கானதும் புரட்சிகரமானதுமான எந்த இலட்சியமும் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கிடையில் வெற்றிபெற்று விட வேண்டும் என எவரும் வரையறை செய்துவிடமுடியாது. அவ்வாறு ஆண்டு திகதி நாள் குறித்துச் செயல்படுவது மார்க்சிச சிந்தனாமுறையாகவும் இருக்க முடியாது. ஆனால் ஒரு நாட்டின் பொருளாதார அரசியல் சமூகத் துறைகளில் வளர்ந்துவரும் புறநிலை யதார்த்த நிலைமைகளையும் முரண்பாடுகளையும் உரியபடி இனம்கண்டு தமது சரியான கொள்கை, தந்திரோபாயம், தலைமைத்துவம் என்பனவற்றின் ஊடாக ஆகக்கூடிய சாதனைகளையும் வெற்றிகளையும் வென்றெடுத்து நிலைநாட்டி முன்செல்வதற்கு தொழிலாளிவர்க்க, முற்போக்கு, புரட்சிகர இடதுசாரி இயக்கத்தினால் முடியும் என்பதை எவ்விதத்திலும் மறுத்துவிட முடியாது.

அந்த வகையில் இலங்கை இடதுசாரி இயக்கம் இலங்கையில் தனக்குரிய சாதகமான காலகட்டங்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிய முறையில் பயன்படுத்தத் தவறிவிட்டது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும். இத்தவறு தலுக்குரிய மூன்று அடிப்படை அம்சங்களைச் சுட்டிக் காட்டமுடியும். ஒன்று, ட்ரொஸ்கிய தத்துவார்த்த நிலைப்பாடு, இரண்டாவது, நவீன திரிபுவாதப் போக்கு, மூன்றாவது, மார்க்சிச லெனினிசவாதிகளின் தவறுகள். ட்ரொஸ்கிய தத்துவார்த்தம் இலங்கையின் இடதுசாரி இயக்கத்தில் கடுமையான பாதிப்புகளை விளைவித்தது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. அது அதிதீவிர ஒருமுனைவாதத்தையும் பாராளுமன்றவாதச் சரணடையும் தமது நிலைப்பாட்டினையும் வரலாற்றில் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தி வந்துள்ளது. இதனை சமசமாஜ இயக்கத்தின் பழைய தலைமைத்துவம் தொட்டு தம்மைப் புதிய இடதுசாரிகளாகக் காட்டி நின்ற ஜே. வி. பி. இயக்கம்வரை கண்டுகொள்ளமுடியும். இவர்களது நிலைப்பாட்டினால் சாதக நிலைமைகளிலும் பார்க்க பாதக அம்சங்களே மேலோங்கி மோசமான அழிவுகளாகவும், இடதுசாரி இயக்கப் பின்னடைவுகளாகவும் வெளிப்படலாயிற்று. இவ் ட்ரொஸ்கிய தத்துவார்த்த அடிப்படை கொண்ட இடதுசாரி சக்திகள் ஒரு போதும் தமது தவறுகளை மறுமதிப்பீடு செய்வதற்கோ அல்லது மாற்றியமைத்து முன்செல்வதற்கோ முன்வராத போக்கே இன்றும் காணப்படுகின்றது.

இரண்டாவது, நவீன திரிபுவாதப் போக்கு தன்னை முற்றுமுழுதான பாராளுமன்ற சந்தர்ப்பவாதத்திற்குள் வீழ்த்திக் கொண்டதன் மூலம் தொழிலாளி வர்க்க இயக்கத்திற்கு பெரும் நாசத்தையும், சீர்குலைவையும் ஏற்படுத்தியது. நாற்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து ட்ரொஸ்கிய தத்துவார்த்தப் போக்கினை எதிர்த்து மார்க்சிச லெனினிசப் பாதையில் படிப்படியாகத் தம்மை வளர்த்து வந்த இலங்கையின் கம்யூனிஸ்ட் இயக்கம் மேன்மேலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களைத் தயார்செய்து புரட்சிகர வெகுஜனப் பாதை யில் முன்செல்வதற்குப் பதிலாக அறுபதுகளின் ஆரம்பத் துடன் சோவியத் யூனியன் வழிகாட்டிய நவீன திரிபு வாதப் பாதையில் சென்று தம்மைத் தாமே சிறுமைப் படுத்திக்கொண்டனர். அவர்கள் நீண்டகாலம் எதிர்த்து வந்த ட்ரொஸ்கியவாத சமசமாஜிகளுடன் அடிப்படை யற்ற சமரசத்திற்கு வந்து தேசிய முதலாளித்துவ சக்தி யான சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு இணைந்து ஆட்சி அதிகாரத்தில் பங்குகொண்டு திருப்திப்படவும் செய்தனர். இன்றும் இப்பாதையில் அவர்கள் சரியான சுயவிமர்சனம் இன்றி மிகவும் பலவீனமாகத் தள்ளாடும் போக்கில் சென்றுகொண்டிருப்பதை அவதானிக்க முடியும்.

மூன்றாவதாக, அறுபதுகளின் முற்கூறிலே நவீன திரிபுவாதத்தை எதிர்த்து மார்க்சிச லெனினிசவாதிகள் புரட்சிகரப் பாதையில் தம்மை அணி திரட்டிக் கொண்டோர்களாயினும் அவர்களது தலைமைத் துவத்தில் தெளிவும் தூரநோக்கும் இருக்கவில்லை. குறிப்பாக தத்துவார்த்த, அரசியல் நிலைப்பாட் டிலும், ஸ்தாபனம், கொள்கை என்பனவற்றிலும் ஓர் புத்தகவாத ஒப்புவிப்பு நிலைப்பாடு அத்தலை மையால் பின்பற்றப்பட்டதே அன்றி விமர்சனம்—சுய விமர்சன அடிப்படையில் கட்சியின் சகலதுறைகளிலும் மார்க்சிச லெனினிச அடிப்படையுடன் கூடிய சுத்திகரிப்பு இடம்பெறவில்லை. அதனால் அவ் அணியின் மத்தியில் ட்ரொஸ்கிய, திரிபுவாதக் கட்சிகளின் சிந்தனா—வேலை முறையின் பாதிப்பும் தாக்கமும் கண்ணுக்குத் தெரியாத நுண் கிருமிகளாகப் பரவிநின்றன. வெறுமனே சீன— அல்பேனிய உதாரணங்கள் எடுத்துக்காட்டப்படுவது பிரதான போக்காகி நின்றதே தவிர நமது நாட்டின் சூழ லுக்கு ஏற்ப மார்க்சிச லெனினிசத்தைப் புத்திபூர்வமாகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயோகிப்பது பற்றி ஆழ்ந்து நோக்கப்படாத தவறுகள் இழைக்கப்பட்டன. மார்க்சிச லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை பற்றிய பிரசாரங்கள் மேலெழுந்து காணப்பட்ட போதிலும் அவற்றின் சாராம்சங்கள் உரிய முறையில் பிரயோகிக்கப்பட்டு ஓர் வெகுஜன புரட்சிகர இயக்கம் அடிப்படையில் உருவாக்கப்படவில்லை என்பது நேர்மை யுடன் ஏற்றுக்கொள்ளவேண்டியதாகும்.

மேற்கூறிய மூன்று அடிப்படை அம்சங்களின் மூல மான விளைவாக இலங்கையின் இடதுசாரி இயக்கம் சாதனைகள், பலம் என்பனவற்றுடன் பெரும் தவறு களையும் பலவீனத்தையும் சம்பாதித்துக்கொண்ட ஒரு நிலையிலேயே காணப்படுகின்றது. இதனைக் காணும் எந்தவொரு மார்க்சிச லெனினிசவாதியும் அல்லது எதிர் காலத்தை முன்நோக்கும் சராசரி முற்போக்கு எண்ணம் கொண்ட மனிதனும் எவ்விதமான நம்பிக்கையினத்தையும் கொள்ளமுடியாது. மார்க்சிச இயக்கம் கடந்த ஒன்றரை நூற்றாண்டுகால வளர்ச்சியில் இவ்விதமான பலவீனங் களையும் சர்வதேச ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் தற் காலிகமான பின்னடைவுகளை சந்தித்தே வந்துள்ளது. அந்த இயக்கத்திற்கு இருந்துவரும் விஷேட குணாம்சம் யாதெனில் ஒவ்வொரு பலவீனத்தையும் அதன் இடமறிந்து பலமாகவும், பின்னடைவுகளை ஆராய்ந்து முன்னேற்ற மாகவும் மாற்றி முன்னெடுத்து வந்துள்ளமையாகும்.

இலங்கை மூன்றாம் உலகினைச் சேர்ந்த பின்தங்கிய நாடுகளில் ஒன்றாகும். அதன் செழிப்பான வளங்கள் அனைத்தையும் அன்று கொலனித்துவ ஏகாதிபத்திய சக்திகள் கொள்ளையிட்டுச் சென்றன. இப்பொழுது ஏகாதிபத்திய நவகொலனித்துவ சக்திகள் புதியவகையில் உறிஞ்சி வருகின்றன. இராட்சத பல்தேசிய நிறுவனங் கள் தங்களைத் தகுந்தவாறு தக்க வைத்துக் கொண்டுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளன. இந்நிறுவனங்களின் ஊடுருவல் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. திறந்த பொருளாதாரக் கொள்கையும் (தாராள) சந்தை அமைப்பு முறையும் இலங்கையின் தேசிய பொருளாதாரத்தை சிதறடித்து சின்னா பின்னமாக்கியுள்ளது. இதற்கு அனுசரணையான ஆளும் வர்க்க அரசியல் அதிகார முறைமையினால் ஜனநாயக—மனித உரிமை மீறல்களுக்கும் மறுப்பிற்கும் உள்ளாக்கப் பட்டுள்ளது. இவற்றினடியாக சமூக கலாச்ச ர சீர் கேடுகள் நச்சுத்தனமாகப் பரப்பப்பட்டுள்ளன. இவை அனைத்தினதும் மொத்த விளைவுகளை முழு நாட்டு மக்களும் எதிர்நோக்குகின்றனர். தொழிலாளி வர்க்கமும், உழைக்கும் மக்களும் கடுமையான பாதிப்புகளுக்கு உள்ளாகியுள்ளனர். இவை நாடு முழுவதிற்குமான அடிப் படைப் பிரச்சினைகளாகியுள்ளமையின் காரணமாக நவ கொலனித்துவ — ஆளும் வர்க்க சக்திகளுக்கும் மக்களுக்குமிடையிலான முரண்பாடானது பிரதான முரண்பாடாகி நிற்கின்றது. அதேவேளை எபிநிலையில் உள்ள தேசிய இனப்பிரச்சினை என்றுமில்லாதவாறு முன் னெழுந்து முக்கியத்துவம் வாய்ந்த தேசியப் பிரச்சினை யாகி நிற்கின்றது. இப்பிரச்சினையை பேரினவாத பெருமுதலாளித்துவ சக்திகள் யுத்தமயமாக்கிய அதே வேளை அந்நிய ஏகாதிபத்திய நவகொலனித்துவ சக்திகள் தத்தமது ஊடுருவல்களுக்கும் சுரண்டல் கொள்ளைக்கும் இத்தேசிய இனப் பிரச்சினையின் உக்கிரத்தை கீழ் இறங் காத வகையில் திரைமறைவில் இருந்து இயக்கி வந் துள்ளன.

இவ்வாறாக இலங்கையின் புதிய வளர்ச்சிச் சூழலை இடதுசாரிகள் எவ்வாறு நோக்கி எடைபோட்டுக் கொள்வது என்பதிலேயே அவர்களினது எதிர்காலம் தங்கி உள்ளது. சரியான கொள்கை, உறுதியான ஸ்தாபனம், சிறந்த தலைமைத்துவம், ஐக்கியப்பட்ட பரந்த வெகுஜனப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்ட செயல்பாடு என்பன இன்றைய புதிய சூழலில் முக்கியத்துவத்துடன் இடதுசாரி களினால் முன்னெடுக்கப்படல் வேண்டும். அதற்கு இன்றைய தேசிய சர்வதேசிய நிலைமைகளின் தன்மைகளை உரியவாறு மதிப்பிட்டுக் கொள்வது அவசியம். ஆளும் நிலையில் உள்ள மார்க்சிச கட்சிகளிட மிருந்தோ அன்றி பெரிய எண்ணிக்கையில் அமைந்துள்ள கட்சிகளிடமிருந்தோ எத்தகைய கொள்கை கோட்பாடு களையும் கண்மூடித்தனமாகப் பிரதி பண்ணிவிடக் கூடாது இன்று சர்வதேசக் கம்யூனிஸ்ட் இயக்கமும், சோஷலிசமும் நெருக்கடிகள் பின்னடைவுகளுக்கு உள்ளாகி உள்ள சூழலில் ஒவ்வொரு கட்சியும் அது பெரியதாகிலும் அன்றி சிறியதாகிலும் தத்தமது சொந்த நிலைமைகளுக்கு ஏற்ப சுதந்திரமான முன் முயற்சிகளின் ஊடே தமக்குரிய கொள்கைகளையும் வேலைத் திட்டங் களையும் உருவாக்கி முன்னெடுக்க வேண்டும். பழைய நிலை சார்ந்த வரட்டுத்தனமான நிலையிலோ அன்றி அதி தீவிர ஒரு முனைவாத வகையிலோ மார்க்சிச லெனினி சத்தை பிரயோகித்துக் கொள்ளாத நிலையை எடுத்தாக வேண்டும். தேசிய சர்வதேசிய வரலாற்றுப் பயணத்தின் பெற்றுக்கொண்ட அனுபவங்களின்பட்ட றிவைக்கொண்டு இடதுசாரி இயக்கத்தைப் புனரமைப்புச் செய்து முன்னெடுக்க வேண்டும் முற்று முழுதான முதலாளித்துவ பாராளுமன்றப்பாதை என்னும் சேரழிந்தபாதை பற்றியும், அதே வேளை அதற்கு அப்பாலான அதிதீவிர ஒருமுனை வாதம் கொண்ட போராட்டங்களின் தீயவிளைவுகள் ஏற்படுத்திய அழிகளின் தன்மை பற்றியும் உரியவாறு விமர்சனம் — சுயவிமர்சனம் செய்யப்படவேண்டும். சாதனைகளும் தவறுகளும் சரியான மார்க்சிச லெனினிச அடிப்படையில் மீண்டும் மீண்டும் மதிப்பீடுகளுக்கு உள்ளாக்கப்படுவதன் மூலம் வலிமைமிக்க இடதுசாரி இயக்கத்திற்கான மீள் அமைப்புக்கு அத்திவாரம் இட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். இதற்கு பழைய தலைமுறையைச் சேர்ந்த இடதுசாரி தலைமைகள் ஒரு போதும் நேர்மையுடன் முன் வரப் போவதில்லை. அவர்களது சிந்தனா முறையும் வேலை முறையும் அதற்கு இடமளிக்க மாட்டாது. பதவிகள், பட்டங்கள், அதிகாரத்தில் பங்கேற்று சுவை கொண்டமை போன்றவற்றால் இப்பழைய தலைமுறை இடதுசாரிகள் தத்தமது ஆரம்பகால வீரியத்தை கைவிழந்து விட்டனர். சுயநலமும், சந்தர்ப்பவாதமும் அவர்களிடமிருந்து அகற்றப்படாதவாறு குடிகொண்டு விட்டது.

எனவே புதிய தலைமுறை இடதுசாரிகளின் புதிய வகைச் சிந்தனா முறையும் செயல்திறனும் இன்று தேவைப்படுகிறது. கொள்கை வகுப்பிலும் அதனை முன்னெடுக்கும் வேலை முறையிலும் ஆற்றலும் ஆளுமையும் செலுத்தப்படவேண்டும். அர்ப்பணிப்பு, தியாக சிந்தை, எளிமையான வாழ்க்கை முறை, நீண்ட குறிக்கோள், முதலாளித்துவம் விரிக்கும் வலையில் சிக்குப் படாத போக்கு என்பன ஒவ்வொரு நேர்மையான இடது சாரியினாலும் முன்னெடுக்கப்படல் வேண்டும். மார்க்சிச லெனினிசத் தத்துவமும் நடைமுறையும் நமக்கு முன்னே தோற்றுவிக்கும் ஒவ்வொரு சோதனையிலும் ஒவ்வொரு இடதுசாரியும் — மார்க்சிச லெனினிசவாதியும் சித்தி பெற்ற வண்ணமே இருத்தல் வேண்டும். தம் வாழ்நாள் பூராவும் இத்தகைய சோதனைகளில் தொடர்ந்தும் சித்தி பெற்று வந்தால் மட்டுமே ஒருவரினால் இறுதிவரை நம்பிக்கையுடனும் உறுதியுடனும் மார்க்சிச லெனினிச வாதிக்குரிய அல்லது இடதுசாரிக்குரிய வாழ்க்கையைப் பூரணப்படுத்திக் கொள்ள முடியும்.

இக்கடமையினைத் தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் மக்களும் தேசிய இனங்களும் இளம் தலைமுறை இடதுசாரிகளிடம் நேர்மையுடனும் நம்பிக்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுடனும் எதிர்பார்க்கின்றனர். இதனை நடைமுறைப் படுத்துவதற்கு இலங்கை இடதுசாரி இயக்கத்தின் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைச் சிறந்த பட்டறிவாக்கி அதன் ஊடே சரியான படிப்பினை பெற்று மார்க்சிச லெனினிச அணியினையும் இடதுசாரி இயக்கத்தினையும் ஒளி மிகுந்த பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒவ்வொரு நேர்மையான மார்க்சிசலெனினிச வாதியும் இடதுசாரி சக்திகளும் உறுதியுடனும் துணிவுடனும் முன் வரல்வேண்டும். இதுவே இடதுசாரி இயக்கத்தின் எதிர்கால வளர்ச்சிக்குரிய அடிப்படை உத்தரவாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
LIBRARY

# 16

# 1994ல் யூ.என்.பியின் தோல்வியும் பொ. ஐ. முன்னணியின் வெற்றியும்

இலங்கையின் மிக மோசமான ஏகாதிபத்திய சார்பு பெருமுதலாளித்துவ பேரினவாதக் கட்சியான யூ. என். பி பதினேழு வருட தொடர் ஆட்சியின் இறுதிக் காலத்தில் ஆட்டம் காண ஆரம்பித்தது. மக்கள் சகல நிலைகளிலும் வெறுப்படைந்து அவ் ஆட்சியை அகற்றிக் கொள்ள வேண்டும் என்னும் நிலைக்கு வந்தனர். கடுமையான அடக்குமுறைகள் பாசிச நடைமுறைகளாக முன்னெடுக்கப்பட்ட போதிலும் ஜனநாயக முற்போக்கு இயக்கங்களும், பத்திரிகைகளும் மனிதஉரிமை அமைப்புகளும் அவ் ஆட்சிக்கு எதிராக செயல்படுவதில் முன்னணியில் நின்றன. மறுபுறத்தில் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தின் கடுமையான அடிகளை அவ்ஆட்சி ஒன்றன்பின் ஒன்றாக வாங்கி வந்தது. இந்நிலையில் ஜனநாயக-மனிதஉரிமைகளை வற்புறுத்தியும், உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவை கண்டித்தும், யுத்தமயமாக்கப்பட்ட தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை வற்புறுத்தியும் பலமுனை வெகுஜன இயக்கங்கள் வேகமடைந்தன. இவற்றை எதிர்க்கட்சிக் கூட்டணியான பொதுசன ஐக்கிய முன்னணி தகுந்தவாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது எதிர்காலத்தின் வெற்றிக்கான வகையில் பயன்படுத்தி முன்னெடுத்தது.

இத்தகைய ஒரு சூழலிலேயே 1993ம் ஆண்டு மே முதலாம் திகதி அன்று அன்றைய ஜனாதிபதியாக இருந்த ஆர். பிரேமதாசா மேதின ஊர்வலத்தில் வைத்து பட்டப்பகல் வேளையில் குண்டு வெடிப்பின் மூலம் கொல்லப்பட்டார். இச்சம்பவம் மிகப் பெரிய அதிர்ச்சிக்குரியதாக அமைந்த அதேவேளை இலங்கை அரசியலில் ஒரு புதிய திருப்பு முனைக்கும் வழி வகுத்துக் கொண்டது. பிரதமர் பதவி வகித்து வந்த டி. பி. விஜயதுங்கா இச்சந்தர்ப்ப சூழலால் ஜனாதிபதியாக்கப்பட்டார். அத்துடன் யூ. என். பிக்குள் உட்கட்சிப்பூசல் வளர ஆரம்பித்தது. அக்கட்சிக்குள் இருந்து முரண்பட்டு வெளியே சென்று தனிக்கட்சி அமைத்தவரும் மோசமான இனவாதியுமான காமினி திசநாயக்காவை மீண்டும் கட்சிக்கு விஜயதுங்கா கொண்டு வந்ததன் மூலம் யூ. என். பி மேலும் உட்பிளவால் பலவீனம் கண்டது. பிரேமதாசாவின் மறைவினால் மக்கள் மத்தியில் அனுதாப அலை எவ்விதத்திலும் வீசவில்லை. அந்தளவிற்கு மக்கள் கடந்த காலத்தின் கொடுமையான நிகழ்வுகளை மிகு வன்மத்துடன் வைத்திருந்தனர். இவ்வன்மம் யூ. என். பி -யை ஆளும் அரங்கில் இருந்து அகற்றும் முனைப்பை மேன்மேலும் மக்களிடம் வளரச்செய்தது.

1993ம் ஆண்டு நடுக்கூறிலே நடந்த தென்மாகாண சபைக்கான தேர்தலில் யூ. என். பி. தோற்கடிக்கப்பட்டது. பொதுசன ஐக்கிய முன்னணி அமோக வெற்றி பெற்றது. இத்தேர்தலில் யூ. என். பியும் டி. பி-விஜயதுங்கரவும் தீவிர இனவாதக் கருத்துகளைப் பரப்பி வாக்குக் கேட்டார்கள். இனப்பிரச்சினை என்பது இலங்கையில் இல்லை என்றும், யுத்தம்தான் ஒரேவழி என்றும், சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த இனம் பெருமரம்—சிறுபான்மை இனங்கள் அதில் படர வேண்டிய கொடி செடிகள் எனப் பிரசாரம் செய்தார்கள். பொதுசன முன்னணிக்கு வழங்கும் வாக்குகள் தமிழ் ஈழத்திற்கும் புலிகளுக்கும் அளிக்கப்படும் வாக்குகளாகவே இருக்கும் என அவர்கள் பேச்சுக்களை நிகழ்த்தினார்கள்.

மறுபுறத்திலே பொதுசன ஐக்கிய முன்னணி சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில் யூ. என். பியை அம்பலமாக்கும் நிலையில் முன்னேறி வந்தது அவர்களது நிலைக்கு 1988–90 காலகட்டத்தில் கொன்று புதைக்கப் பட்டவர்களின் எலும்புக்கூடுகளும் மண்டை ஓடுகளும் புதைகுழிகளில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட சம்பவங் கள் உதவியாக அமைந்தன. அத்துடன் இலங்கையில் இனப்பிரச்சினை உண்டு என்றும், அதற்கு யுத்தம் வழிமுறை அல்லவென்றும், பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே தமது நிலைப்பாடு எனவும் பொதுசன முன்னணி தமது பிரசாரத்தை நடாத்தியது. மேற்கூறிய இரு நிலைப் பிரசாரங்கள் அன்று தொட்டு ஜனாதிபதித் தேர்தல் வரை வளர்ந்து சென்றது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் இடது சாரிகள் இணைந்திருந்த இப்பொதுசன ஐக்கிய முன்ன ணிக்கு சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமை தாங்கி நின்றார். ஆனால் தென் மாகாண சபைத் தேர்தல் வெற்றியுடன் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவின் பெயர் அரசியல் அரங்கில் மேலும் முன்னணிக்கு வர ஆரம்பித்தது. 'முற்போக்குவாதி', 'இடதுசாரி' 'ஆளுமை மிக்கவர்' போன்ற தோற்றப்பாடு சந்திரி காவைச் சுற்றி எழுப்பப்பட்டது. இதனை ஆதாரப் படுத்தும் வகையில் சந்திரிகாவின் பேச்சுக்கள் முற்போக்கு தன்மை கொண்டவையாகவும், நிதானம் மிக்கவையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வும் அன்று திகழ்ந்தன என்பது மறுப்பதிற்கில்லை. ஆதலால் யூ. என். பிக்குப் பதிலாக பொதுசன ஐக்கிய முன்னணி மக்கள் மத்தியில் நம்பிக்கைக்குரிய மாற்று ஜனநாயகசக்தியாக வளர்ந்து வந்தது.

இத்தகைய சூழலிலேயே 1994ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இலங்கைப் பாராளுமன்றத்திற்கான பத்தாவது பொதுத்தேர்தல் நடைபெற்றது. யூ. என். பி, யும் பொது சன முன்னணியும் சரிசம ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. முஸ்லீம் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி என்பனவற்றை இணைத்து ஒரே ஒரு அதிக பெரும்பான்மையுடன் பொதுசன முன்னணி ஆட்சியை அமைத்துக் கொண்டது. கடந்த காலங்களில் எப்போதும் யூ. என். பியை ஆதரித்துவந்த நிலைப்பாட்டினைக் கொண்ட தமிழர் கூட்டணி உட்பட தமிழர் இயக்கங்கள் இரண்டும் பொதுசன முன்னணிக்கு தமது ஆதரவைத் தெரிவித்தன. ஆதலால் சந்திரிகா குமாரணதுங்கா அதிக சிரமமின்றி இலங்கையின் பிரதமராகிக் கொண்டார். யூ. என். பி. பட்டியலில் வெற்றி பெற்ற இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சிறிது காலம் மதில் மேற்பூனையாக இருந்துவிட்டு பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு தெரிவித்து அதன் தலைவரான தொண்டமான் அமைச்சர் பதவியையும் பெற்றுக் கொண்டார். இதன் மூலம் அவரது முன்னைய கூற்றான 'நான் ஒரு போதும் எதிர்க்கட்சியில் இருக்க மாட்டேன்' என்பதை நிரூபித்தும் காட்டினார். இத்தகையநிலையில் பொதுசன முன்னணி பல தரப்பு மக்களினதும் ஆதரவைப்பெற்ற அரசாங்கம் என்னும் பெயரைப் பெற்றுக் கொண்டது.

நாட்டின் வடபகுதியின் பெருபகுதி புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தமையால் அங்கு பாராளுமன்ற தேர்தல் நடைபெறுவதை அவர்கள் அனுமதிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. ஆனால் இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பிரதேசங்களில் வசித்துவந்த மிகச்சிறு தொகையினர் மத்தியில் பெயரளவிற்கான தேர்தல் நடாத்தப்பட்டு பிரதிநிதிகள் வேடிக்கை தரும் விதத்தில் தெரிவு செய்யப்பட்டனர். வடபகுதியின் பெரும்பான்மையான மக்கள் தேர்தலில் கலந்துகொள்ளாவிடினும் தங்களை யுத்தத்தின் மூலம், வதைத்து வந்த யூ. என். பி தோல்வி அடைவதையும்; பேச்சு வார்த்தை, அரசியல் தீர்வு, சமாதானம் பற்றிப்பேசி வந்த சந்திரிகா தலைமையிலான பொதுசன ஐக்கிய முன்னணி வெற்றி பெறுவதையும் மனதார விரும்பி வரவேற்றனர். தமிழீழ விடுதலைப் புலிகள் உத்தியோக பூர்வமான அறிக்கையோ ஆதரவோ தெரிவிக்காத போதிலும் அவர்களது விருப்பம் சந்திரிகாவுக்குரிய சந்தர்ப்பம், வழங்கப்பட வேண்டும் என்பதாகவே இருந்து வந்தது.

சந்திரிகா பிரதமர் பதவி ஏற்றுக் கொண்டபின் வடபகுதிக்கான பொருளாதாரத் தடைகளில் பலவற்றை அகற்றி பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகளை எடுத்தார். அதன் வழியில் முதலாவது அரசாங்க தூதுக்குழு யாழ்ப்பாணம் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது. இப்பேச்சு வார்த்தை பயன்மிக்கதாகவும், வெற்றிகரமாகவும் பெற்றதாக இருதரப்பினரும் தெரிவித்தனர். இதன்மூலம் யுத்தமற்ற பாதையில் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு ஏற்பட்டு நாட்டின் சமாதானம் உருவாகும் என்ற நம்பிக்கை முழுநாட்டு மக்கள் மத்தியிலும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. ஆனால் சந்திரிகா குமாரணதுங்காவின் இச்சமாதான முயற்சியை எப்படியும் சீர்குலைத்துவிட வேண்டும் என்பதில் ஆரம்பம் முதல் உள்நாட்டிலும் அயல் தேசமான இந்தியாவிலும் மறைமுக முயற்சிகள் இடம் பெற்று வந்தன என்ற உண்மை எவ்விதத்திலும் மறைக்கப்படக் கூடியதொன்றல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி பாராளுமன்றப் பொதுத் தேர்தலை அடுத்து மூன்று மாதங்களுக்குப் பின் ஜனாபதித் தேர்தல் இடம் பெற்றது. இதில் சந்திரிகா பொதுசன முன்னணி வேட்பாளராகவும் முன்னாள் அமைச்சரும் எதிர்க் கட்சித் தலைவருமான காமினி திசநாயக்கா யூ.என்.பியின் வேட்பாளராகவும் நின்றனர். இத்தேர்தலில் நாட்டின் சிதைக்கப்பட்ட பொருளாதாரத்தை எவ்வாறு மீட்டெடுத்து உறுதியான தேசிய பொருளாதாரமாகக் கட்டியெழுப்புவது பற்றிய விரிவான கொள்கைத் திட்டம் எதுவும் பேசப்படவில்லை. பொதுசன முன்னணி மிகவும் மேலெழுந்தவாரியாகவும் விவாதத்திற்கு அகப்படாத விதத்திலும் இதில் நடந்து கொண்டது. அதன் முழுப் பிரச்சாரமும் அரசியல் அம்சங்களை வற்புறுத்திய தாகவே இருந்தன. ஜனநாயக மனித உரிமைகளை மீள நிலை நிறுத்துவது, அரசியல் அமைப்பைத் திருத்தி நிறை வேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைத்தல், பாராளுமன்றத்திற்கு அதிகாரத்தை வழங்குதல், இனப் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமான அரசியல் தீர்வு காணல் போன்றவைகளே பொதுசன முன்னணியின் பிரதான கொள்கைப் பிரசார மாக அமைந்திருந்தது. இதற்கு ஈடு கொடுக்கக் கூடிய வகையில் யூ. என். பி வேட்பாளர் காமினியின் பிரசாரம் பெருமளவிற்கு அமையவில்லை. அவர் மறைமுக மாகவும், நேரடியாகவும் இனவாதத்தையே கைப்பிடித்து நிற்க வேண்டியிருந்தது. இது சிங்கள மக்கள் மத்தியில் அதிகளவிற்கு எடுபடுவதாகக் காணப்படவில்லை. இருப்பினும் பலவீனமடைந்த நிலையில் தோல்வியை எதிர்நோக்கி நின்ற யூ.என்.பிக்கு காமினி திசநாயக்காவே ஆகக் கூடிய நம்பிக்கை தரும் வேட்பாளராகக் காணப் பட்டார். பணம் அள்ளி இறைக்கக் கூடியவரும், மிகப் பிற்போக்குப் பாதையில் செல்வதற்கு சகல தகுதியும் அவரிடம் காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித்தேர்தல் பிரசாரம் வேகமடைந்து காணப்பட்ட ஒரு தருணத்தில் யூ. என். பி வேட்பாளர் காமினி திசநாயக்கா பாரிய குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். இரண்டாவது தடவையாக அரசாங்க தூதுக்குழு பேச்சுவார்த்தைக்கு யாழ்ப்பாணம் செல்வதற்குத் தயாராகி நின்ற சில மணி நேரத்திற்கு முன்பே இக்குண்டு வெடிப்புச் சம்பவம் இடம் பெற்றது. இதனால் இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தை ஒத்திவைக்கப்பட்டது. காமினியின் இறப்பு யூ. என்.பி க்கு மேலும் பலவீனத்தை ஏற்படுத்தியது. ஆனால் சந்திரிகாவின் வெற்றிக்கு எவ்வித சேதத்தையும் அது உருவாக்கவில்லை. காமினிக்குப் பதிலாக அவரது மனைவி நிறுத்தப்பட்ட போதிலும் அனுதாப வாக்குகள் என்ற பேச்சுக்கே இடமில்லாதவாறு சந்திரிகா இருபது லட்சம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று (அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 62.2 சதவீதம்) ஜனாதிபதியாகிக் கொண்டார். அதே வேளை தாயார் சிறிமா பண்டாரநாயக்கா பிரதம மந்திரியாகினார். இலங்கை மக்களில் ஏகப்பெரும்பான்மையோரின் எதிர்பார்ப்புக்கு தக்கவாறு மக்கள் விரோத யூ. என். பி ஆட்சிக்கு மாற்று ஜனநாயக அரசாங்கம் என்ற தோற்றப்பாட்டுடன் சந்திரிகா குமாரணதுங்கா தலைமையிலான பொதுசன முன்னணி சகல நிலைகளிலும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது.

## □ பொதுசன ஐக்கிய முன்னணியும் இடதுசாரிகளும்

1992ன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையில் பொதுசன ஐக்கிய முன்னணியை உருவாக்குவதில் திருமதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரநாயக்கா அதிக கவனம் செலுத்தினார். இதற்கு தனது மகன் அநுரா பண்டாரநாயக்கா மூலம் உருவாகிய எதிர்ப்பையும் நிராகரித்து விட்டு முன்னணியை இடது சாரிகளுடன் இணைந்து ஏற்படுத்தினார் லங்கா சம சமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வை. பி. டி. சில்வா தலைமையிலான சிறிலங்கா மக்கள் கட்சி, நிஹால் பெரேரா தலைமையிலான கட்சி ஆகிய நான்குமே இவ் இடதுசாரிக் கட்சிகளாகும். இவை மாக்சிசத்தை வெவ்வேறு நிலைகளில் ஏற்றுக் கொண்ட இடதுசாரிக் கட்சிகள் ஆகும். இவை நான்கையும் தம்முடன் இணைத்தே சிறிலங்கா சுதந்திரக் கட்சி பொதுசன ஐக்கிய முன்னணியை (Peoples' Alliance) உருவாக்கியது. இவ் இடதுசாரிக் கட்சிகள் திருமதி. பண்டார நாயக்காவை நம்புவதை விட திருமதி. சந்திரிகா குமாரண துங்காவை முன்னுக்குத் தள்ளி தலைமைத்துவத்தை அவரது கைகளுக்கு கொண்டு வருவதைக் குறியாகக் கொண்டு செயல்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்க தாகும். ஆனால் இவ் இடதுசாரிகள் எந்தளவு தூரத்திற்கு தமது இடது பக்கப் பாதையில் சந்திரிகாவைக் கொண்டு செல்ல முடியும். என்பதே இன்று எழுந்துள்ள கேள்வி யாகும்.

இவ்இடதுசாரிகள் பொதுசன ஐக்கிய முன்னணிக் குள் அங்கம் வகித்த போதிலும் அவர்களது கொள்கை அடிப்படையிலான செல்வாக்கு மிகத் தாழ்ந்த நிலையிலேயே இருந்து வருகின்றமை அவதானிக்கக் கூடியதாகும். உதாரணமாக 1970ம் ஆண்டில் அரசாங்கம் அமைத்தபோது அன்றைய ஐக்கிய முன்னணியில் இடது சாரித் தலைவர்கள் மிகுந்த செல்வாக்குச் செலுத்துபவர் களாகக் காணப்பட்டனர். அவர்களது நடவடிக்கை களில் தவறுகளும், குறைபாட்டுக்குரிய அம்சங்களும் அன்று காணப்பட்ட அதேவேளை பல முற்போக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கைகளுக்கு காரணகர்த்தாக்களாக விளங்கினர் என்பது மறுப்பதற்கில்லை. அதனுடன் ஒப்பிடும்போது இன்றைய பொதுசன முன்னணியில் அங்கம் பெற்றுள்ள அதே இடதுசாரிகள் எவ்வித சலசலப்பும் அற்றவர்களாக யாவற்றுக்கும் தலை ஆட்டுபவர்களாக இருந்து வருகிறார்கள் என்ற கணிப்பே மேலோங்கிக் காணப்படுகின்றது. அதற்குரிய அடிப்படைக் காரணம் இவ்விடதுசாரிகள் கொள்கை, ஸ்தாபனம், வெகுஜன அடித்தளம் முதலியவற்றில் முன்னைய காலங்களை விட மிகவும் நலிந்த நிலையில் காணப்படுவதுதான். தங்களுடைய சொந்த நிலைப்பாட்டை நிலை நிறுத்தி இடதுசாரிக் கொள்கைகளை வற்புறுத்தி ஐக்கியமும் போராட்டமும் என்னும் அடிப்படையில் ஐக்கிய முன்னணிக்குள் செயல்படுவதை விடுத்து சந்திரிகா குமாரணதுங்கா என்ற தனி நபரின் மீதான நம்பிக்கையை அதிகமாக வளர்ப்பதிலேயே தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றனர். ஏனெனில் சந்திரிகாவின் நெருக்கம் எப்பொழுதும் இவ்விரு இடதுசாரிக் கட்சிகளுடனேயே இருந்து வந்துள்ளது. இதனாலேயே சந்திரிகா குமாரணதுங்கா இடதுசாரி–முற்போக்கு சார்பு உடையவர் எனக் கணிக்கப்பட்டார். அவரும் ஏற்கனவே தன்னை ஓர் இடதுசாரி என்று கூறவும் தவறவில்லை. ஒருவர் பதவிக்கும், அதிகார பீடத்திற்கும் வருவதற்கு முன்பு எதனையும் கூறிக் கொள்ளலாம், ஆனால் உரிய இடத்திற்கு வந்து கொண்டபின் எதனை நடைமுறையில் செயலாக்குகின்றார் என்பதிலேயே அவருக்குரிய தகுதிப் பாட்டினை வழங்கிக் கொள்ள முடியும். திருமதி சந்திரிகா குமாரணதுங்கா இடதுசாரியா? முற்போக்குவாதியா? அல்லது வலதுசாரியா? சந்தர்ப்பவாதியா? இவற்றையும் விடப் பேரினவாதியா? இவற்றுள் ஏதாவது ஒன்றிக்குள் அவரது செயல்பாடு அடையாளப்படுத்தப்பட்டே தீரும். அதற்கு அதிக காலம் தேவைப்படமாட்டாது. இலங்கையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சூழலில் அதனைத் தீர்மானிப்பதற்குரிய காலம் விரைவாகவே ஆரம்பித்து விட்டது என்றே கூறுதல் வேண்டும்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் கொடி நீலம் சிகப்பில் பறந்து கொண்டிருக்கிறது. இன்றைய அரசாங் கத்தில் இந் நான்கு இடதுசாரிக் கட்சிகளின் மொத்தப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பதினைந் துக்கு உட்பட்டதேயாகும். சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுக்கு தலா ஒவ்வொரு அமைச்சர் பதவி யும் ஒவ்வொரு பிரதியமைச்சர் பதவியும் கிடைத்துள்ளது இடதுசாரிகள் என்போர் ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பதி லும், தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழும்பு வதிலும், ஜனநாயக மனித உரிமைகளை பாதுகாத்து முன்னெடுப்பதிலும், தேசிய இனங்களின் உரிமைகளை வலியுறுத்தி நிற்பதிலும் ஏனையவர்களை விட முன்னணி யில் நிற்க வேண்டியவர்கள். குறிப்பாகத் தொழிலாளி வர்க்கத்தின் உழைக்கும் மக்களின் நலன்களை முதன்மைப் படுத்துபவர்கள். பதவிகள் பட்டங்களை ஒரு பொருட் டாகக் கொள்ளாதவர்கள். இவை யாவற்றுக்கும் இலங்கையின் பழம்பெரும் இடதுசாரிகள் முன்னுதாரண மாக ஒரு காலத்தில் இருந்தவர்கள் தான். ஆனால் அறுபதுகளுக்குப் பின் படிப்படியாகச் சீரழிந்த நிலைக்கு இறங்கி இன்று அதன் கடைசிப் படிக்கே வந்து விட்டனர்.

கடந்த பத்துமாத கால பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியை அதிலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியான பின் கைக்கொண்ட அவ் அரசின் கொள்கை நடைமுறைகளை அவதானித்தால் அதில் இடதுசாரிகளின் செல்வாக்கு எந்தளவில் உள்ளது என்பதை அளவிட்டுக் கொள்ளமுடியும். பழைய யூ.என். பி தொடக்கி வைத்த திறந்த பொருளாதாரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY 24-2-1996 LIBRARY



கொள்கையே தொடர்ந்தும் பின்பற்றப்படுகின்றது. ஏகாதிபத்திய பல் தேசிய நிறுவனங்களின் ஊடுருவல்களுக்கு தொடர்ந்தும் இந்த அரசு கதவுகளை மேலும் திறந்து விட்டுள்ளது. தாராள இறக்குமதியும் கட்டுப்பாடற்ற சந்தையும் தொடரப்படுகின்றன. குறைந்த பட்சம் அவற்றின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்தும் நிலையைத்தானும் இந்த இடதுசாரிகளினால் வற்புறுத்திக்கொள்ள முடியவில்லை. தன்நிறைவுப் பொருளாதாரத்திற்கு தேசிய வளங்களைப் பயன்படுத்துவதும் அந்நிய இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதும் என்னும் கொள்கை முன்னெடுக்கப்படவில்லை. அந்நிய முதலீட்டாளர்களுக்கு உத்தரவாதத்துடன் கூடிய அழைப்புகள் மீண்டும் மீண்டும் விடப்பட்டு வருகின்றன. உலக வங்கி சர்வதேச நிதி நிறுவனம் என்பனவற்றின் சகல நிபந்தனைகளும் ஏற்கப்பட்டுள்ளன. பழைய ஆட்சியால் தனிநபர்கள், கொம்பனிகளுக்கு தாரை வார்க்கப்பட்ட அரச கூட்டுத்தாபன நிறுவனங்களை மீளப்பெறுவது பற்றி எதுவித குரலும் காணப்படவில்லை. அதற்குப் பதிலாக எஞ்சியுள்ள பொதுத்துறைகளும் தனியாரிடம் கையளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக பெருந்தோட்டங்களை வெளிநாட்டு உள்நாட்டு கொம்பனிகளிடம் கையளித்த பழைய ஆட்சியின் செயல் தொடரப்படுகிறது. காலத்தை மட்டும் ஐம்பது ஆண்டுகளாகக் குறைப்பது பற்றி மட்டும் பேசப்படுகிறது. புத்தளம் மாவட்டத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பி மக்களது உறுதியான எதிர்ப்பு போராட்டத்திற்கு உள்ளான ''வொஸ்ஒவ் அமெரிக்கா'' என்னும் அமெரிக்க ஒலிபரப்பு நிலையம் தொடருவதறகு இந்த அரசு பச்சைக் கொடி காட்டியுள்ளதுதான் அதிக விசனத்திற்குரியதாகும். அந்நிறுவனத்திற்கு வழங்கியுள்ள நில விஸ்தீரணத்தை சில ஏக்கர்களால் மட்டும் குறைப்பதால் அதன் நச்சுத்தனத்தைக் குறைத்து விட முடியாது. இதில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேடிக்கையான விடயம் என்னவெனில் மேற்கூறிய வற்றின் மீதான பழைய ஆட்சியின் செயல்களை எதிர்த்து மக்களோடு நின்று குரல் எழுப்பிய பொதுசன முன்னணியினர் தான் இன்று சொல்லுக்கு மாறாக செயல் பட்டு வருகிறார்கள். இது பாராளுமன்ற சந்தர்ப்ப வாதத்தின் தவிர்க்க முடியாத விளைவாகும். இதற்கு தமது சொந்த நிலைப்பாட்டை இழந்த பாராளுமன்ற இடதுசாரிகள் எவ்வாறு விதிவிலக்காக இருக்க முடியும்.

மேலும் ஜனநாயக மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளில் பெரும் எதிர்பார்ப்புகளை மக்கள் கொண்டிருந்தனர். அதற்கு நம்பிக்கை தருவதுபோல் ஆரம்ப நாட்களில் சிற்சில நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. ஆனால் அடிப்படையில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடரப்படுகின்றது. அதன்கீழ் தடுத்து வைக்கப்பட்டவர்கள் மீது விசாரணை அல்லது விடு தலை என்பது துரிதப்படுத்தப்படவில்லை! தொழிலாளி வர்க்கத்தின் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையை மறுக்கும் அத்தியாவசிய சேவைகள் சட்டம் இனி மேல் பிரயோகிக்கப்படமாட்டாது என்பதற்கு உத்தர வாதமோ அல்லது அதனைச் செயலிழக்கச் செய்யும் புதிய சட்ட விதிகளோ எதுவும் கொண்டுவரப்படவில்லை. மனித உரிமைகளை மீறும் வகையிலான கைதுகள் மீண்டும் நாடு முழுவதும் ஆயுதப்படைகளால் தொடரப் படும் புதிய சூழல் உருவாகி உள்ளது. தமிழ் மக்கள் இத்துயர நிகழ்ச்சிகளில் முதன்மையானவர்களாக வைக்கப்பட்டுள்ளார்கள். அண்மையில் பத்திரிகையாளர் கள் சிலர் பழைய அரசின் பாணியில் தாக்கப்பட்டுள்ள சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. இவற்றுக் இவ் அரசில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகள் என்ன பதில் வழங்கப் போகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தேசிய இனங்கள் பற்றிய பிரச்சினையில் இவ் இடதுசாரிகளின் நிலை பழைய வரட்டுத்தனப் பாதையில் தான் காணப்படுகின்றது. சுயநிர்ணய உரிமை என்ற சொற்றொடரினை உச்சரிப்பதே மகா பாவம் எனக்கருது கிறார்கள். இலங்கையின் தற்போதைய யதார்த்தநிலை யில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கி கரிக்காத எந்தவொரு இடதுசாரிக் கட்சியையும் நேர்மை யான மார்க்சிசவாத இடதுசாரிக் கட்சியெனக் கொள்ள முடியாது. மேற்குறித்த அளவுகோலின் ஊடே பொதுசன ஐக்கிய முன்னணியில் அங்கம் பெறும் இடதுசாரிக் கட்சி எதுவும் இத்தகைய நிலைப்பாட்டினைக் கொண்டிருக்க வில்லை. இடதுசாரி அணியில் புதிய ஜனநாயகக் கட்சி யும், நவசமாஜக் கட்சியும் மட்டுமே தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையினைத் தத்தம் நிலைப்பாட்டிற் கமைய உறுதியாகப் பற்றி நிற்கின்றன என்பது குறிப் பிடத் தக்கதாகும்.

யூ. என். பியின் தனிக்கட்சி தனிநபர் சர்வாதி காரத்தை எதிர்த்து அவ் அரசாங்கத்தை வீழ்த்த வேண் டும் என்பதில் பொதுசன முன்னணியில் அங்கம் பெறாத இடதுசாரிக் கட்சிகள் தத்தமது ஆதரவை வெவ்வேறு அளவிலும், நிலையிலும் வழங்கி நின்றன. இதில் நவசமசமாஜக் கட்சி தனது வழமையான ட்ரொஸ்கிய நிலையினைஎடுத்துக்கொண்டது.யூ.என்.பியும் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஒரே தரம் கொண்டவை என்பதை வலியுறுத்தி நின்றது. அதாவது பொதுசன முன்னணியை ஓர் விமர்சனப் பார்வையுடன் நோக்கி ஆதரிக்கும் நிலையை மறுத்து தானே தனித்துப் பாராளுமன்றத் தேர்தலில் நின்று கொண்டது. ஆனால் ஒரு ஆசனத்தை யாவது பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதே வேளை ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அக் கட்சியின் தலைவர் வாசுதேவநாணயக்காரா அக்கட்சியை

விட்டு விலகி பழைய சமசமாஜக் கட்சியில் அங்கம் பெற்று இரத்திரபுரி மாவட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி சார்பில் போட்டிக்கு நின்றார். அவர் அம் மாவட்டத்திலேயே அதிக விருப்பு வாக்குகள் பெற்று பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

ஜே. வி. பி. என அழைக்கப்படும் ஜனதா விமுத்தி பெரமுனை பல குழுக்களாகியுள்ள அதே வேளை முற்போக்கு முன்னணி என்னும் பெயரில் தனியே பாராளு மன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஒரே ஒரு ஆசனத்தை தென் இலங்கையில் இருந்து பெற்றுக் கொண்டது. ஜனாதிபதித் தேர்தலிலும் அக்கட்சி வேட்பாளரை நிறுத்திய போதிலும் இறுதி நேரத்தில் சில நிபந்தனை களின் பேரில் போட்டியில் இருந்து விலகி பொதுசன முன்னணிக்கு ஆதரவு வழங்கியது.

மாக்சிச லெனினிசக் கட்சியான புதிய ஜனநாயக கட்சியானது பொதுசன ஐக்கிய முன்னணியை அதன் கூட்டுக்கு வெளியே இருந்து ஆதரித்தது. இக்கட்சி பாராளுமன்றத் தேர்தல் இடம் பெறுவதற்கு முன்பாகவே யூ. என்.பிக்கு பதிலான ஒரு ஜனநாயக அரசாங்கம் தோற்றுவிக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி நின்றது. அதற்குரிய பொது வேலைத் திட்டத்தை தெளி வாக வரைய வேண்டும் என வற்புறுத்தியது. அப்பொது வேலைத் திட்டத்தில் தேசிய ஜனநாயகத்தை மீட்டெடுத்து நிலை நாட்டவும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டியதன் அவசி யத்தையும் வற்புறுத்தியது ஆனால் பொதுசன ஐக்கிய முன்னணி தெளிவானதொரு பொதுவேலைத் திட்டத்தை முன்வைக்க முன் வரவில்லை. அவர்கள் மேலெழுந்த வாரியான சில அம்சங்களின் அடிப்படையில் பொதுவான வற்றைக் கூறினார்களே தவிர பிரச்சினைகளின் ஆழத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்கு அளந்து அதற்குரிய திட்டவட்டமான கொள்கையினை பொது வேலைத் திட்டமாக முன்வைக்க தயாரில்லாத நிலையிலேயே இருந்தனர்.

இந்நிலையில் யூ. என். பிக்கு பதிலாக குறைந்தபட்ச ஜனநாயகத்துடன் கூடிய ஒரு மாற்று அரசாங்கமாக பொதுசன முன்னணி பதவிக்கு வருவதை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கே புதிய ஜனநாயக கட்சியால் வரமுடிந்தது. அதே வேளை திருமதி சந்திரிகாகுமாரணதுங்காவின் ஆரம்பகால பேச்சுக்களில் ஓரளவு நம்பிக்கைத் துளிகள் தென்பட்டதையும் கட்சி கருத்தில் கொண்டது. குறிப்பாக ஜனநாயக மனித உரிமைகளை மீட்பதிலும், தேசிய இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் அரசியல் தீர்வு காண்பதிலும் காட்டி நின்ற பேச்சளவிலான ஆர்வத்தினையும் புறம் தள்ளிவிட முடியாத நிலையில் பொதுசன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு கொடுக்கும் நிலையினை கட்சி எடுத்துக் கொண்டது. ஆனால் நிபந்தனையற்ற வகையில் கண்மூடித்தனமாக சகல தவறுகளுக்கும் சப்பை கட்டும் நிலையை கட்சி எடுக்கவில்லை. தவறுகள் இழைக்கப்படும் பட்சத்தில் எவ்வித விட்டுக் கொடுப்பும் இன்றிப் போராடுதல் வேண்டும் என்பதில் கட்சி தெளிவாகவே தன்னை வைத்துக் கொண்டுள்ளது.

இடதுசாரிகள் அங்கம் பெற்றுள்ள இன்றைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை உரிய வழிகளில் முன்னெடுக்கவில்லை என்னும் ஆதங்கம் மக்களிடையே அதிருப்தியாக முளைவிட ஆரம்பித்துள்ளது. குறிப்பாக இனப் பிரச்சினையின் அரசியல் தீர்வுக்கும், நாட்டில் சமாதானத்தை நிலைநிறுத்துவதற்கும் எடுத்த ஆரம்பகால முயற்சிகள் யாவும் கைவிடப்பட்டு யுத்தத்தைத் தீவிரமாக முன்னெடுக்கும் எதிர் நிலைக்கு அரசாங்கம் மாற்றமடைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினதும், பௌத்தமத பீடங்களினதும் (இவற்றுக்கும் அந்நிய சக்திகளுக்கும் தொடர்பு இல்லை என எவ்வகையிலும் கூற முடியாது) ஆலோசனைகளை சிரமேற் கொண்டு செயற்படும் ஓர் நிலையினை ஜனாதிபதி மேற்கொண்டு வரும் போக்கு காணப் படுகிறது. இதே ஜனாதிபதி ஆரம்ப நாட்களில் இராணுவத்தின் யுத்தப் போக்கை கடுமையாக விமர்சனம் செய்ததுடன் பௌத்த மதபீடத் தலைவர்களின் ஆலோசனைகளுக்கு அதிகம் செவி மடுக்காதவராகவும் காணப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த அரசாங்கமும் அதன் தலைவியான திருமதி சந்திரிகா குமாரணதுங்காவும் ஏற்கனவே இனப் பிரச்சினை பற்றியும் அதன் அரசியல் தீர்வு பற்றியும் கொண்டிருந்த அணுகுமுறை தற்போது கைவிடப் பட்டுள்ளமைக்கான பின்னணி பலவாறு சிந்திக்க வைக்கிறது. தமிழீழ விடுதலைப் புலிகள் தான் தமிழ் மக்களின் முதன்மைப் பிரதிநிதிகள் என்றும், அவர் களுடன் பேச்சுவார்த்தை நடாத்தியே அரசியல் தீர்வு காணப்படவேண்டும் எனவும் கூறி அந்த வழியில் செயல் பட்ட ஜனாதிபதியும் அரசாங்கமும் ஆறு மாதங்களுக்குப் பின் தமது நிலையை மாற்றிக்கொண்டு யுத்தப் பேரிகையை எழுப்பியுள்ளமை ஆய்வுக்குரியதாகும். ஆரம்ப முதலே இனப்பிரச்சினை பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கப்படுவதை விரும்பாத சக்திகள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமது வேலைகளைச் செய்து வந்தன என்பதுதெளிவு. அவை தமதுபாதையில் படிப்படியாகமுன் னேறி சந்தர்ப்ப சூழல்களை நன்கு பயன்படுத்தி வந்தன என்பதும் உண்மை. பேச்சுவார்த்தை இறுகி நின்ற ஒரு தருணத்தில் இந்தியா ருடே பத்திரிகைக்கு வழங்கிய ஜனாதிபதியின் பேட்டியும், இந்திய சுற்றுப்பயணத்தின் சாராம்சமும், இவற்றைத் தொடர்ந்து எடுத்த நடை முறைகளும் அரசாங்கத்தின் எதிர்நிலையைத் தெளிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்திக் கொண்டன. இதில் ஜனாதிபதியும் அரசாங்கமும் மேற்படி உள்நாட்டு வெளிநாட்டு தீய சக்திகளின் விருப்பத்திற்குத் தம்மைப் பலியாக்கி அடி பணிந்து போயினர் என்றே கூறுதல் வேண்டும்.

இத்தகைய பின்னணிச் சூழலில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளையும், மக்கள் வழங்கிய ஆணையையும் செயற்படுத்த முடியாமைக்கான முழுப் பொறுப்பினையும் விடுதலைப் புலிகள் மீது சுமத்துவது ஏற்றுக் கொள்ளத் தக்கதல்ல. விடுதலைப் புலிகள் அவசரப்பட்டு விட்டார்கள் என்ற பொதுவான கருத்து நிலவிய போதிலும் அதுவே பொறுப்புள்ள ஒரு அரசாங்கமும் சமாதானத்திற்கான ஆணை பெற்ற ஜனாதிபதியும் யுத்தப் பாதைக்குத் திருப்பு வதற்கான தகுந்த காரணமாகி விடமுடியாது. விடுதலைப் புலிகளிடம் நூற்றுக்கு நூறு சரியான அணுகுமுறை உண்டு என்று கூறுவது மார்க்கிச லெனினிசக் கண்ணோட்டம் அல்ல. ஆனால் அவர்களது குறைபாடு களைச் சாட்டாக வைத்து சகல பழிகளையும் பொறுப்புக் களையும் அவர்களின் மீது சுமத்துவது எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாததாகும்.

இலங்கையின் தேசிய இனப் பிரச்சினையினதும் அதன் சார்பான போராட்ட வளர்ச்சியினதும் பன்முக வளர்ச்சிப் பரிமாணங்களையும் ஆழ்ந்து நோக்காது மேலெழுந்தவாரியான முடிவுகளுக்கு வர முடியாது. கடந்த நான்கு சகாப்தங்களுக்கு மேல் வளர்ந்து வந்த தேசிய இனப்பிரச்சினை குறிப்பாக பதினேழு வருடகால யூ என். பி. ஆட்சியின் பேரினவாத ராணுவ ஒடுக்கு முறை தமிழ் மக்களின் உயிர், உடமை, இருப்பிடத்தைப் பாரிய அழிவுகளுக்கு உள்ளாக்கிய நிலையினைச் சரியான நோக்கில் பார்க்க வேண்டும். இன்றைய கேள்வி யாதெனில் ராணுவ ஒடுக்கு முறைக்கு ஒத்துழைப்பதா? அன்றி ஒடுக்கு முறையை எதிர்த்து நிற்கும் மக்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கத்தில் உறுதியாக இருப்பதா? இதில் ஒரு மார்க்சிச லெனினிசவாதி அல்லது குறைந்த பட்சம் முற்போக்கு இடதுசாரி நிச்சயம் மக்களின் பக்கத்திலேயே தன்னை நிறுத்திக் கொள்வதே மிகச் சரியானதாகும். தேசிய இன விடுதலைக்கான போராட்டம் உச்சநிலை கண்டுள்ள சூழலில் யார் விரும்பினாலும் விரும்பாது விட்டாலும் வளர்ந்துள்ள புதிய அரசியல் யதார்த்தத்தையும் இப்போராட்ட முன்னணியில் விடுதலைப் புலிகள் இருந்து வருவதையும் புறம் தள்ளி விட்டு இனப்பிரச்சினைக்கு எவ்வித தீர்வினையும் தேடி விடமுடியாது.

இலங்கையின் பௌத்த பேரினவாதிகளினதும், இந்திய ஆளும் வர்க்கத்தினதும், தமது ஊடுருவல்களை அதிகரித்து விஸ்தரிக்க முயலும் ஏகாதிபத்திய சக்திகளினதும் உள்நோக்கங்களின் தேவைக்கு ஏற்ற விதத்தில் பொதுசன ஐக்கிய முன்னணி யுத்தப் பாதைக்குத் திரும்பிக் கொண்டால் அதனை மக்களோடு சேர்ந்து எதிர்த்து நிற்பது மார்க்சிச லெனினிச வாதிகளின் கடமையாகும். ஏனெனில் இந்த அரசாங்கம் பதவிக்கு வர ஆதரவளித்தது அரசியல் தீர்வும் சமாதானமும் நிறைவேற்றப்படும் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயேயாகும். ஆதலால் தற்போது எடுத்துள்ள யுத்தப் பாதைக்குப் பதிலாக நியாயமான அரசியல் தீர்வினைத் தாமதமின்றி முன் வைத்து விடுதலைப்புலிகளுடன் மீளப்பேச்சுவார்த்தையை ஆரம்பித்து ஏனைய தமிழர் தரப்பினருடனும் கலந்து பேசி சமாதானத்தை நோக்கிய பாதைக்கு திரும்புவதையே இடதுசாரி முற்போக்கு சக்திகள் வற்புறுத்த வேண்டு . இதனைப் பொதுசன ஐக்கிய முன்னணியும் அதன் தலைவியான ஜனாதிபதியும் உரியவாறு உணர்ந்து செல்லத் தவறினால் மேலும் தவறுகளையும் அழிவுகளையும் தேடிக்கொள்ளவே செய்வார்கள் என்பதே யதார்த்த நிலைமையாகும்.

UNIVERSITY OF PERADENIYA
24-2-1996
470504

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PER DENIYA
24-2-1996
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இடதுசாரி இயக்கம் என்பது பல்வேறு நிலைகளில் இயங்கி வரும் மார்க்சிச, லெனினிச, மாஓசேதுங் சிந்தனை வகைப்பட்ட கருத்துக்களைக் கொண்ட கட்சிகள், இயக்கங்கள், குழுக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய தொன்றாகும். இவ்விடதுசாரி இயக்கம் பற்றி விரிவாக அறிந்து கொள்வதற்கு மேற்படி நூல் ஓர் தகுந்த ஆவணமாகின்றது. அரை நூற்றாண்டுக்கு மேற்பட்ட இலங்கையின் இடதுசாரி இயக்கம் பயணித்து வந்த பாதையில் ஏற்பட்ட சாதக பாதங்களையும், ஏற்ற இறக்கங்களையும் இந்நூல் ஓர் மார்க்சிச நோக்கிலான மதிப்பீட்டிற்கு உள்ளாக்கிக் கொள்கிறது. இதன் ஆசிரியர் தோழர் சி.கா. செந்திவேல் இடதுசாரி இயக்கத்தில் பொதுவுடைமைவாதியாக கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேல் முழுநேரப் பணிபுரிந்து வருபவர். அவரது அரசியல் அனுபவங்களின் ஊடே எழுதப்பட்டுள்ளதால் இந்நூல் சிறப்புத் தன்மையினைப் பெறுகின்றது. இடதுசாரி இ யக்கத்தை எதிர்ப்பவர்கள் சிலர் எழுதியுள்ளவற்றில் விரோதமே முன் நிற்கின்றன. ஆதரித்து எழுதியவர்களின் எழுத்துக்களில் மிகைப்படுத்தப்பட்ட தற்புகழ்ச்சிகளே காணப்படுகின்றன. ஆனால், இந்நூலிலே இவை இரண்டிற்கும் பதிலாக உண்மைகளும் நேர்மையான நோக்கும் காணப்படுவதுடன் எதிர்கால நம்பிக்கையினையும் வழங்குகின்றது. அரசியல் ஆர்வம் மிக்க அனைவரும் இந்நூலினைப் படிப்பது பயன் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org